# மரணம்

# உயிர்த்தெழுதல்

# நரகம்

ஹாருன் யஹ்யா

## அறிமுகம்

மரணம்... அது எந்த நேரத்திலும் ஏற்படலாம். யாருக்கு தெரியும். நீங்கள் இந்த கட்டுரையை வாசித்து கொண்டு இருக்கும் இந்த வேளையிலும் ஏற்படலாம். அல்லது நீங்கள் எதிர் பார்க்கும் நேரத்திற்கு முன்பாகவும் ஏற்படலாம்.

இந்த வரிகள் - உங்களை மரணம் சுவைப்பதற்கு முன்பான கடைசி சந்தர்ப்பமாகவோ அல்லது கடைசி நினைவூட்டலாகவோ அல்லது கடைசி எச்சரிக்கையாகவோ இருக்கலாம். நீங்கள் இந்த வரிகளை வாசிக்கும் போது அடுத்த மணித்தியாளத்தில் நீங்கள் உயிருடன் இருப்பீர்களா என்று உங்களுக்கு தெரியாது. அவ்வாறு நீங்கள் உயிருடன் இருந்தாலும் உங்களுக்கு இன்னொரு மணித்தியாளத்தை உத்தரவாதம் அளிக்க யாராலும் முடியாது. உங்கள் வாழ்கையை ஒரு மணித்தியாளத்தை கொண்டோ அல்லது ஒரு மணித்துளியை கொண்டோ உத்தரவாதம் அளிக்க முடியாது. நீங்கள் இந்த புத்தகத்தை முழுமையாக படித்து முடிப்பீர்களா என்று உங்களுக்கு தெரியாது. மரணம் அது எந்த நேரத்திலும் உங்களை வந்தடையும். அது நீங்கள் மரணத்தை பற்றி சிந்திப்பதற்கு சில துளிகளுக்கு முன்பாக வந்தடையும்.

நீங்கள் மரணமடைவது உறுதி. நீங்கள் நேசிப்பவர்களும் மரணத்தை சுவைத்தே தீர்வார்கள். நீங்கள் அவர்களுக்கு முன்பு அல்லது அவர்கள் உங்களுக்கு முன்பாகவோ மரணிப்பார்கள். இன்றிலிருந்து 100 ஆண்டுகளுக்கு பின்பு உங்களுக்கு தெரிந்த ஒரு ஆத்மாவும் இந்த உலகில் இருக்காது..

மனிதனின் எண்ணத்தை எல்லையில்லா கனவுகள் ஆக்கிரமித்துக் கொள்கின்றன. பாடசாலை கல்வியை முடித்து – கல்லூரி – பட்டம் – நல்ல தொழில் - திருமணம் - பிள்ளைகள் - நிம்மதியான வாழ்கை. ......இவைதான் மனிதனின் விரிந்த சாதாரண ஆசைகளாக உள்ளது. இவை தவிர மனிதனின் சந்தர்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப இன்னும் ஆயிரக்கணக்கான ஆசைகள் மனிதனில் விரிந்து காணப்படுகின்றன.

மனித வாழ்வில் நடைபெறும் சில உறுதியான நிகழ்வுகளில் மரணமும் ஒன்று. இது 100 வீதம் உறுதி.

பல வருட விடா முயற்சியின் காரணமாக கல்லூரியில் இடம் பிடித்த மாணவன் வகுப்பறைக்கு போகும் வழியில் மரணமாகிறான். தொழிலை பெற்று கொண்ட ஒருவர் முதல் நாள் வேளைக்கு போகும் வழியில் மரணமாகிறார். புது மண தம்பதியரின் வாழ்கையை சாலை விபத்து பறித்து கொள்கிறது. தனது நேரத்தை சேமிக்கும் நோக்கில் விமானத்தில் பறக்கும் வியாபாரி ஒருவர்-அந்த விமானமே அவரது வாழ்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்பதை அறியமாட்டார்.

அத்தகைய சந்தர்பங்களில் ஆசைகள் நிறைவேறாமல் தேங்கி நிற்கின்றன. அவர்கள் அவர்களது ஆசைகளை ஒருபோதும் நிறைவேறாது என்ற நிலையில் விட்டு விட்டு - இனிமேல் ஒருபோதும் திரும்ப முடியாத ஒரு இலக்கை நோக்கி செல்கிறார்கள். அந்த இடம் அவர்கள் ஒருபோதும் நினைத்து பார்த்திடாத இடமாக இருக்கிறது. பல வருடங்கள் பல மணிநேரங்கள் செலவழித்து அவர்கள் தீட்டிய கற்பனைகள் செயல்படுத்த முடியாமல் போய்விட்டது. ஆனால் அவர்கள் நிச்சயமாக நடக்க இருக்கும் ஒன்றை சிந்திக்க மறந்து விட்டார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் சிந்திக்கும் மனசாட்சியுள்ள மனிதன் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்? உறுதியாக நடக்க இருக்கும் ஒன்றுக்கா அல்லது சில வேளை நடக்ககூடும் என்ற ஒன்றுக்கா? ஆனாலும் பெரும்பான்மை மக்கள் உறுதியாக நடக்கும் என்று கூறமுடியாத ஒன்றுக்கே முன்னுரிமை வழங்குவதை நாம் பார்க்கிறோம். அவர்கள் வாழ்வின் எந்த நிலையில் இருந்த போதிலும் அதை விட சிறந்த வளமான எதிர்காலத்தை கருத்தில் கொண்டு கடினமாக சிந்திக்கிறார்கள்.

மனிதன் சாகா வரம் பெற்றவனாக இருந்தால் அவனது ஆசைகளை நியாயப்படுத்தலாம். உண்மை என்னவென்றால் ஆசைகள் அனைத்திற்கும் மரணம் முற்றுப்புள்ளி வைத்து விடுகிறது. ஆகவே நடக்கவோ அல்லது நடக்காமல் போகக்கூடிய ஆசைகளுக்காக எமது முழு கவனத்தையும் செலுத்தி உறுதியாக நடக்ககூடிய மரணத்தை பற்றி சிந்திக்காமல் விடுவது மிகப்பெரும் மடமையாகும்.
இதற்கு காரணம் மனிதன் அவனது மனதை அடக்க முடியாத ஆசைகளை கொண்டு அடிமை படுத்தி இருப்பதால் இந்த தெளிவான உண்மையை கவனிக்காமல் விட்டுவிடுகிறான்.

இவ்வாறான சூழ்நிலையில் அவர்கள் தங்களது உண்மையான வாழ்கை மரணத்தின் பிறகு தொடங்குகிறது என்ற உண்மையை விளங்கி கொள்வதில்லை. அதற்காக தங்களை தயார் படுத்திக்கொள்வதுமில்லை. அதனால் அவர்கள் மீண்டும் உயிர்பெற்று எழுந்ததும் நரகத்தை தவிர வேறு எங்கும் செல்வதுமில்லை. அது அவர்களுக்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட இடமாகும். இந்த புத்தகம் எழுதப்பட்ட நோக்கம் - மனிதன்

சிந்திக்க மறுக்கும் ஒன்றை சிந்திக்க வைக்கவும் - நிச்சயமாக சத்தியமாக நடக்க இருக்கும் ஒன்றை பற்றி எச்சரிப்பதற்குமாகும். அதை சிந்திக்க மறுப்பது எந்த வகையிலும் தீர்வாக அமையாது.

## மூடநம்பிக்கைகளும் உண்மைகளும்

மனிதன் வரலாற்றில் மிக கடினமான பிரச்சினைகளை சாதுர்யமாக சமாளித்து வந்துள்ளான். ஆனால் மரணத்தை மட்டும் அவனால் வெல்ல முடியவில்லை. சிலர் இளமையிலும் மற்றும் சிலர் குழந்தை நிலையிலும் மரணிக்கிறார்கள். வேறு சிலர் வாழ்வின் அனைத்து நிலைகளையும் கடந்து அவர்களது இறுதி காலத்தில் மரணிக்கிறார்கள். மனிதனை அவனது சொத்துகளோ - பதவிகளோ - புகழோ - மகத்துவமோ - செல்வாக்கோ அல்லது அவனது அழகிய தோற்றமோ அவனை வந்தடையும் மரணத்தை விட்டும் அவனை காப்பாற்றாது. மனிதர்கள் அனைவரும் எந்த பாகுபாடின்றி மரணத்திற்கு முன்னால் உதவியற்றவர்களாகவே உள்ளனர். அவ்வாறெ கடைசி வரை இருப்பார்கள்.

மனிதர்களில் பெரும்பாலானவர்கள் மரணத்தை சிந்திப்பதிலிருந்து தவிர்ந்து விடுகிறார்கள். ஆனால் ஒருநாள் அந்த உண்மையான முடிவு அவர்களை வந்தடையும். மரணத்தை பற்றி நினைக்காமல் இருப்பது அவர்களை மரணத்தை விட்டும் பாதுகாக்கும் என்ற மூடநம்பிக்கையில் இருக்கிறார்கள். தினமும் நடைபெறும் கலந்துரையாடல்களில் யார் ஒருவர் மரணத்தை பற்றி பேச முற்பட்டாலும் அவர் பேச்சை தொடரவிடாமல் தடுக்கப்படுகிறார். எவர் மரணத்தை பற்றி பேசுகிறாரோ — அவர் அறிந்தோ அறியாமலோ - இறைவனது அத்தாட்சிகளை நினைவு கூர்ந்து — மனிதர்களின் பார்வையை மூடியுள்ள கடினமான திரையை சற்று அகற்றுகிறார். துணிவான வாழ்கை வாழ கூடியவர்களிடம் இந்த உண்மை கூறப்பட்டால் அவர்கள் கவலைபடுகிறார்கள். அவர்கள் மரண பயத்திலிருந்து தப்பிக்க முற்பட்ட போதிலும் மரணம் அவர்களை விட்டுவிடுவதில்லை. எதற்கும் கவலை படாமல் இருக்கும் மனப்பான்மையானது அவர்கள் மரணிக்கும் போதும் - நியாய தீர்ப்பு நாளிலும் - முடிவில்லா வேதனையின் போதும் பயத்தை அதிகரிக்கும்.

நேரம் மனிதனுக்கு எதிராகவே செயல்படுகிறது. வயோதிபத்தையும் மரணத்தையும் எதிர்த்த மனிதனை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அல்லது மரணத்தை பார்திடாத எவரையாவது உங்களுக்கு தெரியுமா ? இது சாத்தியமற்ற ஒன்று ! சாத்தியமற்றது என்பதன் பொருள் மனிதனுக்கு அவனது உடல் அல்லது அவனது வாழ்கையின் மீது எவ்வித கட்டுப்பாடும் இல்லை. மனிதன் அவனது பிறப்பை தீர்மானிக்கவில்லை என்பதன் மூலம் உண்மை தெளிவாகிறது. மேலும் அவனால் மரணத்தை வெல்லமுடியாமல் இருப்பது இன்னொறு சான்றாக உள்ளது. வாழ்கையின் சொந்தக்காரனெ மனிதனுக்கு வாழ்வை கொடுக்கிறான். அவன் விரும்பும் நேரத்தில் அதை திரும்ப பெற்று கொள்கிறான். வாழ்வின் சொந்தக்காரனான இறைவன் - அவனது தூதருக்கு அருளிய வேதத்தில் இதை மனிதனுக்கு அறிவிக்கிறான்

> (நபியே!) உமக்கு முன்னர் எந்த மனிதனுக்கும் (அவன்) என்றென்னும் இருக்கக்கூடிய நித்திய வாழ்வை நாம் (இங்கு) கொடுக்கவில்லை¢ ஆகவே நீர் மரித்தால் அவர்கள் மட்டும் என்றென்றும் வாழப் போகிறார்களா? (ஸூ றா அன்பியா : 34)

இந்த சந்தர்பத்தில் உலகில் கோடிக்கணக்கான மக்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் முதல் மனிதன் படைக்கப்பட்டதிலிருந்து எண்ணிலடங்காத மக்கள் தோன்றி மறைந்துள்ளார்கள் என்பதை புரிந்து கொள்ளலாம். அவர்கள் அனைவரும் விதி விலக்கின்றி மரணித்துள்ளார்கள். ஆகவே முன் சென்ற மக்களுக்கும் இன்னும் உயிருடன் இருப்பவர்களுக்கும் மரணம் நிச்சயமான ஒன்றாக உள்ளது. இந்த உண்மையான முடிவை யாராலும் தவிர்க்க முடியாது. குர்ஆன் கூறுகிறது :

> ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும்¢ அன்றியும் - இறுதித் தீர்ப்பு நாளில் தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும்¢ எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார்¢ இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை. (ஸூ றா ஆல-இம்ரான். :185)

## மரணத்தை கெட்ட சகுணமாக அல்லது தற்செயலான செயல் என நினைத்தல்

மரணம் தற்செயலான ஒன்றல்ல. அது மற்ற அனைத்து நிகழ்வுகளை போன்று இறைவனது கட்டளைக்கு ஏற்ப நடைபெறுகிறது. மனிதனுடைய பிறந்த திகதி தீர்மானிக்கப்பட்டதை போன்று அவனது மரணத்தின் கடைசி

நிமிடமும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவனுக்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு மணிநேரத்தையும் ஒவ்வொரு நிமிடத்தையும் கடந்து அவனது கடைசி நிமிடத்தை நோக்கி விரைந்து செல்கிறான். ஒருவனது மரணம் - இடம் - நேரம் - மரணிக்கும் இடம் ஆகியவை முன்பே தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

மரணத்தை பற்றிய முழு அறிவும் இறைவன் ஒருவனுக்கு மட்டுமே உள்ள நிலையில் அதிகமான மக்கள் மரணத்தை தொடர்ந்து நடைபெற்ற பல நிகழ்வுகளின் இறுதி நிலையே மரணம் என்கின்றனர். மரண செய்திகள் ஒவ்வொரு நாளும் பத்திரிக்கைகளில் வந்து கொண்டேயிருக்கிறது. இவற்றை படித்து முடிக்கும் போது – தகுந்த முன் எச்சரிக்கை எடுத்திருந்தால் அவர் காப்பாற்றப்பட்டிருப்பார்” அல்லது இவ்வாறு நடந்திருந்தால் அவர் இறந்திருக்க மாட்டார்” போன்ற அறிவற்ற வாதங்களை செவியுறுவீர்கள். மனிதனுக்கு கொடுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டால் - அவன் ஒரு நிமிடம் முந்தவும் மாட்டான் பிந்தவும் மாட்டான். ஆனால் நம்பிக்கையற்ற மக்கள் மரணத்தை தற்செயலான செயல் என்றே கருதுகிறார்கள். இறைவன் குர்ஆனில் இத்தகைய பகுத்தறிவற்ற விளக்கங்களை எச்சரிக்கின்றான். இது ஏக இறைவனை நிராகரிப்பவர்களுக்கு புதிய விடயமாகவே இருக்கும்.

> விசுவாசிகளே! நீங்கள் நிராகரிப்போரைப் போன்று ஆகிவிடாதீர்கள்¢ பூமியில் பிரயாணம் செய்யும்போதோ அல்லது போரில் ஈடுபட்டோ (மரணமடைந்த) தம் சகோதரர்களைப் பற்றி (அந்நிராகரிப்போர்) கூறுகின்றனர்: ‘அவர்கள் நம்முடனே இருந்திருந்தால் மரணம் அடைந்தோ, கொல்லப்பட்டோ போயிருக்கமாட்டார்கள்’ என்று, ஆனால் அல்லாஹ் அவர்கள் மனதில் ஏக்கமும் கவலையும் உண்டாவதற்காகவே இவ்வாறு செய்கிறான்¢ மேலும், அல்லாஹ்வே உயிர்ப்பிக்கிறான்¢ அவனே மரிக்கச் செய்கிறான்¢ இன்னும் அல்லாஹ் நீங்கள் செய்பவை அனைத்தையும் பார்ப்பவனாகவே இருக்கின்றான். (ஸூறாஆல இம்ரான்:156)

மரணம் தற்செயலானது என்ற வாதம் அறிவற்றதாகும். மேலே குறிப்பிடப்பட்ட இறை வாக்கின் அடிப்படையில் இது மனிதனுக்கு மிகப்பெரும் ஆன்மீக துன்பத்தையும் வேதனையையுமே தருகிறது. நிராகரிப்பாளர்களுக்கும் அல்லது குர்ஆனை நம்ப மறுப்பவர்களுக்கும் தங்களது அன்புக்குரிய ஒருவரை இழப்பதானது மிக கடினமான வேதனையாகவே இருக்கும். மரணத்தை கெட்ட சகுணத்தோடு அல்லது கவனமின்மையோடு சம்பந்தப்படுத்துவதன் மூலம் மரணத்தை வெல்லலாம் என்று நினைகிறார்கள். இத்தகைய சிந்தனை அவர்களது துன்பத்தையும் வேதனையையும் அதிகரிக்கிறது. இது அவர்களது நம்பிக்கையின்மையால் ஏற்பட்ட வேதனையாகும்

மரணம் ஏற்பட விபத்துகளோ நோய்களோ அல்லது வேறு எதுவும் காரணமல்ல. இவை அனைத்தையும் செய்பவன் இறைவன் மட்டுமே. நம்முடைய நேரம் முடிந்தவுடன் மேற்கூறப்பட்ட காரணிகளை கொண்டு எமது வாழ்வு முடிவு பெறுகிறது. ஒருவனது சேமிப்புகளை கொண்டு ஒரு முச்சு காற்றை வாங்க முடியாது. இறைவன் தனது வேதத்தில் இதை தெளிவாக குறிப்பிடுகிறான்.

> எந்த ஆன்மாவும் (முன்னரே) எழுதப்பட்டிருக்கும் தவணைக்கு இணங்க, அல்லாஹ்வின் அனுமதியின்றி, மரணிப்பதில்லை¢ எவரேனும் இந்த உலகத்தின் பலனை (மட்டும்) விரும்பினால், நாம் அவருக்கு அதிலிருந்தே வழங்குவோம்¢ இன்னும் எவர், மறுமையின் நன்மையை விரும்புகிறாரோ அவருக்கு அதிலிருந்து வழங்குவோம்¢ நன்றியுடையோருக்கு அதி சீக்கரமாக நற்கூலி கொடுக்கிறோம். (ஸூறா ஆல இம்ரான் :145)

ஏக இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர்களக்கு இவ்வுலகம் தற்காலிகமானது என்று தெரியும். அவன் இவ்வுலகில் அனுபவிக்கும் அனைத்தும் இறைவனது கருணை என்று நினைக்கிறான். இறைவன் நினைக்கும் நேரத்தில் அவனது உயிரை கைப்பற்றி இறைவன் நினைக்கும் நேரத்தில் அவனது செயல்களுக்கான கணக்குகளை கேட்பான் என்று அவனுக்கு தெரியும். அவன் இறைவனது நற்கருணையை பெறும் பொருட்டு அவனது வாழ்வை வாழ்ந்ததன் காரணமாக – அவன் மரணத்தை கண்டு அஞ்சுவதில்லை. நமது தூதர் இவ்வாறு குறிப்பிடுகிறார்

> ஜாபிர் பின் அப்துல்லா அறிவிக்கிறார்கள்: இறைவனுடைய தூதர் தொழ தொடங்கிய போது இவ்வாறு கூறினார்கள், இறைவன் மிகப்பெரியவன். பிறகு நிச்சயமாக எனது வணக்கம் எனது வாழ்வு எனது மரணம் அனைத்தும் அனைத்து உலகங்களினதும் இறைவனுக்கே என்றார்கள். (திர்மிதி : 262)

# விதி பற்றி தவறான கொள்கை

மனிதர்களிடையே விதி பற்றி பல தவறான கருத்துகள் காணப்படுகின்றன. அதாவது ஒருவர் விதியை மாற்றலாம்'' அல்லது விதியை வெல்லலாம்'' போன்ற பல அறிவற்ற எண்ணங்கள் காணப்படுகின்றன. மனிதர்கள் தங்களுடைய எதிர்பார்புகளும் எண்ணங்களுமே விதி என்று நினைக்கிறார்கள். சில அறிவற்றவர்கள் அவர்கள் நினைத்தவாறு ஒன்று நடைபெறாவிட்டால் விதி மாறிவிடும் என்று நம்புகிறார்கள். அவர்கள் விதியை முன்கூட்டியே அறிவதன் மூலம் அவற்றை தவிர்த்து விடலாம் என்று சிந்தித்து செயல்படுகிறார்கள். இவை விதி என்றால் என்ன என்று அறியாத குறுகிய சிந்தனை கொண்டவர்களின் மாசுபட்ட சிந்தனையாகும்.

விதி என்பது கடந்த கால மற்றும் எதிர்காலத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளை பற்றிய இறைவனது மதிநுட்ப படைப்பாகும். ஓன்றுமில்லாத (nothingless) ஒரு நிலையில் இறைவனே இடத்தையும் (space) காலத்தையும் (time) படைத்தான். அவனே இடத்தையும் காலாத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளான். ஆனால் இவை இரண்டும் இறைவனை கட்டுப்படுத்தாது. பல வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்வுகளும் எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் நிகழ்வுகளும் ஒவ்வொரு நிமிடமும் இறைவனால் நன்கு திட்டமிடப்பட்டு படைக்கப்பட்டுள்ளன.

நேரத்தை படைத்தவன் இறைவனே. ஆனால் அது அவனை கட்டுப்படுத்தாது. அதைபோன்றுஇ அவன் படைத்தவற்றை அவன் கண்காணிக்கிறான். இதனடிப்படையில் இறைவன் ஒரு நிகழ்வு முடிவுறும் வரை காத்திருப்பான் என்று கூறுவது தவறாகும். ஏனெனில் அவனது கண்ணோட்டததில் ஒரு நிகழ்வின் ஆரம்பமும் முடிவும் சமமாகவே இருக்கும். அதைபோன்று இந்த நிகழ்வின் விதி எந்த பகுதியில் அமைந்துள்ளது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எல்லாமும் ஏற்கனவே நிகழ்ந்து முடிந்து விட்டது. இதை படச்சுருள் ஒன்றுடன் ஒப்பிடலாம். படச்சுருளில் பதியப்பட்ட படங்களால் (images) படச்சுருளுக்கு எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தமுடியாது. இந்த விதியின் சுருளில் பதியப்பட்ட தொடர் நிகழ்வுகளை அன்றாட வாழ்க்கை வாழக்கூடிய மனிதனால் மாற்ற முடியாது. மனிதனால் விதிக்கு எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது. அதற்கு மாறாக மனிதனின் வாழ்கையை தீர்மானிக்கும் காரணியாக இருக்கிறது. மனிதன் விதியின் ஒரு அங்கமே தவிர அதிலிருந்து விடுபட்டு சுயமாக செயல்படக்கூடியவன் அல்லன். மனிதனால் விதியின் எல்லையை தாண்டி செல்ல முடியாது. இதை புரிந்து கொள்ள திரைபடத்தில் நடிக்கக்கூடிய நடிகனோடு மனிதனை ஒப்பிடலாம். திரையில் தோன்றக்கூடிய நடிகன் திரைபடத்திலிருந்து வெளியே குதித்து அவனுக்கு பிடிக்காத காட்சிகளை நீக்கிவிட்டு புதிய காட்சிகளை சேர்த்து கொள்வது போன்றதாகும். இது உண்மையில் அறிவற்ற வாதமாகும்.

இதை போன்று விதியை வெல்வது அல்லது நிகழ்வுகளை திசைதிருப்புதல் போன்ற கருத்துகள் தவறானவை. நான் எனது விதியை வென்றவன்'' என்று சொல்பவன் - அவன் தன்னை தானே ஏமாற்றி கொள்கிறான். அவன் அவ்வாறு சொல்வதும் விதியின் காரணமாகவே.

ஒருவர் கோமா நினைவாற்றல் அற்ற நிலையில் பல நாட்கள் இருக்கலாம். அவர் சுகமடைவது கடினமாக தோன்றலாம். சிலவேலை அவர் குணமடைந்தால் அவர் விதியை வென்றுவிட்டார் என்றோ அல்லது வைத்தியர்கள் அவரது விதியை மாற்றி விட்டார்கள் என்று அர்த்தம் கொள்ள முடியாது. இதன் பொருள் அவரது நேரம் இன்னும் முடியவில்லை என்பதாகும். அவர் குணமடைவது அவரது எழுதப்பட்ட விதி. அவரது விதி மற்ற மனிதர்களை போன்று இறைவனது கண்காணிப்பில் எழுதப்பட்டதாகும்.

> அன்றியும் அல்லாஹ்தான் உங்களை (முதலில்) மண்ணால் படைத்தான்¢ பின்னர் ஒரு துளி இந்திரியத்திலிருந்து - பின் உங்களை (ஆண், பெண்) ஜோடியாக அவன் ஆக்கினான், அவன் அறியாமல் எந்தப் பெண்ணும் கர்ப்பம் தரிப்பதுமில்லை¢ பிரசவிப்பதுமில்லை. இவ்வாறே ஒருவருடைய வயது அதிகமாக்கப்படுவதும், அவருடைய வயதிலிருந்து குறைப்பதும் (லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும்) ஏட்டில் இல்லாமலில்லை¢ நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு எளிதானதேயாகும். (ஸூறா பாஃதிர் : 11)

நபிகள் நாயகம் ஒருமுறை கூறினார்கள்:

> இறைவன் உங்களது வாழ்வையும் உங்களுக்காக ஒதுக்கப்பட்ட நாள்களின் எண்ணிக்கையையும் ஆகாரங்களையும் ஏற்களவே தீர்மானித்துவிட்டான். அந்த தவணையை முற்படுத்தவும் மாட்டான் பிற்படுத்தவும் மாட்டான். (முஸ்லிம் 64385)

இத்தகைய நிகழ்வுகள் முலம் இறைவன் மனிதனுக்கு தனது படைப்புகளின் மீதுள்ள எல்லையற்ற பாசத்தையும் அவனது ஆற்றலையும் நுண்ணறிவையும் காட்டுவதுடன் மனிதனை பரீட்சித்தும் பார்க்கிறான். அவனது விதவிதமான படைப்புகள் மனிதனை பிரமிக்க வைப்பதுடன் மனிதனது நம்பிக்கையை அதிகரிக்கிறது. இவை நிராகரிப்பாளர்களை அவர்களது இறுக்கமான மனநிலை காரணமாக குழப்பத்தையும் வியப்பையும் ஏற்படுத்துவதுடன் இறைவனை மேலும் கடுமையாக எதிர்க்கும் தன்மையை ஏற்படுத்துகிறது. இதே நேரம் நம்பிக்கையற்றவர்களின் அசட்டுதனமான செயலானது நிராகரிப்பாளர்களை விட நம்பிக்கையுள்ளவர்களை அறிவு மற்றும் நம்பிக்கை கொண்டு மேன்மைபடுத்திய இறைவனுக்கு மேலும் நன்றி செலுத்த வழி செய்கிறது.

80 வயதில் மரணிப்பவரை விதி என்று சொல்பவர்கள் ஒரு குழந்தை அல்லது இளவயது வாலிபர் மரணித்தால் அதை சோகமான நிகழ்வு" என்கின்றனர். மரணத்தை இயற்கையான நிகழ்வாக எடுக்காமல் அவர்களால் உருவாக்கப்பட்ட காரணிகளுக்குள் அடக்க முயற்சிக்கின்றனர். நீண்ட கடுமையான நோய்க்கு பின் வரும் மரணத்தை ஏற்றுகொள்பவர்கள் விபத்து அல்லது திடீர் மரணத்தை பெரும் அழிவாக கருதுகிறார்கள்! அதனால் தான் அவர்கள் மரணத்தை எப்பொழுதும் கடுமையாக எதிர்பவர்களாக மரணத்தை சந்திக்கிறார்கள். இத்தகைய மனநிலை உருவாக்குபவர்கள் வாழ்நாள் முழுவதும் துக்கத்துடனும் சோகத்துடனும் கழிக்கிறார்கள். இது உண்மையில் அவநம்பிக்கையின் காரணமாக ஏற்பட்ட முடிவில்லாத வேதனையின் ஆரம்பமேயாகும்.

## மறுபிறவியில் நம்பிக்கை வைத்தல்

மக்களின் பிழையான நம்பிக்கைகளில் மறுபிறவி கோட்பாடும் ஒன்று. அதாவது ஒருவர் மரணித்த பின் உயிர் அல்லது ஆன்மா அந்த உடலிலிருந்து வெளியேறி இன்னொறு உடலில் வேறு அடையாளத்துடன் வித்தியாசமான நேரத்தில் இடத்திலும் பிறப்பதை குறிக்கும். சமீப காலங்களில் மூடநம்பிக்கைகளை பின்பற்றுபவர்களும் ஏக இறைவனை நிராகரிப்பவர்களில் பலரையும் இது கவர்ந்து வருகிறது.

இந்த வாதத்திற்கு வலுவூட்ட எந்த சான்றுகளும் இல்லாத போதும் இந்த மூடநம்பிக்கை ஆதரவு பெற காரணம் - அவர்களிடமுள்ள இறை மறுப்பேயாகும். மரணத்திற்கு பின்னால் ஒரு வாழ்கையுள்ளது என்பதில் நம்பிக்கையற்றவர்கள் மரணத்திற்கு பின் தாங்கள் மறைந்து போவதை கண்டு அஞ்சுகின்றனர். மறுபுறத்தில் குறைவான நம்பிக்கையுடையவர்கள் இறைவனது நீதி அவர்களை நரகத்தில் தூக்கி எரிந்து விடும் என்ற பயத்தில் துக்கப்படுகிறார்கள். இவ்விரு சாரார் பொருத்தவரையில் இவர்களுடைய ஆன்மா இன்னொருவருடைய உடலில் வேறொரு நேரத்தில் பிறப்பது மிகவும் சந்தோஷமானதாக தோன்றுகிறது. இந்த தவறான கொள்கை பின்பற்றுபவர்கள் பிழையான விளம்பரத்தை கொண்டு மக்களை நம்பவைத்து விடுகிறார்கள். அதை பின்பற்றுபவர்கள் எவ்வித ஆதாரங்களை கேட்காமல் இருப்பது அவர்களை மேலும் உற்சாகப்படுத்துகிறது.

இத்தகைய மூட நம்பிக்கை மிக சில முஸ்லிம்களிடமும் காணப்படுகின்றது. இத்தகையவர்கள் தங்களை அறிவாளிகளாகவும் முற்போக்குவாதிகளாகவும் இணங்காட்ட முனைபவர்கள். இதில் மிக முக்கியமான ஒன்றை தெளிவுபடுத்த வேண்டும். அத்தகையவர்கள் தங்களின் வாதத்திற்கு குர்ஆனின் வசனங்களை ஆதாரமாக வைப்பார்கள். அவர்கள் அதன் உண்மையான விளக்கங்களை மறைத்து அவர்களுக்கு சாதகமான முறையில் விளக்கத்தை மாற்றி கொள்கிறார்கள். இவற்றை சுட்டி காட்ட காரணம் இவர்களின் நம்பிக்கை குர்ஆனுக்கும் இஸ்லாத்தின் கொள்கைகளுக்கும் முற்றிலும் மாற்றமாக இருக்கிறது என்பதை தெளிவுபடுத்துவதற்காகும்.

இவர்கள் குர்ஆனிலிருந்து கீழுள்ள சில வசனங்களை அவர்களுக்கு சாதகமாக எடுத்து காட்டுவார்கள்.

> அதற்கவர்கள்: 'எங்கள் இறைவனே! நீ எங்களை இருமுறை மரணமடையச் செய்தாய்¢ இருமுறை நீ எங்களை உயிர்ப்பித்தாய்¢ ஆகையால் நாங்கள் (இப்பொழுது) எங்கள் பாவங்களை ஒப்புக் கொண்டோம் - எனவே (இதிலிருந்து தப்பி) வெளியேற ஏதும் வழியுண்டா?' எனக் கூறுவர். (ஸூறா மு.:மின் : 11)

மறுபிறவியில் நம்பிக்கையுள்ளவர்கள் இந்த வசனத்தை பின்வருமாறு விளக்குகிறார்கள் : ஒரு மனிதன் வாழ்கையை வாழ்ந்து மரணித்த பின்பு அவனுக்கு ஒரு புது வாழ்கை கொடுக்கப்படுகிறது. இரண்டாவது முறையாக அவனது ஆன்மா அதனது வளர்ச்சி அடைகிறது. அவனது இரண்டாவது வாழ்கை முடிவடைந்து மரணித்த பின்பு மறுமையில் எழுப்பப்படுவார்கள். எமது மனதில் ஒரு கேள்வி வருகிறது : மனிதனின் முதல் நிலை என்ன ? மரணமா அல்லது உயிருடனா ? இதற்கான விடை அடுத்த வசனத்தில் இருக்கிறது.

> நீங்கள் எப்படி அல்லாஹ்வை நம்ப மறுக்கிறீர்கள்? உயிரற்றோராக இருந்த உங்களுக்கு அவனே உயிரூட்டினான்¢ பின்பு அவன் உங்களை மரிக்கச்செய்வான்¢ மீண்டும் உங்களை உயிர் பெறச் செய்வான்¢ இன்னும் நீங்கள் அவன் பக்கமே திருப்பிக்கொண்டுவரப் படுவீர்கள். (ஸூறா பகறா : 28)

இந்த வசனம் மனிதனின் முதல் நிலை மரணம் என்று தெளிவாக கூறுகிறது. வேறு வகையில் அவனது உண்மை நிலையை கூறுவதானால் நீர் அல்லது உலகை போன்று உயிரற்ற பொருளாகவே அவன் படைக்கப்பட்டான் என்று இவ்வசனம் கூறுகிறது. இந்த உயிரற்ற பொருள் குவியலை உயிர் கொடுத்தான் (படைத்து உருவம் கொடுப்பது). இதுதான் முதல் மரணம் - மரணத்திலிருந்து முதல் உயிர் பெருதல். சற்று காலம் உயிர் வாழ்ந்து இறுதியில் மரணிக்கிறான். அவன் மீண்டும் பூமிக்கு திரும்பி செல்கிறான். இதுதான் இரண்டாவது மரணம். இரண்டாவதும் கடைசியுமான மீண்டும் உயிர்பெரும் நிகழ்வு மறுமையில் தான் ஏற்படுகிறது. ஆகவே இவ்வுலகவாழ்வில் மறுபிறவி என்ற ஒன்று இல்லை. இல்லையென்றால் மூன்றாவது உயிர்பெருதலுக்கான அவசியத்தை ஏற்படுத்திவிடும். மூன்றாவது உயிர்பெருதலை சொல்லக்கூடிய எந்த ஒரு வசனமும் குர்ஆனில் இல்லை. ஆகவே சூறா அல் மூஃமின் 11 மற்றும் சூறா அல் பகறா 128 ஆகிய இரண்டிலும் இவ்வுலகில் இரண்டாவது உயிர் பெருவதை பற்றி கூறவேயில்லை. மாறாக இவ்வுலகில் ஒருமுறை உயிர் பெருவதையும் அடுத்து மறுமையில் ஒருமுறை உயிர் பெறுவதை பற்றியே குறிப்பிடுகிறது.

ஆனாலும் மறுபிறவியை பின்பற்றுகிறவர்கள் அவர்களது முழு நம்பிக்கைகளையும் அதில் முதலீடு செய்துள்ளனர்.

மறுபிறவியை நம்பிக்கை கொண்டவர்கள் ஆதாரம் காட்டும் இவ்விரு வசனங்களும் அவர்களின் மாசுபட்ட கருத்துகளை மறுக்கிறது. மேலும் குர்ஆனிலுள்ள பல வசனங்கள் மனிதனை சோதிப்பதற்காக ஒரு வாழ்கை இவ்வுலகில் கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறது. மரணத்தின் பின் இவ்வுலகிற்கு திரும்புதல் இல்லை என்று பின்வரும் வசனம் கூறுகிறது:

> அவர்களில் ஒருவனுக்கு மரணம் வரும்போது, அவன்: ‘என் இறைவனே! என்னைத் திரும்ப (உலகுக்குத்) திருப்பி அனுப்புவாயாக!’ என்று கூறுவான். ‘நான் விட்டுவந்ததில் நல்ல காரியங்களைச் செய்வதற்காக’ (என்றும் கூறுவான்). அவ்வாறில்லை! அவன் கூறுவது வெறும் வார்த்தையே(யன்றி வேறில்லை) அவர்கள் எழுப்பப்படும் நாள்வரையும் அவர்கள் முன்னே ஒரு திரையிருக்கிறது. ( அல் மூஃமின் 99-100)

மரணத்திற்கு பின் இவ்வுலகத்திற்கு திரும்பி வர முடியாது வசனம் தெளிவாக கூறுகிறது. அவநம்பிக்கையாளர்கள் மரணத்தின் பின் மீண்டும் உயிர் பெரும் பொருட்டு நிராசை கொள்வார்கள் என்ற உண்மையை இறைவன் எமக்கு சொல்கிறான். இவை ஏக இறைவனை மறுப்பவர்களால் முன்மொழியப்படும் சாதாரண வார்தைகளேயன்றி அவற்றுக்கு எவ்வித பெறுமதியுமில்லை.

சுவர்கத்திலுள்ளவர்கள் முதல் மரணத்திற்கு பிறகு இன்னொரு மரணத்தை சுவைக்க மாட்டார்கள்.

> முந்திய மரணத்தைத் தவிர, அங்கு மரணத்தை அவர்கள் அனுபவிக்கமாட்டார்கள்¢ மேலும் (இறைவன்) அவர்களை நரகத்தின் வேதனையை விட்டும் காப்பாற்றிவிட்டான். (இதுவே) உம்முடைய இறைவனின் அருள் கொடையும்¢ இதுவே மிகப் பெரிய வெற்றியுமாகும் (ஸூ றா துகான் : 56-57)

சுவர்க்கவாசிகளுக்கு கொடுக்கப்பட்ட நற்பேறுகளை பின்வரும் வசனம் சொல்கிறது. அவர்களுக்கு நன்மைகள் வரக்காரணம் முதல் முறை தவிர மீண்டும் மரணிக்கமாட்டார்கள்

> (பின்னர் சுவனவாசிகள்) நாம் (மறுபடியும்) இறந்து விடுபவர்கள் இல்லையே? (என்பார்கள்). நம்முடைய முந்தய இறப்பை தவிர (வேறு இல்லை). நாம் வேதனை செய்பவர் இல்லை. நிச்சயமாக இதுவே மகத்தான வெற்றியாகும் (ஸூ றா ஸாஃப்பாத் : 58-60)

மேலுள்ள வசனம் மனிதன் ஒருமுறைதான் இவ்வுலகில் மரணமடைவான் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக கூறுகிறது. இச்சந்தர்பத்தில் ஒரு வினா எழும்ப கூடும் : மேலுள்ள வசனங்களில் இரண்டு மரணங்களை என்று கூறப்பட்ட போதிலும் ஸூ றா ஸாஃப்பாத் 58ல் ஒரு மரணத்தை பற்றி மட்டும் பேசுவதேன்?இந்த கேள்விக்கான பதில் ஸூ றா துகானின் 56 வசனத்தில் முதல் இறப்பை தவிர (வேறு) இறப்பை அவர்கள் அதில் அனுபவித்திட மாட்டார்கள்” என குறிப்பிடப்பட்டுள்ளது. மனிதன் சுயநினைவோடு ஒரே ஒரு மரணத்தை மட்டுமே சந்திக்கிறான். அவன் மரணத்தை அவனது எல்லா உணர்வுகளை கொண்டும் சந்திக்கிறான். இந்த மரணமே ஒருவன் அவனது கடைசி நேரத்தில் சந்திக்கிறான். மனிதனால் மரணத்தின் முதல் நிலையை உணரமுடியாது காரணம் அத்தருணம் அவனது உணர்வுகளையும் சுயநினைவையும் இழக்கிறான்.

இத்தகைய மரணித்து மீண்டும் உயிர் பெறுவது அல்லது ஆன்மாக்கள் வேறு உடலுக்குள் போவது போன்றவற்றை கருத்துகளை குர்ஆனின் வசனங்கள் முற்றிலும் மறுக்கிறது.

மறுபுறத்தில் மறுபிறவி கொண்ட வாழ்கையை இறைவன் ஏற்படுத்தியிருந்தால் மனிதர்களுக்கு உண்மை வழிகாட்டியாக வந்த குர்ஆனில் அதை பற்றி நிச்சயமாக இறைவன் குறிப்பிட்டு இருப்பான். இது உண்மையாக இருந்தால் இறைவன் மறுபிறவியின் அனைத்து நிலைகளையும் தெளிவாக குறிப்பிடடிருப்பான். வாழ்கை மரணத்தை பற்றி குறிப்பிடும் குர்ஆனில் மறுபிறவியை பற்றி சிறு தகவல் கூட இல்லை.

# மறதி எனும் திரை

மனிதன் அடிப்படையில் சுயநலவாதி. அவனது நலன் சம்பந்தப்பட்ட விடயங்களில் அவன் மிகுந்த கவனத்துடன் இருக்கிறான். ஆனால் மலையாக முன்னிற்கக்கூடிய மரணத்தை மட்டும் கண்டுகொள்வதில்லை. குர்ஆனில் இத்தகைய வினோதமான மனநிலையுடையவர்களை அதாவது ' உறுதியான நம்பிக்கை கொள்ளாதவர்களை" இறைவன் ஒரு சொல்லை கொண்டு வகைப்படுத்துகிறான் : மறதி".

மறதி என்பதன் பொருள் உண்மையை புரிந்து கொள்ளாமை - உறுதியான முடிவை பெற்று கொள்ள முடியாமல் இருப்பது-தெளிவின்மை. இதற்கு உதாரணம் பின்வரும் வசனத்தில் உள்ளது.

மனிதர்களுக்கு அவர்களுடைய கணக்கு விசாரணை (நாள்) நெருங்கி விட்டது¢ ஆனால் அவர்களோ (அதனைப்) புறக்கணித்துப் பராமுகமாக இருக்கிறார்கள். (ஸூ றா அன்பியா : 1)

மனிதர்கள் குணமடையாத மிகப்பாரதுாரமான நோயுடையவர்கள் மட்டுமே உறுதியாக மரணிப்பார்கள் என்று உறுதியாக நினைக்கிறார்கள். இருப்பினும் இவ்வாறு நோயுற்றவர்களுடன் இத்தகைய சிந்தனையுடையவர்களும் மரணிப்பார்கள். இந்த உண்மை சிலகாலம் சென்று அல்லது மிக வரைவில் நடைபெற்ற போதிலும் இந்த உண்மை மாறாது. பலநேரங்களில் மறதி இத்தகைய உண்மையை மறைத்து விடுகிறது. உதாரணமாக எயிட்ஸ் நோயுடைய ஒருவர் மிக விரைவில் மரணமடைய சாத்திய கூறுகள் அதிகம். அதை போன்று நல்ல திடகாத்திரமான ஒருவரும் ஒருநாள் மரணமடைவார் என்பது நிதர்சன உண்மை. சிலவேளை எயிட்ஸ் நோயுடையவருக்கு முன்பாகவே இவர் மரணிக்ககூடும். இது எதிர்பார்காத வேளையில் நடைபெறகூடும்.

மரணபடுக்கையிலுள்ள நோயாளிகளை பார்த்து குடும்பத்தினர் துக்கப்படுகின்றனர். ஆனால் ஒருநாள் அவர்களும் நிச்சயமாக மரணிக்கபோவதை எண்ணி துக்கப்படுவதில்லை. அவை சிலவேளை சமீபமாக அல்லது சிலகாலம் கழித்து ஏற்படுவது உறுதி.

மரணத்தின் போது துக்கப்படுவது சரியானது என்றால் ஒவ்வொருவரும் உடனடியாக தங்களுக்காக வருத்தப்படவேண்டும் அல்லது துக்கத்திலிருந்து வெளியேறி மரணத்தை பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டும்.

இந்த நேரத்தில் மறதி ஏற்பட காரணங்களை பற்றி ஆராய்வது சால சிறந்தது.

## மறதி ஏற்பட காரணங்கள்

- விவேகமின்மை : சமுகத்தில் வாழும் அதிகமானவர்கள் முக்கியமான விடயங்களை சிந்திப்பதில் பழக்கமின்மை. மறதியை வாழ்வின் ஒரு அங்கமாக எடுத்து கொண்டுள்ளதால் மரணத்தை பற்றி சிந்திப்பதில்லை. தீர்க்க முடியாத சாதாரண பிரச்சினைகள் அவர்களது மனதை ஆக்கிரமித்து கொள்கிறது. தேவையில்லாத விடயங்கள் அவர்களது குறுகிய மனதை ஆக்கிரமித்து கொண்டு முக்கியமான விடயங்களை சிந்திப்பதற்கு அனுமதிப்பதில்லை. இவ்வாறு அன்றாட நடைபெறுகின்ற நிகழ்வுகளின் காரணமாக வாழ்கை இலக்கற்றதாகி போகிறது.. அதேநேரம் ஒருவருடைய மரணத்தின் போது அல்லது மரணத்தை பற்றி கலந்துரையாடல் திரும்பும் போது சில கருத்துகளை கூறி அந்த கலந்துரையாடலை தவிர்பதன் மூலம் ஆறுதலடைகிறார்கள். அவர்கள் தேவையற்ற குறுகிய சிந்தனையுடைய குறுகிய மனம் படைத்தவர்கள்.
- சிக்கலான மற்றும் தெளிவான வாழ்கை : வாழ்கை மிக வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. மனிதனினில் ஏற்பட்டுள்ள மறதி காரணமாக அவனை மிக விரைவில் அல்லது தாமதமாக அவனை விழுங்க காத்திருக்கும் மரணத்தை பற்றி கவலைப்படுவதில்லை. இறைவன் மீது நம்பிக்கை கொள்ளாமலும், இறைவனை நம்பி அவனுக்கு கட்டுப்படுதல் போன்றவற்றில் தூரமாக இருக்கிறான். உலக தேவைகளை பற்றி உணர்வு வந்த தருணம் முதல் அவனது சுக வாழ்வுக்காக மிகவும் சிரமப்படுகிறான். அத்தகைய மனிதன் மரணத்தை தவிர்க்க முயற்சிப்பதில்லை காரணம் ஏற்கனவே உலக விவகாரங்களில் மூழ்கிவிட்டான். அவன் புதுப்புது யோசனைகள் குறிக்கோள்கள் விருப்புகளின் பால் சென்றுக்கொண்டிருப்பதால் ஒருநாள் எதிர்பாராத விதமாக திடீரென மரணத்தின் உண்மையை

எதிர்கொள்வான். அப்பொழுது கவலைப்பட்டு மீண்டும் உயிர் பெற ஆசைப்படுவான் ஆனால் அதில் எந்த பலனுமில்லை.

- மக்கள் தொகை பெருக்கம் பற்றிய தவறான கொள்கை : பிறப்பு மனிதனின் மறதிக்கு இன்னொரு காரணம். மக்கள் தொகை அதிகரித்து கொண்டே போகிறது தவிர குறைவதில்லை. மனிதன் பிறப்பு மரணத்தை மாற்றிவிடும் போன்ற மயக்ககூடிய தவறான சிந்தனை காரணமாக மக்கள் தொகை சமப்படுத்தப்படும் என்று நினைக்கிறான். இத்தகைய சிந்தனை மரணத்தை நினைப்பதிலிருந்து தடுத்து மறதியை உண்டாக்குகிறது. இருப்பினும் இன்று முதல் உலகம் முழுவதும் எந்த பிறப்பும் நிகழாத போதிலும் ஒன்றன்பின் ஒன்றாக மரணம் ஏற்பட்டு அதன்காரணமாக உலக மக்கள் தொகை குறைவடையும். அதன் பிறகு மரணத்தின் பயம் உணரப்படும். மனிதன் அவனை சூழவுள்ள மக்கள் ஒருவர் பின் ஒருவராக மறைவதை கண்டு தானும் மறுக்க முடியாத முடிவை அடைவான் என்பதை உணருவான். இதற்கு மரணதண்டனை வழங்கப்பட்ட கைதிகள் மனநிலையை உதாரணமாக கூறலாம். ஒவ்வொரு நாளும் மரணதண்டனை நிறைவேற்ற ஒருவர் அல்லது இரண்டு பேர் அழைத்து செல்லப்படுவதை அவர்கள் பார்கிறார்கள். அந்த அறையிலுள்ளவர்கள் குறைவதை பார்கலாம். வருடங்கள் சென்ற போதிலும் ஒவ்வொரு நாளும் உயிருடன் இருப்பவர்கள் அடுத்த நாள் தங்ளுடையதாக இருக்குமோ என்ற பயத்திலேயே நித்திரைக்கு செல்வார்கள். அவர்கள் ஒரு நொடி பொழுதையும் மரணத்தை பற்றி சிந்திக்காமல் இருப்பதில்லை.

தற்போதய உண்மை நிலவரத்திற்கும் மேலே கூறப்பட்ட உதாரணத்திற்கும் வேறுபாடு இல்லை. ஒருவர் மரணிப்பதற்கும் புதிதாக பிறந்த குழந்தைக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை. இவை வெறும் தவறான வாதங்களாகும். 150 வருடங்களுக்கு முன்பு உலகில் வாழ்ந்த எவரும் இன்று உயிருடன் இல்லை. அடுத்து வந்த சந்ததியினரால் அவர்களை மரணத்திலிருந்து காப்பாற்ற முடியவில்லை. அதை போன்று இன்று உயிருடனுள்ளவர்கள் இன்றிலிருந்து 100 ஆண்டுகளுக்கு பின் சிலரை தவிர யாரும் உயிருடன் இருக்க போவதில்லை. இதற்கு காரணம் இந்த உலகம் மனித வாழ்வதற்கான நிரந்தர இடமில்லை.

தன்னை தானே ஏமாற்றி கொள்ளல்

மரணத்தை சிந்திக்காமல் மறதியில் திலைதிருக்கும் காரணிகளில் மனிதர்கள் தங்களை தாங்களே ஏமாற்றி கொள்ள சில தந்திரங்களை கையாளுகிறார்கள். அவற்றில் சிலவற்றை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாறு நினைப்பது மோசமான சூழ்நிலையில் தன்னை காப்பாற்றி கொள்ள தீக்கோழி தனது தலையை மண்ணில் புதைத்து கொள்வதை போன்றதாகும்.

- வாழ்வின் கடைசி காலங்களில் மரணத்தை பற்றி சிந்திக்கலாம் என்ற எண்ணம் : மனிதர்கள் 60 அல்லது 70 வருடங்கள் வரை உயிர் வாழ்வார்கள் என்று நினைக்கிறார்கள். இவை தான் நடுத்தர வயது மக்கள் இவ்வாறு சிந்திக்க அல்லது செயல்பட காரணம். இத்தகைய சிந்தகை காரணமாக பயங்கர விடயங்களை அவர்களது கடைசி காலங்களில் சிந்திக்கலாம் என்று எண்ணுகிறார்கள். அவர்களது இளமையில்- அல்லது அவர்களது முக்கிய காலகட்டத்தில் இத்தகைய துன்பம் தரக்கூடிய விடயங்களை கொண்டு மனதை சங்கடப்படுத்த விரும்புவதில்லை. அனைத்து சுகங்களும் அனுபவித்து அதற்கு பின்னர் நல்லவைகள் எதுவுமே நடக்காது என்ற வாழ்வின் கடைசிகாலங்கள் தான் மரணத்தை பற்றி சிந்தித்து மறு உலக வாழ்கைக்கு தயார்படுத்த சரியான காலகட்டம் என்று பலர் நினைக்கிறார்கள். மறுமைக்காக ஏதாவது செய்யவேண்டும் என்ற சிந்தனைளால் ஒருவகை ஆன்மீக ஆறுதல் கிடைக்கிறது

அடுத்த நொடி மூச்சுக்கு உத்தரவாதமில்லாத நிலையில் தொலைதூர யோசனைகள் எந்த பயனுமில்லை. ஒவ்வொரு நாளும் அவனது வயதுடைய அல்லது அவனை விட இளயவர்கள் மரணமடைவதை அவன் பார்கிறான். மரண அறிவித்தல் தினசரி பத்திரிக்கைகளின் குறிப்பிடுமளவு இடத்தை பறித்து கொள்கின்றன. ஒவ்வொரு மணித்தியாளமும் தொலைக்காட்சி மரணத்தை பற்றிய செய்திகளை சொல்லிக்கொண்டு இருக்கிறது. மனிதன் அவனை சுற்றி நிகழும் மரணங்களை பார்கிறான். ஆனால் அவனது மரணத்தை மக்கள் பார்பார்கள் என்றோ அல்லது அவனது மரண அறிவித்தல் பத்திரிக்கைகளில் வரும் என்பதை பற்றி குறைவாகவே சிந்திக்கிறான். மறுபுறத்தில் அவன் நீண்ட நாள் வாழ்ந்தாலும் அவனது சிந்தனை மாறாத காரணத்தால் அவனது வாழ்வில் எந்த மாற்றமும் நிகழாது. அவன் மரணத்தை சந்திக்கும் வரை அவன் மரணத்தை சிந்திப்பதிலிருந்து காலம் தாழ்த்தி கொண்டிருக்கிறான்.

- குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை மட்டும் நரகத்தில் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் : சமுகத்தில் காணப்படுகின்ற இந்த எண்ணம் வெறும் மூடநம்பிக்கையாகும். இந்த கருத்திற்கு ஆதரவாக குர்ஆனில் எந்த ஆதாரமும இல்லை. நரகத்தில ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் தண்டனை அனுபவிக்க வேண்டும் அதன்பிறகு மன்னிப்பு வழங்கப்படும் என்ற கருத்துடைய் வசனம் குர்ஆனில் இல்லை. இதற்கு மாறாக எல்லா வசனங்களிலும் மறுமை நாளில் நம்பிக்கையார்கள் என்றும் அவநம்பிக்கையளர்கள் என்று இரண்டாக பிரிக்கப்படுவார்கள் என்று தான் கூறுகிறது. மற்ற வசனங்களில் நம்பிக்கை கொண்டவர்கள் சுவர்கத்தில் என்றென்றும் தங்கியிருப்பார்கள் என்றும்

அவநம்பிக்கையளர்கள் நரகத்தில் முடிவில்லா நரக வேதனை சுவைப்பார்கள் என்றும் குர்ஆன் கூறுகிறது.

> ‘ஒரு சில நாட்கள் தவிர எங்களை நரக நெருப்புத் தீண்டாது’ என்று அவர்கள் கூறுகிறார்கள். ‘அல்லாஹ்விடமிருந்து அப்படி ஏதேனும் உறுதிமொழி பெற்றிருக்கிறீர்களா? அப்படியாயின் அல்லாஹ் தன் உறுதி மொழிக்கு மாற்றம் செய்யவே மாட்டான்¢ அல்லது நீங்கள் அறியாததை அல்லாஹ் சொன்னதாக இட்டுக் கட்டிக் கூறுகின்றீர்களா?’ என்று (நபியே! அந்த யூதர்களிடம்) நீர் கேளும். அப்படியல்ல! எவர் தீமையைச் சம்பாதித்து, அந்தக் குற்றம் அவரைச் சூழ்ந்து கொள்கிறதோ, அத்தகையோர் நரகவாசிகளே¢ அவர்கள் அ(ந் நரகத்)தில் என்றென்றும் இருப்பார்கள். எவர் நம்பிக்கை கொண்டு நற்கருமங்களைச் செய்கிறார்களோ, அவர்கள் சுவர்க்கவாசிகள்¢ அவர்கள் அங்கு என்றென்றும் இருப்பார்கள். (ஸூறா அல் பகறா :80-82)

இன்னொரு வசனமும் இந்த கருத்தையே கூறுகிறது :

> இதற்குக் காரணம்: எண்ணிக் கணக்கிடப்பட்ட (சில) நாட்களே தவிர (நரக) நெருப்பு எப்போதைக்கும் எங்களைத் தீண்டாது என்று அவர்கள் கூறிக் கொண்டிருப்பதுதான்¢ (இது) தவிர அவர்கள் தம் மார்க்க(விஷய)த்தில் பொய்யாகக் கற்பனை செய்து கூறிவந்ததும் அவர்களை ஏமாற்றி விட்டது. (ஸூறா ஆல இம்ரான் : 24)

நரகம் என்பது கற்பனைக்கு எட்டாத வேதனைகள் நிறைந்த இடமாகும். சிறிது காலம் தான் நரகத்தில் இருக்க வேண்டும் என்ற வாதத்தை ஏற்று கொண்டாலும் சுயநினைவுள்ள எந்த மனிதனும் அந்த வேதனையை சுவைக்க சம்மதிக்க மாட்டான். நரகத்தில் தான் இறைவனது தன்மைகளான அல்-ஜப்பார் (அடக்கி ஆள்பவன்) மற்றும் அல்-கஹ்ஹார் (ஆதிக்கம் செலுத்துபவன்) போன்றவைகளின் உண்மையான எல்லையை பார்க்க முடியும். நரக வேதனையை இவ்வுலக வேதனைகளோடு ஒப்பிட முடியாது. நரகத்தில் விரல் மட்டும் சுடப்படும் என்ற வேதனையை கூட ஒருவனால் தாங்கி கொள்ள முடியாது. அத்தகைய வேதனையை சுவைக்க ஒருவன் தயார் என்று சொன்னால் அவன் புத்தி சுவாதீனமற்றவன் என்றே கூறவேண்டும். மேலும் இறைவனது சாபத்திற்கு பயப்படாதவன் இறைவனுக்கு உரிய மரியாதையை கொடுக்க மறுக்கிறான். அத்தகைய நம்பிக்கையற்றவனை பற்றி குறிப்பிடுவது அவசியமற்றது.

- தனக்கு சுவர்க்கம் கிடைப்பது உறுதி என்று நம்புவது : தம்மை சுவர்க்கவாசிளாக கருதக்கூடிய சிலர் எம்மில் இருக்கின்றனர். நல்ல செயல்களை என கருதக்கூடியவற்றை சில சிறியவற்றை செய்து சில தீய செயல்களை தவிர்பதன் மூலம் தாங்கள் சுவர்கத்திற்கு தகுதியானவர்கள் என்று நினைக்கிறார்கள். இவர்கள் குர்ஆனுக்கும் மார்கத்தின் போதனைக்கும் எதிராக முடநம்பிக்கை இட்டுகட்டுதல் போன்றவற்றில் தங்களை ஈடுபடுத்தி கொள்கிறார்கள். அவர்கள் தங்களை உண்மையான விசுவாசிகளாகவே காட்டி கொள்கிறார்கள். இருப்பினும் குர்ஆன் அவர்களை இறைவனுக்கு இணை கற்பிப்பவர்களுடன் இணைத்தே வகைப்படுத்துகிறது.:

  (நபியே!) இரு மனிதர்களை அவர்களுக்கு உதாரணமாகவும் கூறுவீராக! அவ்விருவரில் ஒருவருக்கு நாம் திராட்சைத் தோட்டங்களில் இரண்டைக் கொடுத்தோம்¢ இன்னும் பேரீத்த மரங்களைக் கொண்டு அவ்விரண்டையும் சூழப்பட்டவை ஆக்கினோம், அவ்விரண்டிற்கும் இடையில் (தானிய) விவசாயத்தையும் அமைத்தோம். அவ்விரு தோட்டங்களும் அவற்றின் பலன்களை - எப்பொருளையும் குறையாது கொடுத்துக் கொண்டிருந்தன. அவ்விரண்டிற்கும் நடுவே நாம் ஓர் ஆற்றையும் ஒலித்தோடச் செய்தோம். இன்னும் அவனுக்கு (வேறு) கனிகளும் இருந்தன¢ அப்பொழுது அவன் தன் தோழனிடம் விதண்டாவாதம் செய்தவனாக: ‘நான் உன்னை விடப் பொருளால் அதிகமுள்ளவன், ஆட்களிலும் நான் (உன்னை) மிகைத்தவன்’ என்று கூறினான். (பெருமையினால்) தன் ஆத்மாவுக்குத் தீங்கிழைத்தவனாக தன் தோட்டத்திற்குள் நுழைந்தான்¢ அவன், ‘இந்த(த் தோட்டம்) எப்பொழுதாவது அழிந்துவிடும் என்று நான் எண்ணவில்லை’ என்றும் கூறிக் கொண்டான். (நியாயத் தீர்ப்புக்குரிய) வேளை ஏற்படும் என்றும் நான் எண்ணவில்லை. (அப்படி ஏதும் நிகழ்ந்து) நான் என் இறைவனிடம் மீண்டும் கொண்டு செல்லப்படுவேனாயின், நிச்சயமாக இங்கிருப்பதைவிட மேலான இடத்தையே நான் காண்பேன்’ என்றும் கூறினான். அவனுடைய தோழன் அவனுடன் (இது பற்றித்) தர்க்கித்தவனாக: ‘உன்னை மண்ணிலிருந்தும், பின் ஒரு துளி இந்திரியத்திலிருந்தும் படைத்து, பின்பு உன்னைச் சரியான மனிதனாக ஆக்கினானே அவனையா நீ நிராகரிக்கின்றாய்?’ என்று அவனிடம் கேட்டான். ‘ஆனால், (நான் உறுதி சொல்கிறேன்:) அல்லாஹ் - அவன்தான் என் இறைவனாவான்¢ என் இறைவனுக்கு நான் யாரையும் இணை வைக்கவும் மாட்டேன் (ஸூறா கஃப் 32-38)

நான் என் இறைவனிடம் மீண்டும் கொண்டு செல்லப்படுவேனாயின்" போன்ற வசனங்கள் மூலம் தோட்ட சொந்தக்காரன் இறைவன் மீதும் மறுமை மீதும் உறுதியான நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துகிறார். மேலும் சந்தேகத்தை கொண்ட சிலைகளை வணங்குபவர் என்றும் கூறுகிறார். அதேவேளை அவர் தன்னை சிறந்த நம்பிக்கையாளர் என்றும் வாதிடுகிறார். மேலும் இறைவன் அவருக்கு சுவர்க்கம் கொடுப்பான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இத்தகைய சிறுமையான இறுமாப்பான சிலை வணங்குபவர்களின் தன்மைகள் பரவலாக மக்களிடம் காணப்படுகின்றன.

இத்தகையவர்கள் தாங்கள் முழுமையாக பிழையிலிருப்பதை உணர்ந்த போதிலும் அவர்களிடம் கேட்கப்படும் போது அவர்கள் தங்களை அப்பாவிகளென காட்ட முயற்சிக்கின்றனர். மதத்தின் கொள்கைகளை கடைபிடிப்பது முக்கியமானதல்ல என்கின்றனர். அவர்களை சூழவுள்ள மார்க்க கட்டளைகளை பேணி பின்பற்றுபவர்களை ஒழுக்கமற்றவர்கள் என்றும் நம்பிக்கையற்றவர்கள் என்று கூறுவதன் மூலம் தங்களை அப்பாவிகளாக காட்ட முயற்சிக்கின்றனர். மற்றவர்களுக்கு தீங்கு செய்யாமல் இருப்பதன் காரணமாக தங்களை நல்லவர்களாக காட்ட முயற்சிக்கின்றனர். ஏழைகளுக்கு வாரி வழங்க தயங்குவதில்லை என்று கூறும் இவர்கள் உண்மையாகவே பல வருடங்களாக பொது சேவையில் ஈடுபடுவது போன்ற பல காரணங்கள் உண்மை முஸ்லிமாக உருவாக்கும் என்று கூறுகிறார்கள். மக்களுடன் நல்ல முறையில் நடப்பதால் மட்டும் முஸ்லிமாக முடியாது மாறாக இறைவனது கட்டளைகளுக்கு முழுமையாக கட்டுப்பட வேண்டும் என்பது அவர்களுக்கு தெரியாது அல்லது தெரியாதது போன்று நடிக்கிறார்கள்.

அவர்களுடைய மாசுப்படுத்தப்பட்ட மதத்தை ஏதாவது ஒருமுறையில் நியாயப்படுத்த அவர்கள் சில தவறான வழிமுறைகளை நாடுகிறார்கள். இது அவர்களது வஞ்சனையின் அடையாளமாகும். அவர்களது வாழ்கையை நியாயப்படுத்த செய்யும் தொழிலே தெய்வம் போன்ற சுலோகங்களுக்கு பின்னால் ஒளிந்து கொள்கிறார்கள். இது குர்ஆனின் பார்வையில் இறைவனுக்கு எதிரான பொய்களை உருவாக்குவது"தாகும். இதன் கூலி நரகத்தின் வேதனையாகும். அத்தகையவர்களை பற்றி குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது

> இன்னும் மனிதர்களில் 'நாங்கள் அல்லாஹ்வின் மீதும், இறுதி(த் தீர்ப்பு) நாள் மீதும் ஈமான் (நம்பிக்கை) கொள்கிறோம்' என்று கூறுவோரும் இருக்கின்றனர்¢ ஆனால் (உண்மையில்) அவர்கள் நம்பிக்கை கொண்டோர் அல்லர். -(ஸூறா அல் பகறா : 8)

— இரட்டை வேடம் : மக்கள் மரணத்தை பற்றி சிந்திக்கும் போது தாங்கள் நிரந்தரமாக மறைந்து போவோம் என்று நினைக்கிறார்கள். இத்தகைய வியப்பான எண்ணம் இன்னொரு பாதுகாக்கும் உத்தியாகும். ஆவர்கள் இறைவானால் நிரந்தர வாழ்கை உறுதியளிக்கப்பட்டுள்ளது என்ற உண்மையின் பாதியை மட்டுமே நம்புகிறார்கள். அத்தகைய எண்ணம் அவர்களுக்கு சில ஆறுதல்களை கொடுக்கிறது. இறைவனை மீதான நம்பிக்கையாளனின் கடமைகளை பற்றி அவர்கள் சிந்திக்கும் போது அவர்கள் நிரந்தர வாழ்கை சம்பந்தமான உண்மைகளை முழமையாக தவிர்ந்து கொள்ளவே விரும்புகிறார்கள். இறுதியில் மண்ணில் மக்கி போவோம். மரணத்திற்கு பிறகு வாழ்கையில்லை" அவர்கள் தங்களை தாங்களே சமாதானப்படுத்தி கொள்கிறார்கள். அத்தகைய சிந்தனைகள் அனைத்து கவலைகளையும் தடுத்துவிடும். ஆனால் மறுமை நாளில் ஒருவர் தனது கணக்குகளை கொடுக்கும் போதும் நரகத்தில் வேதனை அனுபவிக்கும் போதும் அந்த வாதத்தின் நிலை புரியும். இவ்விரண்டு சூழ்நிலைகளிலும் அவர்களது கடைசி நாட்கள் வரை மறதியில் தங்கள் நாட்களை கழித்துக்கொண்டிருக்கிறார்கள்.

## மறதியின் விளைவுகள்

ஒருவனது வாழ்கையில் கடைசிவரை மரணம் அவனது கவனத்தை ஈர்கும் என்று நாம் மேலே குறிப்பிட்டோம். இவை சிலநேரங்களில் மனிதனை அவனது வாழ்வின் அத்தியவசிய தேவைகளை மீண்டும் சரிபார்த்து அவனது நிலையை மாற்ற இத்தகைய நினைவூட்டல்கள் உதவுகிறது. வேறு சிலநேரங்களில் மேற்கூறப்பட்ட சிந்தனைகள் அவனை கட்டுப்படுத்தி அவனது கண்களை திரையிட்டிருக்கும் மறதியை மேலும் கடினமாக்கவும் வாய்புள்ளது.

நம்பிக்கையற்றவர்கள் அவர்களது பிந்தய காலத்தில் மரணம் அவர்களை வந்தடையும் என்று அவர்களுக்கு நன்றாக தெரிந்திருந்தும் அமைதி எனும் மூடநம்பிக்கையான உணர்வை ஏற்படுத்திக் கொண்டு சாந்தமான நிலையில் மரணத்திற்காக எதிர்பார்த்துக்கொண்டிருப்பதற்கு காரணம் அவர்களை இந்த திரை முழுமையாக மூடிக்கொண்டுள்ளது. அவர்களை பொருத்தவரையில் மரணம் என்பது அமைதியான ஆழ்ந்த நித்திரை சாந்தம் மற்றும் நிரந்தர ஓய்வு என்று நினைக்கிறார்கள்.

இவர்களது சிந்தனைக்கு மாற்றமாக இ ஒன்றுமில்லாத நிலையிலிருந்து எல்லாவற்றையும் படைத்து பின்பு மரணிக்க செய்து பிறகு நியாய தீர்ப்பு நாளில் மீண்டும் அனைத்தையும் உயிர்பிக்கும் இறைவன் நிரந்தர வேதனையும் துன்பத்தையும் அவர்களுக்கு வாக்களிக்கிறான். நிரந்தர தூக்கம் என்ற நினைத்து கொண்டிருக்கும் அந்த மரணம் அது வரும் அந்த தருணத்தில் இந்த உண்மையை உணருவர்கள். அவர்கள் மரணம் என்பது முழுமையாக மறைவது என்ற எண்ணம் தவறு என்றும் அதற்கு மாற்றமாக வேதனை நிறைந்த ஒரு புது உலகின் ஆரம்ப நிலை என்பதை உணருவர்கள். இந்த பெரும் வேதனையின் ஆரம்ப அறிகுறி உயிரை எடுக்க வரும் மலக்குகள் அல்லது வானவர்களின் பயங்கர தோற்றமாகும்.

> ஆகவே, அவர்களுடைய முகங்களிலும், அவர்களுடைய முதுகுகளிலும் அடித்து (உயிர்களைக் கைப்பற்றும்) மலக்குகள் அவர்களை மரணமடையச் செய்யும் போது (அவர்கள் நிலைமை) எப்படியிருக்கும், (ஸூ றா முஹம்மத் : 27)

இந்த தருணத்தில் மரணத்தை பற்றி கவலைபடாமல் அகங்காரமாக திரிந்த ஏக இறைவனை மறுத்தவர்கள் பயத்தினாலும் செய்வதறியாது நிரந்தர வேதனையில் மூழ்குவார்கள். குர்ஆன் இதை பற்றி இவ்வாறு விளக்குகிறது :

> ‘நாம் பூமியில் அழிந்து போய் விடுவோமாயின் மெய்யாகவே நாங்கள் புதிய படைப்பாவோமா?’ எனவும் அவர்கள் கூறுகின்றனர்¢ ஏனெனில் அவர்கள் தங்கள் இறைவனைச் சந்திப்பதையே நிராகரிப்போராய் இருக்கிறார்கள். ‘உங்கள் மீது நியமிக்கப்பட்டிருக்கும், ‘மலக்குல் மவ்து’ தாம் உங்கள் உயிரைக் கைப்பற்றுவார் - பின்னர் நீங்கள் உங்கள் இறைவனிடம் மீள்விக்கப்படுவீர்கள்’ என்று (நபியே!) நீர் கூறும். மேலும், இக்குற்றவாளிகள் தம் இறைவன் முன் தலைகுனிந்தவர்களாய், ‘எங்கள் இறைவா! நாங்கள் (இப்பொழுது) பார்த்துக் கொண்டோம், கேட்டும் கொண்டோம் - ஆகவே, நீ (உலகுக்கு) எங்களைத் திருப்பி அனுப்பிவை¢ நாங்கள் நற்கருமங்களையே செய்வோம். நிச்சயமாய் நாங்கள் (நம்பிக்கையில்) உறுதியுள்ளவர்களாக ஆகிவிட்டோம்’ என்று சொல்லும்போது (நபியே!) நீர் பார்ப்பீராயின் (அவர்களுடைய நிலையை நீர் அறிந்து கொள்வீர்). (ஸூ றா அஸ் ஸஜதா : 10-12 )

## மரணத்திலிருந்து தப்பிக்க முடியாது

மரணம் ஆரம்ப நாட்களில் நினைவிற்கு வருவது மிக அரிது. இதை கடைசி நிலையாக நினைத்து கொண்டு இந்த சிந்தனையிலிருந்து தப்பித்து கொள்கிறான். இருப்பினும் மருத்துவத்தால் மரணத்திற்கு குணப்படுத்த முடியாததை போன்று சிந்திக்கமாலிப்பதாலும் மரணத்தை வெல்லமுடியாது.. மரணத்தை ஒருபோதும் தட்டிக்கழிக்க முடியாது. ஒவ்வொரு நாளும் பத்திரிக்கைகள் மரண செய்திகளை வெளியிட்டு கொண்டிருக்கின்றன. நீங்கள் கல்லறைகளை கடந்து செல்கிறீர்கள். உங்களது உறவினர்களும் தோழர்களும் மரணிக்கிறார்கள். அவர்களது மரண ஊர்வலங்களும் அல்லது நீங்கள் தெரிவிக்கும் இரங்கல்களும் நிச்சயமாக உங்களுக்கு மரணத்தை நினைவுபடுத்தும். ஒருவன் மற்றவரின் மரணத்தை பார்க்கும் போது முக்கியமாக அவனது விருப்பத்திற்குரியவர்களின் மரணத்தை பார்க்கும் போது அவன் அவனது முடிவை பற்றி சிந்திக்கிறான். இந்த சிந்தனை அவனை ஆழமாக பாதித்து அவனை நிம்மதியற்றவனாக மாற்றுகிறது.

அவன் எவ்வளவு தூரம் கடுமையாக எதிர்தாலும் அவன் எங்கு சென்று ஒளிந்தாலும் அல்லது தப்பிக்க முயன்றாலும் எந்த சந்தர்பத்திலும் அவனது மரணத்தை சுவைத்தாக வேண்டும். அவனுக்கு வேறு தெரிவு இல்லை. அதிலிருந்து வெளியே செல்ல அவனுக்கு வேறு வழியிருக்காது. ஒரு வினாடியும் பின்போடுவதில்லை. ஆவன் எங்கு சென்றாலும் மரணம் அவனை சந்திக்கும். கடைசியில் அவனை பிடித்து கொள்ளும்.

> ‘நீங்கள் எதை விட்டும் விரண்டு ஓடுகிறீர்களோ, அந்த மரணம் நிச்சயமாக உங்களை சந்திக்கும் பிறகு, மறைவானதையும் பகிரங்கமானதையும் நன்கறிந்தவனிடம் நீங்கள் கொண்டு மீட்டப்படுவீர்கள் - அப்பால், அவன் நீங்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி உங்களுக்கு அறிவிப்பான்’ (என்று) (நபியே!) நீர் கூறுவீராக. (ஸூ றா அல்ஜூ ம்மா : 8)

‘நீங்கள் எங்கிருந்தபோதிலும் உங்களை மரணம் அடைந்தே தீரும். நீங்கள் மிகவும் உறுதியாகக் கட்டப்பட்ட கோட்டைகளில் இருந்த போதிலும் சரியே! (போருக்குச் சென்ற முனா∴பிக்களுக்கு) ஏதேனும் ஒரு நன்மை ஏற்பட்டால் ‘இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது’ என்று கூறுகிறார்கள்¢ ஆனால், அவர்களுக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டாலோ, ‘இது உம்மிடம் இருந்துதான் ஏற்பட்டது’ என்று கூறுகிறார்கள், (நபியே! அவர்களிடம்) கூறும்: ‘எல்லாம் அல்லாஹ்விடமிருந்தே வந்திருக்கின்றன¢ இந்த மக்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது? எந்த ஒரு விஷயத்தையும் அவர்களுக்கு விளங்கிக் கொள்ள முடியவில்லையே!’ (ஸூறா அன்னிசா: 78)

அதனால் தான் நாம் நம்மை ஏமாற்றுவதை நிறுத்திகொண்டு இறைவனால் வரையறுக்கப்பட்ட காலம் முடிய முன்னர் அவனது அன்பை பெற முயற்சிக்க வேண்டும். இறைவனுக்கு மட்டுமே இந்த நேரம் முடிவடைவதை பற்றி தெரியும்.

ஒருவனது மனசாட்சி இறுக்கமடையாலும் நல்ல பண்புகள் வளரவும் அடிக்கடி மரணத்தை சிந்திக்க வேண்டுமென்று எமது தூதர் முஹம்மது நபி அவர்கள் கூறினார்கள் :

அப்துல்லாஹ் பின் உமர் அறிவிக்கிறார்கள்: இறைதூதர் கூறினார்கள் தண்ணரால் இரும்பு துரப்பிடிப்பதை போன்று இந்த இதயம் துரப்பிடுத்துவிடும் அதை எவ்வாறு சுத்தப்படுத்துவது என்று கேட்கப்பட்ட போது மரணத்தை அதிகமாக நினைப்பதும் குர்ஆனை அதிகமாக ஓதுவதும். என்று பதிலளித்தார்கள். (திர்மிதி 673)

## உண்மையான மரணமும் மரணத்தை பற்றிய கண்காணிப்பும்

ஆன்மா மரணமடைதல் (உண்மையான மரணம்)

நீங்கள் எவ்வாறு மரணமடைவீர்கள் மரணம் எப்படி இருக்கும் மரணமடையும் வேளையில் என்ன நடக்கும் என்பதை பற்றி எப்போதாவது சிந்தித்ததுண்டா?
இதுவரை மரணித்த எவரும் மீண்டும் உயிர் பெற்று எழுந்து வந்து மரண வேளையில் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் உணர்வுகளையும் பகிர்ந்து கொண்டதில்லை. ஆகவே மரணம் எவ்வாறு இருக்கும் அல்லது மரணவேளையில் ஒருவனது உணர்வுகள் எவ்வாறு இருக்கும் என்பதை பற்றி அறிந்து கொள்வது சாத்தியமற்றதாகவுள்ளது.

மனிதனுக்கு உயிரை கொடுத்து குறிப்பிட்ட தவணையின் பின்னர் அதை மீண்டும் எடுத்து கொள்ளும் இறைவன் மரணம் எவ்வாறு ஏற்படுகிறது என்று குர்ஆனில் விளக்குகிறான். ஆகவே குர்ஆனின் உதவி கொண்டே மரணம் எவ்வாறு ஏற்படுகிறது என்பதையும் மரணிக்கும் வேளையில் ஒருவனது உணர்வுகள் எவ்வாறு இருக்கும் என்பதை பற்றியும் அறிந்து கொள்கிறோம்.

குர்ஆனின் அடிப்படையில் மரணம் என்பது மக்கள் வெளியிலிருந்து பார்க்கும் மரணத்திலிருந்து மாற்றமானது.

முதலில் மரணபடுக்கையில் இருக்கும் ஒருவன் பார்க்கும் நிகழ்வுகள் - அவனை சுற்றியுள்ளவர்களால் அறிந்துகொள்ள முடியாத நிகழ்வுகள் பற்றி சில வசனங்கள் விளக்குகின்றன.

மரணத் தறுவாயில் ஒருவனின் (உயிர்) தொண்டைக் குழியை அடையும் போது - அந்நேரம் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆயினும், நாமோ அவனுக்கு உங்களை விட சமீபமாக இருக்கிறோம். எனினும் நீங்கள் பார்க்கிறீர்களில்லை. (ஸூறா வாகிஆ : 83-85)

ஏக இறைவனை மறுத்தவர்களின் மரணத்தை போலல்லாது நம்பிக்கையாளனின் மரணம் அமைதியானதாக இருக்கும்.

> (குஃப்ரை விட்டும்) தூயவர்களாக இருக்கும் நிலையில் மலக்குகள் எவருடைய உயிர்களைக் கைப்பற்றுகிறார்களோ அவர்களிடம்: 'ஸலாமுன் அலைக்கும்' ('உங்கள் மீது சாந்தி உண்டாவதாக)¢ நீங்கள் செய்து கொண்டிருந்த (நற்) கருமங்களுக்காக சுவனபதியில் நுழையுங்கள்' என்று அம்மலக்குகள் சொல்வார்கள். (ஸூறா அன்நஹல் : 32)

இந்த வசனங்கள் மரணத்தை பற்றி மிக முக்கியமான மாற்றமடையாத உண்மைகளை கூறுகிறது. மரணவேளையில் மரணிக்கும் ஒருவரின் நிலையும் அவரை சுற்றி நிற்கும் மற்றவர்கள் கண்ணோட்டமும் மாற்றமாக இருக்கும். உதாரணமாக ஏக இறைவனை மறுத்து வாழ்ந்த ஒருவரின் மரணம் வெளியிளிருந்து பார்க்கும் போது அமைதியான மரணமாக தோன்றும். இருப்பினும் ஆன்மா வேறு வகையில் மிக வேதனையாக வழியில் மரணத்தை சுவைக்கும். அதேநேரம் நம்பிக்கையாளரின் ஆன்மா கடுமையான வேதனையை அடைந்த போதும் அவரது உடலை விட்டும் கண்ணியமான முறையில் செல்கிறது.

சுருங்க கூறுவதாயின் உடல் மரணமடைவதும் குர்ஆன் கூறும் ஆன்மா மரணிப்பதும் வெவ்வேறு நிகழ்வுகளாகும்.

குர்ஆன் கூறும் இந்த உண்மையை விளங்கி கொள்ளாமல் மரணம் என்பதை முடிவில்லாத அமைதியான தூக்கம் என்று நம்பும் அவநம்பிக்கையாளர்கள் மரணவேளையை வேதனையற்ற அமைதியானதாக மாற்ற வழிகளை தேடுகிறார்கள். இத்தகைய தவறான சிந்தனைகளால் தூண்டுப்பட்டு மாத்தரைகளை உட்கொண்டு தற்கொலை செய்து கொள்வது இயற்கை வாயுக்களை சுவாசித்தல் அல்லது கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் மரணத்தை வேதனையற்ற முறையில் அடைவது போன்ற வழிகளை நாடுகிறார்கள்.

முன்பு கூறப்பட்டதை போன்று ஏக இறைவனை மறுபபவர்களின் மரணமானது கடுமையான வேதனையாக இருக்கும் அதே வேளை விசுவாசிகளின் அமைதியானதாக இருக்கும். மரணவேளையில் ஏக இறைவனை மறுத்தவர்களின் ஆன்மாவை பறிக்கும் வானவர்கள் நடந்து கொள்ளும் விதமும், அவாக்ளது உயிர் உடலிலிருந்து எடுக்கப்படும் போது அவர்கள் படும் வேதனையும் பற்றி குர்ஆன் தெளிவாக கூறுகிறது.

> ஆகவே, அவர்களுடைய முகங்களிலும், அவர்களுடைய முதுகுகளிலும் அடித்து (உயிர்களைக் கைப்பற்றும்) மலக்குகள் அவர்களை மரணமடையச் செய்யும் போது (அவர்கள் நிலைமை) எப்படியிருக்கும், இது ஏனெனில்: நிச்சயமாக இவர்கள் அல்லாஹ்வுக்குக் கோபமூட்டுவதையே பின்பற்றி, அவனுடைய திருப்தியை வெறுத்தமைதான்¢ ஆகவே அவர்களுடைய செய்கைகளை அவன் பயனில்லாதவையாக ஆக்கி விட்டான். (ஸூறா முஹம்மத் : 27-28)

மரண வேளையில் வானவர்கள் கூறும் நிரந்தர வேதனையை பற்றி செய்தியானது ஒருவனுக்கு கடுமையான வேதனையை ஏற்படுத்தும் என்று குர்ஆன் கூறுகிறது.

> அல்லாஹ்வின் மீது பொய்க் கற்பனை செய்பவன், அல்லது வஹீயின் மூலம் தனக்கு ஒன்றுமே அறிவிக்கப்படாமலிருக்க, 'எனக்கு வஹீ வந்தது' என்று கூறுபவன்¢ அல்லது 'அல்லாஹ் இறக்கிவைத்த இ(வ்வேதத்)தைப் போல் நானும் இறக்கிவைப்பேன்' என்று கூறுபவன், ஆகிய இவர்களை விடப் பெரிய அநியாயக்காரன் யார் இருக்க முடியும்? இந்த அநியாயக்காரர்கள் மரண வேதனையில் இருக்கும் போது நீங்கள் அவர்களைப் பார்த்தால், மலக்குகள் தம் கைகளை நீட்டி (இவர்களிடம்) 'உங்களுடைய உயிர்களை வெளியேற்றுங்கள்¢ இன்றைய தினம் நீங்கள் இழிவுதரும் வேதனையைக் கூலியாகக் கொடுக்கப்படுவீர்கள். ஏனெனில், நீங்கள் உண்மையல்லாததை அல்லாஹ்வின் மீது கூறிக் கொண்டிருந்தீர்கள்¢ இன்னும், அவனுடைய வசனங்களை (நம்பாது நிராகரித்துப்) பெருமையடித்துக் கொண்டிருந்தீர்கள்' (என்று கூறுவதை நீர் காண்பீர்). (ஸூறா அல் அனாம் : 93)
>
> மலக்குகள் நிராகரிப்போரின் உயிர்களைக் கைப்பற்றும் போது நீங்கள் பார்ப்பீர்களானால், மலக்குகள் அவர்களுடைய முகங்களிலும், முதுகுகளிலும் அடித்துக் கூறுவார்கள்: 'எரிக்கும் நரக வேதனையைச் சுவையுங்கள்' என்று. இதற்கு காரணம், உங்கள் கைகள் முன்னமேயே செய்தனுப்பிய (பாவச்)செயல்களேயாம் - நிச்சயமாக அல்லாஹ் (தன்) அடியார்களுக்கு ஒரு சிறிதும் அநியாயம் செய்யமாட்டான். (ஸூறா அல்-அன்பால் : 50-51)
>
> மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்¢ பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்¢

ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்¢ அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்¢ மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான். (ஸூ றா அன்னாஸியா : 1)

ஆன்மா எவ்வாறு எடுக்கப்படும் என்பதை விளக்குகிறது :

அவ்வாறல்ல! (மரண வேளையில் அவன் உயிர்) தொண்டைக்குழியை அடைந்து விட்டால், 'மந்திரிப்பவன் யார்?' எனக் கேட்கப்படுகிறது. ஆனால், அவனோ நிச்சயமாக அதுதான் தன் பிரிவு (காலம்) என்பதை உறுதி கொள்கிறான். (ஸூ றா அல்-கியாமா :26-28)

இந்த வேளையில் ஏக இறைவனை மறுத்தவன் அவன் வாழ்நாளில் ஏற்க மறுத்த உண்மைகளை சந்திப்பான். மரணத்தை அவன் உயிரை பிடுங்கி எடுப்பார்கள் ஆகியன அவர்களை காத்திருக்கும் வேதனையின் ஆரம்பமாகும்.

அதற்கு மாற்றமாக நம்பிக்கை கொண்டவர்களது மரணமானது நிரந்தர சந்தோஷத்தின் ஆரம்பமாகும். கடுமையாக வேதனை அனுபவிக்கும் ஏக இறைவனை மறுத்தவர்களை போன்றல்லாது, நம்பிக்கையாளரின் உயிர் (நல்லோர் உயிர்களை) இலோசாகக் கழற்றுபவர்(களான மலக்கு)கள் மீதும் சத்தியமாக- (ஸூ றா அன் நாசியா: 2) எடுக்கும் வேளையில் வானவர்கள் கூறுவார்கள் :" (நிராகரிப்பை விட்டும்) தூயவர்களாக இருக்கும் நிலையில் மலக்குகள் எவருடைய உயிர்களைக் கைப்பற்றுகிறார்களோ அவர்களிடம்: 'ஸலாமுன் அலைக்கும்' ('உங்கள் மீது சாந்தி உண்டாவதாக)¢ நீங்கள் செய்து கொண்டிருந்த (நற்) கருமங்களுக்காக சுவனபதியில் நுழையுங்கள்' என்று அம்மலக்குகள் சொல்வார்கள். (ஸூ றா அன் நஹல் : 32). இந்நிலையை தூக்கத்திற்கு ஒப்பிடலாம். தூக்கத்தின் போது உயிர் வேறு வகையில் மாற்றமடைகிறது. இதை பின்வரும் வசனம் இவ்வாறு கூறுகிறது:

அல்லாஹ், உயிர்களை அவை மரணிக்கும் போதும், மரணிக்காதவற்றை அவற்றின் நித்திரையிலும் கைப்பற்றி, பின்பு எதன் மீது மரணத்தை விதித்துவிட்டானோ அதை(த் தன்னிடத்தில்) நிறுத்திக் கொள்கிறான்¢ மீதியுள்ளவற்றை ஒரு குறிப்பிட்ட தவணை வரை (வாழ்வதற்காக) அனுப்பி விடுகிறான் - சிந்தித்துப் பார்க்கும் மக்களுக்கு, நிச்சயமாக அதில் அத்தாட்சிகள் இருக்கின்றன. (ஸூ றா அல் ஜீமர் : 42)

இது தான் உண்மையான மரணம். வெளிப்புறம் மக்கள் காண்பது ஒரு உடல் படிப்படியாக அதன் செயல்பாடுகளை இழக்கும் அநனஉைடய மரணமாகும். ஒருவர் மரணிக்கும் வேளையில் வெளியிலிருந்து பார்க்கும் மக்கள் அவரது முகம் மற்றும் பின்புறம் அடிக்கப்படுவதையும் உயிர் தொண்டையை அடைவதையும் பார்பதில்லை. இதனுடன் தொடர்புடைய ஒருவனின் உயிரே இந்த உணர்வுகளை அனுபவிப்பதோடு இத்தகைய காட்சிகளை காண்கிறது. இருப்பினும் வெளியிலிருந்து பார்பவர்களை விட மரண நேரத்தில் ஒருவர் அதன் அனைத்து வழிகளிலும் மரணத்தை சுவைப்பார். வேறு வகையில் கூறுவதானால் மரண நேரத்தில் ஏற்படும் நிகழ்வுகள் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாறுவதாகும்.

நம்பிக்கையாளரின் அல்லது ஏக இறைவனை மறுத்தவராக இருந்தாலும் ஒருவரினது மரணம் ஒரு நிமிடத்தை கொண்டு தாமதிக்கவோ அல்லது அவசரப்பட மாட்டாது. மனிதன் எங்கு இருந்தாலும், அவர்களுடைய நேரம் வந்துவிட்டால், மரணம் வந்தே தீரும். மரணத்தை அனுபவிக்கும் விதமானது ஒருவருக்கு ஒருவர் வித்தியாசப்பட்ட போதிலும் இவை வர்ணிக்க முடியாதவை.

## நம்பிக்கையாளரின் மரணம்

- மரணமடைவது உறுதி என்று விளங்கிய நம்பிம்கையாளன் அவனது வாழ்நாள் முழுவதும் அதற்காக தாயாராகிறான். பின்பு அதில் வெற்றியடைகிறான்.
- உயிரை பறிக்க வரும் வானவர்கள் அவனுக்கு வாழ்த்து கூறி அவனுக்கு சுவர்க்கம் என்ற நன்மாரயம் கூறுகிறார்கள்.
- வானவர்கள் நம்பிக்கையாளரின் உயிரை மெதுவாக எடுப்பார்கள்
- தனக்கு இறைவன் சுவர்கத்தை வாக்களித்துள்ளான் என்ற நற்செய்தியை உலகிலுள்ள மற்றவர்களுக்கு கூற அனுமதி கேட்பான். ஆனால் அது அனுமதிக்கப்பட மாட்டாது.

ஏக இறைவனை மறுத்தவரின் மரணம்

- அவன் வாழ்நாளில் சிந்திப்பதிலிருந்து விலகியிருந்த மரணத்தை சந்திப்பான்
- மரணம் ஏற்படும் போது அவனது உடல் பயங்கரமாக நடுங்கும்.
- வானவர்கள் நரக வேதனையின் செய்தியை கூறுவார்கள்.
- அவனது பின்புறம் மற்றும் முகத்தில் அடித்த நிலையில் அவனது உயிரை பிடிங்கி எடுப்பார்கள்
- கடுமையான வேதனையுடன் அவனது உயிர் எடுக்கப்படும்
- உயிர் அவனது தொண்டை குழியை அடைந்தவுடன் அவனை குணப்படுத்த யாரும் இருக்கமாட்டார்கள்
- அவனது உயிர் கடினமான முறையில் எடுக்கப்படும்
- மரணவேளையில் அவன் நம்பிக்கை கொள்வதும் பாவமன்னிப்பும் கோருவதும் ஏற்றுகொள்ளப்படமாட்டாது

மரணத்தை வெளியிலிருந்து பார்க்கும் மக்களுக்கு அநனஉைஉயட மரணத்தில் பாடம் கற்று கொள்ளலாம்; அதாவது மரணமானது மனிதனின் உடல் எந்த அளவிற்கு பயனற்றதாக்குகிறது என்ற உண்மை காட்டுகிறது. ஆகவே மரணமும் புதைகுழியும் நம் ஒவ்வொருவருக்காகவும் காத்து கொண்டிருக்கிறது. ஆகவே அதை சிந்திப்பதும் குறிப்பிடப்படுவதும் சால சிறந்தது.

## உடல் மரணமடைதல் (வெளியிலிருந்து பார்ப்பது)

மரணிக்கும் தருவாயில் உயிர் அது வாழும் மனித உடலிலிருந்து வெளியேறியவுடன் அது உயிரற்ற உடலை விட்டுச் செல்கிறது. உயிருள்ளவைகள் தனது தோலை மாற்றுவதை போன்று அது வெளி கூட்டை துறந்து உண்மையான வாழ்வை நோக்கி செல்கிறது..

.இருப்பினும் இந்த உடலுக்கு அதன் உண்மை நிலை அறியாது அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்களுக்கு கூடு இந்த உலகில் தங்கிவிடுவதானது முக்கியமானதாகும்.

ஒருவர் மரணித்தவுடன் இந்த உயிர் பொருத்தப்பட்டிருந்த கூட்டிற்கு என்ன நடக்கும் என்பதை பற்றி நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா?

ஒரு நாள் நீங்களும் மரணமடைவீர்கள். அது நீங்கள் எகிர்பாரத விதத்தில் வரலாம். நீங்கள் பொருள் வாங்க கடைக்கு போகும் வழியில் வாகனம் உங்களை மோதும் அல்லது உயிர்கொல்லி நோய் உங்கள் வாழ்வை முடிவுக்கு கொண்டுவரும் அல்லது எந்த காரணமும் இன்றி உங்கள் இதயம் துடிப்பது நின்று விடலாம்

ஆகவேஇ நீங்கள் மரணத்தை சுவைக்க ஆரம்பிக்கிறீர்கள்

இதிலிருந்து உங்கள் உடலுடன் உங்களுக்கு எந்த தொடர்பும் இல்லை. நீங்கள் உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுடையது என்று சொல்லி வந்த உங்கள் உடல் சாதாரண தோல் குவியலாக மாறிவிடும். நீங்கள் மரணித்தவுடன் உங்கள் உடல் மற்றவர்களால் தூக்கி செல்லப்படும். உங்களை சுற்றி மக்கள் கவலை கொண்டு அழுது கொண்டிருப்பார்கள். உடல் பிரேத அறைக்கு எடுத்து செல்லப்பட்டு ஒரு இரவு அங்கு இருக்கும். அடுத்த நாள் புதைப்பதற்கான வேலைகள் நடைபெறும். தற்போது இறுகிய நிலையில் காணப்படும் உயிரற்ற உடல் குளிர்ந்த நீரால் கழுவப்படும். அதேநேரம் மரணித்ததன் அறிகுறியாக உடலின் சில பாகங்கள் ஊதா நிறமாக மாறும்.

பிறகு உடல் துணியால் சுற்றப்பட்டு சவப்பெட்டிக்குள் வைக்கப்படும். மரணவாகனம் சவப்பெட்டியை கொண்டு செல்ல தயாராக இருக்கும். புதைகுழியை நோக்கி செல்லும் போது மக்கள் தெருக்களில் காணப்படுவார்கள். மரணஊர்தியை பார்க்கும் சிலர் மரியாதை செய்வார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் அவர்களுடைய அன்றாட தேவைகளில் மூழ்கியிருப்பார்கள். உங்களை நேசிப்பவர்களும் உங்களை நேசிப்பதாக கருதுபவர்களும் சவப்பெட்டியை புதைகுழி நோக்கி தூக்கி செல்வார்கள். மீண்டும் அந்த இடத்தில் மக்கள் அழுதுபுலம்புவார்கள். பிறகு மக்கள் தப்பிக்க முடியாத இடத்தில் அடைவார்கள்.. சவக்குழி பலகையில் உங்கள் பெயர் எழுதப்பட்டிருக்கும். உங்களது உயிரற்ற உடல் சவப்பெட்டியிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு சவக்குழிக்குள் வைக்கப்படும். கடைசியாக உங்களுக்காக பிராத்திக்கப்படும். இறுதியாக மக்கள் உங்களை மண்ணால் மூடுவார்கள். உங்களை சுற்றியுள்ள துணியில் மண் வீசப்படும். அது உங்கள் வாய்இ தொண்டைஇ கண்இ மூக்கு ஆகியவற்றை அடைத்து கொள்ளும். பிறகு மண் உங்கள் துணியை முற்றிலும் மூடிக்கொள்ளும். இறுதி கிரிகைகள் முடிவடைந்து மக்கள் கலைந்து செல்வார்கள். புதைபுகுழி அதன் ஆழ்ந்த அமைதிக்கு திரும்பிவிடும். உங்களது கடைசி கிரிகைகளக்கு வந்தவர்கள் தங்களுடைய அன்றாட தேவைகளுக்காக சென்றுவிடுவார்கள். உங்கள் உயிரற்ற உடலை பொருத்தவரையில் வாழ்கை என்பது அர்த்தமற்ற ஒன்றாகும். ஒரு அழகான வீடுஇ

நல்ல வட்டசாட்டமான மனிதன், நல்ல நிலம் அனைத்திற்கும் எந்த அர்த்தமும் கிடையாது. உங்கள் உடல் இனிமேல் நண்பர்களை சந்திக்காது. அன்று முதல் உடல் மண்ணும் புழுக்களும் அதிலுள்ள பக்டீரியாக்களும் மட்டுமே சொந்தமாகிவிடும்.

நீங்கள் மரணித்த பின்பு உங்கள் உடல் எவ்வாறு இருக்கம் என்று சிந்தித்து பார்ததுண்டா ?

உங்கள் உடல் அடக்கம் செய்யப்பட்டவுடன் உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் காரணிகளால் விரைவாக அழுகிவிடும்.

நீங்கள் புதைகுழிக்குள் வைக்கப்பட்டவுடன் ஒட்சிசன் இல்லாத காரணத்தால் பக்டீரியா மற்றும் இதர பூச்சிகளினதும் செயல்பாடுகள் அதிகரிக்கும். இந்த நுண்ணங்கிகளால் வெளியிடப்படும் வாயுக்கள் உடலை வெடிக்க செய்யும். வயிற்று பகுதியில் ஆரம்பித்து அதன் தோற்றத்தை மாற்றிவிடும். மார்பு பகுதியிலிந்து வெளியிடப்படும் வாயுக்களின் அழுத்தத்தால் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம் கசியும். இவ்வாறு மாற்றமடைவதால் உடலிலுள்ள முடிகள், நகங்கள் குதிகால் மற்றும் தொடை ஆகியவை கழன்றுவிழும். உடம்பின் வெளிப்பகுதியில் ஏற்படும் மாற்றங்களால் உடலின் உட்பகுதியிலுள்ள இதயம், ஈரல், குடல் போன்றவை அழுகிவிடும். இவ்வேளையில் வயிற்று பகுதியில் பயங்கரமான நிகழ்வுகள் நடைபெறும். வாயுக்களின் அழுத்தம் தாங்கமுடியாமல் தோல் வெடித்து தாங்கி கொள்ள முடியாத துர்வாடை வீசும். மண்டை ஓட்டிலிருந்து ஆரம்பித்து சதை அதன் குறிப்பிட்ட இடத்திலிருந்து விலகிவிடும். தோலும் மற்றய மெல்லிய திசுக்களும் முற்றிலுமாக அழிந்துவிடும். மூளை அழுகி கிளே (உடயல) போன்று ஆகிவிடும். உடல் எழும்பு மட்டும் மிஞ்சும் வரை இந்த நிகழ்வுகள் நடைபெறும்.

நான் என்று நீங்கள் பெருமை பாராட்டிய உங்கள் உடல் அருவருப்பான பயங்கரமான விதத்தில் மறைந்து போகும். நீங்கள் மத சம்பிரதாயங்களுக்காக விட்டு செல்பவைகளை மண்ணிலுள்ள புழுக்களும் பக்டீரியாக்களும் பூச்சிகளும் உடலை தின்றுவிடும்.

நீங்கள் விபத்தில் இறந்து புதைக்கப்படவில்லை என்றால் அதன் விளைவுகள் இன்னும் மோசமாக இருக்கும். சாதாரண நாளில் அறையில் வைக்கப்பட்டுள்ள இறைச்சியை போன்று உங்கள் உடலை புழுக்கள் உண்ணும். புழுக்கள் கடைசி மாாமிசத்தை உண்டபின்னர் உங்கள் உடம்பு எலும்பாக மாறிவிடும்.

இவ்வாறே சிறந்த முறையில் படைக்கப்பட்ட மனிதனின் வாழ்கை மிக பயங்கரமான முடிவிற்கு வருகிறது.

## ஏன் ?.

அது நிச்சயமாக இறைவனின் விருப்பப்படியே இத்தகைய மோசமான முறையில் முடிவை சந்திக்கிறது. அது மிக முக்கிய செய்தி ஒன்றை உள்ளே வைத்துள்ளது. அதாவது மோசமான முடிவை எதிர் நோக்கும் மனிதன் அவன் அவனது உடல்ல மாறாக உடலுக்குள் புகுத்தப்பட்டுள்ள ஆன்மாவாகும். வேறு வகையில் கூறுவதானால் மனிதனால் உடல் இல்லாமல் வாழமுடியும் என்று தெரிந்து கொள்ளவேண்டும். இத்தகைய முடிவின் மூலம் மனிதன் தான் சதையும் முள் கொண்டு மட்டும் படைக்கப்பட்டவன் அல்லன் என்பதை புரிந்து கொளளவேண்டும்.

தனது வெளி தோற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் மனிதன் இந்த உலகம் தற்காலிகமானது என்றும் மரணத்தின் மூலம் அவனது வாழ்கை முடிவடைகிறது என்பதை தனது உடலை பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும். அது மண்ணால் அழிக்கப்பட்டு புழுக்களால் உண்ணப்பட்டு எலும்பு கூடாக மாறும்.

இந்த உலகின் தற்காலிக வாழ்கை

மனிதன் அவனது உடலை எந்நேரமும் சுத்தமாக வைத்து கொள்ள அதிக நேரங்களை செலவிடுவது ஏன் என்று நீங்கள் எப்போதவது சிந்தித்து பார்ததுண்டா? அசுத்தமான உடல்இ துர்வாடை வீசக்கூடிய வாய்இ பிசுபிசுப்பான சருமம் அல்லது முடி போன்ற நிலைகள் ஏற்படுவது ஏன்? மனிதனின் உடலிலிருந்து நாற்றம் ஏற்படுவது ஏன்?

மனிதனை போலல்லாது தாவரங்கள் மிகவும் சிறப்பான நறுமணத்தை கொண்டுள்ளது. ரோஜா அல்லது வேறு எந்த பூவோ அவை மண்ணில் வளர்ந்து தூசியான அசுத்தமான சூழ்நிலையில் இருந்த போதிலும் அவை துர்வாடை வீசுவதில்லை. மனிதன் எவ்வளவு கஷ்டப்பட்டு அவனது உடலை பராமரித்தாலும் அவனால் நிரந்தர நறுமணத்தை பெற்று கொள்ளவே முடிவதில்லை.

மனிதன் ஏன் இவ்வளவு பலவீனங்களை உடையவனாக படைக்கப்பட்டுள்ளான் என்பதை பற்றி சிந்தித்து பார்ததுண்டா? பூக்களில் நறுமணம் வீச செய்த இறைவன் மனிதனில் உடலை ஏன் நாற்றம் வரக்கூடியதாக படைத்தான்?

மனிதனின் பலவீனம் நாற்றத்தோடு மட்டும் வரையறுக்கப்படவில்லை. மாறாக அவனுக்கு சோர்வடைந்து பசிக்கிறதுஇ தளர்வடைகிறான்இ காயமடைகிறான்இ நோய் ஏற்படுகின்றன....

இவை அனைத்தையும் சேர்ந்து சாதாரண மனிதன் உண்டாக்கிய போதிலும் அவற்றில் ஏமாற்றக்கூடியவைகளும் இருக்கின்றன. சில நேரம் உடலிலிருந்து துர்வாடை வீசாமலிருக்கலாம். அதை போன்று ஒருவர் தலை வலி அல்லது வேறு எந்த நோயாலும் பாதிக்க படாமலிருக்கலாம். இந்த பலவீனங்கள் தற்செயலமாக ஏற்படுவது இல்லை மாறாக இறைவனால் ஏற்படுத்தப்படுகின்றன. இறைவன் மனிதனை ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்காக வேண்டுமென்றே அவனை பலவீனமானவனாக படைத்துள்ளான்.

அந்த திட்டம் இரண்டு காரணங்களை உள்ளடக்கியுள்ளது : முதலாவது மனிதன் அவன் பலவீனமான இறைவனின் அடிமை என்பதை உணரவேண்டும். எவ்வித பலவீனமும் இல்லாமல் இருப்பது இறைவனின் தன்மை. அவனது அடிமைகள் முற்றுமுழுதாக பலவீனமானவர்கள் அவர்கள் அவர்களது படைப்பாளனின் பால் தேவையுள்ளவர்களாக இருக்கிறார்கள். இதை குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

> மனிதர்களே! அல்லாஹ்வின் உதவி (எப்பொழுதும்) தேவைப்பட்டவர்களாக இருப்பவர்கள் நீங்கள்¢ ஆனால் அல்லாஹ் எவரிடமும் தேவைப்படாதவன்¢ புகழுக்குரியவன். அவன் நாடினால், உங்களைப் போக்கிவிட்டு, (வேறொரு) புதியபடைப்பைக் கொண்டு வருவான். இது அல்லாஹ்வுக்குக் கடினமானதுமல்ல. (ஸூ றா அல்பாதிர் : 15-17)

பலவீனமான மனித உடல் அவன் பலவீனமானவன் என்பதை மனிதனுக்கு தொடர்ச்சியாக நினைவூட்டுகிறது. மனிதன் தன்னை மேலானவனாகவும் தன்நிறைவானவனாகவும் நினைக்ககூடும். ஆனாலும் ஒவ்வொரு நாளும் அவன் செல்லும் கழிவறை மற்றும் அங்கு அவன் காண்பவை அவனது உண்மையான நிலையை அவனுக்கு தெரியப்படுத்தும்.

இரண்டாவது நோக்கம் இத்தகைய பலவீனங்கள் மனிதனின் வாழ்வு தற்காலிகமானது என்பதை நினைவூட்டுகிறது. காரணம் இந்த உலகில் இத்தகைய பலவீனங்கள் உடலுக்கு விசித்திரமானதாக இருக்கும். மறுமையில் சுவர்க்கவாசிகளுக்கு முழுமையான உடல் கொடுக்கப்படும். இந்த உலகிலுள்ள நிறைவற்ற பலவீனமான உடலானது நம்பிக்கையாளனின் உண்மையான உடலல்ல மாறாக குறிப்பிட்ட காலத்திற்கு தங்கியுள்ள தற்காலிகமான உருவமாகும்.

அதனால் தான் இந்த உலகில் உண்மையான அழகை பெறமுடியாதுள்ளது. மிகவும் வசீகரமான அழகான ஒருவன் கழிவறைக்கு செல்கிறான் அவனுக்கு வியர்கிறது காலையில் துர்வாடை வீசுகிறது பிறகு வலியால் அவதிபடுகிறான். ஒருவன் தன்னை சுத்தமாக வைத்துகொள்ள முடிவில்லாத அன்றாட விடயங்களில் ஈடுபட வேண்டியுள்ளது. வசீகரமான முகத்தை கொண்ட சிலருக்கு உடல் அமைப்பு சீராக இருக்காது.. அழகான கண்களையுடைய சிலருக்கு மூக்கு பெரிதாக இருக்கும். இதை போன்று எண்ணிலடங்காத உதாரணங்களை கூறலாம். எல்லாம் சிறப்பாக உள்ள ஒருவன் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டிருப்பான்.

இவற்றுக்கு மேலாகஇ எல்லாம் சிறப்பாக அமைந்த ஒருவன் நிச்சயமாக வயோதிபத்தை அடைந்து மரணிப்பான். எதிர்பாராத சாலை விபத்தில் மறுசீரமைக்க முடியாத அளவிற்கு உடல் காயமடையலாம். இந்த உலகில் மனித உடல் மாத்திரம் நிலையில்லாத தற்காலிகமானது என்று கூறமுடியாது. அனைத்து பூக்களும் வாடுகின்றன. மிகவும் சுவையான உணவு அழுகி பயனற்று போகிறது. இவை அனைத்தும் இவ்வுலகின் அசாதாரணமானவை. இவ்வுலகில் எமக்கு மற்றும் இந்த உடலுக்கும் கொடுக்கப்பட்ட குறுகிய வாழ்கை இறைவனின் தற்காலிக அருளாகும். நிரந்தர வாழ்வும் நிறைவான படைப்பும் மறுமையில் தான் சாத்தியமாகும். இதை குர்ஆன் கூறும் போது:

> உங்களிடம் தரப்பட்டிருக்கும் எப்பொருளும்இ (நிலையற்ற) இவ்வுலக வாழ்கையின் (அற்ப) சுகங்களே. இறைநம்பிக்கை கொண்டு தங்கள் இறைவனிடம் (தங்கள் காரியங்களை முழுமையாக ஒப்படைத்து) நம்பிக்கை கொள்வோருக்கு இறைவனிடத்தில் இருப்பது மிக்க மேலானதும் நிலையானதுமாகும். (ஸூ றா அஷ்-ஷூ றா: 36)

மற்றொரு வசனத்தில் இவ்வுலகின் உண்மை நிலையை விளக்குகிறது :

> அறிந்து கொள்ளுங்கள்: ‘நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், வேடிக்கையும், அலங்காரமுமேயாகும்¢ மேலும் (அது) உங்களிடையே பெருமையடித்துக் கொள்வதும்¢ பொருள்களையும், சந்ததிகளையும் பெருக்குவதுமேயாகும்¢ (இது) மழையின் உதாரணத்துக்கு ஒப்பாகும்¢ (அதாவது:) அது முளைப்பிக்கும் பயிர் விவசாயிகளை ஆனந்தப் படுத்துகிறது¢ ஆனால், சீக்கிரமே அது உலர்ந்து மஞ்சள் நிறம் ஆவதை நீர் காண்கின்றீர்¢ பின்னர் அது கூளமாகி விடுகிறது¢ (உலக வாழ்வும் இத்தகையதே¢ எனவே உலக வாழ்வில் மயங்கியோருக்கு) மறுமையில் கடுமையன வேதனையுண்டு¢ (மு.:மின்களுக்கு) அல்லாஹ்வின் மன்னிப்பும், அவன் பொருத்தமும் உண்டு - ஆகவே, இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் சொற்ப சுகமே தவிர (வேறு) இல்லை. (ஸூ றா அல்-ஹதீத் : 20)

சுருங்க கூறுவதாயின் இவ்வுலகில் இறைவன் அவனது எல்லையற்ற சக்திக்கும் அறிவிற்கும் அத்தாட்சியாக பல அழகான வியக்கத்தக்கவைகளையும் குறையுள்ளவகளையும் படைத்துள்ளான். நிரந்தரம் மற்றும் மேன்மை ஆகியவை இவ்வுலக நியதிக்கு எதிரானது. மனிதன் எவ்வளவு சிந்தனை செய்தாலும் அவனது நவீன தொழிநுட்பத்தை உபயோகித்தாலும் இறைவனின் நியதிகளை மாற்ற முடியாது. இதனால் தான் மக்கள் மறுமையை அடைந்து இறைவனுக்கு முறையான நன்றியையும் மரியாதையையும் செலுத்த முற்படுவர். மேலும் மக்கள் இவ்வுலகத்தில் நற்பேறுகளை அடையமுடியாது என்பதை உணர்ந்து அதற்கான நிரந்தர இடம் நம்பிக்கையாளர்களுக்கு தயார்படுத்தப்பட்டுள்ளது என்பதை உணரவேண்டும். இதை குர்ஆன் இவ்வாறு விளக்குகிறது :

> எனினும், நீங்களோ (மறுமையை விட்டு விட்டு) இவ்வுலக வாழ்வைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறீர்கள். ஆனால் மறுமை (வாழ்க்கை)யோ சிறந்ததாகும்¢ என்றும் நிலைத்திருப்பதும் ஆகும். (ஸூ றா அல்-ஆ:லா : 16-17)

இன்னொறு வசனத்தில் இன்னும், இவ்வுலக வாழ்க்கை வீணும் விளையாட்டுமேயன்றி வேறில்லை - இன்னும் நிச்சயமாக மறுமைக்குரிய வீடு திடமாக அதுவே (நித்தியமான) வாழ்வாகும் - இவர்கள் (இதை) அறிந்திருந்தால். (ஸூ றா அன் கபூத் : 64) தற்காலிக புகலிடமான இந்த உலகத்திற்கும் நிரந்தர வாழ்வான மறுமைக்கும் இடையே சிறிய இடைவெளியே இருக்கிறது. மரணம் எனும் கருவியை கொண்டு இந்த திரை நீக்கப்படுகிறது. மனிதன் மரணத்தோடு அவனது உடல் மற்றும் இந்த உலகத்தோடுள்ள அனைத்து பந்த பிணைப்புகளையும் துண்டித்து அவனுக்கு படைக்கப்பட்ட புது உடலுடன் அவனது நிரந்தர வாழ்வை ஆரம்பிப்பான்.

மரணத்தின் பின் உண்மையான வாழ்கை ஆரம்பமாவதால் உண்மையான இயற்கையின் சட்டங்களும் அவ்வாறே மறுமைக்கு ஏற்றவாறு அமையும். இவ்வுலகிலுள்ள சட்டங்கள் அனைத்தும் குறையுள்ள நிறைவற்ற நிரந்தரமற்றவைகள் இருப்பினும் அவை உண்மையல்ல அவை மாறக்கூடியவை. உண்மையான சட்டங்கள் எல்லையற்ற தன்னிகரற்ற மரணமடையாதவைகளின் அடிப்படையிலேயே உருவாக்கப்படும். வேறுவகையில் கூறுவதானால் சாதாரணமானது என்னவென்றால் வாடாத பூக்கள்இ வயோதிபத்தை அடையாத மனிதன்இ அழுகாத பழங்கள். உண்மையான சட்டங்கள் மனிதனின் ஒவ்வொரு ஆசைகளும் உடனே பூர்தியாக வேண்டும். அவனுக்கு நோய்கள் வரக்கூடாது. மேலும் குளிரையோ அல்லது வியர்வையையோ உணரவும் கூடாது. தற்காலிக சட்டங்கள் இந்த தற்காலிக உலகில் நடைமுறையில் உள்ளன ஆனால் உண்மையான சட்டங்கள் மறுமை வாழ்கையில் வரும். இவ்வுலகில் காணப்படும் அனைத்து குறையுள்ள நிறைவற்றவைகளும் வேண்டுமென்றே மாசுப்படுத்தப்பட்ட உண்மையான சட்டங்களாகும்.

உண்மையான சட்டங்களை கொண்டுள்ள மறுமை நினைப்பதை போன்று மிக தொலைவிலில்லை. இறைவன் அவன் நாடும் எந்த வேளையிலும் மனிதனின் வாழ்வை முடித்து அவனை மறுமைக்கு அனுப்புவான். இந்த நிலை மாற்றம் கண் சிமிட்டும் எடுத்து கொள்ளும் மிக குறுகிய காலத்தில் நடைபெறும். இது ஒருவர் கனவிலிருந்து எழும்புவதற்கு ஒப்பிடலாம்.

ஆண்டுகளின் எண்ணிக்கையில் நீங்கள் பூமியில் எவ்வளவு (காலம்) இருந்தீர்கள்?’ என்று கேட்பான்.

> ‘ஒரு நாள் அல்லது ஒரு நாளின் சிறிது பாகம் நாங்கள் தங்கியிருந்திருப்போம். (இதைப்பற்றிக்) கணிப்பவர்களிடம் நீ கேட்பாயாக!’ என்று அவர்கள் கூறுவார்கள். ‘ஒரு சொற்ப காலம் தவிர (பூமியில் அதிகம்) நீங்கள் தங்கவில்லை. நீங்கள் (இதை) அறிந்திருந்தால்!’ என்று (இறைவன்) கூறுவான்.

'நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?' (என்றும் இறைவன் கேட்பான்.) (ஸூ றா அல் மு·மின்: 112-115)

மரணம் வரும் வேளைஇ கனவுகள் முடிவிற்கு வந்து மனிதன் அவனது உண்மையான வாழ்வை ஆரம்பிக்கிறான். இந்த உலகில் கண்சிமிட்டும் நேரம் இருந்த மனிதன் இறைவனுக்கு முன் உலகில் அவன் செய்தவைகளுக்கான கணக்குகளை காட்ட வருவான். அவன் வாழ்நாள் முழுவதும் மரணத்தை மனதில் வைத்து இறைவனின் அருளை நாடியவனாக வாழ்ந்திருந்தால் அவன் காப்பாற்றப்படுவான். குர்ஆன் இவர்களை வலக்கரத்தில் பட்டோலை கொடுக்கப்பட்டவர்கள் என்று அழைக்கிறது.

ஆகவே, எவருடைய பட்டோலை அவருடைய வலக்கையில் கொடுக்கப்படுமோ, அவர் (மகிழ்வுடன்), 'இதோ! என் பட்டோலையைப் படியுங்கள்' எனக் கூறுவார். 'நிச்சயமாக, நாம் உன்னுடைய கேள்வி கணக்கை, திட்டமாக சந்திப்பேன் என்று எண்ணியே இருந்தேன்.' (ஸூ றா அல்-ஹாக்கா :19-20)

## மரணத்திலிருந்து பாடம் படிக்க தவறியவர்களின் நிலை

பெரும்பாலனவர்களிடம் மரணத்தைபற்றி சரியான சிந்தனை இல்லை. வாழ்வின் முடிவு மரணம்'' என்பது அதில் ஒன்று. ஒருபடி முன் சென்றால் மரணம் என்பது அடுத்த வாழ்வின் ஆரம்பம் என்பதை புரிந்து கொள்வான். இந்த மறைமுகமான தோற்றமானது ஏக இறைவனை மறுப்பவர்களை குறுகிய காலத்திற்குள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தூண்டுகிறது. அதனால் தான் மறுமை பற்றி உண்மைகளை உணராதவர்கள் இவ்வுலக வாழ்நாளிலேயே அனைத்தையும் அனுபவித்துவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள். நல்லது எது கெட்டது எது என்று பிரித்து அறியாமல் அவர்களுடைய அனைத்து ரசனைகளையும் ருசித்து விட வேண்டும் என்று துடிக்கிறார்கள். இவர்கள் இவ்வாறு நடந்மு கொள்ள காரணம் மரணத்தோடு இவ்வுலகின் அனைத்து சுகங்களும் முடிந்து விடும் என்ற சிந்தனையே.. அவர்களுக்கு இன்னும் பல காலம் உயிருடன் இருப்பார்கள் என்ற சிந்தனையின் காரணமாக நீண்ட கால திட்டங்களை தீட்டுகிறார்கள். அவர்கள் தங்களை அறிவாளிகளாக நினைப்பதோடு இறைவனையும் மறுமையையும் உறுதியாக நம்பி அதற்காக தங்களை தயார்படுத்துகின்ற நம்பிக்கையாளர்களை முட்டாள்கள் என்று கருதுகிறார்கள். இது சாத்தானால் மனிதனை ஏமாற்ற கையாளும் பழமையான முறையாகும். இந்த பழமையான முறையை எச்சரிக்கும் விதமாக இறைவன் இவ்வாறு கூறுகிறான்.

நிச்சயமாக, எவர்கள் நேர்வழி இன்னதென்று அவர்களுக்குத் தெளிவானபின், தம் முதுகுகளைத் திருப்பிக் கொண்டு போகிறார்களோ, (அவ்வாறு போவதை) ஷைத்தான் அழகாக்கி, (அவர்களுடைய தவறான எண்ணங்களையும்) அவர்களுக்குப் பெருக்கி விட்டான். (ஸூ றா முஹம்மது : 25)

ஷைத்தான் அவர்களுக்கு வாக்களிக்கிறான்¢ அவர்களுக்கு வீணான எண்ணங்களையும் உண்டாக்குகிறான்¢ மேலும் அந்த ஷைத்தான் ஏமாற்றுவதைத் தவிர வேறு (எதனையும்) அவர்களுக்கு வாக்களிக்கவில்லை. (ஸூ றா அன் நிசா: 120)

வாழ்கை நிரந்தரமானது என்று அதிஷ்டம் இவ்வுலகில் இருக்குமானால் ஏக இறைவனை மறுப்பவர்கள் வாழ்வை போட்டியாகவே கருதுவார்கள். அவர்களது வாழ்கை முழுவதும் குழந்தைகளிலும், உடமைகளிலும் பெருமை அடைவார்கள். இந்த பெருமை அவர்களுக்கு போலி கௌரவத்தை கொடுப்பதால் மறுமைனய சிந்தனை விட்டும் அவர்கள் முழுமையாக விலகி சென்று விட்டார்கள். அவர்களின் பெரும் தவறின் காரணமாக அவர்களின் கடைசி இலக்கு எவ்வாறு அமையும் என்று குர்ஆன் விளக்குகிறது.

அவர்களுக்கு நாம் செல்வத்தையும் சந்ததிகளையும் அதிகமாகக் கொடுத்திருப்பது பற்றி அவர்கள் என்ன எண்ணிக்கொண்டார்கள்? அவர்களுக்கு நன்மைகளில் நாம் விரைந்து வழங்குகிறோம் என்று அவர்கள் எண்ணிக் கொண்டார்களா? அவ்வாறல்ல¢ அவர்கள் (இதை) உணர்வதில்லை. (ஸூ றா அல்-மு·மின் : 55-56.)

அவர்களுடைய செல்வங்களும், அவர்களுடைய மக்கள் (பெருக்கமும்) உம்மை ஆச்சரியப்படுத்த வேண்டாம்¢ அல்லாஹ் அவற்றைக் கொண்டு இவ்வுலக வாழ்க்கையிலேயே அவர்களை வேதனை செய்யவும், அவர்கள் கா·பிர்களாக இருக்கிற நிலையில் அவர்களுடைய உயிர்கள் பிரிவதையும் நாடுகிறான். (ஸூ றா அத்-தவ்பா: 55)

இறைவன் மனிதனுக்கு மரணத்தையும் மறுமையையும் பற்றி சிந்திக்க வேண்டும் என்பதற்காகவே பல எச்சரிக்கைகளையும் இறைசெய்திகளையும் கொடுக்கிறான். இன்னொரு வசனத்தில் இறைவன் மனிதனுக்கு சோதனைகள் எச்சரிக்கையாகவே கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறான்

ஒவ்வோர் ஆண்டிலும், ஒரு முறையோ, இரு முறையோ அவர்கள் சோதிக்கப்படுகிறார்கள்' என்பதை அவர்கள் காணவில்லையா? அப்படியிருந்தும் அவர்கள் தவ்பா செய்து மீள்வதுமில்லை¢(அது பற்றி) நினைவு கூர்ந்து நல்லுணர்ச்சி பெறுவதுமில்லை. (ஸூ றா அத்-தவ்பா : 126)

உண்மையாகவே மக்களில் பெரும்பான்மையானவர்கள் பல சோதனைகளை சந்திக்கிறார்கள். அதனால் அவர்கள் அடிக்கடி பாவ மன்னிப்பு கேட்டு நல்லுணர்ச்சி பெறுகின்றனர். இந்த செயல் நடப்பது அரிது அதாவது வருடத்தில் ஒருமுறையோ அல்லது இருமுறையோ நடக்கும். இதற்கு மாற்றமாக சிறியதாக அன்றாடம் நடைபெறுகின்ற தொல்லைகளாகவும் இருக்கலாம். மனிதன் மரணங்களையும், காயங்களையும், விபத்துகளையும் தினமும் சந்திக்கிறான். பத்திரிக்கைகள் மரணசெய்திகளாலும் மரண அறிவித்தல்களாலும் நிறைந்து காணப்படுகின்றன. இத்தகைய நிகழ்வுகளோடு இயற்கை அழிவுகள் எந்நேரமும் வந்து மனிதனது பரீட்சை நேரத்தை முடித்துவிடும் என்று நினைக்க வேண்டும். இத்தகைய விழிப்புணர்வு ஒருவனை இறைவனை ஞாபகமூட்டி அவனிடத்தில் அடைக்கலம் தேடி அவனிடத்தில் பாவமன்னிப்பு கேட்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும்.

சோதனைகளின் மூலம் பாடம் கற்று கொள்ளும் நம்பிக்கையாளன் உறுதியடைகிறான். இருப்பினும் இதே நிகழ்வு ஏக இறைவனை மறுப்பவர்களுக்கு வேறுவிதமான தாக்கத்தை ஏற்படுத்தும். மரண பயத்தால் திகிலடைந்து மரணத்தின் உண்மைகளை யோசிக்காமல் அதனை மறக்க முற்படுவார்கள். இவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் பாதுகாப்பு தேடுகிறார்கள். இருப்பினும் இத்தகைய ஏமாற்றும் முறை அவர்களுக்கு கேடு விளைவிக்கும். காரணம் இறைவன் அவர்களது நேரம் வரும் வரை அவர்களை விட்டுவைக்கிறான். இந்த தவணை அவர்கள் சிந்திப்பதற்கு மாற்றமாக அவர்களுக்கு எதிராக செயல்படுகிறது. (ஸூ றா அன் நஹல் : 61): குர்ஆனில் வேறொரு இடத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறது.

இன்னும், அவர்களை (உடனுக்குடன் தண்டிக்காமல்) நாம் தாமதிப்பது (அந்த) கா∴பிர்களுக்கு - நிராகரிப்பவர்களுக்கு - நல்லது என்று அவர்கள் கருத வேண்டாம்¢ (தண்டனையை) நாம் அவர்களுக்குத் தாமதப் படுத்துவதெல்லாம் அவர்கள் பாவத்தை அதிகமாக்குவதற்கே தான் - அவர்களுக்கு இழிவு தரும் வேதனையும் உண்டு."(ஸூ றா ஆல-இம்றான்: 178)

தனது நெருங்கியவரின் மரணத்தின் மூலம் நல்லுணர்ச்சி பெறாத சிந்தனையற்ற மனிதன் அவன் மரணத்தை நெருங்கும் சந்தர்பத்தில் இறைவனிடத்தில் மிகவும் அருளை வேண்டியவனாக மாறுவான்.

அவனே உங்களைத் தரையிலும், கடலிலும் பயணம் செய்யவைக்கிறான்¢ (சில சமயம்) நீங்கள் கப்பலில் இருக்கும்போது - சாதகமான நல்ல காற்றினால் (கப்பலிலுள்ள) அவர்களைக் கப்பல்கள் (சுமந்து) செல்லும்போது அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்¢ பின்னர் புயல் காற்று வீசி எல்லாப்பக்கங்களிலிருந்தும் அலைகள் மோதும் போது, நிச்சயமாக (அலைகளால்) சூழப்பட்டோம் (தப்ப வழியில்லையே)' என்று எண்ணுகிறார்கள்¢ அச்சமயத்தில் தூய உள்ளத்துடன், 'நீ எங்களை இதிலிருந்து காப்பாற்றி விட்டால், மெய்யாகவே நாங்கள் உனக்கு நன்றி செலுத்துபவர்களாக இருப்போம்' என்று அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றார்கள். (ஸூ றா யூனுஸ் : 22)

இத்தகைய மக்கள் அவர்களது சோதனைகள் நீக்கப்பட்ட பின்னர் அவர்களது பழைய நிலைக்கு மாறிவிடுகின்றனர். அவர்களுடைய வாக்குறுதிகளை மறந்து சிறிதளவேனும் மனசாட்சியின்றி போலியான நிலையில் சென்றுவிடுகின்றனர். இத்தகைய பொய்யானவைகள் நியாய தீர்ப்பு நாளில் அவர்களுக்கு எதிராக சாட்சியமளிக்கும்.

அவன் அவர்களைக் காப்பாற்றி விட்டதும் அவர்கள் பூமியின் மேல் நியாயமில்லாது அழிச்சாட்டியம் செய்கிறார்கள்¢ மனிதர்களே! உங்கள் அழிச்சாட்டியங்கெல்லாம் உங்களுக்கே கேடாகமுடியும்¢ உலக வாழ்க்கையில் சிறிது சுகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள்¢ இதன் பின்னர் நம்மிடமே நீங்கள் திரும்ப வர வேண்டியதிருக்கிறது. அப்போது நீங்கள் செய்து கொண்டிருந்ததை உங்களுக்கு நாம் அறிவிப்போம். (ஸூ றா யூனுஸ் : 23)

மரணத்தின் போதும் மனிதன் இதே முறையை கையாள முற்படுவான் இருப்பினும் அவனுக்கு கொடுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

மேலும், இக்குற்றவாளிகள் தம் இறைவன் முன் தலைகுனிந்தவர்களாய், 'எங்கள் இறைவா! நாங்கள் (இப்பொழுது) பார்த்துக் கொண்டோம், கேட்டும் கொண்டோம் - ஆகவே, நீ (உலகுக்கு) எங்களைத் திருப்பி அனுப்பிவை¢ நாங்கள் நற்கருமங்களையே செய்வோம். நிச்சயமாய் நாங்கள் (நம்பிக்கையில்)

உறுதியுள்ளவர்களாக ஆகிவிட்டோம்' என்று சொல்லும்போது (நபியே!) நீர் பார்ப்பீராயின் (அவர்களுடைய நிலையை நீர் அறிந்து கொள்வீர்). மேலும் நாம் நாடியிருந்தால், ஒவ்வோர் ஆத்மாவுக்கும் அதற்குரிய நேர்வழியை நாம் கொடுத்திருப்போம்¢ ஆனால் 'நான் நிச்சயமாக நரகத்தை - ஜின்களையும், (தீய) மனிதர்களையும் - ஆகிய யாவரையும் கொண்டு நிரப்புவேன்' என்று என்னிடமிருந்து (முன்னரே) வாக்கு வந்துள்ளது. ஆகவே, உங்களுடைய இந்த நாளின் சந்திப்பை நீங்கள் மறந்திருந்ததின் (பலனை) அனுபவியுங்கள், நிச்சயமாக நாமும் எங்களை மறந்து விட்டோம்¢ மேலும் நீங்கள் செய்த (தீ) வினையின் பயனாக என்றென்றும் நிலையான வேதனையை அனுபவியுங்கள்' (என்று அவர்களுக்குச் சொல்லப்படும்). (ஸூறா அஸ் ஸஜதா : 12-14)

இந்த பயனற்ற முயற்சிகள் நரகத்திலும் தொடரும்:

இன்னும் அ(ந்நரகத்)தில் அவர்கள்: 'எங்கள் இறைவா! நீ எங்களை (இதை விட்டு) வெளியேற்றுவாயாக! நாங்கள் வழக்கமாகச் செய்து கொண்டிருந்த (தீய)வற்றை விட்டும் ஸாலிஹான (நல்ல) அமல்களை செய்வோம்' என்று கூறிக் கதறுவார்கள். (அதற்கு அல்லாஹ்) 'சிந்தித்துப் பார்க்கக் கூடியவன் அதில் சிந்திக்கும் பொருட்டு, நாம் உங்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கவில்லையா? உங்களிடம் அச்சமூட்டி எச்சரிப்பவரும் வந்திருந்தார்¢ ஆகவே நீங்கள் (செய்த அநியாயத்தின் பயனைச்) சுவையுங்கள்¢ ஏனென்றால் அநியாயக்காரர்களுக்கு உதவியாளர் எவருமில்லை' (என்று கூறுவான்). (ஸூறா அல்-பாதிர் : 37)

மறுமையில் இத்தகைய பயனற்ற முயற்சிகளும்அதனது வேதனையான முடிவும் ஏற்பட காரணம் பூமியில் மனிதனின் வாழ்வும் அதன் தாற்பரியங்களின் உண்மையாண நிலையை அவனால் புரிந்து கொள்ளாததன் விளைவாகும். நம்பிக்கை கொள்ளாதவன் அவனை சுற்றி நடப்பவைகளை கொண்டு நல்லுணர்ச்சி பெறுவதில்லை. இறைவனால் அனுப்பப்பட்ட எச்சரிக்கைகளை செவிசாய்பதில்லை. அவனது மனசாட்சி குரலை அசட்டை செய்து அல்லது அவற்றை மதிக்காமல் மரணத்தை நடக்க கூடாத ஒன்றாக பார்கிறான். அவன் அவனது ஆன்மாவின் பிழையான யோசனைகளை மதித்து கட்டுப்பட்டு .இறைவனின் திருப்தியை பெற முயல்வதில்லை. இவை அனைத்தும் மரணம் சடுதியாக வந்து அவனை பிடித்து கொள்ளும் போது மேற்கூறிய வசனங்களில் குறிப்பிட்டதை போன்று அவன் மோசமான சூழ்நிலையில் மாட்டிக்கொள்வான். ஆகவே ஒருவனுக்கு மரணம் வரு முன்னர் அவனது மறதி எனும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்து கொள்ள வேண்டும். ஏனென்றால் மரண நேரமானது அவனுக்கு திருந்துவதற்கான எந்த சந்தர்பத்தையும் கொடுக்காது:

உங்களில் ஒருவருக்கு மரணம் வருமுன்னரே, நாம் உங்களுக்கு அளித்த பொருளிலிருந்து, தான தர்மம் செய்து கொள்ளுங்கள்¢ (அவ்வாறு செய்யாதது மரணிக்கும் சமயம்)¢ 'என் இறைவனே! என் தவணையை எனக்கு சிறிது பிற்படுத்தக் கூடாதா? அப்படியாயின் நானும் தான தர்மம் செய்து ஸாலிஹான (நல்ல)வர்களில் ஒருவனாக ஆகிவிடுவேனே' என்று கூறுவான். ஆனால், அல்லாஹ், எந்த ஆத்மாவுக்கும் அதன் தவணை வந்துவிட்டால் (அதனைப்) பிற்படுத்த மாட்டான் - நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் தெரிந்தே இருக்கின்றான். (ஸூறா அல்-முனாபிகூன் : 10-11 )

அறிவுடையவர்கள் மரணத்தை அதிகமாக சிந்திக்கவேண்டும். அதன் சிந்தனையை தவிர்க்க முயலகூடாது. இதன் மூலமே இறைவனது விருப்பப்படி செயல்பட முடியும். அவனது ஆன்மாவின் மோசமான பக்கத்தை போலியான வாழ்கையை கொண்டு ஷைத்தான் ஏமாற்றமால் தடுக்க முடியும்:. உண்மையில் உலக வாழ்கையை ஒருவனது முக்கிய குறிக்கோள்களாக மாற்றுவது மக்களுக்கு மிகப்பெரும் ஆபத்தாகும். இதை பற்றி எமது தூதர் கூறும்போது எமது உலக விடயங்கள் எமது முக்கிய குறிக்கோள்களாக மாறாமல் எம்மை காத்துகொள்ள வேண்டும் என்றார்கள். . (அப்துல்லா இப்னு உமர் அறிவிக்கிறார். நூல் திர்மிதி :783)

## மரணத்திற்கு தயாராதல்

இந்த உலகம் மனிதனை தயார்படுத்தும் இடமாகும். இறைவன் மனிதனுக்கு பல கடமைகளை கொடுத்து அவன் வகுத்துள்ள எல்லைகளை அறிவித்துள்ளான். மனிதன் இந்த எல்லைகளை கடைபிடித்து அவனது கட்டளைகளுக்கு அடிபணிந்து அவன் தடைசெய்துள்ளவற்றை விட்டும் விலகியிருந்தால் மனிதன் முதிர்ச்சி அடைவதோடு விழிப்புணர்வும் சிறந்த ஞானத்தையும் அடைந்து கொள்வான். இத்தகைய தன்மைகளை கொண்டுள்ள ஒரு நம்பிக்கையாளன் அவனை வந்தடையும் எந்த தீங்காக இருந்தாலும் மிகுந்த பொறுமையுடன் தாங்கிக்கொள்வான். அவன் இறைவனிடம் பால் திரும்பி அவனிடம் மாத்திரம் உதவி தேடுவான். இந்த முறையில் தான் இறைவனில் நம்பிக்கை கொள்ள வேண்டும் அவனில் உறுதியான எல்லயற்ற நம்பிக்கை

கொண்டு மறைமுகமாக உள்ளத்தில் கீழ்படிய வேண்டும். இறைவனால் வழங்கப்பட்ட உண்மையான அருட்கொடைகளை உணர்ந்து அதற்காக ஆழ்ந்த நன்றியை வெளிப்படுத்தி இறைவனுக்கு மிக நெருக்கடைவான். மிகச் சிறந்த ஞானத்தையும் நன்னடத்தையுமம் கொண்ட சிறந்த நம்பிக்கையாளனாக மாறுவான். மேலும் அனைத்தும் நிறைவாக காணப்படும் சுவர்கத்தை பெற்று கொள்ள வேண்டியவர்களில் ஒருவனாக மாறுவான். அதேநேரம் உலக கண்ணோட்டத்தில் தெளிவாக இருந்தும் இவ்வுலகின் உண்மைகளை படிக்க தவறினால் அவன் சிறந்த நடத்தைகளை காண்பிக்க தவறிவிடுவான். இதன் காரணமாக அவன் அனைத்து விதமான இழப்புகளுக்கும் உரியவனாகிறான்.

உண்மையில் ஆதி மனிதன் ஆதம் உலகிற்கு அனுப்பபட்டதன் நோக்கம் உரிய பயிற்ச்சிகளை பெற்று பின்பு பரீட்சிக்கப்பட்டு அவரை நிரந்தர வாழ்கைக்கு தயார்படுத்துவது இறைவனின் நியதியாகும். இறுதியில் அவர் மிகச்சிறந்த நடத்தையுடையவர் என்று குர்ஆன் பாராட்டுகிறது..

மனிதன் அவனுக்கு பல சோதனைகள் தொடர்சியாக கொடுக்கப்பட்டு சோதிக்கப்படுகிறான். அவன் அவற்றை சிறந்த முறையில் அனுகினால் அவனுக்கு அவனது நிரந்தர வாழ்கையில் வெகுமதிகளை பெற்று கொள்வான். அவனது தோல்விகள் அவனுக்கு தண்டனைகளை பெற்று கொடுக்கும். அவர்களது பரீட்சை நேரம் எப்போது முடியும் என்பது யாருக்கும் தெரியாது. குர்ஆன் இதை மேலும், எந்த ஆன்மாவும் (முன்னரே) எழுதப்பட்டிருக்கும் தவணைக்கு இணங்க, அல்லாஹ்வின் அனுமதியின்றி, மரணிப்பதில்லை¢ எவரேனும் இந்த உலகத்தின் பலனை (மட்டும்) விரும்பினால், நாம் அவருக்கு அதிலிருந்தே வழங்குவோம்¢ இன்னும் எவர், மறுமையின் நன்மையை விரும்புகிறாரோ அவருக்கு அதிலிருந்து வழங்குவோம்¢ நன்றியுடையோருக்கு அதி சீக்கரமாக நற்கூலி கொடுக்கிறோம்'' (ஸூறா ஆல-இம்ரான் : 145) கூறுகிறது. இந்த காலம் சிலநேரம் நீண்டு காணப்படும், சிலநேரம் சுருக்கமாகவும் இருக்கும். உண்மை என்னவென்றால் நாம் கணக்கிடும் நீண்ட காலம் 70 அல்லது 80 ஆண்டுகளை தாண்டாது.

அதனால் தான்இ மனிதன் நீண்ட கால திட்டங்களை தீட்டாமல் குர்ஆனுக்கு கட்டுபட்டு அதன் கட்டளைகளின் அடிப்படையில் வாழ்ந்து தனது அனைத்து செயல்களுக்கும் மறுமையில் கணக்கு காட்ட வேண்டும் என்று அறிந்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் நிரந்தர வாழ்கைக்கு தயாராக தவறினால் இந்த நோக்கத்திறகாக வழங்கப்பட்ட ஒரேஒரு சந்தர்பத்தையும் நழுவ நேரிடும். அதனால் நிரந்தர நரகமும் அதன் வேதனைகளும் தவிர்க்க முடியாதவையாகிவிடும். ஒவ்வொரு மனிதனும் சுவர்கத்தை மிகவும் நேசிக்க கூடிய ஒரே இடம் நரகம் என்பதை மறக்க கூடாது. அதனால் தான் இவ்வுலகில் வீணாக செலவிடும் ஒவ்வொரு நிமிடமும் மிகப்பெரும் நட்டமும் அதேநேரம் பயங்கர முடிவை நோக்கி வைக்கும் மிகப்பெரும் காலடியாகும்.

இவ்வுலகில் அனைத்தையும் விடவும் இந்த உண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். நாம் எமது வாழ்நாளில் நடக்கலாம் என்று சந்திக்கும் ஒரு நிகழ்வுக்காக நம்மை தயார்படுத்தி கொள்வதை போன்று அதை விடவும் முக்கியத்துவம் கொடுத்து அடுத்த வாழ்கைக்கு தயார் படுத்தி கொள்ள வேண்டும். ஏனென்றால் மரணிக்க போவது நாம். மரணத்தின் பின் நிகழும் சம்பவங்கள் அனைத்தையும் தனியாக சந்திக்க போவதும் நாம் தான். அதனால் இந்த விடயம் எமமோடு தொடர்புடையது. நிரந்தர நற்பேறுகளை தேடுபவர்களுக்கு இறைவன் இவ்வாறு கட்டளையிடுகிறான் :

> ஈமான் கொணடவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்¢ மேலும், ஒவ்வொருவரும் (மறுமை) நாளுக்காக தான் முற்படுத்தி வைத்திருப்பதைப் பார்த்துக் கொள்ளட்டும்¢ இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள்¢ நீங்கள் செய்பவற்றை, நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன். அன்றியும், அல்லாஹ்வை மறந்து விட்டவர்கள் போன்று நீங்கள் ஆகிவிடாதீர்கள்¢ ஏனெனில் அவர்கள் தங்களையே மறக்கும்படி (அல்லாஹ்) செய்து விட்டான்¢ அத்தகையோர் தாம் ஃபாஸிக்குகள் - பெரும் பாவிகள் ஆவார்கள். (ஸூறா அல்-ஹஷர்: 18-19)

# உயிர் தெழுதல்

எனினும் மனிதன் தன் எதிரே வர விருப்பதை (கியாம நாள்) பொய்ப்பிக்கவே நாடுகிறான்.

'கியாம நாள் எப்போழுது வரும்?' என்று (ஏளனமாகக்) கேட்கிறான்.

ஆகவே, பார்வையும் மழுங்கி-

சந்திரனும் ஒளியும் மங்கி-

சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்க்கப்பட்டுவிடும்.

அந்நாளில் '(தப்பித்துக் கொள்ள) எங்கு விரண்டோடுவது?' என்று மனிதன் கேட்பான்.

'இல்லை, இல்லை! தப்ப இடமேயில்லை!' (என்று கூறப்படும்).

அந்நாளில் உம் இறைவனிடம் தான் தங்குமிடம் உண்டு. (ஸூ றா அல்-கியாமா: 5-12)

# அறிமுகம்

## மறுமையை பற்றி நம்புவது

மறுமை மீது நம்பிக்கை கொள்வது நம்பிக்கையின் மிக முக்கிய அம்சமாகும். குர்ஆனில் முதல் அத்தியாயத்தில் அருளற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவன் அவனது தன்மைகளை பற்றி கூறிய பின்பு இ நியாய தீர்ப்பு நாளின் அதிபதி (ஸூ றா அல்-பாத்திஹா: 3) என்று அறிவிக்கிறான். அடுத்த அத்தியாயத்கதின் மூன்றாவது வசனத்தில் நம்பிக்கையாளர்களை பற்றி கூறும்போது (பயபக்தியுடைய) அவர்கள், (புலன்களுக்கு எட்டா) மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வார்கள்¢ தொழுகையையும் (உறுதியாக முறைப்படிக்) கடைப்பிடித்து ஒழுகுவார்கள்¢ இன்னும் நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து (நல்வழியில்) செலவும் செய்வார்கள். (ஸூ றா அல்-பகறா:3)

இந்த மறைவானது என்ற பதம் மரணமடைற்த பின்னர் மீண்டும் உயிர்பெற்று எழுதல் உயிர் பெற்று எழும் நாள், சுவர்க்கம் மற்றும் நரகம் என்பவற்றை எல்லாம் உள்ளடக்கியது, சுருங்க கூறினால், மறுமை சம்பந்தப்பட்ட அனைத்தையும் உள்ளடக்கும். உண்மையில், அடுத்த வசனமான ஸூ றா பகறாவின் 4வது வசனத்தில் அவர்கள் மறுமை நாளையும் உறுதி கொள்வார்கள் என்பதன் மூலம் மறுமையின் நம்பிக்கை மீது விசேடமாக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

மறுமை மீது நம்பிக்கையானது உண்மையான நம்பிக்கையின் அடையாளமாகும் அது மிக அவசியமானதுமாகும். குர்ஆன் வரையறை செய்யும் மறுமை மீதான நம்பிக்கையானது ஒரு நம்பிக்கையாளனுக்கு உண்மையான உறுதியான சான்றாகும். ஒருவன் மறுமை மீது கொண்டுள்ள நம்பிக்கையானது மற்ற நம்பிக்கைகளான இறைவன் மீதும் அவனது வேதங்கள் மீதும் அவனது தூதர்கள் மீதும் நிபந்தனையற்ற நம்பிக்கை கொண்டுள்ளான் என்பதற்கான ஆதாரமாகும். அத்தகைய ஒருவன் இறைவன் அனைத்து பொருட்கள் மீதும் ஆற்றல் பெற்றவன் என்றும் அவனது சொல்லும் வாக்குறுதிகளும் உண்மையானவை என்று அறிந்து வைத்திருப்பான். அவன் மறுமை மீது சந்தேகம் கொள்வதில்லை. இத்தகைய உண்மைகளை பார்பதற்து முன்னறே அவற்றை. ஏற்கனலே பார்ததை போன்று நம்புவான். இது இறைவனால் அவனுக்கு வழங்கப்பட்ட அறிவின் காரணமாக அவன் இறைவன் மீது வைக்கும் சாதாரண நம்பிக்கையின் வெளிப்பாடாகும். மேலும்இ மறுமை மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொள்வதானது அவனை அனைத்து சந்தேகங்களை விட்டும் சுத்தப்படுத்துவதுடன் குர்ஆனில் கூறப்பட்டவாறு இறைவன் மீதும் அவனது தன்மைகள் மீதும் முழுமையான நம்பிக்கை வைத்து அவனுக்கு முற்று முழுதாக கட்டுப்பட வைக்கும். இந்த நம்பிக்கையானது ஒருவனை இறைவனை சரியான முறையில் தெரிந்து கொள்ள வழிவகுக்கும். இந்த நம்பிக்கையையே இறைவனது பார்வையில் சிறந்தது.

ஆகவே முன்பு கூறியது போன்று மறுமையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க வேண்டும். குர்ஆனில் பல இடங்களில் அவநம்பிக்கையாளர்கள் மறுமையை மறுப்பதும் அந்த உண்மையை அறியாமல் இருப்பதை பற்றியும் விளக்குகிறது. உண்மையில் இந்த மக்களில் பெரும்பான்மையானவர்கள் இறைவன் இருக்கிறான் என்பதை நம்புகிறார்கள். இருப்பினும் அவர்களை வழிதவற செய்தது அவனது தன்மைகளை பற்றிய சந்தேகங்களேயாகும். சிலர் முதலில் இறைவன் அனைத்தையும் படைத்து மனிதனை அவனது சொந்த விருப்பத்திற்கு வாழ விட்டு விட்டான் என்று நம்புகிறார்கள். வேறுசிலர் இறைவன் மனிதனை படைத்தான் ஆனாலும் மனிதன் தனது விதியை நிர்ணயம் செய்கிறான் என்று நம்புகிறார்கள். இன்னொரு கூட்டத்தினர் இறைவனுக்கு மனிதனில் மனதிலுள்ள சிந்தனைகளையும் இரகசியங்களையும் புரிந்து கொள்ள முடியாது என்று நம்புகிறார்கள். வேறுசிலர் இறைவன் இருக்கிறான் என்று நம்பிய பொழுதும் மதத்தை ஏற்க மறுக்கிறார்கள். கடைசியாக கூறப்பட்ட கருத்துடையவர்களை பற்றி குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

இவர்கள் அல்லாஹ்வை மதிக்க வேண்டிய முறையில் மதிக்கவில்லை¢ ஏனெனில் அவர்கள், 'அல்லாஹ் எந்த ஒரு மனிதர் மீதும் எ(ந்த வேதத்)தையும் இறக்கவில்லை' என்று கூறுகின்றனர்¢ அவர்களிடத்தில் நீர் கூறும்: 'பிரகாசமானதாகவும், மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும் மூஸா கொண்டுவந்தாரே அந்த வேத்தை இறக்கியவன் யார்? அதனை நீங்கள் தனித்தனி ஏடுகளாக ஆக்கி, அவற்றில் சிலவற்றை வெளிப்படுத்துகிறீர்கள்¢ பெரும்பாலானவற்றை மறைத்தும் விடுகிறீர்கள்¢ (அவ்வேதத்தின் மூலமாகவே) நீங்களும் உங்கள் மூதாதையர்களும் அறியாமல் இருந்தவைகளையெல்லாம் கற்றுக்கொடுக்கப்பட்டீர்கள்.' (நபியே! மேலும்) நீர் கூறுவீராக: 'அல்லாஹ்தான் (அதை இறக்கிவைத்தான்)' பின்பு அவர்களைத் தம் வீணான (தர்க்கத்)தில் விளையாடிக்கொண்டிருக்குமாறு விட்டுவிடுவீராக. (ஸூ றா அல்-அன்ஆம்: 91)

அதேநேரம்இ இறைவனை மறுக்காத போதிலும் இறைவனை அவனது உண்மையான தன்மைகளை கொண்டு நம்பாமலிருப்பது அதாவது மறுமையை மறுப்பதுஇ நம்பிக்கையின்மை என்றே அழைக்கப்படும். உண்மையில் இறைவன் இருக்கிறான் என்பதை மறுக்கும் மக்களில் சிலா் அவர்கள் கூறும் குற்றச்சாட்டுகளில் சந்தேகம் கொண்டுள்ளனர். அதனால் தான் குர்ஆனில் இறைவனை மறுப்பவர்களை பற்றி அவ்வளவாக குறிப்பிடப்படவில்லை. அதேநேரம் இறைவனுக்கு இணைகற்பித்தவர்கள் மரணித்த பின் மீண்டும் எழுப்பப்படுவதை மறுத்தவர்கள் நியாய தீர்ப்பு நாள் சுவர்க்கம் நரகம் மற்றும் மறுமை சம்பந்தப்பட்ட அனைத்து உண்மைகளையும் மறுப்பவர்களை பற்றி விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மறுமை என்பது எமது ஐம்புலன்களாலும் உணரமுடியாத உண்மையாகும். எமது மனம் அதை இலகுவில் அறியக்கூடியவகையில் இறைவன் எண்ணிலடங்காத சான்றுகளை ஏற்படுத்தி வைத்துள்ளான். உண்மையில் இவ்வுலக பரீட்சையில் வெற்றியடையும் பொருட்டு ஒருவன் அவனது ஐம்புலன்களை கொண்டு பாராமல் அவனது மனசாட்சியையும் அறிவையும் கொண்டு பார்க்க வேண்டும். சாதாரண மனிதன் தானும் தன்னை சுற்றியுள்ளவைகளும் தற்செயலாக வரவில்லை மாறாக பேரறிவுள்ள பெரும் சக்தியுடைய அனைத்தையும் கட்டுப்படுத்தக்கூடிய படைப்பாளனின் படைப்பு என்பதை இலகுவில் விளங்கி கொள்வான். ஆகவே மறுமையை படைப்பதும் இறைவனுக்கு இலகுவானது என்பதை அறிந்து கொள்வான். மேலும். இறைவனது அறிவும் நீதியும் மறுமை இருப்பதற்கான என்பதனை அவசியத்தை அவன் உணா்ந்து கொள்வான்.

இவை இவ்வாறு தெளிவாக இருந்தபோதிலும் இறைவனது கட்டளைகளுக்கு எதிராக செயல்பட்டவன் மரணத்திற்கு பிறகு உயிா் பெற்று எழுவதை விரும்பமாட்டான். தனது வாழ்வில் வீணாண மனோ இச்சைகளை பின்பற்றிய ஒருவன் இறைவனுக்கு முன்னால் நின்று அவனது வாழ்நாளில் அவன் செய்த காரியங்களை பற்றி கணக்கு கொடுக்க விரும்புவதில்லை. அதனால் தான் இறைவன் இருக்கிறான் என்பதை நன்கு அறிந்த பின்பும் அவனது மனசாட்சியை அடக்கி தன்னை தானே ஏமாற்றி கொள்கிறான். இத்தகைய நிலைபாட்டை ஏற்றுக்கொண்ட அவநம்பிக்கையாளன் மீண்டும் உயிா் பெற்று எழுதல் மற்றும் மறுமை ஆகியவற்றை மறுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் எத்தகைய நீண்ட சிந்தனையுமின்றி அறிவற்ற பகுத்தறிவற்ற வாதங்களை முன்வைக்கின்றான்.

மேலும், அவன் தன் படைப்பை (தான் படைக்கப்பட்டதெப்படி என்பதை) மறந்துவிட்டு, அவன் நமக்காக ஓா் உதாரணத்தையும் கூறுகின்றான்¢ 'எலும்புகள் அவை மக்கிப் போய் விட்ட பின் அவற்றை உயிர்ப்பிப்பது யார்?' என்று. (ஸூ றா யாஸீன் : 78 )

இருப்பினும் இத்தகைய கேள்லி உண்மையிலிருந்து தப்பித்து தன்னை தானே ஏமாற்றி கொள்ள உதவும். அதற்கான விடை

'முதல் முதலில் அவற்றை உண்டு பண்ணியவனே (பின்னும்) அவற்றுக்கு உயிா் கொடுப்பான். அவன் எல்லாவகைப் படைப்புகளையும் நன்கறிந்தவன்' என்று (நபியே!) நீர் கூறுவீராக! (ஸூ றா யாஸீன் : 79 )

இத்தகைய வாதங்களை கூறுவது அவநம்பிக்கையாளர்களின் தன்மை என்று குர்ஆனில் இறைவன் தெளிவாக்குகிறான்

எவர்கள் மறுமையின் மீது ஈமான் கொள்ளவில்லையோ அவர்களுக்கே கெட்ட தன்மை இருக்கிறது - அல்லாஹ்வுக்கோ மிக உயா்ந்த தன்மை இருக்கிறது¢ மேலும் அவன் மிகைத்தவன்¢ ஞானம் மிக்கவன். (ஸூ றா அன்-நஹல் : 60 )

மறுபக்கத்தில் சிலர் அவர்களது நிலைபாட்டை நியாயப்படுத்த சில விளக்கங்களை எடுத்துறைப்பார்கள்.

‘அப்படியானால் அது பெரும் நஷ்ட முண்டாக்கும் திரும்புதலே யாகும்’ என்றும் கூறுகின்றார்கள். (ஸூ றா அன்-நாஸியா : 12 )

உண்மையில் இவ்வாறு தர்க்கம் செய்த போதிலும் அவர்களது வாழ்வின் குறிக்கோள்களுடன் மறுமை சம்பந்தப்படாமல் இருப்பதை ஏற்று கொள்ள தயங்குவதில்லை.

ஏக இறைவனை நிராகரிப்பவர்கள் அவர்களது அறிவை அவர்களது சொந்த விருப்பத்தின் பேரில் சுருக்கி கொள்கிறார்கள். அவர்களது வாதங்களின் காணப்படும் மடமையை பார்த்த பின்பும் இந்த வாதங்களை பிடிவாதமாக பின்பற்றுவதுடன் அதில் மனரீதியான திருப்தியடையும் பொருட்டு நீண்ட பயணம் மேற்கொள்கின்றனர்.

இறந்தவர்களை அல்லாஹ் (உயிர்ப்பித்து) எழுப்ப மாட்டான் என்று அவர்கள் அல்லாஹ்வின் மீது பிரமாணமாகச் சத்தியம் செய்கிறார்கள். அப்படியல்ல! (உயிர் கொடுத்து எழுப்புவதான அல்லாஹ்வின்) வாக்கு மிக்க உறுதியானதாகும்¢ எனினும் மக்களில் பெரும்பாலோர் இதை அறிந்து கொள்வதில்லை. (ஸூ றா அன்-நஹல் :38)

அவர்களது விருப்பங்களையும் ஆசைகளையும் அவர்களது கடவுள்களாக ஏற்ற இந்த மக்கள் அவர்களது மனசாட்சியை சமாதானப்படுத்தி அதில் தஞ்சமடைகிறார்கள். இத்தகைய மக்கள் மறுமையை மறுக்கும் இம்மக்களை பற்றி இறைவன் இவ்வாறு விவரிக்கிறான்.

நிச்சயமாக நாம் ஜின்களிலிருந்தும், மனிதர்களிலிருந்தும் அநேகரை நரகத்திற்கென்றே படைத்துள்ளோம்¢ அவர்களுக்கு இருதயங்கள் இருக்கின்றன - ஆனால் அவற்றைக் கொண்டு அவர்கள் நல்லுணர்வு பெற மாட்டார்கள்¢ அவர்களுக்குக் கண்கள் உண்டு¢ ஆனால், அவற்றைக் கொண்டு அவர்கள் (இறைவனின் அத்தாட்சிகளைப்) பார்ப்பதில்லை¢ அவர்களுக்குக் காதுகள் உண்டு. ஆனால் அவற்றைக் கொண்டு அவர்கள் (நற்போதனையைக்) கேட்கமாட்டார்கள் - இத்தகையோர் கால்நடைகளைப் போன்றவர்கள். இல்லை! அவற்றை விடவும் வழி கேடர்கள்¢ இவர்கள் தாம் (நம்வசனங்களை) அலட்சியம் செய்தவர்களாவார்கள். (ஸூ றா அல்-ஆரப் : 179 )

குர்ஆனின் வேறுபகுதியில் இம்மக்களின் நிலை பற்றி இவ்வாறு விளக்குகிறான்.

(நபியே!) எவன் தன்னுடைய (சரீர, மனோ) இச்சையைத் தன்னுடைய தெய்வமாக ஆக்கிக் கொண்டானோ, அவனை நீர் பார்த்தீரா? மேலும், அறிந்தே அல்லாஹ் அவனை வழிகேட்டில் விட்டு அவனுடைய காதுகள் மீதும் இருதயத்தின் மீதும் முத்திரையிட்டு¢ இன்னும், அவனுடைய பார்வை மீதும் திரையை அமைத்துவிட்டான். எனவே, அல்லாஹ்வுக்குப் பிறகு அவனுக்கு நேர்வழி காண்பிப்பவர் யார்? நீங்கள் சிந்தித்து உணர வேண்டாமா? மேலும் (மறுமையை நம்பாத) அவர்கள்: ‘நமது இந்த உலக வாழ்க்கையைத் தவிர வேறு (வாழ்க்கை) கிடையாது¢ நாம் இறக்கிறோம்¢ ஜீவிக்கிறோம்¢ ‘காலம்’ தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை’ என்று கூறுகிறார்கள்¢ அவர்களுக்கு அது பற்றிய அறிவு கிடையாது - அவர்கள் (இது பற்றிக் கற்பனையாக) எண்ணுவதைத் தவிர வேறில்லை. (ஸூ றா அல்-ஜாதியா : 23-24 )

## இவ்வுலக வாழ்வின் உண்மை நிலை

அவநம்பிக்கையாளர்கள் சில விடயங்களை அறிவின் மூலம் புரிந்து கொள்வது முடியாத ஒன்று என்று வாதிடுகிறார்கள். அவற்றில் மரணத்தின் பின்பு உயிர் பெற்று எழுதல் மறுமை ஆகியவை அடங்கும்.

நாம் இவ்விடயங்களை தூக்கத்தோடும் கனவோடும் ஒப்பிடலாம். மரணத்தை பற்றி சிந்திக்காமல் இருக்கும் ஒருவன் மரணத்தின் பின்பு உயிர் பெற்று எழுவதை கடுமையாக ஆட்சேபிக்கிறான். உண்மையில் தினமும் இரவில் மரணத்தை சுவைக்கும் அவன் அதே போன்று காலையில் கண்விழித்து மரணத்திலிருந்து உயிர் பெற்று எழுவதை பற்றிய அறியமாட்டான். தூக்கத்தை பற்றிய குர்ஆனின் கருத்துகள் இந்த விடயத்தை பற்றி புரிந்து கொள்வதற்கு உதவுகிறது. இறைவன் தூக்கத்தை பற்றி குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்.

அல்லாஹ், உயிர்களை அவை மரணிக்கும் போதும், மரணிக்காதவற்றை அவற்றின் நித்திரையிலும் கைப்பற்றி, பின்பு எதன் மீது மரணத்தை விதித்துவிட்டானோ அதை(த் தன்னிடத்தில்) நிறுத்திக்

கொள்கிறான்¢ மீதியுள்ளவற்றை ஒரு குறிப்பிட்ட தவணை வரை (வாழ்வதற்காக) அனுப்பி விடுகிறான் - சிந்தித்துப் பார்க்கும் மக்களுக்கு, நிச்சயமாக அதில் அத்தாட்சிகள் இருக்கின்றன. (ஸூ றா அஸ்-ஸூ மர் : 42)

அவன் தான் இரவில் உங்களை மரிக்கச் செய்கிறான்¢ இன்னும் நீங்கள் பகலில் செய்தவற்றையெல்லாம் அறிகிறான்¢ மீண்டும் உங்களைக் குறிப்பட்டதவணை முடிப்பதற்காக பகலில் எழுப்புகிறான்¢ பின்னர் உங்களுடைய (இறுதி) மீட்சி அவனிடமே இருக்கிறது¢ அப்பால் நீங்கள் (இவ்வுலகில்) செய்து கொண்டிருந்ததை அவன் உங்களுக்கு அறிவிப்பான். (ஸூ றா அல்-அன்ஆம் : 60)

மேற்கூறிய வசனங்களில் தூக்கத்தை மரணத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. மரணத்திற்கும் தூக்கத்திற்குமிடையே எவ்வித வேறுபாடும் கிடையாது. அப்படியென்றால் மரணத்தோடு ஒப்பிடப்படும் தூக்கத்தின் போது என்ன நடக்கிறது?

விழித்திருக்கும் போது மனித உடலிலுள்ள ஆன்மா தூக்கத்தின் போது வெளியேறுகிறது. மறுபுறத்தில் கனவின் போது ஆன்மா முழுவதும் வித்தியாசமான உடலை பெற்று முழுவதும் வித்தியாசமான உணர்வுளை பெறுகிறது. இவை களவு என்று எம்மால் பிரித்தறிய முடியாது. நாம் பயம் கவலை வலி உணர்ச்சி வசப்படுவது மற்றும் சந்தோஷமடைவது ஆகியவற்றை உணர்கிறோம். எமது கனவின் போது நடைபெறுவது உண்மை என்று உறுதியாக நம்பி நனவின் போது கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை கனவிற்கும் கொடுக்கிறோம்.

ஒருவரது கனவின் போது வெளியிலிருந்து நாம் குறிக்கிட்டு அவர் காண்பது மாயை அல்லது வெறும் உணர்வுகள் என்று கூறினால் அவர் இந்த எச்சரிக்கையை கண்டு கொள்ளாமல் விடுவதுடன் மற்றவர்கள் அவரை கேலி செய்கிறார்கள் என்று நினைப்பார். இருப்பினும் உண்மையில் இந்த உணர்வுகளுக்கு வெளி உலகத்துடன் எவ்வித் தொடர்பும் இல்லை. நாம் கனவில் காண்பவைகள் அனைத்தும் இறைவனால் எமது ஆன்மாவிற்கு காட்டப்படும் காட்சிகளும் உணர்வுகளுமாகும்.

நாம் நினைவில் வைத்து கொள்ள வேண்டிய மிக முக்கிய உண்மை என்னவென்றால் இதே இறைசட்டங்கள் நாம் விழித்து எழுந்த பின்பும் நடைமுறைபடுத்தப்படுகிறது. இறைவன் குர்ஆனில் கனவுகள் அவனது எண்ணப்படி கட்டுப்படுத்தப்படுகிறது என்று கூறுகிறான்.:" நீங்களும் அவர்களும் (போரில்) சந்தித்தபோது அவன் உங்களுடைய பார்வையில் அவர்களுடைய எண்ணிக்கையைக் குறைவாகக் காண்பித்தான்¢ இன்னும் உங்கள் (தொகையை) அவர்களுடைய பார்வையில் குறைவாகக் காண்பித்தான் - இவ்வாறு அவன் செய்தது, அவன் விதித்த ஒரு காரியத்தை அவன் நிறைவேற்றுவதற்காகவேயாகும் - அல்லாஹ்விடமே எல்லாக் காரியங்களும் சென்று முடிவடைகின்றன". (ஸூ றா அல்-அன்பால் : 44). தினசரி வாழ்வின் போதும் இதே சட்டங்கள் அமுல்படுத்தப்படுகிறது என்பதை தெளிவாக விளங்குகிறது. உண்மை என்னவென்றால் உணர்வுகள் மற்றும் காட்சிகள் அனைத்தும் இறைவனது விருப்பப்படியே படைக்கப்படுகிறது . அதற்கு அப்பால் வெளி உலகம் என்பது கிடையாது. இதை பின்வரும் வசனம் கூறுகிறது.

(பத்ரு களத்தில்) சந்தித்த இரு சேனைகளிலும் உங்களுக்கு ஓர் அத்தாட்சி நிச்சயமாக உள்ளது¢ ஒரு சேனை அல்லாஹ்வின் பாதையில் போரிட்டது¢ பிறிதொன்று கா∴பிர்களாக இருந்தது¢ நிராகரிப்போர் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவோரைத் தங்களைப்போல் இரு மடங்காகத் தம் கண்களால் கண்டனர்¢ இன்னும், அல்லாஹ் தான் நாடியவர்களுக்குத் தன் உதவியைக் கொண்டு பலப்படுத்துகிறான்¢ நிச்சயமாக, (அகப்) பார்வையுடையோருக்கு இதில் திடனாக ஒரு படிப்பினை இருக்கிறது. (ஸூ றா ஆல-இம்றான் : 13)

கனவை போன்று தினசரி வாழ்கையில் நாம் கானும் வெளியுலக பொருட்கள் அனைத்தும் இறைவனால் எமது ஆன்மாவிற்கு காட்டப்படும் காட்சிகளாகும். அத்தோடு உணர்வுகளையும் உணர செய்கிறான். எமது உடலோடு சம்பந்தப்பட்ட காட்சிகளையும் செயற்பாடுகளையும் அதை போன்று மற்றவர்களின் செயல்களையும் நாம் காண்பது இறைவன் எமக்கு அதனோடு தொடர்புடைய காட்சிகளை ஒவ்வொரு காட்சியாக காட்டுவதாலாகும். இதை குர்ஆன் இவ்வாறு விளக்குகிறது.

(பத்ரு போரில்) எதிரிகளை வெட்டியவர்கள் நீங்கள் அல்ல - அல்லாஹ் தான் அவர்களை வெட்டினான்¢ (பகைவர்கள் மீது மண்ணை) நீர் எறிந்தபோது அதனை நீர் எறியவில்லை, அல்லாஹ்தான் எறிந்தான்¢ மு∴மின்களை அழகான முறையில் சோதிப்பதற்காகவே அல்லாஹ் இவ்வாறு செய்தான்¢ நிச்சயமாக

அல்லாஹ் (எல்லாவற்றையும்) செவி ஏற்பவனாகவும், (எல்லாம்) அறிபவனாகவும் இருக்கின்றான். (ஸூ றா அல்-அன்பால் : 17)

இதே இறை நியதியின் படி மறுமையும் அதனுடன் தொடர்புடைய காட்சிகளும் உணர்வுகளும் படைக்கப்படுகின்றன. மரணம் இவ்வுலகத்துடனான அனைத்து தொடர்புகளையும் துண்டித்து விடுகிறது. ஆன்மா நிரந்தரமானது ஏனெனில் இறைவன் அதில் தனது உயிரை ஊதியுள்ளான். இந்த வாழ்கை தொடர்பான மரணம் மீண்டும் உயிர் பெற்று எழுதல் மறுமை வாழ்கை அனைத்து உணர்வுகளையும் இந்த ஆன்மா உணர்கிறது. அதனால் தான் அடிப்படை சிந்தனை அடிப்படையில் இவ்வுலகம் படைக்கப்பட்ட விதத்திற்கும் சுவர்க்கம் மற்றும் நரகம் படைக்கப்பட்ட விதத்திற்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லை.. அதைபோன்று இவ்வுலகத்திலிருந்து மறுமைக்கு செல்வதற்கும் தூக்கத்திலிருந்து எழுந்து அன்றாட வாழ்கையை தொடர்வதற்குமிடையே எந்த வேறுபாடும் இல்லை.

மீண்டும் உயிர் பெற்று எழுந்தவுடன் புது உடலுடன் ஒரு புது வாழ்கை மறுமையில் ஆரம்பமாகிறது. சுவர்க்கம் மற்றும் நரகம் சம்பந்தப்பட்ட காட்சிகளை ஆன்மாவிற்கு காட்டப்பட்டவுடன் ஒவ்வொரும் அதை அனுபவிக்க ஆரம்பிப்பார்கள். எல்லையற்ற காட்சிகளையும் சப்தங்களையும் வாசனைகளையும் சுவைகளையும் மற்றும் இவ்வுலக வாழ்கை சம்பந்தமான அனைத்தையும் படைக்ககூடிய வல்லமையுடைய இறைவன், இதை முறையில் சுவர்க்கம் மற்றும் நரகம் சம்பந்தமான நிரந்தர காட்சிகளையும் உணர்வுகளையும் படைப்பான். இவற்றை படைப்பது இறைவனுக்கு மிக எளிது.

(அல்லாஹ்) வானங்களையும், பூமியையும் முன் மாதிரியின்றி (இல்லாமையிலிருந்து), தானே உண்டாக்கினான்¢ அதனிடம் ‘குன்’ - ஆகுக- என்று கூறினால், உடனே அது ஆகிவிடுகிறது. (ஸூ றா அல்-பகறா : 117)

இன்னொரு உண்மை என்னவென்றால் கனவை விட இவ்வுலக வாழ்கை எவ்வளவு வித்தியாசமோ அதை போன்று இவ்வுலக வாழ்கை விட மறுமை வித்தியாசமாக இருக்கும். அதை போன்று இவ்வுலக வாழ்கையோடு கனவை ஒப்பிடும் போது கனவு எவ்வளவு குறுகியதோ அதை போன்று இவ்வுல வாழ்கை மறுமை வாழ்வோடு ஒப்பிடபடும். முன்னர் கருதியது போன்று நேரம் நிலையானது அல்ல மாறாக அது தொடர்புடைய ஒன்று. இந்த உண்மையை இன்றைய விஞ்ஞானம் ஏற்று கொள்கிறது. கனவின் போது பல மணி நேரம் நடைபெற்றதாக கருப்படும் நிகழ்வுகள் உண்மையில் செலவிட்டது சில வினாடிகளே. பெரிய கனவுகள் என்று கூறப்படுபவைகளும் சில நிமிடங்களே எடுத்துக்கொள்ளும். இருப்பினும் கனவு கண்டவர் தான் முழுநாளும் அதற்காக செலவிட்டதாக நினைத்து கொள்வார். நேரத்தை பற்றி குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

ஒரு நாள் மலக்குகளும், (ஜிப்ரயீலாகிய) அவ்வான்மாவும், அவனிடம் ஏறிச் செல்வார்கள்¢ அ(த்தினத்)தின் அளவு ஐம்பதினாயிரம் ஆண்டுகள் (சமமாக) இருக்கும் (ஸூ றா அல்-மாரிஜ் : 4)

வானத்திலிருந்து பூமி வரையிலுமுள்ள காரியத்தை அவனே ஒழுங்குபடுத்துகிறான்¢ ஒரு நாள் (ஒவ்வொரு காரியமும்) அவனிடமே மேலேறிச் செல்லும், அந்த (நாளின்) அளவு நீங்கள் கணக்கிடக்கூடிய ஆயிரம் ஆண்டுகளாகும். (ஸூ றா அஸ்-ஸஜதா : 5)

மறுமை வாழ்வோடு சம்பந்தப்பட்ட நேரத்தோடு ஒப்பிடும் போது இவ்வுலகில் நீண்ட காலம் வாழ்ந்த மனிதனின் வாழ்கை மிக மிக குறுகியதாகும். மறுமையில் கேள்வி கணக்கின் போது நடைபெறும் உரையாடல் இதற்கு சிறந்த உதாரணமாக குறிப்பிடலாம்.

‘ஆண்டுகளின் எண்ணிக்கையில் நீங்கள் பூமியில் எவ்வளவு (காலம்) இருந்தீர்கள்?’ என்று கேட்பான் ‘ஒரு நாள் அல்லது ஒரு நாளின் சிறிது பாகம் நாங்கள் தங்கியிருந்திருப்போம். (இதைப்பற்றிக்) கணிப்பவர்களிடம் நீ கேட்பாயாக!’ என்று அவர்கள் கூறுவார்கள்‘ஒரு சொற்ப காலம் தவிர (பூமியில் அதிகம்) நீங்கள் தங்கவில்லை. நீங்கள் (இதை) அறிந்திருந்தால்!’ என்று (இறைவன்) கூறுவான். ‘நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?’ (என்றும் இறைவன் கேட்பான்.) -(ஸூ றா அல்-மு:மினூன் : 112-115)

ஆகவே நிரந்தர வாழ்கைக்கு பதிலாக இந்த தற்காலிக வாழ்கையை தேர்ந்தெடுப்பது மடமையாகும். மறுமையோடு இவ்வுலக வாழ்வை ஒப்பிடப்படும் மிக குறுகியதாக காணப்படுவதை ஒருவன் சிந்தித்தால் அவன் மேலும் தெளிவடைவான்.

சுருங்க கூறுவதானால்இ பொருள் என்றும் அதற்கு தோற்றம் இருப்பதாக நாம் நினைப்பவைகள் அனைத்தும் இறைவனால் மனித ஆன்மாவிற்கு காட்டப்படும் உணர்வுகளாகும். மனிதன் அவனது உடல் அவனுக்கு சொந்தம் என்று நினைக்கிறான். உண்மையில் உடலும் மனிதனின் ஆன்மாவிற்கு இறைவனால் காட்டப்பட்ட காட்சிகளே தவிர வேறு ஒன்றுமில்லை. இறைவன் நினைத்த நேரத்தில் காட்கிகளை மாற்றுகிறான். உடலின் காட்சி திடீரென மறையும் போது ஆன்மா புது காட்சிளை காணும். வேறுவகையில் கூறுவதானால் ஒருவன் மரணித்தவுடன் கண்களை மறைத்துள்ள திரை நீக்கப்பட்டு அவன் நினைத்ததை போன்று மரணம் என்பது மறைவது இல்லை என்பதை புரிந்து கொள்வான். இதை குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

> ‘எங்களுடைய துக்கமே! எங்கள் தூங்குமிடங்களிலிருந்து எங்களை எழுப்பியவர் யார்?’ என்று அவர்கள் கேட்பார்கள்¢ அர்ரஹ்மான் வாக்களித்ததும், (அவனுடைய) தூதர்கள் உண்மையெனக் கூறியதும் இதுதான்’ (என்று அவர்களுக்குக் கூறப்படும்). (ஸூறா யாஸீன் : 52)

இதிலிருந்து அவநம்பிக்கையாளன் மிகப்பெறும் கவலை கொள்வான்- கவலைகளீளேயே மிகப்பெரியது.

## பிரபஞ்சத்தின் மரணம்

படைக்கப்பட்ட அனைத்தையும் தவிர்ந்து பிரபஞ்சமும் மரணத்தை எதிர் கொள்ளும் என்று குர்ஆன் கூறுகிறது. மனிதன் மட்டும் மரணிப்பவன் அல்லன். மாறாக அனைத்து விலங்குகளும் தாவரங்களும் மரணிக்கும். கோள்களும் நட்சத்திரங்களும் மரணிக்கும். படைக்கப்பட்டவைகள் அனைத்தும் மரணிக்கும். இறைவனது முன்னிலையில், ஒரு குறிப்பிட்ட நாளில், அனைத்து மனிதர்களும் அனைத்து உயிரினங்களும் உலகம் சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் சுருங்க கூறின் அனைத்தும் மறைந்து போகும். குர்ஆன் இதை மீண்டும் உயிர் பெற்று எழும் நாள் என்று அழைக்கிறது. அகிலத்தாரின் இறைவன் முன் மனிதர்கள் நிற்கும் நாள் (ஸூறா அல்-முதப்பிபீன் : 6)

மனிதனுடைய மரணத்தை போன்று பிரபஞ்சத்தின் மரணமும் பயங்கரமாக இருக்கும். உயிர் பெற்று எழும்நாளில் நம்பிக்கை கொள்ளாதவர்கள், முதன்முறையாக இறைவனது வல்லமையில் நம்பிக்கை கொள்வார்கள். அதனால்தான் மீண்டும் உயிர் பெற்று எழும்நாளானது ஏக இறைவனை மறுத்தவர்களுக்கு கவலை, வேதனை, வலி, பெரும் குழப்பம் ஆகியவற்றை கொடுக்கும் நாளாகும். மீண்டும் உயிர் பெற்று எழும்நாளை பார்பவன் பெரும் பயத்தால் நடுங்குவான். இந்த பயமானது இவ்வுலகில் காணப்படும் பயத்தை போன்று பல நூறு மடங்கு அதிகமாக இருக்கும். குர்ஆன் அந்த நாளில் நடைபெறுபவற்றை படிப்படியாக தெளிவாக எடுத்துரைக்கிறது. இந்த பெரும் நிகழ்வு எவ்வாறு நடைபெறும் என்றும் அந்நாளில் மக்களுக்கு என்ன நடக்கும் என்பதை தெளிவாக குறிப்பிடுகிறது.

## எக்காளம் முதலில் ஊதப்படும்

எக்காளம் முதலில் ஊதப்பட்டவுடன் உயிர் பெற்று எழும்நாள் ஆரம்பமாகிவிடுகிறது. இது உலகம் மற்றும் பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் அழிக்கப்படுவதன் அறிகுறியாகும். இதுதான் திரும்பமுடியாத இடமாகும். இந்த சப்தமானது உலகத்தின் வாழ்வு முடிவிற்கு வந்துவிட்டது என்பதையும் உண்மையான வாழ்கை ஆரம்பமாகிறது என்பதையும் அறிவிக்கும். இந்த சப்தம் அவநம்பிக்கையாளர்களின் இதயங்களில் தடையற்ற பயத்தையும் கவலையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும். இந்த சப்தம் அவநம்பிக்கையாளர்களின் கடினமான நாட்களின் ஆரம்பம் என்பதையும் அவை என்றென்றும் நிலையானவை என்பதையும் அறிவிக்கும். அவநம்பிக்கையாளர்களின் பார்வையில் அன்றைய உயிர்பெற்று எழும்நாள் எவ்வாறு இருக்கும் என்பதை ஸூறா முத்ததிர் என்ற அத்தியாயம் கூறுகிறது.

> மேலும், எக்காளத்தில் ஊதப்படும்போது- அந்நாள் மிகக் கடினமான நாள் ஆகும். நிராகரிப்பாளர்களுக்கு (அந்நாள்) இலேசானதல்ல. (ஸூறா முத்ததிர் : 8-10

எக்காளத்தின் சப்தம் அவநம்பிக்கையாளர்களிடையே பெரும் பீதியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும். உணரமுடியாத வரையறை செய்ய முடியாத பார்க்க முடியாத ஒன்று முழு பிரபஞ்சத்தையும் வியாபித்து காணப்படும். மக்கள் ஏதோ ஒன்று ஆரம்பமாகிறது என்பதை புரிந்துகொள்வார்கள். ஏக இறைவனை

மறுத்தவர்களின் பீதி ஒருவித கலக்கத்தை ஏற்படுத்தும். இந்த சப்தத்தோடு தொடரும் நிகழ்வுகள் விவரிக்க முடியாத அளவிற்கு பயத்தை ஏற்படுத்தும்.

## பிரபஞ்சம் அழிக்கப்படுதல்

இந்த சப்தத்தோடு பெரும் புவி நடுக்கமும் பேரழிவும் ஏற்படும். இந்த நேரத்தில் மக்கள் பயங்கர அழிவுகளை முகங்கொடுக்க வேண்டும் என்பதை புரிந்து கொள்வார்கள். இந்த உலகமும் வாழ்வும் முடிவுரும் என்பது தெளிவான உண்மையாகும். அதனால் தான் உலகிலுள்ள அனைத்தும் சிறிது காலத்தில் அதன் மதிப்பை இழந்து விடுகிறது. இந்த சப்தம் மக்களிடமுள்ள அனைத்து உலக ரீதியான தொடர்புகளையும் துண்டித்துவிடும். அந்த நேரத்தில் மனிதன் எவ்வாறு தப்பிக்கலாம் என்பதை தவிர வேறு ஒன்றையும் நினைத்து பார்க்க மாட்டான். பயம் எல்லா இடமும் வியாபித்து இருக்கும். ஒவ்வொருவரும் தன்னை பற்றி மட்டுமே சிந்திப்பான்.

> ஆகவே, (யுக முடிவின் போது காதைச் செவிடாக்கும் பெருஞ் சப்தம் வரும் போது - அந்த நாளில் மனிதன் விரண்டு ஓடுவான் - தன் சகோதரனை விட்டும் - தன் தாயை விட்டும், தன் தந்தையை விட்டும்¢ தன் மனைவியை விட்டும், தன் மக்களை விட்டும்- அன்று ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் (அவல) நிலையே போதுமானதாயிருக்கும். (ஸூ றா அபஸா: 33-37)

பயங்கர குலுக்கத்தின் பிறகு உலகம் அதன் புதையல்கள் அனைத்தையும் வெளியே வீசும்இ அதன் பிறகு எதற்கும் எவ்வித பெறுமதியும் இருக்காது..

> பூமி பெரும் அதிர்ச்சியாக - அதிர்ச்சி அடையும் போது- இன்னும், பூமி தன் சுமைகளை வெளிப்படுத்தும் போது- ‘அதற்கு என்ன நேர்ந்தது?’ என்று மனிதன் கேட்கும் போது- அந்நாளில், அது தன் செய்திகளை அறிவிக்கும். (அவ்வாறு அறிவிக்குமாறு) உம்முடைய இறைவன் அதற்கு வஹீ மூலம் அறித்ததனால். (ஸூ றா அஸ்-ஸல்ஸலாஹ் : 1-5)

ஒரு பெரும் சப்தத்தை தொடர்ந்து பயங்கர புவி நடுக்கம் பிறகு பூமிக்கு உள்ளே உண்டாகும் பெரும் வெடிப்புகள் காரணமாக மனிதனால் முன்பு அதிக முக்கியத்துவம் கொடுத்து போற்றப்பட்ட அனைத்தும் அழிந்து போகும். உதாரணமாக மனிதன் வீடுகளையும் அலுவலகங்களையும் வாகனங்களையும் தோட்டங்களையும் முக்கியத்துவம் கொடுத்து போற்றுகிறான். சிலருக்கு அவர்களது வீடுதான் வாழ்கையின் மிக முக்கிய குறிக்கோள். இருப்பினும் அவர்களது பெருமை பாரட்டியவைகள் மறுமையின் ஆரம்பத்திலேயே அழியும். மனிதன் அவனது வாழ்நாள் முழுவதையும் செலவழித்து பெருக்கிய உலக வளங்கள் அனைத்தும் ஒரு நிமிடத்தில் மறைந்து போகும். அலுவலகத்தில் பதவி உயர்வு பெறுவதே அவர்களின் முக்கிய குறிக்கோள்களாக கொண்டவர்களின் கனவுகள் பயனற்று போகும். தனது வாழ்நாள் முழுவதையும் நாட்டின் ஆட்சி அதிகாரங்களை பெறுவதை நோக்கமாக கொண்டவர்களும் இதே பயங்கர விளைவை சந்திப்பார்கள். அந்த நாடு மறைவதை அவன் பார்ப்பான். இறைவனது பொருத்தத்தை பெறவேண்டும் என்று செய்தவைகளை தவிர மற்ற அனைத்தும் அதன் மதிப்பை இழந்துவிடும். இறைவன் இதை குர்ஆனில் கூறுகிறான் :

> எனவே (தடுத்து நிறுத்த முடியாத மறுமைப்) பேரமளி வந்து விட்டால், அந்நாளில் மனிதன் தான் முயன்றவற்றையெல்லாம் நினைவுபடுத்திக் கொள்வான். அப்போது பார்ப்போருக்கு(க் காணும் வகையில்) நரகம் வெளிப்படுத்தப்படும். (ஸூ றா அன்-நாஸியா : 34-36)

## மலைகள் நொறுக்கப்படல்

அந்நாளில் நடைபெறும் நிகழ்வுகள் ஒருவரது கற்பனைகளுக்கு அப்பாற்பட்டது. மலைகள் உலகிலுள்ள அசைக்க முடியாதவைகள் அவைகள் வேரோடு பிடுங்கி எடுக்கப்பட்டு நொறுக்கப்படும். சிறு நிலஅதிர்வுகள் மனிதனை பயமுறுத்தி அவர்களை உதவியற்றவர்களாக உணரசெய்கிறது. இதன் காரணமாக அவர்கள் தங்கள் வீடுகளை துறந்து முழு இரவும் வீதியில் தங்குகிறார்கள். இது இவ்வாறிருக்க மலைகள் உயர்தப்படுவது தாங்கி கொள்ள முடியாத ஒன்றாகும். அந்த நாளில் மலைகளின் நிலையை பற்றி குர்ஆன் இவ்வாறு கூறுகிறது. .

> எனவே, ஸூ ரில் (எக்காளத்தில்) ஊதல் ஒருமுறை ஊதப்படும் போது: 69:14 இன்னும் பூமியும் மலைகளும் தூக்கி (எறியப்பட்டு) பின்னர் ஒன்றோடு ஒன்று மோதி அவையிரண்டும் ஒரே தூளாக ஆக்கப்பட்டால் - அந்த நாளில் தான் நிகழ வேண்டிய (மாபெரும் சம்பவம்) நிகழும். (ஸூ றா அல்-ஹாக்கா : 13-15)

நிச்சயமாகத் தீர்ப்புக்குரிய நாள், நேரங்குறிக்கப்பட்டதாகவே இருக்கிறது. ஸூ ர் (எக்காளம்) ஊதப்படும் அந்நாளில் நீங்கள் அணிஅணியாக வருவீர்கள். இன்னும், வானம் திறக்கப்பட்டு பல வாசல்களாகிவிடும். மலைகள் பெயர்க்கப்பட்டு கானல் நீராகிவிடும். (ஸூ றா அன்-நபா: 17-20)

மலைகள் பெயர்க்கப்படும் போது- சூல் நிறைந்த ஒட்டகைகள் (கவனிப்பாரற்று) விடப்படும் போது- காட்டு மிருகங்கள் (மனிதர்களுடனும், இதர பிராணிகளுடனும்) ஒன்று சேர்க்கப்படும்போது. (ஸூ றா அத்-தகாவீர் : 3-5 )

அந்நாளில் சிதறடிக்கப்பட்ட ஈசல்களைப் போன்று மனிதர்கள் ஆகிவிடுவார்கள். மேலும், மலைகள் கொட்டப்பட்ட பஞ்சைப் போன்று ஆகிவிடும். (ஸூ றா அல்-காரியா : 4-5)

அந்நாளில் பெரும் கட்டுப்படுத்த முடியாத சக்தி ஒன்று மலைகளை வானில் பரத்தப்பட்ட பஞ்சை போன்று வீச வல்லது. அப்போது மக்கள் இது இயற்கையின் எல்லையை தாண்டிய ஒன்று என்பதை புரிந்து கொள்வார்கள். அவர்களால் போற்றப்பட்டு சிலையென வடித்து வழிப்பட்டு அதுதான் வாழ்வின் ஆதாரம் என்று அழைத்த பூமி தாய் அதன் அழிவை தடுக்க முடியாமல் இருப்பதை காண்பார்கள். இந்த சக்தியின் உண்மையான சொந்தக்காரனை அறியும் நேரம் வந்து விட்டது. இவ்வாறு தெரிந்து கொள்வது அவர்களுக்கு எவ்வித பயனையும் தராது. இதற்கு முன்னர் அவர்கள் சிந்தித்து பார்திடாத சக்தியால் தற்போது அவர்கள் சூழப்பட்டிருப்பார்கள். அவர்களது வாழ்நாள் முழுவதும் அறிவினாலும் மனசாட்சியாலும் புரிந்து கொள்ள தவறிய உண்மைகளை அவர்கள் பயத்தோடு அறிந்து கொள்வார்கள்.

எல்லையற்ற சக்தியினால் படைக்கப்பட்ட பீதியை ஒருவரால் உணரப்படாத வரை அதை வரையறை செய்யவோ அல்லது புரிந்து கொள்ளவோ முடியாது. அது எல்லா உயருள்ள மற்றும் உயிரற்ற அனைத்தையும் சூழ்ந்து கொள்ளும். அந்த பயங்கரம் அனைத்தையும் அதன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துகொள்ளும். மனிதர்கள் விலங்குகள் மற்றும் இயற்கை அனைத்தும் இந்த பொதுவான பீதிக்கு உள்ளாகியிருக்கும். அந்நாளில் முன்பு கூறப்பட்டதை போன்று மலைகள் கம்பீரமானவைகளை அல்ல கடல்கள் எல்லையற்றதல்ல வானம் தொடமுடியாததல்ல. சூரியன் நட்சத்திரங்கள் மற்றும் பிரபஞ்சம் அனைத்தும் பயத்தால் சூழப்பட்டு காணப்படும். அவை அனைத்தும் இறைவனிடத்தில் சரணடைந்துவிடும். மலைகள் மணல்கோட்டை போன்று விழுந்துவிடும். மலைகள் நட்சத்திரங்கள் மற்றும் கடல்கைள பிறகு தோய்வுற்று காணப்படும் மனிதனும் அழிவை சந்திப்பான்.

## கடல்கள் கொந்தளிக்கும்

தற்போது மனிதனிடத்திலுள்ள சக்திகளின் மூலம் உயிர் பெற்று எழும் நாளின் நிதழ்வுகளை அறிந்து கொள்ள முடியாது. கடல்கள் தீ மூட்டப்படும்போது- உயிர்கள் ஒன்றிணைக்கப்படும் போது (ஸூ றா அத்-தகாவீர்: 6-7). அத்துடன் கடல்கள் (பொங்கி ஒன்றால் ஒன்று) அகற்றப்படும் போது, ( ஸூ றா அல்-இன்பிதார்: 3). இருப்பினும் அழிவுகள் இறைவனது பேராலற்றலின் அடிப்படையில் சரியான அளவில் காணப்படும்.

## வானம் அழிதல்

மீண்டும் உயிர் பெற்று எழும் நாளில் உலகம் மட்டுமல்ல விண்வெளியும் முழு பிரபஞ்சமும் அழிக்கப்படும். வானத்திற்கும், சந்திரனுக்கும் சூரியனுக்கும் கோள்களுக்கும் உலகிலுள்ள மலைகளுக்கும் கடல்களுக்கும் மற்றும் பூமிக்கு உள்ளே காணப்படும் அனைத்திற்கும் அழியும் நேரம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த நாளை பற்றி குர்ஆன் கூறும்போதுஇ நிச்சயமாக உங்களுக்கு வாக்களிக்கப்பட்டது நிகழ்வதேயாகும். இன்னும், நட்சத்திரங்கள் அழிக்கப்படும்போது- மேலும், வானம் பிளக்கப்படும் போது- அன்றியும், மலைகள் (தூசிகளைப் போல்) பறக்கடிக்கப்படும்போது (ஸூ றா அல்-முர்ஸலாத் : 7-10)

மீண்டும் உயிர் பெற்று எழும் நாளில் மக்கள் நிலையானவை என்று முறையான ஒழுங்குள்ளது என்றும் கூறியவைகள் அனைத்தும் ஒன்றுமில்லாத நிலைக்கு போகும். வானமும் இந்த நிலையை சந்திக்கும். ஒருவன் பிறந்தவுடன் பூமிக்கு மேலுள்ள வளிமண்டலத்தை (யவஅழளிநசந) பாதுகாக்கும் கூரையாக இருப்பதை காண்கிறான். இருப்பினும் மீண்டும் உயிர் பெற்று எழும் நாளில் கூரை இடிந்து துண்டுதுண்டாக விழும். மனிதனை சூழ்ந்து ஒவ்வொரு சுவாசத்தையும் தந்து அவனுக்கு வாழ்வளிக்கும் காற்றும் வளிமண்டலமும் வானம் உருக்கப்பட்ட செம்பைப் போல் ஆகிவிடும் நாளில் (ஸூ றா அல-மஆரிஜ் : 8) . மிக பயங்கரமாக கொழுந்து விட்டெரியும். அனைத்து காற்றுகளும் மனிதனின் இரப்பையை அடைத்து அவனுக்கு வாழ்வளிக்காது அதற்குபதிலாக எரித்து விடும்.

இவ்வுலகில் தற்போது இடம்பெறும் பேரழிவுகள் மீண்டும் உயிர் பெற்று எழும் நாளின் நிகழ்வுகளை எமக்கு படம்பிடித்து காட்டுகின்றன. நிலநடுக்கங்கள் மற்றும் எரிமலை வெடிப்பது ஆகியன மனிதனை மிகவும் பயத்தை

ஏற்படுத்தக்கூடிய பேரழிவுகளாகும். புவியின் தகடுகள் நிலநடுக்கத்தின் மூலமாக உடைவதும் எரிமலை வெடிப்பும் அன்றாட வாழ்வை கேள்வி குறியாகிவிடுகிறது.

நிலநடுக்கமும் எரிமலையும் எவ்வளவு துயரை தந்தாலும் அவை ஒருமுறை மட்டுமே நிகழும். நிலநடுக்கமும் எரிமலை வெடிப்பும் சில குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரமே இருக்கும். காயங்கள் குணமடைந்ததும் வடுக்கள் மறைந்ததும் சில காலங்களில் அவை நினைவிலிருந்து மறைந்து போகும். ஆனால் மீண்டும் உயிர் பெற்று எழும் நாளானது நிலநடுக்கம் அல்லது மற்ற பேரழிவுகளை போன்று இருக்காது. ஒன்றன் பின் ஒன்றாக பேரழிவுகள் நடைபெறும் விதம் வியப்பாக இருப்பதால் அவை அனைத்தும் திரும்ப முடியாத இடத்திற்கு வந்து விட்டன என்பதை காட்டும். உதாரணமாக ஒருவனது கற்பனைக்கு எட்டாத நிகழ்வுகள் நடைபெறும். வானம் இடிந்து விழும். இது ஒருவன் நிலையானது என்று ஏற்றுக்கொண்ட பௌதீகவியல் சட்ட" த்தின் வீழ்ச்சியாகும். பல்லாயிரம் ஆண்டுகள் உயிர்வாழ்ந்த பூமியும் வானமும் அதை படைத்தவனாலேயே நொறுக்கப்படும். மீண்டும் உயிர் பெற்று எழும் நாளை குர்ஆனில் (ஸூறா அல்-இன்பிதார் : 1-3) வானம் உடையும் நட்சத்திரங்கள் வெடித்து சிதறும் கடல்கள் பெருக்கெடுத்து ஓடும் என்று கூறுகிறது.

> வானம் வெடித்து திறக்கும் போதுஇ அது வானம் பிளந்துவிடும் போது- தனது (இறைவனின் ஆணைக்கு கட்டுப்படுவது) கடமையாக்கப்பட்டுள்ள நிலையில் தன் இறைவனின் கட்டளைக்கு (அந்த வானம்) அடிபனியும் போது (ஸூறா அல்-இன்ஷிகாக் : 1-2)

> சூரியன் (ஒளியில்லாததாகச்) சுருட்டப்படும் போது- நட்சத்திரங்கள் (ஒளியிழந்து) உதிர்ந்து விழும்போது (ஸூறா அத்-தகாவீர் : 1-2)

பல்லாயிரம் ஆண்டுகளாக பூமிக்கு ஒளியூட்டிக்கொண்டிருந்த சூரியன் சுருட்டப்படும். அதற்கு உண்மையான சொந்தக்காரன் இருக்கிறான் என்பதை மக்கள் புரிந்துகொள்வார்கள். அவனது கட்டுப்பாட்டிற்குள் வரும் வரை அது நகரும். மக்கள் அடையமுடியாத ஒன்று என்றும் மக்துவமிக்கது என்றும் விளங்க முடியாதவைகள் என்றும் நட்சத்திரங்கள் நினைத்தார்கள். இருப்பினும் அன்றைய தினம் அவைகள் தங்க முலாம் பூசப்பட்ட விளையாட்டு பொருட்களை போன்று ஒளியை இழக்கும். பெரும் அசைக்கமுடியாத மலைகள் நகரும். எல்லையற்ற கடல்கள் கொதிக்கும். இத்தகைய நிகழ்வுகளின் மூலம் அனைத்து படைப்புகளினதும் சொந்தக்காரன் பெரும் வல்லமையுடைய ஒருவன் அனைத்து பொருட்களினதும் மீது பேராற்றலுடையவனை தெரிந்து கொள்வார்கள். குறிக்கப்பட்ட தவணை முடிவடைந்ததும் தன்னை தானே ஏமாற்றி கொண்டிருந்த திரைகள் அகற்றி மனிதன் பாா்ப்பான். இந்த மறதி ஏற்பட காரணம் மனிதன் இவ்வுலகில் வாழ்ந்த பொழுதில்

அவனது படைப்பாளனின மகத்துவத்தை உணர தவறி விட்டான். அன்றைய தினம் வாழ்கையினதும் பிரபஞ்சத்தினதும் உண்மையான சொந்தக்காரனை அடையாம் கண்டுகொள்வார்கள்.

> அல்லாஹ்வின் கண்ணியத்திற்குத் தக்கவாறு அவர்கள் அவனை கண்ணியப்படுத்த வில்லை¢ இன்னும் இந்தப்பூமி முழுதும் கியாம நாளில் அவனுடைய ஒரு பிடிதான்¢ மேலும், வானங்களனைத்தும் அவனுடைய வலக்கையால் சுருட்டப்பட்டதாக இருக்கும்¢ அவர்கள் இணைவைப்பதை விட்டும் அவன் மகா தூயவன். (ஸூறா அஸ்-ஸுமர் : 67)

## மக்களின் நிலை

மீண்டும் உயிர் பெற்று எழும் நாளில் ஏற்படும் பயம் குழப்பம் ஆகியவை அவநம்பிக்கையாளரின் கவனக்குறைவினால் ஏற்பட்டதாகும். ஏவ்வளவு துாரம் அவன் கவனக்குறைவாக இருக்கிறானோ அந்தளவு பயம் அவனை அந்நாளில் உலுக்கி எடுக்கும். மரணத்தோடு ஏற்படும் பயமும் பயங்கரமும் என்றென்றும் நிலைத்து நிற்கும். ஒவ்வொரு நிகழ்வும் அவனுக்கு பயத்தை ஏற்படுத்தும். அவன் சந்திக்கும் ஒவ்வொரு மோசமான நிகழ்வுகளும் அவனுக்கு ஏற்படப்போகும் பயத்தை அதிகரிக்கும். இந்த பயத்தின் விளைவாக குழந்தைகளின் முடி சாம்பல் நிறமாக மாறிவிடும்.

> எனவே, நீங்கள் நிராகரித்தீர்களானால், குழந்தைகளையும் நரைத்தவர்களாக்கும் அந்த நாளிலிருந்து எவ்வாறு தப்பிக்க போகிறீர்கள். அதில் வானம் பிளந்து விடும்¢ அவனுடைய வாக்குறுதி செயல்படுத்தப்படும். (ஸூறா அல்-முஸம்மில் : 17-18)

இறைவன் தங்களை கவனிக்கவில்லை என்று நினைத்துகொண்டிருந்தவர்கள் இறைவன் தங்களது தீர்ப்புகளை மீண்டும் உயிர் பெற்று எழும் நாள் வரை தள்ளி வைத்துள்ளான் என்பதை அறிந்து கொள்வார்கள். இது கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

மேலும் அக்கிரமக்காரர்கள் செய்து கொண்டிருப்பதைப் பற்றி அல்லாஹ் பாராமுகமாக இருக்கிறான் என்று (நபியே!) நீர் நிச்சயமாக எண்ண வேண்டாம்¢ அவர்களுக்கு (தண்டனையை) தாமதப் படுத்துவதெல்லாம், கண்கள் விரைத்துப் பார்த்துக் கொண்டேயிருக்கும் (அந்த மறுமை) நாளுக்காகத்தான். -(ஸூ றா இபுறாஹிம்: 42)

இன்னொரு வசனத்தில் அவநம்பிக்கையாளர்களின் பயத்தை பற்றி இவ்வாறு விளக்குகிறது.

> திடுக்கிடச் செய்யும் (நிகழ்ச்சி). திடுக்கிடச் செய்யும் (நிகழ்ச்சி) என்ன? திடுக்கிடச் செய்யும் (நிகழ்ச்சி) என்ன வென்று உமக்கு எது அறிவித்தது? அந்நாளில் சிதறடிக்கப்படட ஈசல்களைப் போன்று மனிதர்கள் ஆகிவிடுவார்கள். மேலும், மலைகள் கொட்டப்பட்ட பஞ்சைப் போன்று ஆகிவிடும். (ஸூ றா அல்-காரிஆ : 1-5)

இவ்வுலகிலுள்ள உறுதியான பந்தங்களில் ஒரு தாய் தனது குழந்தை மீது வைத்துள்ள அன்பும் பராமரிப்புமாகும். மீண்டும் உயிர் பெற்று எழும் நாளின் கடுமையின் காரணமாக இந்த உறுதியான பந்தமும் உடைந்து போகும். பயம் அனைத்தையும் அதன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து கொள்ளும். பெரும் அதிர்ச்சி மக்களை அவர்களது சுயநினைவை இழக்க செய்து விடும். பீதியினதும் குழப்பத்தினதும் காரணமாக அவர்கள் குடிபோதையிலுள்ளவர்களை போன்று ஓடுவார்கள். அவர்களின் சுயநினைவை இழக்க செய்தது இறைவனது கடும் சாபமாகும்.

> மனிதர்களே! நீங்கள் உங்களுடைய இறைவனை பயந்து கொள்ளுங்கள்¢ நிச்சயமாக (கியாமத்து நாளாகிய) அவ்வேளையின் அதிர்ச்சி, மகத்தான பெரும் நிகழ்ச்சியாகும். அந்நாளில், பாலூட்டிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு தாயும் தான் ஊட்டும் குழந்தையை மறந்து விடுவதையும், ஒவ்வொரு கர்ப்பிணியும் தன் சுமையை ஈன்று விடுவதையும் நீங்கள் காண்பீர்கள்¢ மேலும், மனிதர்களை மதி மயங்கியவர்களாக இருக்க காண்பீர்¢ எனினும் (அது மதுவினால் ஏற்பட்ட) மதி மயக்கமல்ல¢ ஆனால் அல்லாஹ்வின் வேதனை மிகக் கடுமையானதாகும். (ஸூ றா அல்-ஹஜ் : 1-2)

அந்நாளில் பயம் மற்றும் பீதியை தவிர என்ன செய்வது என்று அறியாமல் மக்கள் திண்டாடுவார்கள். மனிதன் அனைத்து அழிவுகள் மற்றும் பயங்கர பேரழிவுகள் மற்றும் மிகப்பயங்கர நிலநடுக்கம் மற்றும் வெள்ளம் சூறாவளி மற்றும் மிக கொடுமையான அணுவாயுத போர் போன்ற அனைத்து அழிவுகளிலிருந்தும் தன்னை பாதுகாத்து கொள்ள அனைத்து முன்னெச்சரிக்கைகளையும் செய்துள்ளான். மனிதன் தன்னை பாதுகாத்து கொள்ள தகுந்த உறைவிடங்களை அமைத்துள்ளான். இருப்பினும் அந்நாளில் ஒருவன் தஞ்சமடைய எவ்வித பாதுகாப்பான ஒரு இடமும் இருக்காது. அவனுக்கு இறைவனிடமிருந்து எவ்வித உதவியும் கிடைக்காது. அவனுக்கு உதவக்கூடிய எந்த ஒரு மனிதனோ அல்லது அமைப்போ இருக்காது. முன்பு மனிதன் விஞ்ஞானம் மற்றும் நவீன தொழிநுட்பத்தை கொண்டு உதவி மற்றும் வழிகாட்டுதல்களை பெற்றான். ஆனால் தற்போது விஞ்ஞான சட்டங்கள் அழிந்துவிட்டன. ஒருவன் நவீன தொழிநுட்பத்தை கொண்டு விண்வெளியில் எந்த ஒரு தூர இடத்திற்கு சென்றாலும் இறைவனது சாபம் அவனை வந்தடையும். அதற்கு காரணம் மறுமை முழு பிரபஞ்சத்தையும் சூழ்ந்துகொள்ளும். அவன் பாதுகாப்பாக வாழும் உலகம் மட்டுமல்ல மிக தூரமுள்ள நட்சத்திரங்களும் சூரியன் (ஒளியில்லாததாகச்) சுருட்டப்படும் போது மற்றும் நட்சத்திரங்கள் (ஒளியிழந்து) உதிர்ந்து விழும்போது (ஸூ றா அத்-தகாவீர் : 1-2) இறைவனது கட்டளைக்கு கட்டுப்படும்.

மனிதனின் இயலாமை நிலையை பற்றி குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

> சந்திரனும் ஒளியும் மங்கி- சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்க்கப்பட்டுவிடும். அந்நாளில் ‘(தப்பித்துக் கொள்ள) எங்கு விரண்டோடுவது?’ என்று மனிதன் கேட்பான். ‘இல்லை, இல்லை! தப்ப இடமேயில்லை!’ (என்று கூறப்படும்). அந்நாளில் உம் இறைவனிடம் தான் தங்குமிடம் உண்டு.. (ஸூ றா அல்-கியாமா : 8-12)

## இரண்டாவது முறையாக எக்காளம் ஊதப்படுதலும் மரணித்தவர்கள் எழுவதும்

எக்காளம் இரண்டாவது முறையாக ஊதப்பட்டதும் வானமும் பூமியும் நொறுக்கப்பட்டு அனைத்தும் முடிவுக்கு வரும். உயிருள்ள ஒன்றும் இருக்காது. குர்ஆன் இதை இந்த பூமி வேறு பூமியாகவும், இன்னும் வானங்களும் மாற்றப்படும் நாளில் (அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.) மேலும் அடக்கியாளும் ஏகனாகிய அல்லாஹ்வின்

முன்னிலையில் வெளியாகி நிற்பார்கள். (ஸூ றா இபுறாஹீம் : 48) . கடைசி தீர்ப்புக்கான தயாரிக்கப்பட்ட இந்த அமைப்பை இவ்வாறு விவரிக்கப்படுகிறது.

> நபியே!) இன்னும் உம்மிடம் மலைகளைப்பற்றி அவர்கள் கேட்கிறார்கள். 'அவைகளை என் இறைவன் தூள் தூளாக்கி (மணல்களைப் போல் பரப்பி)விடுவான்' என்று நீர் கூறுவீராக. 'பின்பு, அவற்றைச் சமவெளியாக்கி விடுவான். 'அதில் நீர் மேடு பள்ளத்தை காணமாட்டீர்.' (ஸூ றா தாஹா : 105-107)

இந்த நிலையில் தான் மக்கள் மீண்டும் உயிர் பெற்று எழுந்து அவர்கள் செய்தவைகளுக்காக கணக்கு காட்ட ஒன்று சேர்க்கப்பட்டிருப்பார்கள். இந்த இடத்தில் தாங்கள் எங்கு போவார்கள் என்பதை அறிவார்கள். மனிதர்கள் மீண்டும் உயிர் பெற்று எழுந்து அல்-கஹ்ஹார் (ஆதிக்கம் செலுத்தும்) இறைவனுக்கு முன் நிறுத்தப்படும் நேரம் வந்துவிட்டது. எக்காளம் இரண்டாவது முறையாக ஊதப்படும். உலகத்தில் மறுமையையும் மீண்டும் எழுப்பப்படுவதையும் மறுத்தவர்கள் அவர்களுடைய கல்லறைகளிலிருந்து எழுப்பப்படுவார்கள். இது அவர்கள் என்றுமே எதிர் பாராத ஒன்றாக இருக்கும். இதை பற்றி குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

> ஸூ ர் (எக்காளம்) ஊதப்பட்டால் உடன் வானங்களில் உள்ளவர்களும், பூமியில் உள்ளவர்களும் - அல்லாஹ் நாடியவர்களைத் தவிர - மூர்ச்சித்து விடுவார்கள்¢ பிறகு அதில் மறு தடவை ஊதப்பட்டதும் உடன் அவர்கள் யாவரும் எழுந்து, எதிர் நோக்கி நிற்பார்கள். மேலும், பூமி தன் இறைவனுடைய ஒளியைக் கொண்டு பிரகாசிக்கும்¢ (அவர்களுடைய) குறிப்பேடு (அவர்கள் முன்) வைக்கப்படும்¢ இன்னும், நபிமார்களும், சாட்சிகளும் கொண்டுவரப்படுவார்கள்¢ அவர்களிடையே நியாயமாகத் தீர்ப்பளிக்கப்படும். அன்றியும் அவர்கள் (சிறிதும்) அநியாயம் செய்யப்பட மாட்டார்கள். (ஸூ றா அல்-ஜீமர் : 68-69)

## கல்லறைகளிலிருந்து எழும்புதல்

இறைவனது விருப்பப்படி மக்கள் கல்லறைகளிலிருந்து எழும்பும் போது ஏற்படும் பெரும் நிகழ்வை பற்றி குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

> வானமும், பூமியும் அவனுடைய கட்டளையினால் நிலைபெற்று நிற்பதும் அவன் அத்தாட்சிகளினின்றும் உள்ளன¢ பின்னர் ஓர் அழைப்பைக் கொண்டு உங்களை அழைத்த உடன் நீங்கள், பூமியிலிருந்து வெளிப்பட்டு வருவீர்கள். (ஸூ றா அர்-ரூம் : 25)

> அங்கே உதவிசெய்தல் உண்மையான அல்லாஹ்வுக்கே உரியது, அவன் கூலி வழங்குவதிலும் மிக்க சிறந்தவன்¢ முடிவெடுப்பதிலும் மிக்க மேலானவன்-(ஸூ றா கா.ஃப் : 44: )

-அழைப்பாளனின் அழைப்பை ஏற்று அவனை நோக்கியவர்களாக விரைவார்கள். இந்த அழைப்பு அவர்கள். இதுவரை கேட்டிராத அழைப்பாக இருக்கும்.

> ஆகையால் (நபியே!) அவர்களை விட்டும் நீர் திரும்பி விடும்¢ (அவர்களுக்கு) வெறுப்பான (கேள்வி கணக்கு) விஷயத்திற்காக அழைப்பவர் (அவர்களை) அழைக்கும் நாளில்: (ஸூ றா அல்-கமர் : 6)

> அந்நாளில் அவர்கள் (ஸூ ர் மூலம்) அழைப்பவரையே பின்பற்றிச் செல்வார்கள்¢ அதில் எத்தகைய கோணலும் இருக்காது¢ இன்னும் (அவ் வேளை) அர்ரஹ்மானுக்கு (அஞ்சி) எல்லாச் சப்தங்களும் ஒடுங்கி விடும். கால்கள் (மெதுவாக அடியெடுத்து வைக்கும்) சப்தத்தைத் தவிர (வேறெதையும்) நீர் கேட்கமாட்டீர். -(ஸூ றா தாஹா : 108)

> நிச்சயமாக அவர்கள் (தாங்கள் ஆராதனை செய்யும்) எல்லைக் கற்களின்பால் விரைந்து செல்பவர்களைப் போல் அந்நாளில் (தங்கள்) கப்றுகளிலிருந்து விரைவாக வெளியாவார்கள். -(ஸூ றா அல்-மஆரிஜ் : 43)

இறைவன் விதித்த எல்லைகளை தாண்டி எல்லைமீறியவர்கள் இறைவனுக்கு கட்டுப்படாதவர்கள் தங்கள் விருப்பப்படி வாழ்ந்தவர்கள் இறைவனை மறுத்தவர்கள் அனைவர்களும் மீண்டும் உயிர் பெற்று எழுந்ததும் இறைவனுக்கு முழுதும் கட்டுப்பட்டவர்களாக மாறிவிடுவார்கள். அவனது அழைப்பை எவ்வித எதிர்ப்பும் இன்றி ஏற்றுக்கொள்வார்கள். காரணம் பரீட்சை உலகிலேயே முடிந்து விட்டது எனவே கட்டுப்படுவதை தவிர வேறு

எவ்வித தேர்ந்தெடுக்கும் அதிகாரமும் இருக்காது. அவர்கள் விரும்பினாலும் அதற்கு மாற்றமாக செய்ய முடியாது. அவர்கள் அத்தகைய ஆசையை நினைத்து பார்க்கவும் முடியாது.. இந்த அழைப்பை நிராகரிக்க அவர்களுக்கு எந்த சக்தியும் கிடையாது. அதனால் தான் இரக்கமற்ற தினத்தில் சிக்கி கொண்டதாக உணர்வார்கள்.

கழுத்து நீட்டிய நிலையில்இ கண்கள் பிதுங்கிய நிலையில் அழைப்பவனை நோக்கி விரைவார்கள். அப்போது ஏக இறைவனை மறுத்தவர்கள் கூறுவார்கள்: இது மிகவும் கஷ்டமான நாள். (ஸூ றா அல்-கமர் : 8)

- இவ்வாறு ஏக இறைவனை நிராகரித்தவர்கள் விரைந்து ஓடுவார்கள். அனைவரும் முழுமையாக கட்டுப்பட்டு இருப்பார்கள். அந்நாளில் மக்கள் கொண்டுள்ள ஒரேஒரு பொருள் நம்பிக்கையாகும். இருப்பினும் ஏக இறைவனை மறுத்தவர்கள் அதிலிருந்து விலக்கப்பட்டிருப்பார்கள். அதனால்தான் அவர்களது இதயங்கள் ஓட்டை இருப்பதால் (அந்நாளில்) தங்களுடைய சிரங்களை (எப்பக்கமும் பாராமல்) நிமிர்த்தியவர்களாகவும், விரைந்தோடுபவர்களாகவும் அவர்கள் இருப்பார்கள்¢ (நிலை குத்திய) அவர்களின் பார்வை அவர்கள் பக்கம் திரும்பாது. இன்னும், அவர்களுடைய இருதயங்கள் (திடுக்கங் கொண்டு) சூனியமாக இருக்கும் (ஸூ றா இபுறாஹீம் : 43)

அவர்கள் கூட்டத்தினூடே குறிப்பிட்ட இடத்தை நோக்கி செல்வார்கள்.

ஸூ ர் (எக்காளம்) ஊதப்படும் அந்நாளில் நீங்கள் அணிஅணியாக வருவீர்கள (ஸூ றா அன்-நபா : 18)

மேலும், ஸூ ர் ஊதப்பட்டதும், உடனே அவர்கள் சமாதிகளிலிருந்து வெளிப்பட்டுத் தங்கள் இறைவனிடம் விரைவார்கள். 'எங்களுடைய துக்கமே! எங்கள் தூங்குமிடங்களிலிருந்து எங்களை எழுப்பியவர் யார்?' என்று அவர்கள் கேட்பார்கள்¢ அர்ரஹ்மான் வாக்களித்ததும், (அவனுடைய) தூதர்கள் உண்மையெனக் கூறியதும் இதுதான்' (என்று அவர்களுக்குக் கூறப்படும்). (ஸூ றா யாஸின் :51-52)

பெரும் பீதி மற்றும் ஏமாற்றத்தின் விளைவு ஐயோ எங்களுக்கு கேடு'' எனறு கூறப்படும். தான் மீண்டும் எழுப்பபட்டதை பார்க்கும் அவநம்பிக்கையாளன் இறைவனது தூதர் தனது வாழ்நாள் முழுவதும் இந்த நிகழ்வை பற்றி கூறியது உண்மை என்று விளங்கி கொள்வான். அவன் அவநமபிக்கையாளர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நிரந்தர சித்திரவதை தனக்கு கிடைக்கும் என்பதை புரிந்து கொள்வான். அந்நேரத்தில் அவன் அவ்விடயம் சம்பந்தமான அனைத்து சந்தேகங்களையும் விட்டும் நீங்கி நிரந்தரமான தூக்கத்தை போன்று ஒன்றுமில்லை என்று ஏங்குவான். அவனுக்கு இரட்சிப்புக்கு பதிலாக ஏற்பட போகும் பேரும் வேதனை அறிந்ததும் அவனது ஏமாற்றம் இன்னம் அதிகரிக்கும்.

- ஏக இறைவனை நிராகரித்தவர்கள் பயந்து பீதியுற்று செய்வதறியாது தவிப்பார்கள். அவர்களது முகங்கள் கருத்து புழுதியால் நிரப்பப்பட்டு பயந்தவர்களாக அவர்களது தோற்றம் இருக்கம். அவர்கள் சிறுமைபடுத்தப்படுவார்கள்.

அந்நாளில் சில முகங்கள் இழிவுபட்டிருக்கும். (ஸூ றா அல்-காஷியா : 2)

ஆனால் அந்நாளில் - (வேறு) சில முகங்கள், அவற்றின் மீது புழுதி படிந்திருக்கும். அவற்றைக் கருமை இருள் மூடியிருக்கும். அவர்கள்தாம், நிராகரித்தவர்கள்¢ தீயவர்கள். (ஸூ றா அபஸா : 40-42)

அன்றியும் அல்லாஹ்வின் மீது பொய்யுரைத்தார்களே (அவர்களுடைய) முகங்கள் கியாம நாளில் கறுத்துப் போயிருப்பதை நீர் காண்பீர்¢ பெருமையடித்துக் கொண்டிருந்த இவர்களின் தங்குமிடம் நரகத்தில் இருக்கிறதல்லவா? (ஸூ றா அஸ்-ஸூ மர் : 60)

இறைவன் மறுமை நாளில் அவநம்பிக்கையாளர்களை குருடர்களாக எழுப்புவான்.

'எவன் என்னுடைய உபதேசத்தைப் புறக்கணிக்கிறானோ, நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கும்¢ மேலும், நாம் அவனை கியாம நாளில் குருடனாவே எழுப்புவோம்' என்று கூறினான். (அப்போது அவன்) 'என் இறைவனே! நான் பார்வையுடையவனாக இருந்தேனே! என்னை

ஏன் குருடனாக எழுப்பினாய்?' என்று கூறுவான். (அதற்கு இறைவன்,) 'இவ்விதம்தான் இருக்கும்¢ நம்முடைய வசனங்கள் உன்னிடம் வந்தன¢ அவற்றை நீ மறந்துவிட்டாய்¢ அவ்வாறே இன்றைய தினம் நீயும் மறக்கப்பட்டு விட்டாய்' என்று கூறுவான். (ஸூ றா தாஹா : 124-126)

அல்லாஹ் யாரை நேர்வழியில் செலுத்துகிறானோ, அவர் தாம் நேர்வழிப்பெற்றவர் ஆவார்¢ இன்னும் அவன் யாரை வழிகேட்டில் விடுகிறானோ அ(த்தகைய)வருக்கு உதவி செய்வோர் அவனையன்றி வேறு எவரையும் நீர் காணமாட்டீர்¢ மேலும் அவர்களைக் குருடர்களாகவும், ஊமைகளாகவும், செவிடர்களாகவும் தம் முகங்களில் குப்புற வரும்படி செய்து கியாம நாளில் ஒன்று சேர்ப்போம்¢ இன்னும் அவர்கள் ஒதுங்கும் இடம் நரகமேயாகும்¢ (நரக நெருப்பு). அணையும் போதெல்லாம் நாம் அவர்களுக்கு நெருப்பை அதிகமாக்குவோம். (ஸூ றா அல்-இஸ்ரா : 97)

- கண்ணின் வெண்மையான பகுதி நீல நிறமாக மாறும்.. இவ்வாறு கண்களின் நிறம் மாற்றமடைவது ஏக இறைவனை நிராகரிததவர்களின் அருவருப்பான தோற்றத்தையும் பயத்தையும் அதிகரிக்கும்.

ஸூ ர் (எக்காளம்) ஊதப்படும் நாள் அது¢ குற்றவாளிகளை, (பயத்தினால்) நீலம் பூத்த கண்ணுடையோராக நாம் அந்நாளில் ஒன்று சேர்ப்போம். -(ஸூ றா தாஹா : 102)

ஏக இறைவனை நிராகரிததவர்களின் இத்தகைய அருவருப்பான பயங்கர தோற்றமானது அவர்களை நம்பிக்கையாளர்களிலிருந்து இலகுவில் பிரித்து அறிவிக்கும். இறைவனது வசனங்களுக்கு எதிராக போரிட்டு மோசமாக நடந்து கொண்டிருந்த மக்களின் இறுதி முடிவின் ஆரம்பம் இதுவாகும்.

## எவ்வித நட்போ அல்லது உறவோ அல்லது ஒத்துழைப்போ காணப்படமாட்டாது

அன்றைய தினம் மற்றவர்கயை பற்றி சிந்திக்க மாட்டான். அவன் அவனை பெற்றெடுத்த தாயையும் தகப்பனையும் வாழ்கை துணையையும் பிள்ளைகளையும் விட்டு வெருண்டோடுவான். மறுமையின் ஏற்படும் சிந்தித்து பார்க்க முடியாத பயங்கரத்தின் தாக்கத்தின் காரணமாக ஒவ்வொருவரும் தங்களை பற்றி மட்டுமே சிந்திப்பார்கள். அன்றைய தினத்தை இறைவன் இவ்வாறு விவரிக்கியான்.

நியாயத் தீர்ப்பு நாள் என்ன வென்று உமக்கு அறிவிப்பது எது? பின்னும் - நியாயத் தீர்ப்பு நாள் என்ன என்று உமக்கு அறிவிப்பது எது? அந்நாளில் ஓர் அத்மா பிறிதோர் ஆத்மாவுக்கு எதுவும் செய்ய சக்தி பெறாது¢ அதிகாரம் முழுவதும் அன்று அல்லாஹ்வுக்கே. (ஸூ றா அல்-இன்பிதார் : 17-19)

ஆகவே, (யுக முடிவின் போது காதைச் செவிடாக்கும் பெருஞ் சப்தம் வரும் போது - அந்த நாளில் மனிதன் விரண்டு ஓடுவான் - தன் சகோதரனை விட்டும் - தன் தாயை விட்டும், தன் தந்தையை விட்டும்¢ தன் மனைவியை விட்டும், தன் மக்களை விட்டும்- அன்று ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் (அவல) நிலையே போதுமானதாயிருக்கும். (ஸூ றா அபஸா : 33-37)

இவ்வுலக வாழ்வின் மிகப்பெருமதியான சமூக பந்தங்கள் முடிவிற்கு வரும். அன்றைய தினத்தின் பயங்கரம் காரணமாக அனைத்து நெருங்கிய உறவுகளும் அர்தமற்று போகும். நம்பிக்கை மட்டுமே மிக பெறுமதி மிக்கதாக இருக்கும்.

எனவே ஸூ ர் (எக்காளம்) ஊதப்பட்டு விட்டால், அந்நாளில் அவர்களுக்கிடையே பந்துத்துவங்கள் இருக்காது¢ ஒருவருக்கொருவர் விசாரித்துக் கொள்ளவும் மாட்டார்கள். எவருடைய (நன்மைகளின்) எடைகள் கனமாக இருக்கின்றனவோ அவர்கள் தாம் வெற்றியாளர்கள். ஆனால், எவருடைய (நன்மைகளின்) எடைகள் இலேசாக இருக்கின்றனவோ, அவர்கள் தாம் தங்களையே நஷ்டப்படுத்திக் கொண்டவர்கள்¢ அவர்கள் தாம் நரகத்தில் நிரந்தரமானவர்கள். (ஸூ றா அல்-மு∴மினூன் :101-103)

குடும்ப உறவுகளும் பந்தங்களும் முறிந்து போகும்: எந்தளவிற்கென்றால் மனிதர்கள் தாங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காக அவர்களது பிள்ளைகளையும், வாழ்க்கை துணைகளையும், சகோதரர்களையும் அவர்களது அனைத்து உறவினர்களையும் பணயமாக கொடுக்க தயாராவார்கள்.

> (அனுதாபமுடையவனாக இருந்த) ஒரு நண்பன் மற்றொரு நண்பனை பற்றி (அனுதாபத்துடன்) விசாரிக்கமாட்டான். அவர்கள் நேருக்கு நேர் காண்பார்கள், (ஆனால் விசாரித்துக் கொள்ள மாட்டார்கள்)¢ அந்நாளின் வேதனைக்கு ஈடாகக் குற்றவாளி ஈடுகொடுக்கப் பிரியப்படுவான்¢ தன் மக்களையும்- தன் மனைவியையும், தன் சகோதரனையும்- அவனை அரவணைத்துக் கொண்டிருந்த அவனுடைய சுற்றத்தாரையும்- இன்னும் பூமியிலுள்ள அனைவரையும் (ஈடுகொடுத்துத்) தன்னைக் காப்பாற்றிக் கொள்ள (பிரியப்படுவான்). அவ்வாறு (ஆவது) இல்லை¢ ஏனெனில் நிச்சயமாக அ(ந்நரகமாவ)து கொழுந்துவிட்டு எரியும் நெருப்பாகும். (ஸூ றா அல்-மஆரிஜ் : 10-15)

உண்மையில் அவநம்பிக்கையாளரின் வெகுமதிகள் கேள்விக்குறியான நேரத்தில் அவர்களின் இரக்கமற்ற நன்றிமறந்த நிலையை காட்டுகிறது. இந்த வாழ்கையின் போலியானது என்பதை எச்சரிக்கிறது. ஒருவன் எப்பொழுதுமே முக்கியமில்லாத ஆசைகள்இ கவர்ச்சிகரமான தொழில்இ ஒரு அழகான வீடுஇ பெண் போன்றவற்றை துரத்தி செல்கிறான். பணத்திற்காக வாழ்நாள் முழுவதும் செலவு செய்கிறான். இருப்பினும் அவன் தன்னை காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக ஒரு பெண்ணை மட்டுமல்ல உலகிலுள்ள அனைத்து பெண்களையும் அல்லது அவனிடமுள்ள அனைத்தையும் அவனது இரட்சிப்பிற்கு பணயமாக கொடுக்க தயாராக இருப்பான் என்று குர்ஆன் கூறுகிறது. இருப்பினும் இவை அனைத்தும் பயனற்ற செயல்களாகும். உலகிலுள்ள அனைத்திற்கும் உண்மையான சொந்தக்காரன் இறைவன் மட்டுமே. மறுபுறத்தில் உலக வாழ்கையோடு இரட்சிப்பும் சென்றுவிட்டது. தற்போது காலம் கடந்து விட்டது. வாக்களிக்கப்பட்டவாறு நரக நெருப்பு எரியத் தொடங்கிவிட்டது.

## மக்கள் தங்கள் செயல்களுக்கு கணக்கு காட்டுவதற்காக ஒன்று சோக்கப்படல்

குர்ஆன் வாழ்கையின் உண்மையான அர்தத்தை விளக்குகிறது.

> மனிதனே! நிச்சயமாக நீ உன் இறைவனிடம் சேரும் வரை முனைந்து உழைப்பவனாக உழைக்கின்றாய் - பின்னர் அவனைச் சந்திப்பவனாக இருக்கின்றாய். (ஸூ றா அல்-இன்ஷிகாக் : 6)

நாம் நமது வாழ்நாளில் என்ன செய்த போதிலும் இறைவனுக்கு முன்பாக நிறுத்தப்படுவோம். இந்த வாழ்கை கொடுக்கப்பட்டதன் ஒரே நோக்கம் அவனது அடிமைகளாக இருக்க வேண்டுமென்பதே. மறுபுறத்தில் மிக முக்கியமான நேரமானது மறுமையில் எமது வாழ்கையில் செயல்களுக்கான கணக்குகளை கொடுக்கும் நேரமாகும்.

கடந்து செல்லும் நாட்கள் எம்மை அந்நேரத்திற்கு சமீபமாக கொண்டு செல்கின்றன. எம்மை விட்டு செல்லும் ஒவ்வொரு மணிநேரமும் நிமிடங்களும் நொடிகளும் எம்மை மரணம், மறுமை, கணக்கு காட்டுதல் ஆகியவற்றின் பால் இட்டு செல்கின்றன. வாழ்கையானது பண்டைய காலத்தில் உபயோகிக்கப்பட்ட மணல் கடிகாரம் அந்த திசையில் தொடர்ச்சியாக ஓடிக்கொண்டிருக்கிறது. நேரத்தை நிறுத்த எந்த வழியுமில்லை. அதை திருப்பவும் முடியாது. எல்லா மக்களும் இந்த வழியையே பின்பற்றுகிறார்கள்.

> நிச்சயமாக, நம்மிடமே அவர்களுடைய மீளுதல் இருக்கிறது. பின்னர், நிச்சயமாக நம்மிடமே அவர்களைக் கேள்வி கணக்கு கேட்பதும் இருக்கிறது. (ஸூ றா அல்-காஷியா : 25-26)

இன்று உலகில் சுமார் 6 பில்லியன் மக்கள் இருக்கிறார்கள். இந்த எண்ணிக்கையை இதற்கு முன் வாழ்ந்தவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும் போது மறுமையில் எவ்வளவு மக்கள் ஒன்று சோக்கப்படுவார்கள் என்று கற்பனை செய்து பார்கவும். அனைத்து மக்களும், உலகின் முதல் மனிதர் ஆதம் முதல் இந்த உலகில் வாழும் கடைசி ஏக இறைவனை மறுத்தவன் வரை அனைவரும் அங்கு ஒன்று சேர்க்கப்படுவார்கள். மக்கள் வெள்ளம் ஒரு வித்தியாசமான தோற்றத்தை ஏற்படுத்தும். அதே நேரம் அது பயங்கரமாக இருப்பது உறுதி. இறைவனுக்கு முன்னால் நிறுத்தப்படும் மக்களின் நிலையை குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

அன்றைய தினம் அவர்கள் எவ்வித குறைபாடுகளுமில்லாத அழைப்பாளனின் அழைப்பை ஏற்பார்கள். அளவற்ற அருளாளனின் முன்னால் குரல்கள் அனைத்தும் அமைதியாகிவிடும். நீங்கள் அணிவகுக்கும் கால்களின் சப்தத்தை மட்டுமே கேட்பீர்கள்.

அன்றைய தினம் அளவற்ற அருளாளன் யாருக்கெல்லாம் அனுமதி கொடுக்கிறாளோ அவர்களின் பரிந்துரை மட்டுமே ஏற்றுகொள்ளப்படும்.

அலர்களுக்கு முன்னால் மற்றும் பின்னால் இருப்பதை அவன் அறிவான். ஆனால் அவர்களின் அறிவு அவனை உள்ளடக்காது.

> அந்நாளில் அவர்கள் (ஸூ ர் மூலம்) அழைப்பவரையே பின்பற்றிச் செல்வார்கள்¢ அதில் எத்தகைய கோணலும் இருக்காது¢ இன்னும் (அவ் வேளை) அர்ரஹ்மானுக்கு (அஞ்சி) எல்லாச் சப்தங்களும் ஒடுங்கி விடும். கால்கள் (மெதுவாக அடியெடுத்து வைக்கும்) சப்தத்தைத் தவிர (வேறெதையும்) நீர் கேட்கமாட்டீர். அந்நாளில் அர்ரஹ்மான் எவரை அனுமதித்து, எவருடைய பேச்சை உவந்து கொள்கிறானோ, அவர்களைத் தவிர வேறு எவருடைய ஷஃபாஅத்தும் (பரிந்துரையும்) பலனளிக்காது. அவர்களுக்கு முன்னிருப்பதையும், அவர்களுக்குப் பின்னால் இருப்பதையும் அவன் நன்கறிவான்¢ ஆனால் அவர்கள் அதை(த் தங்கள்) கல்வியறிவு கொண்டு சூழ்ந்தறிய மாட்டார்கள். இன்னும், நிலைத்தவனாகிய நித்திய ஜீவனான (அல்லாஹ்வுக்கு) யாவருடைய முகங்களும் பணிந்து தாழ்ந்துவிடும்¢ ஆகவே எவன் அக்கிரமத்தைச் சுமந்து கொண்டானோ, அவன் நற்பேறிழந்தவனாகி விடுவான். (ஸூ றா தாஹா: 108-111)

ஏக இறைவனை நிராகரித்தவர்கள் அவர்களது வாழ்நாட்களில் மறுத்த, அதேநேரம் நம்பிக்கையாளர்கள் ஆவலோடு தங்களை தயார்படுத்தி கொண்டஇ கணக்கு கொடுக்கும் நேரம் வந்து விட்டது. இந்த பெரும் நீதிமன்றத்திற்காக மகத்தான இடம் படைக்கப்பட்டுள்ளது. அந்நாளில்

> வானமும் பிளந்து, அன்னாளில் அது அடியோடு தன் சக்தியை இழந்து விடும். இன்னும் மலக்குகள் அதன் கோடியிலிருப்பார்கள்¢ அன்றியும், அந்நாளில் உம்முடைய இறைவனின் அர்ஷை (வானவர்) எட்டுப்பேர் தம் மேல் சுமந்திருப்பார்கள். (ஸூ றா அல்-ஹாக்கா : 16-17)

> ரூஹு (என்ற ஜிப்ரயீலு)ம், மலக்குகளும் அணியணியாக நிற்கும் நாளில் அர்ரஹ்மான் எவருக்கு அனுமதி கொடுகிறானோ அவர்களைத் தவிர்த்து வேறெவரும் பேசமாட்டார்கள் - அ(த்தகைய)வரும் நேர்மையானதையே கூறுவார். -(ஸூ றா அன்-நபா : 38)

வானங்களினதும் பூமிகளினதும் இறைவன் அவனது அடிமைகளிடத்தில் அவர்களின் செயல்களுக்கான கணக்குகளை கேட்பான். அவனது மக்துவத்திற்கும் வல்லமைக்கும் பொருத்தமான, வேதனை இருக்கும். நரகத்தில் பெரும் சப்தத்துடன் நெருப்பு எரிந்து கொண்டிருக்கும் அனைத்தையும் வித்தியாசமான முறையில் படைக்கும் இறைவன் அவநம்பிக்கையாளர்களுக்கு சரியான வேதனையை தயார்படுத்தியுள்ளான். அந்நாளில் இறைவன் கொடுக்கும் துன்பத்தை போன்று எவராலும் கொடுக்க முடியாது.

> அப்படியல்ல! பூமி தூள் தூளாகத் தகர்க்கப்படும் போது, உம்முடைய இறைவனும், வானவரும் அணியணியாக வரும்போது, அந்நாளில் நரகம் முன் கொண்டு வரப்படும் போது - அந்நாளில் மனிதன் உணர்வு பெறுவான்¢ அந்த (நாளில்) உணர்வு (பெறுவதினால்) அவனுக்கு என்ன பலன். 'என் (மறுமை) வாழ்க்கைக்காக நன்மையை நான் முற்படுத்தி (அனுப்பி)யிருக்க வேண்டுமே!' என்று அப்போது மனிதன் கூறுவான். ஆனால் அந்நாளில் (அல்லாஹ் செய்யும்) வேதனையைப் போல், வேறு எவனும் வேதனை செய்யமாட்டான். மேலும், அவன் கட்டுவது போல் வேறு எவனும் கட்டமாட்டான். (ஸூ றா அல-பஃஜ்ர்: 21-26)

மனிதன் தனது இறைவனுக்கு கட்டுப்படாமல் அந்நாளுக்காக தன்னை தயார்படுத்தாமல் இருந்தால் அவன் பின்பு மிகவும் வருத்தப்படுவான். அவன் மீண்டும் எழுப்பப்படாமல் உலகிலேயே மண்ணோடு மண்ணாக இருக்க ஆசைப்படுவான். இருப்பினும் இந்த வருத்தத்தால் எந்த பயனுமில்லை. இதற்கு மாறாக அவன் வேதனையின் மறுபக்கமாக மாறி அவன் நரகத்தில் எறியப்படுவான்.

## புத்தகம் கொடுக்கப்படல்

மீண்டும் உயிர்பெற்று எழுதலினால் எற்பட்ட அதிர்ச்சியிலிருந்து மீண்டு வர முன்னர் மனிதர்கள் பயம் மற்றும் பீதியால் கலக்கமடையவார்கள். இதற்கு காரணம் அவன் தனது இறைவனுக்கு முன்னால் செயல்களுக்கான கணக்குகளை கொடுக்க வேண்டியுள்ளது. . அவனது வாழ்நாளில் அவன் செய்தவைகள் மற்றும் அவனது சிந்தனைகள் அனைத்தும் வெளியிடப்படும். ஒரு சிறு செயல்களும் விடுபடமாட்டாது.

(லுஃக்மான் தம் புதல்வரிடம்) என் அருமை மகனே! (நன்மையோ, தீமையோ) அது ஒரு கடுகின் வித்து அளவே எடையுள்ளது ஆயினும்¢ அது கற்பாறைக்குள் இருந்தாலும் அல்லது வானங்களில் இருந்தாலும், அல்லது பூமிக்குள்ளே இருந்தாலும் அல்லாஹ் அதையும் (வெளியே) கொண்டு வருவான்¢ நிச்சயமாக அல்லாஹ் நுண்ணறிவு மிக்கவன்¢ (ஒவ்வொன்றின் அந்தரங்கத்தையும்) நன்கறிபவன். (ஸூ றா லுக்மான் : 16)

இது சுவர்க்கம் மற்றும் நரகத்திற்கு சமீபமாக உள்ள நேரமாகும். மக்கள் தாங்கள் நிரந்தர வாழ்கைக்காக தயார்படுத்தியுள்ளவைகளை பார்ப்பார்கள். குர்ஆன் இதை பின்வருமாறு கூறுகிறது

அந்நாளில், மக்கள் தங்கள் வினைகள் காண்பிக்கப்படும் பொருட்டு, பல பிரிவினர்களாகப் பிரிந்து வருவார்கள். எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார் அன்றியும், எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாலும், அ(தற்குரிய பல)னையும் அவன் கண்டு கொள்வான். (ஸூ றா அஸ்-ஸல்ஸலா: 6-8)

குர்ஆன் கூறவதை போன்று அவநம்பிக்கையாளர்கள் அவர்களது புத்தகத்தை வலது கையினாலும் நம்பிக்கையாளர்கள் இடது கையினாலும் பெற்று கொள்வார்கள்.. இடது கையினால் புத்தகத்தை பெற்றவர்களை பற்றி குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

(மானிடர்களே!) அந்நாளில் நீங்கள் (இறைவன் முன்) கொண்டுபோகப்படுவீர்கள், மறைவான உங்களுடைய எந்த விஷயமும் அவனுக்கு மறைந்து விடாது. ஆகவே, எவருடைய பட்டோலை அவருடைய வலக்கையில் கொடுக்கப்படுமோ, அவர் (மகிழ்வுடன்), 'இதோ! என் பட்டோலையைப் படியுங்கள்' எனக் கூறுவார். 'நிச்சயமாக, நாம் உன்னுடைய கேள்வி கணக்கை, திட்டமாக சந்திப்பேன் என்று எண்ணியே இருந்தேன்.' ஆகவே, அவர் திருப்தியான சுக வாழ்க்கையில் - உயர்ந்த சுவர்க்கத்தில் இருப்பார். அதன் கனி(வகை)கள் (கைக்கு எட்டியதாக) சமீபத்திலிருக்கும். 'சென்று போன நாட்களில் நீங்கள் முற்படுத்தி(யனுப்பி)ய (நல்ல அமல்களின்) காரணத்தால், நீங்கள் இப்போது மகிழ்வோடு புசியுங்கள்¢ இன்னும் பருகுங்கள்' (என அவர்களுக்குக் கூறப்படும்). (ஸூ றா அல்-ஹாக்கா : 18-24)

நம்பிக்கையாளர்களின் சந்தோஷத்திற்கு மாற்றமாக ஏக இறைவனை நிராகரிததவர்கள் கடுமையான துக்கமடைவார்கள். அவர்கள் மரணிக்க அல்லது மறைந்து போக விரும்புவார்கள். அவர்களின் மனநிலை இவ்வாறு இருக்கும்.

ஆனால் எவனுடைய பட்டோலை அவனுடைய இடக்கையில் கொடுக்கப்படுமோ அவன் கூறுவான்: 'என்னுடைய பட்டோலை எனக்குக் கொடுக்கப்படாமல் இருந்திருக்க வேண்டுமே! 'அன்றியும், என் கேள்வி கணக்கு என்ன என்பதை நான் அறியவில்லையே- '(நான் இறந்த போதே) இது முற்றிலும் முடிந்திருக்கக் கூடாதா? என் செல்வம் எனக்குப் பயன்படவில்லையே! 'என் செல்வாக்கும் அதிகாரமும் என்னை விட்டு அழிந்து விட்டதே!' (என்று அரற்றுவான்). (ஸூ றா அல்-ஹாக்கா : 25-29)

ஆனால், எவனுடைய பட்டோலை அவனுடைய முதுகுக்குப் பின்னால் கொடுக்கப்படுகின்றதோ- 84:11 அவன் (தனக்குக்) 'கேடு' தான் எனக் கூவியவனாக- அவன் நரகத்தில் புகுவான். நிச்சயமாக அவன் (இம்மையில்) தன்னைச் சார்ந்தோருடன் மகிழ்வோடு இருந்தான். நிச்சயமாக, தான் (இறைவன் பால்) 'மீளவே மாட்டேன்' என்று எண்ணியிருந்தான். அப்படியல்ல¢ நிச்சயமாக அவனுடைய இறைவன் அவனைக் கவனித்து நோக்குகிறவனாகவே இருந்தான். (ஸூ றா அல்-இன்ஷிகாக் : 10-15)

புத்தகத்தில் நீதமாக பதியப்பட்டிருக்கும், இன்று, இறைவனது நீதி முன்னால் யாரும் அநீதி இழைக்கப்பட மாட்டார்கள்.

இன்னும், கியாம நாளில் மிகத் துல்லியமான தராசுகளையே நாம் வைப்போம். எனவே எந்த ஓர் ஆத்மாவும் ஒரு சிறிதும் அநியாயம் செய்யப்படமாட்டாது¢ மேலும் (நன்மை, தீமையில்) ஒரு கடுகு அளவு எடையிருப்பினும், அதனையும் நாம் (கணக்கில்) கொண்டு வருவோம். அவ்வாறே கணக்கெடுக்க நாமே போதும். -( ஸூ றா அன்பியா : 47 )

இந்த வாழ்கையில் செய்த எல்லாவற்றையும் இந்த தராசில் நிறுக்கப்படும். ஒருவன் நிரந்தர வேதனைக்கு செல்வதையும் அல்லது நிரந்தர சந்தோஷத்தையும் இரட்சிப்பையும் பெறுவதையும் இந்த தராசிலுள்ள முள் தீர்மானிக்கும். தராசு நல்ல செயல்களால் நிறைந்து காணப்பட்டால் அவன் சுவர்கத்திற்கு செல்வான். இல்லையென்றால் அவன் நரகத்திற்கு அனுப்பப்படுவான். எந்த சக்தியாலும் அல்லது எவராலும் அவனை காப்பாற்ற முடியாது.

எனவே, (அந்நாளில்) எவருடைய (நன்மையின்) நிறை கனத்ததோ- அவர் திருப்தி பொருந்திய வாழ்வில் இருப்பார். ஆனால் எவனுடைய (நன்மையின்) நிறை இலேசாக இருக்கிறதோ- அவன் தங்குமிடம் 'ஹாவியா' தான். இன்னும் ('ஹாவியா') என்ன என்று உமக்கு அறிவித்தது எது? அது சுட்டெரிக்கும் (நரகத்தின்) தீக்கிடங்காகும். (ஸூ றா அல்-காரிஆ : 6-11)

அதன் பிறகு முதல் மனிதரிலிருந்து அனைவரும் ஒருவர் பின் ஒருவராக அவர்களின் கணக்குகளை காட்டுவார்கள். இந்த இடத்தில் உலகிலுள்ள் பட்டங்களும் பதலிகளுக்கும் எவ்வித பயனுமிருக்காது. ஒரு நாட்டின் ஜனாதிபதியும் சாதாரண மனிதனும் ஒரே நிலையில் இருப்பார்கள். அவர்கள் இருவரும் இறைவனுக்கு முன்னால் ஒரே மாதரியாக நடத்தப்படுவார்கள். இங்கு அவர்கள் இறைவனுக்கு கட்டுப்பட்டு அவனது கட்டளைகளுக்கு அடிபணிந்தார்களா என்றே கேட்கப்படும். அலநம்பிக்கையாளனனின் அனைத்த பாவங்களும் கெட்ட செயல்களும் எண்ணங்களும் வெளியிடப்படும்.

ரகசியங்கள் யாவும் வெளிப்பட்டுவிடும் அந்நாளில். மனிதனுக்கு எந்த பலமும் இராது¢ (அவனுக்கு) உதவி செய்பவனும் இல்லை. (ஸூ றா அத்-தாரிக் : 9-10)

இறைவனின் கட்டளைப்படி நடக்காமல் அவர்களது விருப்படி அல்லது அவர்களது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகள் நம்பிக்கைகள் சித்தாந்தங்களின் அடிப்படையில் வாழ்நதவர்களுக்கு இந்த நடைமுறை எரிச்சலை ஏற்படுத்தும்.

உயிருடன் புதைக்கப்பட்ட பெண் (குழந்தை) வினவப்படும் போது- 'எந்தக் குற்றத்திற்காக அது கொல்லப்பட்டது?' என்று- பட்டோலைகள் விரிக்கப்படும் போது- வானம் அகற்றப்படும் போது- நரகம் கொழுந்துவிட்டு எரியுமாறு செய்யப்படும் போது- சுவர்க்கம் சமீபமாக கொண்டு வரப்படும்போது- ஒவ்வோர் ஆத்மாவும், தான் கொண்டு வந்ததை அறிந்து கொள்ளும். (ஸூ றா அத்-தகாவீர் : 8-14)

இறைவனது முன்னிலையில் தான் செய்தவைகளை மறுக்க அடிமைகளுக்கு சந்தாப்பம் இருக்காது.. அவனது நல்ல மற்றும் கெட்ட செயல்கள் அனைத்தும் வெளியிடப்படும். அவன் அதை மறுத்த போதிலும் அவ்விடத்தில் உண்மையை சொல்ல சாட்சிகள் இருப்பார்கள். அவனது வாழ்நாளில் அவனை பார்த்தவர்கள் சாட்சி சொல்ல கொண்டு வரப்படுவார்கள்.

மேலும், பூமி தன் இறைவனுடைய ஒளியைக் கொண்டு பிரகாசிக்கும்¢ (அவர்களுடைய) குறிப்பேடு (அவர்கள் முன்) வைக்கப்படும்¢ இன்னும், நபிமார்களும், சாட்சிகளும் கொண்டுவரப்படுவார்கள்¢ அவர்களிடையே நியாயமாகத் தீர்ப்பளிக்கப்படும். அன்றியும் அவர்கள் (சிறிதும்) அநியாயம் செய்யப்பட மாட்டார்கள். -(ஸூ றா அஸ்-ஸு மர் : 69)

கணக்கு கொடுக்கும் சந்தர்பத்தில் எதிர் பாராத சாட்சிகள் அவநம்பிக்கையாளர்களுக்கு எதிராக சாட்சி சொல்ல காத்திருப்பார்கள். பார்வை மற்றும் செவிப் புலன்களும் மனிதனது தோலும் இறைவனது விருப்பப்படி பேசும் சக்தி கொடுக்கப்பட்டு அவைகளும் அவனுக்கு எதிராக சாட்சி சொல்லும். ஒருவனது வாழ்நாளில் தனது என்று கருதப்பட்ட உறுப்புகளும் அவனுக்கு எதிராக சாட்சி சொல்லும் போது அவனது துக்கம் இன்னும் அதிகரிக்கும். இதை இறைவன் இவ்வாறு விவரிக்கிறான்.

மேலும், அல்லாஹ்வின் பகைவர்கள் (நரகத்)தீயின் பால் ஒன்று திரட்டப்படும் நாளில், அவர்கள் (தனித் தனியாகப்) பிரிக்கப்படுவார்கள். இறுதியில், அவர்கள் (அத்தீயை) அடையும் போது, அவர்களுக்கு எதிராக அவர்களுடைய காதுகளும், அவர்களுடைய கண்களும், அவர்களுடைய தோல்களும் அவை செய்து கொண்டிருந்தவை பற்றி சாட்சி கூறும். அவர்கள் தம் தோல்களை நோக்கி, 'எங்களுக்கு எதிராக நீங்கள் ஏன் சாட்சி கூறினீர்கள்?' என்று கேட்பார்கள்¢ அதற்கு அவை: 'எல்லாப் பொருட்களையும் பேசும் படிச் செய்யும் அல்லாஹ்வே, எங்களைப் பேசும்படிச் செய்தான்¢ அவன்தான் உங்களை முதல் தடவையும் படைத்தான்¢ பின்னரும் நீங்கள் அவனிடமே கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள்' என்று கூறும 'உங்கள் காதுகளும், உங்கள் கண்களும், உங்கள் தோல்களும், உங்களுக்கு எதிராகச் சாட்சி சொல்லாமலிருக்கும் பொருட்டு, உ(ங்கள் பாவ)ங்களை நீங்கள் மறைத்துக் கொள்ளவில்லை¢ அன்றியும், நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றில் மிகுதமானதை நிச்சயமாக அல்லாஹ் அறியமாட்டான் என்று நீங்கள் எண்ணிக்கொண்டீர்கள். ஆகவே, உங்கள் இறைவனைப் பற்றி நீங்கள் எண்ணிய உங்களுடைய (தவறான) இந்த எண்ணம்தான் உங்களை அழித்து விட்டது¢ ஆகவே நீங்கள் நஷ்டமடைந்தவர்களில் ஆகிவிட்டீர்கள்

(என்றும் அவை கூறும்). ஆகவே, அவர்கள் (வேதனையைச் சகித்துப்) பொறுமையாக இருந்த போதிலும், அவர்களுக்கு (நரக) நெருப்புத்தான் தங்குமிடம் ஆகும் - அன்றி (கூக்குரலிட்டு) அவர்கள் மன்னிப்புக்கேட்ட போதிலும், அவர்கள் மன்னிக்கப்பட மாட்டார்கள (ஸூ றா புஸ்ஸிலத் : 19-24)

ஏக இறைவனை நிராகரிததவர்களை படைத்து அவர்களுக்கு வாழ அனைத்தையும் இலகுவாக்கி தந்த இறைவனுக்கு எதிராக அவர்கள் பெரும் தவறை செய்து விட்டார்கள். அதனால் தான் மறுமையில் அவர்கள் தங்களுக்காக வாதாட அனுமதிக்கப்பட மாட்டார்கள். உலகில் மிக மோசமான கொடியவனுக்கு கூட உரிமை வழங்கப்பட்ட போதிலும் மறுமையில் அவர்களுக்கு வாதாட அனுமதி வழங்கப்பட மாட்டாது. கேவலப்படுத்தப்பட்டு செய்வதிறியாது நிற்கும் அவர்களுக்கு தீர்ப்பு இவ்வாறு வழங்கப்படும்.

பொய்ப்பிப்பவர்களுக்கு அந்நாளில் கேடுதான். இது, அவர்கள் (எதுவும்) பேச முடியாத நாள். அன்றியும் (தப்புவிப்பதற்காகப்) புகழ் கூறவும் அவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். பொய்ப்பிப்பவர்களுக்கு அந்நாளில் கேடுதான். இது தீர்ப்புக்குரிய நாளாகும். உங்களையும், (உங்களுக்கு) முன் இருந்தோரையும் நாம் ஒன்று சேர்க்கும் (நாள்). எனவே, (தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள) உங்களிடம் சூழ்ச்சியிருக்குமானால், சூழ்ச்சி செய்து பாருங்கள். பொய்ப்பிப்பவர்களுக்கு அந்நாளில் கேடுதான். (ஸூ றா அல்-முர்ஸலாத் : 34-40)

அந்நாளில் நிராகரிப்பாளன் அவனது செயல்களுக்காக தன்னை தானே வெறுப்பான். இறைவனது கோபம் அதை விட கடுமையாக இருக்கும். இறைவனது சாபத்தை பெற்றுக்கொண்ட நிராகரிப்பாளன் எல்லயற்ற துக்கத்திற்கும் நிராசைக்கும் தள்ளப்படுவான். அவன் வெட்கப்பட்டு மீண்டும் எழுப்படாமல் இருந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறான். மரணம் அவனது வாழ்விற்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கும் என்று நினைக்கிறான். பிறகு மரணம் முடிவல்ல மாறாக ஆரம்பம் என்று உணாந்து கொள்வான். அதன் பிறகு இன்னொரு மரணம் கிடையாது . அவர்களது மனநிலை இவ்வாறு இருக்கும்.

தாங்களும் முஸ்லிம்களாக இருந்திருக்க வேண்டுமே, என்று கா∴பிர்கள் (மறுமையில் பெரிதும்) ஆசைப்படுவார்கள். (ஸ)ூ றா அல்-ஹிஜ்ர் : 2 )

இதற்கு மாற்றமாக நம்பிக்கை கொண்டவர்கள் கணக்கு கொடுக்கும் முறை மிக இலகுவாக இருக்கும். அவனது கணக்கு கொடுத்த பின்பு அவன் நிரந்தர சந்தோஷத்தில் இருப்பான். இறைவனால் விதிக்கப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் அவன் வாழ்ந்ததால் அவனது பாவங்கள் அளவற்ற அன்புடையோனால் மன்னிக்கப்படும். அவன் நரகத்திற்கு அப்பால் இறைவனது அளவற்ற அருள்களால் நிரப்பப்பட்ட சுவர்கத்தை பெற்று கொள்வான்.

மனிதனே! நிச்சயமாக நீ உன் இறைவனிடம் சேரும் வரை முனைந்து உழைப்பவனாக உழைக்கின்றாய் - பின்னர் அவனைச் சந்திப்பவனாக இருக்கின்றாய் ஆகவே எவனுடைய பட்டோலை அவனுடைய வலக்கையில் கொடுக்கப்படுகின்றதோ, அவன் சுலபமான விசாரணையாக விசாரிக்கப்படுவான இன்னும், தன்னைச் சார்ந்தோரிடமும் மகிழ்வுடன் திரும்புவான். (ஸூ றா அல்-இன்ஷிகாக் : 6-9)

## நிராகரிப்பாளர்களின் தவிப்பு

அன்றைய தினம் அனைத்து சட்டங்களுக்கும் கட்டுப்பட்டு இருக்க விரும்புவான் ஆனால் அவனால் முடியாது. காரணம் எதற்கும் கட்டுப்பட அவனுக்கு வலிமை இருக்காது. அவன் சாஸ்டாங்கம் செய்ய அழைக்கப்பட்டாலும் அவன் அவ்வாறு செய்ய விரும்புவான். ஆனால் அவனால் இதை செய்ய முடியாது. பயங்கர கனவு கண்டவன்இ அலற நினைப்பான் அவனால் முடியாது. அவனது கால்களையும் கைகளையும் அசைக்க முடியாது. பயம் பீதியும் அவனை முடக்கிவிடும்.

கெண்டைக் காலை விட்டு (திரை) அகற்றப்படும் நாளில் ஸு ஜூ து செய்யுமாறு (மக்கள்) அழைக்கப்படும் நாளில், (இவ்வுலகில் மாறு செய்த) அவர்கள் அதற்கும் இயலாதிருப்பார்கள். அவர்களுடைய பார்வைகள் கீழ் நோக்கியவையாக இருக்கும் நிலையில் இழிவு அவர்களை மூடிக்

கொள்ளும்¢ அவர்களோ (உலகில்) திடமாக இருந்த போது, ஸு ஜூ து செய்யுமாறு அழைக்கப்பட்டுக் கொண்டுதானிருந்தனர். (ஆனால் அப்போது அலட்சியமாக இருந்தனர்.) (ஸூ றா அல்-கலம் : 42-43)

சாஸ்டாங்கம் செய்ய நிராகரிப்பாளன் அழைக்கப்பட காரணம் : அவன் உலகில் இருந்த நேரம் அழைக்கப்பட்ட போது அதற்கு செவிசாய்க்கவில்லைஇ இந்த கீழ்படியாமையை அவனுக்கு சுட்டிக்காட்டிஇ நிரந்தர துக்கமும் நம்பிக்கையின்மையையும் கொண்டு ஈடுசெய்ய போவதை உணர்வதன் மூலம் அவனது கைசேதம் மேலும் அதிகரிக்கிறது.. இந்த நிராகரிப்பாளனால் சாஸ்டாங்கம் செய்ய முடியாது என்பது இறைவனுக்கு நன்கு தெரியும். இறைவன் அனுமதித்தால் மட்டுமே சிரம் பணிந்து வணங்கி இறைவனது அடிமையாக இருக்க முடியும். அதைபோன்று நம்பிக்கையாளர்களும் இறைவனது அருளினால் தான் நம்பிக்கை கொண்டு கௌரவிக்கப்படுவார்கள்.

அன்றைய தினம நம்பிக்கையாளர்களும் நிராகரிப்பாளர்களும் எவ்வாறு இருப்பார்கள் என்று குர்ஆன் அறிவிக்கிறது.. சந்தோஷத்தின் காரணமாக நம்பிக்கையாளர்களின் முகம் மகிழ்ச்சியில் இருக்கும். அவர்களுடைய கண்கள் மின்னும். மறுபுறத்தில் நிராகரிப்பாளர்கள் அவர்களின் விவேகமற்ற செயல்களின் காரணமாக அவர்களின் வேதனைக்காக காத்திருப்பார்கள். நம்பிக்கையாளர்களின் பிரகாசமான முகத்தை போலல்லாது நிராகரிப்பாளர்களின் முகம் வாட்டமாக இருக்கும்.

எனினும் (மனிதர்களே!) நிச்சயமாக நீங்கள் அவசரப்படுவதையே பிரியப்படுகிறீர்கள். ஆகவேதான் (இம்மையைப் பற்றிக் கொண்டு) மறுமையை விட்டு விடுகிறீர்கள அந்நாளில் சில முகங்கள் (மகிழ்ச்சியால்) செழுமையாக இருக்கு தம்முடைய இறைவனளவில் நோக்கியவையாக இருக்கும். ஆனால், அந்நாளில் வேறு சில முகங்களோ (துக்கத்தால்) சுண்டியிருக்கும இடுப்பை ஒடிக்கும் ஒரு பேராபத்து தம்மீது ஏற்படப் போவதாக அவை உறுதி கொண்டிருக்கும (ஸூ றா அல்-கியாமா : 20-25)

# நரகத்தை பார்த்தல்

நரகத்தை நிராகரிப்பாளர்கள் மட்டும் பாரர்பார்கள் என்பது பொதுவான நம்பிக்கையாகும். இதில் பாதி உண்மை இருக்கிறது. இறைவன் ஸூ றா மர்யமில் கூறுகிறான்இ அனைவரும்இ நம்பிக்கையாளர்களும் நிராகரிப்பாளர்களும் நரகத்திற்கு முன்னால் மண்டியிட்டிருப்பார்கள்.

(எனினும்) மனிதன் கேட்கிறான்: ‘நான் இறந்து போனால், உயிருள்ளவனாக மேலும் எழுப்பப்படுவேனா? என்று. யாதொரு பொருளுமாக இல்லாதிருந்த அவனை நிச்சயமாக நாம் முன்னர் படைத்தோம் என்பதை மனிதன் நினைத்துப் பார்க்க வேண்டாமா? ஆகவே, (நபியே!) உம் இறைவன் மீது சத்தியமாக நாம் அவர்களையும், (அவர்களுடைய) ஷைத்தான்களையும் நிச்சயமாக (உயிர்ப்பித்து) ஒன்று சேர்ப்போம்¢ பின்னர் அவர்களை(யெல்லாம்) நரகத்தினைச் சூழ முழந்தாளிட்டவர்களாக ஆஜராக்குவோம். பின்னர், நாம் ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் அர்ரஹ்மானுக்கு மாறு செய்வதில் கடினமாக - தீவிரமாக - இருந்தவர்கள் யாவறையும் நிச்சயமாக வேறு பிரிப்போம். பின்னர், அ(ந் நரகத்)தில் புகுவதற்கு அவர்களில் (தங்கள் பாவத்தால்) முதல் தகுதிவுடையவர்கள் யார் என்பதை நிச்சயமாக நாம் அறிவோம். மேலும், அதனைக் கடக்காமல் உங்களில் யாரும் (போக) முடியாது¢ இது உம்முடைய இறைவனின் முடிவான தீர்மானமாகும். அதன் பின்னர், தக்வாவுடன் - பயபக்தியுடன் இருந்தார்களே அவர்களை நாம் ஈடேற்றுவோம்¢ ஆனால், அநியாயம் செய்தவர்களை அ(ந் நரகத்)தில் முழந்தாளிட்டவர்களாக விட்டு விடுவோம். (ஸூ றா மர்யம் : 66-72)

மேலுள்ள வசனத்தை பார்க்கும் போது மறுமையில் நரகத்தை சுற்றி மக்கள் ஒன்று சேர்க்கப்படுவார்கள். நம்பிக்கையாளர்கள் நிராகரிப்பாளர்கள் ஆகிய இருவரும் பயங்கர சப்தத்தையும் நெருப்பின் இரைச்சலையும் மற்றும் படு பயங்கர காட்சிகளையும் காண்பார்கள். இருப்பினும் சில காலங்களுக்கு பின் நம்பிக்கையாளர்கள் காப்பாற்றபட்டு நிராகரித்தவர்கள் அவ்வாறு இருப்பார்கள். பின்பு அவர்கள் நரக நெருப்பில் வீசப்படுவார்கள்.

இறைவனது சாபத்தை நன்கு உணர்ந்து அவனுக்கு நன்றி செலுத்த தவறியதன் காரணமாக நரகத்தை சுற்றியுள்ள கூட்டத்துடன் அவர்கள் இருப்பதற்கான காரணங்களாகும். நரகத்தின் பயங்கரத்தை பார்க்கும் ஒருவன் அவனது நம்பிக்கை அவனை எவ்வளவு தூரம் மேன்மையாக்கியுள்ளது என்பதை புரிந்து கொள்வான்.

ஏனெனில் நரகம் என்பது பயங்கரமான இடமாகும் அதன் வேதனையிலிருந்து தப்புவது மனித குலத்திற்கு பெரும் பாக்கியமாகும்.

நரகத்தை பார்க்கும் நம்பிக்கையாளன் அதனை அவன் நிரந்தரமாக தங்கும் அருள்கள் நிறைந்த சுவர்க்கத்தோடு ஒப்பிட்டுபார்ப்பான். இந்த உலகில் வாழும் போது நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவதே மிகப்பெரும் வரமாக கருதப்படுகிறது. உதாரணமாக கடுங்குளிரான மலை பகுதியில் உறைந்து போவான் என்று இருந்தால் நெருப்பை கொண்ட ஒரு பழைய குடிசையை கண்டவுடன் மகிழ்ச்சியடைகிறான். இந்த பழைய குடிசையானது அவனை பொருத்தவரையில் 5 நட்சத்திர ஹோட்டலில் தங்குவதற்கு சமமாகும். பல நாட்கள் பட்டினியால் வாடிய ஒருவன் காய்ந்த ரொட்டியை மிகப்பெரும் விருந்துபசாரமாக கருதுவான். வேதனை முடிவானது மகிழ்ச்சி அமைதி மற்றும் நன்றி செலுத்த போதுமான காரணங்களாகும்.

நரகத்தை மிக அருகில் பார்க்கும் ஒருவன் அதிலிருந்து காப்பாற்றபடுவதன் மூலம் இத்தகைய பாக்கியத்தை அடைகிறான். மேலும் சுகர்க்கத்தை அடைந்து கொள்வது அவன் வெற்றி அடைந்ததன் அறிகுறியாகும். நரகத்தின் பெரும் வேதனைகளை பார்த்த ஒருவன் அருள்களால் நிறைந்த சுவர்க்கத்தின் பெறுமதியை அறிந்து கொள்வான். அவனது நிரந்தர வாழ்கையில் நரகம் எவ்வாறு இருக்கும் என்பதை மறக்கமாட்டான். அதே நேரம் சுவர்க்த்தின் சுகங்களை அனுபவித்து கொண்டிருப்பான்.

நியாய தீர்ப்பு நாளில் நம்பிக்கை கொண்டவர்களையும் நிராகரிப்பவர்களையும் அவர்களது முகங்களை கொண்டு அறிந்தவர்களிடமிருந்து இவ்வாறான சொற்கள் வருவதை பற்றி குர்ஆன் அறிவிக்கிறது..

> (நரகவாசிகள், சுவர்க்க வாசிகள் ஆகிய) இவர்களுக்கிடையே ஒரு திரை(யான மதில்) இருக்கும்¢ அதன் சிகரங்களில் அநேக மனிதர்கள் இருப்பார்கள்¢ (நரக வாசிகள், சுவர்க்க வாசிகள்) ஒவ்வொருவரையும் அவர்களுடைய அடையாளங்களைக் கொண்டு அறிந்து கொள்வார்கள்¢ அவர்கள் சுவர்க்க வாசிகளை அழைத்து 'ஸலாமுன் அலைக்கும் (உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாகுக!)' என்று கூறுவார்கள்¢ அவர்கள் இன்னும் சுவர்க்கத்தில் நுழையவில்லை - அவர்கள் (அதில் நுழைய) ஆவலுடன் இருக்கின்றார்கள். அவர்களுடைய பார்வைகள் நரகவாசிகளின் பக்கம் திருப்பப்பட்டால், அவர்கள் 'எங்கள் இறைவனே! எங்களை (இந்த) அக்கிரமக்காரர்களுடனே ஆக்கி விடாதே' என்று கூறுவார்கள். சிகரங்களிலிருப்பவர்கள், சில மனிதர்களை - அவர்கள் அடையாளங்களால் அறிந்து கொண்டு - அவர்களைக் கூப்பிட்டுக் கூறுவார்கள்: 'நீங்கள் உலகத்தில் சேமித்து வைத்திருந்தவையும், நீங்கள் பெருமையடித்துக் கொண்டிருந்தவையும், உங்களுக்குப் பலனளிக்கவில்லையே!' 'அல்லாஹ் இவர்களுக்கு அருள்புரிய மாட்டான் என்று நீங்கள் சத்தியம் செய்து கூறிக்கொண்டிருந்தீர்களே அவர்கள் இவர்கள் தானே? (என்று சுவனவாசிகளைச் சுட்டிக் காண்பித்து,) நீங்கள் சுவனபதியில் நுழையுங்கள்¢ உங்களுக்கு எவ்வித பயமுமில்லை¢ நீங்கள் துக்கப்படவும் மாட்டீர்கள்' என்றும் கூறுவார்கள-(ஸூ றா அல்-ஆரப் : 46-49)

இந்த நேரத்தில் படைப்புகளில் மிக மேலானவர்களான (ஸூ றா அல்-பய்யினா : 7) நம்பிக்கை கொண்டவர்களும்இ படைப்புகளில் மிகக் கெட்டவர்களான (ஸூ றா அல்-பய்யினா: 6) நிராகரிப்பாளர்களும் வெவ்வேறாக பிரிக்கப்படுவார்கள். இந்நாளை பற்றி குர்ஆன் கூறும்போது

> மேலும், தூதர்களுக்கு(த் தம் சமூகத்தாருக்காகச் சாட்சியம் கூற) நேரம் குறிக்கப்படும்போது-எந்த நாள்வரை (இவையெல்லாம்) பிற்படுத்தப்பட்டிருக்கின்றன? தீர்ப்புக்குரிய நாளுக்காகத்தான். மேலும், தீர்ப்புக்குரிய நாள் என்னவென்று உமக்கு எது அறிவித்தது? (நம் வசனங்களைப்) பொய்ப்பிப்போருக்கு அந்நாளில் கேடுதான். முன்னோர்(களில் குற்றவாளி)களை நாம் அழிக்கவில்லையா? பிறகு பின்னுள்ளவர்(களில் குற்றவாளி)களையும் (அழிந்தவர்களைப்) பின் தொடரச் செய்வோம். குற்றவாளிகளை இவ்வாறுதான் நாம் செய்வோம் (தண்டிப்போம்). பொய்ப்பிப்பவர்களுக்கு அந்நாளில் கேடுதான். (ஸூ றா அல்-முர்ஸலாத் : 11-19)

மரணத்தோடு முடிவெடுக்கும் நாள் தொடங்கி மீண்டும் உயிர் கொடுப்பதனோடும் கணக்கு கொடுப்பதோடும் தொடர்ந்து நிரந்தரமான தங்குமிடங்களுக்கு அனுப்புவதோடு முடிவடைகிறது. ஸூ றா கா.்ப், நம்பிக்கை கொண்டவர்களும் நிராகரிபாளர்களும் அவர்களது உண்மையான தங்குமிடங்களை பெறுவதை இவ்வாறு விவரிக்கிறது.

மரண வேதனை சத்தியத்தைக் கொண்டு (மெய்யாகவே) வருகின்றது¢ (அப்போது அவனிடம்) நீ எதை விட்டும் விரண்டோடிக் கொண்டிருந்தாயோ அது தான் (இந்நிலை என்று கூறப்படும்) மேலும் ஸூர் (எக்காளம்) ஊதப்படும். அதுதான் அச்சுறுத்தி எச்சரிக்கப்பட்ட நாளாகும். அன்றியும், (அந்நாளில்) ஒவ்வோர் ஆன்மாவும் தன்னை அழைத்து வருபவர், சாட்சியாளர் ஆகியோருடன் வரும். 'நீ இதைப் பற்றி அலட்சியத்தில் இருந்தாய்¢ (இப்பொழுது) உன் (பார்வையை) விட்டு உனது திரையை நாம் அகற்றி விட்டோம். எனவே, இன்று உன் பார்வை கூர்மையாக இருக்கிறது.' (என்று கூறப்படும்). அப்போது அவனுடன் இருப்பவர் (மலக்கு) 'இதோ (இம்மனிதனின் ஏடு) என்னிடம் சித்தமாக இருக்கிறது' என்று கூறுவார். 'மனமுரண்டாக நிராகரித்துக் கொண்டிருந்தோர் எல்லோரையும் நீங்கள் இருவரும் நரகில் போடுங்கள். '(அவன்) நன்மையை தடுத்துக் கொண்டேயிருந்தவன்¢ (இந்நாளைப் பற்றி) சந்தேகிப்பவனாக, வரம்பு மீறிக் கொண்டும் இருந்தான். 'அவன் அல்லாஹ்வுடன் வேறொரு நாயனை ஏற்படுத்தினான். ஆகவே நீங்களிருவரும் இவனை மிகக் கடுமையான வேதனையில் போட்டு விடுங்கள்' (என்றுங் கூறப்படும்). (அப்போது ஷைத்தானாகிய) அவனுடைய கூட்டாளி கூறுவான்: 'எங்கள் இறைவா! நான் இவனை வழி கெடுக்கவில்லை¢ ஆனால், அவனே தூரமான வழி கேட்டில் தான் இருந்தான்-' 'என் முன்னிலையில் நீங்கள் வாக்குவாதம் செய்யாதீர்கள்¢ (இதைப்பற்றி என் அச்சுறுத்தலை முன்னரே விடுத்திருக்கிறேன்' என்று (அல்லாஹ்) கூறுவான். (எனவே என்னுடைய) அச்சொல் 'என்னிடத்தில் மாற்றப்படுவதில்லை - நான் அடியார்களுக்கு அநியாயம் செய்பவனல்லன்' (என்றும் அல்லாஹ் கூறுவான்). நரகத்தை நோக்கி, 'நீ நிறைந்து விட்டாயா? என்று நாம் கேட்டு, அதற்கு அது 'இன்னும் அதிகமாக ஏதும் இருக்கின்றதா?' என்று கேட்கும் அந்நாளை (நபியே! நீர் நினைவுறுத்துவீராக)! (அன்றியும் அந்நாளில்) பயபக்தியுடையவர்களுக்கு சுவர்க்கம் தொலைவில்லாத நிலையில் மிகவும் சமீபமாக்கப்படும். 'இது தான் உங்களுக்கு வாக்களிக்கப்பட்டதா(ன சுவர்க்கமா)கும்¢ எப்பொழுதும் இறைவனையே நோக்கி, (பாவத்தை தவிர்த்துப்) பேணி நடந்த ஒவ்வொருவருக்கும் (இது உரியது).' எவர்கள், மறைவிலும் அர்ரஹ்மானை அஞ்சி நடந்து கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கும் (அவனையே) முற்றிலும் நோக்கிய இதயத்துடன் வருவோருக்கும் (இது வாக்களிக்கப்பட்டிருக்கிறது). 'ஸலாமுடன் - சாந்தியுடன் - இ(ச் சுவர்க்கத்)தில் பிரவேசியுங்கள்¢ இதுதான் நித்தியமாக நீங்கள் தங்கியிருக்கும் நாளாகும்' (என்று கூறப்படும்). (ஸூறா காஃப் : 19-34)

# நரகம்

18-29 நிச்சயமாக அவன் (குர்ஆனுக்கு எதிராகச்) சிந்தித்து (ஒரு திட்டத்தை) ஏற்படுத்திக் கொண்டான்.

74:19 அவன் அழிவானாக! எப்படி அவன் ஏற்படுத்திக் கொண்டான்?

74:20 பின்னரும், அவன் அழிவானாக! எப்படி அவன் ஏற்படுத்திக் கொண்டான்?

74:21 பிறகும் (குர்ஆனின் வசனங்களை) அவன் நோட்டமிட்டான்.

74:22 பின்னர், (அதுபற்றிக் குறை கூற இயலாதவனாக) கடுகடுத்தான்¢ இன்னும் (முகஞ்) சுளித்தான்.

74:23 அதன் பின்னர் (சத்தியத்தை ஏற்காமல்) புறமுதுகு காட்டினான்¢ இன்னும் பெருமை கொண்டான்.

74:24 அப்பால் அவன் கூறினான்: ‘இது (பிறரிடமிருந்து கற்றுப்) பேசப்படும் சூனியமே அன்றி வேறில்லை.

74:25 ‘இது மனிதனின் சொல்லல்லாமலும் வேறில்லை’ (என்றும் கூறினான்.)

74:26 அவனை நான் ‘ஸகர்’ (என்னும்) நரகில் புகச் செய்வேன்.

74:27 ‘ஸகர்’ என்னவென்பதை உமக்கு எது விளக்கும்?

74:28 அது (எவரையும்) மிச்சம் வைக்காது¢ விட்டு விடவும் செய்யாது.

74:29 (அது சுட்டுக் கரித்து மனிதனின்) மேனியையே உருமாற்றி விடும்.

## (அல்-முத்ததிர்: 18-29 )

## அறிமுகம்

### பொய்யும் உண்மையும்

நிராகரித்தவர்கள் நிரந்தரமாக தங்கி அவர்களது மனித உடலும் ஆன்மாவும் வேதனைகளை அனுபவிப்பதற்காக தயார்படுத்தப்பட்ட இடம் நரகமாகும்.

நிராகரிப்பாளர்கள் மிகப்பெரும் தவறை செய்ததன் காரணமாக இறைவனால் தண்டிக்கப்படுகிறார்கள். மனிதனுக்கு ஆன்மாவை கொடுத்த படைப்பாளனுக்கு நன்றிமறந்து அவனுக்கு எதிராக செயல்படுவது முழு பிரபஞ்சத்தில் மிகப்பெரிய தவறாகும். அதனால்இ மறுமையில் அத்தகைய மிகப்பெரும் பாவத்திற்கு கடுமையான தண்டனையிருக்கிறது. அதற்காக தான் நரகம் படைக்கப்பட்டது. மனிதன் இறைவனது அடிமையாக இருப்பதற்காக படைக்கப்பட்டுள்ளான். அவன் படைக்கப்பட்டதன் முக்கிய நோக்கத்தை ஏற்க மறுத்தால் அவன் தண்டனையை பெறவேண்டும். இறைவன் இதை இவ்வாறு கூறுகிறான்.

.................என்னை வணங்குவதை விட்டும் பெருமையடிப்பவர்கள் இழிவடைந்தவர்களாக நரகம் புகுவார்கள். (ஸூ றா அல்-மு..மின்: 60. )

இறுதியில் பெரும்பான்மையானவர்கள் நரகத்திற்கு அனுப்பப்படுவர்கள், அதிலுள்ள தண்டனை நிரந்தரமானதும் முடிவில்லாததுமாகும். எனவே மனிதர்களின் முக்கிய குறிக்கோள் நரகத்தை தவிர்க்க வேண்டும் என்பதாக இருக்க வேண்டும். மனிதனுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் இடம் நரகமாகும். அதிலிருந்து தன்னை காப்பாற்றுவதை விட வேறு ஒன்றும் மிக முக்கியமானதாக இருக்காது.

ஆனாலும் உலகத்தில் வாழும் மக்கள் அறியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களின்அன்றாட வாழ்வின் ஏற்பட சுடிய மற்ற தொல்லைகளில் தங்களை ஈடுபடுத்தி கொள்கிறார்கள். பல மாதங்கள் பல வருடங்கள் அவசியமில்லாதவற்றுக்காக உழைக்கும் அவர்கள் மிகபயங்கரமான நிரந்தர துன்பத்தை பற்றி சிந்திப்பதில்லை. நரகம் அவனுக்கு சமீபமாக இருக்கிறது. இருப்பினும் அவர்கள் குருடர்களாக இருக்கிறார்கள்.

> மனிதர்களுக்கு  அவர்களுடைய கேளவி கணக்கு நாள் நெருங்கிவிட்டது. அவர்களோ மறதியில் புறக்கணித்தவர்களாக உள்ளனர். தங்களுடைய இறைவனிடமிருந்து ஏதேனும் ஓர் அறிவுறை அவர்களுக்கு வருவதில்லை, அவாக்ள் விளையாடியவர்களாக அதனை செவியேற்றே தவிர. அவர்களது இதயங்கள் மறதியான நிலையில் இருக்கின்றன. (ஸூறா அல்-அன்பியா: 1-3)

இத்தகைய மக்கள் வீணான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். பயனற்ற குறிக்கோள்களை அடைய அவர்களுடைய வாழ்நாள் முழுவதையும் செலவிடுகிறார்கள். அலுவலகங்களில் பதவி உயர்வு பெறுதல் திருமனம் செய்தல் மகிழ்ச்சியான குடும்ப வாழ்கையை பெறல் அதிகமாக பணம் சம்பாதித்தல் அல்லது பயனற்ற கொள்கைகளுக்காக வக்காலததுத வாங்குதல் போன்றவற்றில் அதிகமான நேரங்கள் செலவிடப்படுகின்றன. இத்தகையவற்றில் ஈடுபட்டுள்ள இவர்கள் அவர்களுக்கு முன்னால் இருக்கும் பெரும் அபாயத்தை அறியாமல் இருக்கிறார்கள். ஒரு விடயத்தை பற்றி அவர்களிடம் கூறும்போது அந்த நரகத்தை பற்றிய சிந்தனையை பெற்று கொள்கின்றன. அறியாத சமூகத்தில் வாழும் அத்தகைய மக்கள் நரகத்தின் அர்தத்தை அறியாமல் நரகம் என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்துகிறார்கள். ஆகவே இந்த சொல் பரிகாசமாக மாறிவிட்டது. இருப்பினும் அது கொண்டுள்ள அர்தத்தை பற்றி யாரும் சிந்திப்பதில்லை.. இவர்களை பொருத்தவரையில் நரகம் என்பது பொய்யான கட்டுக்கதை.

உண்மையில் நரகம் இந்த உலகை போலல்லாது உண்மையாகும். இந்த உலகம் சில காலங்களுக்கு பிறகு அழிந்து போகும். ஆனால் நரகம் நிரந்தரமனானது. இறைவன் பிரபஞ்சம் உலகம் மற்றும் இயற்கை அனைத்தையும் மதிநுட்பமாக படைத்ததை போன்று மறுமை சுவர்க்கம் நரகம் ஆகியவற்றையும் படைத்துள்ளான். நிராகரிப்பாளர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் கடுமையான வேதனையை வாக்களித்துள்ளான்.

நரகம் கற்பனை செய்து பார்க்க முடியாத மோசமான இடமாகும் இந்த வேதனையை உலகிலுள்ள எந்த வேதனையுடனும் ஒப்பிட முடியாது. ஒருவன் இந்த உலகில் சந்திக்கும் வேதனையை விட பல ஆயிரம் மடங்கு அதிகமானதாக இருக்கும். இது நிச்சயமாக சர்வ வல்லமையுடைய இறைவனின் செயலாகும்.

அனைவருக்கும் வேதனை நிரந்தரமானது என்பது நரகத்தை பற்றிய இரண்டாவது உண்மையாகும். இந்த அறிவற்ற சமூகத்தில் வாழும் பெரும்பான்மையான மக்களிடம் நரகத்தை பற்றிய தவறான சிந்தனை ஒன்று இருக்கிறது. அதாவது அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு நரகத்தில் துன்பம் அனுபவித்த பின்னர் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்று நினைக்கிறார்கள். இது வெறும் நம்பிக்கையாகும். இந்த சிந்தனையானது நம்பிக்கை கொண்டதாக கூறிகொண்டு இறைவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்யாமல் இருப்பவர்களிடமும் பரவியுள்ளது.. அவர்கள் உலக விடயங்களில் எவ்வித கட்டுப்பாடுமின்றி முழுமையாக தங்களை ஈடுபடுத்தி கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் சிறிது காலம் நரகத்தில் வேதனையை அனுபவித்து விட்டு சுவர்கத்திற்கு அனுப்பப்படுவார்கள் என்று நினைகிறார்கள். இருப்பினும் அவர்கள் எதிர்பார்க்கும் முடிவானது அவர்கள் நினைத்ததை விட துன்பமாக இருக்கும். நரகம் நிரந்தரமான வேதனை தரக்கூடிய இடமாக இருக்கிறது. நிராகரிப்பாளர்களுக்குரிய தண்டணை முடிவில்லாதது என்று குர்ஆன் பல இடங்களில் கூறுகிறது. அவர்கள் அதில் பல யுகங்களாகத் தங்குபவர்களாகயிருப்பார்கள் (ஸூறா அன்-நபா: 23) என்ற வசனம் இதை உறுதிப்படுத்துகிறது.

நான் சிறிது காலம் துன்பம் அனுபவித்த பின்னர் எனக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்ற சிந்தனை தங்களை தாங்களே சமாதானப்படுத்தி கொள்ள விரும்பிய சிலரால் உருவாக்கப்பட்டதாகும். உண்மையில, இதே மாதிரியான சிந்தனை யூதர்களாலும் முன்வைக்கப்பட்டதை இறைவன் குர்ஆனில் சொல்கிறான்.

> மேலும் எண்ணப்பட்ட சில நாட்களேயன்றி நரக நெருப்பு எங்களை தீண்டாது என்று (அந்த யூதர்கள்) கூறுகின்றனர். (இத்தனை நாட்களுக்கு மேல் உங்களை வேதனை செய்யக்கூடாதென்று) அல்லாஹ்விடம் உடன்படிக்கை செய்துள்ளீர்களா? (அவ்வாறு நீங்கள் செய்திருப்பின்) அப்பொழுது அல்லாஹ் தனது உடன்படிக்கையை மாற்றம் செய்யவே மாட்டான். அல்லது நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்விளன் மீது (இட்டுக்கட்டி) கூறுகிறீர்களா? என்று (நபியே) நீர் (அவர்களிடம்) கேட்பீராக! ஆம்! எவர் தீமையை

சம்பாதித்தாரோ அவருடைய குற்றமானது அவரை சூழ்ந்து கொள்ளமானால் அவர்களே நரகவாதிகள். அவர்கள் அதில் நிரந்தரமாக தங்கிவிடுவார்கள். (ஸூ றா அல்-பகறா: 80-81)

உங்களுக்கு செவிப்புலனையும்இ பார்க்கும் ஆற்றலையும்இ அறிவையும் (ஸூ றா அன்-நஹல்: 78) கொடுத்த இறைவனுக்கு நன்றி செலுத்த மறந்து இறைவனுக்கு எதிராக செயல்பட்டவர்கள் முடிவில்லாத தண்டனையை பெறுவார்கள். ஒருவன் கூறும் காரணங்கள் அவனை நரகத்திலிருந்து காப்பாற்றாது.. இறைவனின் வகுத்துள்ள மார்கத்திற்கு எதிராக வெறுப்பையும் காழ்புணர்ச்சியையும் காட்டுபவர்களுக்கு எதிராக வழங்கப்படும் தீர்ப்பு உறுதியானதும் மாற்றமடையாததுமாகும்.

தெளிவானவைகளாக நம்முடைய வசனங்கள் அவர்கள் மீது ஓதி காண்பிக்கப்பட்டால்இ நிராகரிப்பவர்களின் முகங்களில் வெறுப்பை நீர் காண்பீர். நம்முடைய வசனங்களை அவர்களுக்கு ஓதி காண்பிப்போர் மீது இவர்கள் தாக்குவதற்கு நெருங்குவர். நீர் கூறுவீராக! இதனை விட கெட்டதை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? (அது நரக) நெருப்பாகும். நிராகரிப்போருக்கு அல்லாஹ் அதனை வாக்களித்துள்ளான். சேருமிடத்தில் அது மிகக் கெட்டது. (ஸூ றா அல்-ஹஜ்: 72)

இறைவனுக்கு எதிராக செயல்பட்டவர்களும் நம்பிக்கையாளர்களை வெறுத்தவர்களும் நியாா தீர்ப்பு நாளில் பின்வருமாறு செவியேற்பார்கள்.

ஆகவே நீங்கள் நரகத்தின் வாயில்களில் நுழைந்து அதிலேயே நிரந்தரமாக இருங்கள் (என்று வானவர்கள் கூறுவார்கள்). பெருமையடித்துக் கொண்டிருப்பவர்களின் தங்குமிடம் மிக தீயதாகும். (ஸூ றா அன்-நஹல்: 29)

நரகம் நிரந்தரமானதாக இருப்பது அதன் பயங்கர தன்மைகளில் ஒன்றாகும். ஒருமுறை உள்ளே சென்று விட்டால் பிறகு திரும்பவே முடியாது. பலவகையான வேதனைகளின் இருப்பிடம் நரகமாகும். அத்தகைய நிரந்தர வேதனையை சந்திக்கும் ஒருவன் செயலற்று போவான். அவனுக்கு வேறு சிந்தனைகளே இருக்காது. இந்நிலையை குர்ஆன் விவரிக்கிறது.

எவர்கள் பாவம் செய்கிறார்களோ அவர்களுடைய தங்குமிடம் நரகமாகும். அவர்கள் அதிலிருந்து வெளியேறிட நாடும்போதெல்லாம், அதிலேயே மீட்டப்படுவார்கள். நீங்கள் பொய்யாக்கி கொண்டிருந்தீர்களே, அந்த நரக வேதனையை நீங்கள் சுவையுங்கள் என்று அவர்களுக்கு கூறப்படும். (ஸூ றா அஸ்-ஸஜதா: 20)

அவர்கள் நெருப்பிலிருந்து வெளியாகிட விரும்புவர். ஆனால் அவர்கள் அதிலிருந்து வெளிப்படுபவர்கள் அல்லர். மேலும் அவர்களுக்கு நிலையான வேதனையும் உண்டு. (ஸூ றா அல் மாஇதா: 37)

# நரக வேதனைகள்
# நரகத்திற்கு கொண்டு செல்லப்படுதல்

நரகம், இந்த இடத்தில் தான் இறைவனின் தன்மைகளான அல்-ஜப்பர் (அடக்கி ஆள்பவன்) அல்-கஹ்ஹார் (ஆதிக்கம் செலுத்துபவன்), அல் முன்தகிம் (பழிதீர்ப்பவன்) ஆகியவைகள் மனிதனுக்கு நிரந்தரமாக காண்பிக்கப்படும். நரகம் உயிருள்ள ஒன்றாகவே வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்த மிருகம் நிராகரிப்பாளர்கள் மீது கடும் வெறுப்பை கொண்டுள்ளது. அது படைக்கப்பட்ட நாள் முதல் நிராகரிபவர்களை பழிவாங்க பொறுமையற்று காத்து கொண்டிருக்கிறது. நிராகரிப்பாளர்கள் மீது நரகம் கொண்டுள்ள வெறி என்றுமே தணியாது. நிராகரிப்பவர்கள் மீதான வெறுப்பு அதை இன்னும் வெறியேற்றுகிறது. அது மறுத்தவர்களை சந்திக்கும் போது அதன் வெறி இன்னும் அதிகரிக்கும். இந்த நெருப்பு படைக்கப்பட்டதன் ஒரேஒரு நோக்கம் தாங்கி கொள்ள முடியாத வேதனையை கொடுக்க வேண்டும் என்பதே. உண்மையில் அதன் கடமையை செய்யும். அதாவது வேதனைகளில் மிக கடுமையான வேதனையை கொடுக்கும்.

இறைவனுக்கு முன்னால் நிராகரிப்பாளர்களுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டவுடன் அவர்களது புத்தகம் இடக்கரத்தில் கொடுக்கப்படும். இது தான் அவர்கள் நரகத்திற்கு அனுப்பபடும் நேரமாகும். நிராகரிப்பாளர்களுக்கு தப்பித்து செல்ல எந்த வழியும் இருக்காது. பல கோடி மக்கள் இருந்த போதிலும் நிராகரிப்பாளர்களுக்கு தப்பித்து செல்ல முடியாது. இந்த சன நெருக்கத்தில் எவராலும் தன்னை ஒளித்துக் கொள்ள முடியாது. நரகத்திற்கு செல்பவர்கள் சாட்சிகளோடு வருவார்கள்.

குழல் ஊதப்படும். அது எச்சரிக்கப்பட்ட நாளாகும். மேலும் ஒவ்வோர் ஆத்மாவும் (அதனை) இழுத்துக் கொண்டுவருபவரும், சாட்சியாளரும் உடன் இருக்கும் நிலையில் வரும். திட்டமாக நீ இதுபற்றி மறதியில் இருந்தாய். எனவே உன்னை விட்டும் உனது திரையை நாம் நீக்கிவிட்டோம். ஆகவே இன்று உனது பார்வை மிகக்கூர்மையாக இருக்கிறது. அவனுக்கென்று சாட்டப்பட்ட(வான)வர் இதோ என்னிடமுள்ள (அவனுடைய பட்டோலையான)து தயாராக இருக்கின்றது. என்று கூறுவார். முரண்பாடு செய்துவந்த நிராகரிப்போர் அனைவரையும் நீங்கள் இருவரும் நரகில் போட்டு விடுங்கள் என்று (கூறப்படும்). நன்மையை அதிகமாக தடுத்து கொண்டிருந்தவன் வரம்பு மீரியவன். சந்தேகம் கொண்டிருந்தவன். அல்லாஹ்வுடன் வேறொரு தெய்வத்தை ஏற்படுத்தி கொண்டானே அத்தகையவன். எனவே அவனை நீங்கள் இருவரும் கடினமான வேதனையில் போட்டுவிடுங்ள் (என்று கூறப்படும்) (ஸூ றா கா.்ப்: 20-26)

நிராகரிப்பாளர்கள் இந்த பயங்கரமான இடத்தை நோக்கி செலுத்தப்படுவார்கள். இவர்கள் குழுக்களாக செலுத்தப்படுவார்கள் என்று குர்ஆன் கூறுகிறது. இருப்பினும் நரகத்திற்கு போகும் வழியில் நிராகரிப்பாளர்களின் பயம் ஏற்படும். தூரத்தில் நெருப்பின் பயங்கர சப்தமும் இரைச்சலும் கேட்கும்.

அதில் அவர்கள் எரியப்பட்டால் அது கொதிக்கும் நிலையில் அருவருப்பான சப்தம் அதில் இருப்பதை கேட்பார்கள். கோபத்தினால் அது வெடித்து விட நெருங்கி விடும். அதில் ஒவ்வொரு கூட்டத்தினரையும் எறியப்படும் போதெல்லாம் உங்களிடம் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் வரவில்லையா? என்று அதன் காவலர்கள் கேட்பர்கள். (ஸூ றா அல்-முல்க்: 7-8)

அவர்கள் மீண்டும் படைக்கப்பட்டவுடன் நிராகரிப்பாளர்கள் அவர்களுக்கு என்ன நடக்க போகிறது என்பதை அறிந்து கொள்வதாக வசனங்கள் தெளிவாக தெரிகிறது. அவர்களுக்கு உதவி செய்ய நண்பர்களோ உறவினர்களளோ அல்லது தொண்டர்களோ இல்லாமல் தன்னந்தனியாக இருப்பார்கள். நிராகரிப்பாளர்கள் எதிர்க்க சக்திபெறாதவர்களாக விழி பிதுங்கி நிற்பார்கள். இந்த நிலையை குர்ஆன் விவரிக்கிறது.

மேலும், சிறுமைப்பட்டுத் தலை கவிழ்ந்தவர்களாகவும், (மறைவாகக்) கடைக்கண்ணால் பார்த்த வண்ணமாகவும் அவர்கள் (நரகத்தின் முன்) கொண்டுவரப் படுவதை நீர் காண்பீர்¢ (அவ்வேளை) ஈமான் கொண்டவர்கள் கூறுவார்கள்: 'எவர் தங்களுக்கும், தம் குடும்பத்தாருக்கும் நஷ்டத்தை தேடிக் கொண்டார்களோ, கியாம நாளில் நிச்சயமாக அவர்கள் முற்றிலும் நஷ்டவாளர்தாம்.' அறிந்து கொள்க! நிச்சயமாக அநியாயக்காரர்கள் நிலையான வேதனையில் இருப்பார்கள். (ஸூ றா அஷ்-ஷூ றா: 45)

## நரகத்திற்கு உள்ளே செல்வதும் நரகத்தின் கதவுகளும்

நிச்சயமாக நிராகரிப்பாளர்கள் நரகத்தின் கதவுகளை வந்தடைவார்கள். குர்ஆன் இதை இவ்வாறு விளக்குகிறதுஇ

(அந்நாளில்) நிராகரித்தவர்கள் கூட்டம் கூட்டமாக நரகத்திற்கு இழுத்துக் கொண்டு வரப்படுவார்கள்¢ அவர்கள் அங்கே வந்தவுடன் அதன் வாசல்கள் திறக்கப்படும்¢ அதன் காவலர்கள் அவர்களை நோக்கி: 'உங்களிலிருந்து (அல்லாஹ்வின்) தூதர்கள், உங்கள் இறைவனுடைய வசனங்களை உங்களுக்கு ஓதிக் காண்பிக்கிறவர்களாகவும், இந்த நாளை நீங்கள் சந்திக்க வேண்டுமென்பதைப் பற்றி உங்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவும் உங்களிடம் வரவில்லையா?' என்று கேட்பார்கள்¢ (இதற்கு அவர்கள்) 'ஆம் (வந்தார்கள்)' என்று கூறுவார்கள்¢ எனினும் கா.பிர்களுக்கு வேதனை பற்றிய வாக்கு உண்மையாகி விட்டது.. 'நரகத்தின் வாயில்களுள் நுழைந்து விடுங்கள்¢ என்றென்றும் அதில் தங்கிவிடுங்கள்' என்று (அவர்களுக்குக்) கூறப்படும்¢ பெருமை அடித்துக் கொண்டிருந்தோருடைய தங்குமிடம் மிகவும் கெட்டது. (ஸூ றா அஸ்-ஸூ மர்: 71-72)

ஒவ்வொரு குழுவுக்கும் நரகத்தில் விசேடமான கதவுகள் படைக்கப்படும். இறைவனுக்கு எதிரான அவர்ளது செயல்களை பொருத்து மக்கள் வகைப்படுத்தப்படுவார்கள். நிராகரிப்பாளர்கள் அவர்கள் செய்த பாவங்களுக்கு ஏற்ப நரகத்தில் இடங்கள் ஒதுக்கப்படும். இதை பற்றி குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

(நபியே!) நீர் கேட்பீராக: 'அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்தியுள்ள (ஆடை) அழகையும், உணவு வகைகளில் தூய்மையானவற்றையும் தடுத்தது யார்?' இன்னும் கூறும்: 'அவை இவ்வுலக வாழ்க்கையில் நம்பிக்கையாளர்களுக்கு (அனுமதிக்கப்பட்டவையே, எனினும் மறுமையில்) அவர்களுக்கு மட்டுமே சொந்தமானவையாகவும் இருக்கும்' இவ்வாறு நாம் நம் வசனங்களை அறியக்கூடிய மக்களுக்கு விவரிக்கின்றோம். (ஸூ றா அல்-ஆர.்ப்: 32)

இன்னொரு வசனம் நரகத்தை பற்றி இவ்வாறு கூறுகிறது.

> நிச்சயமாக (உன்னைப் பின்பற்றும்) அனைவருக்கும் நரகம் வாக்களிக்கப்பட்ட இடமாகும். அதற்கு ஏழு வாசல்கள் உண்டு¢ அவ்வாசல்கள் ஒவ்வொன்றும் பங்கிடப்பட்ட (தனித்தனிப்) பிரிவினருக்கு உரியதாகும். (ஸூ றா அல்-ஹிஜ்ர்: 43-44)

நயவஞ்சகர்களுக்கு மிகவும் கடுமையான வேதனைக்கு உள்ளாவர்கள். இவர்கள் தான் நம்பிக்கை கொண்டவர்கள் போன்று செயல்பட்ட போதிலும் அவர்களின் இதயங்களுக்குள் நம்பிக்கை இருக்கவில்லை.

> நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் நரகத்தின் மிகவும் கீழான அடித் தலத்தில்தான் இருப்பார்கள்¢ அவர்களுக்கு உதவியாளராக எவரையும் நீர் காண மாட்டீர். (ஸூ றா அன்-நிசா: 145)

நரகம் வெறுப்பு நிறைந்த இடமாகும். நிராகரிப்பாளர்கள் மீதான அதன் தாகத்தை கட்டுப்படுத்தவே முடியாது. பல நிராகரிப்பாளர்களை அதில் எறிந்த போதிலும் அது மேலும் இன்னும் அதிகமாக கேட்கும்.

> நரகத்தை நோக்கி, 'நீ நிறைந்து விட்டாயா? என்று நாம் கேட்டு, அதற்கு அது 'இன்னும் அதிகமாக ஏதும் இருக்கின்றதா?' என்று கேட்கும் அந்நாளை (நபியே! நீர் நினைவுறுத்துவீராக)! (ஸூ றா காப்: 30)

ஒருமுறை பிடித்துவிட்டால் அது நிரந்தரமாக வைத்துக்கொள்ளும். இறைவன் நரகத்தை பற்றி குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்.

> அவனை நான் 'ஸகர்' (என்னும்) நரகில் புகச் செய்வேன். 'ஸகர்' என்னவென்பதை உமக்கு எது விளக்கும்? அது (எவரையும்) மிச்சம் வைக்காது¢ விட்டு விடவும் செய்யாது. (அது சுட்டுக் கரித்து மனிதனின்) மேனியையே உருமாற்றி விடும். (ஸூ றா அல்-முத்ததிர்: 26-29)

நிச்சயமாக நரகத்திற்கு உள்ளே செல்வதும் வேதனையானதாகும். மக்கள் அதனுள் வீசி எறியப்படுவார்கள். இன்னொரு வசனத்தில் அதில் அவர்கள் முகங்குப்புற அ(ந் நரகத்)தில் தள்ளப்படுவார்கள்''(ஸூ றா அஷ்-ஷூ அரா: 94).

## மூடிய கதவுகளுக்குள்ளே முடிவில்லாத வாழ்கை

நிராகரிப்பாளர்கள் நரகத்தினுள் புகுந்த உடனே கதவுகள் மூடப்படும். இங்கு அவர்கள் மிகப்பயங்கரமான காட்சிகளை காண்பார்கள். அவர்கள் என்றென்றும் நிரந்தரமாக இருக்கப்போகும் நரகத்திற்குள் வந்து விட்டதை அவர்கள் உணர்ந்து கொள்வார்கள். மூடிய கதவுகள் அவர்களுக்கு இரட்சிப்பு அல்லது மீட்சி கிடையாது என்பதை சுட்டிக்காட்டுகிறது. நிராகரிப்பாளர்களின் நிலையை இறைவன் இவ்வாறு விவரிக்கிறான்.

> ஆனால், எவர்கள் நம் வசனங்களை நிராகரிக்கிறார்களோ, அவர்கள் தாம் இடப்பக்கத்தையுடையோர்அவர்கள் மீது (எப்பக்கமும்) மூடப்பட்ட நெருப்பு இருக்கிறது. (ஸூ றா அல்-பலத்: 19-20)

வேதனையை பற்றி குர்ஆன் கூறும்போது அது கடுமையான வேதனை (ஸூ றா ஆல-இம்றான்: 176) மோசமான வேதனை (ஸூ றா ஆல-இம்றான்: 4) மற்றும் நோவினை தரும் வேதனை (ஸூ றா ஆல-இம்றான்: 21) என்றும் விளக்குகிறது. இந்த விளக்கம் நரகத்தின் தண்டனைகளை முழுமையாக விளங்கி கொள்ள போதுமானதல்ல. இந்த உலகில் சிறு எரிகாயங்களையும் தாங்கி கொள்ள முடியாத மனிதன் அவன் நிரந்தரமாக நெருப்பில் வேதனைபடுத்தப்படுவதை நினைத்து பார்க்க முடியாது. இந்த உலகிலுள்ள நெருப்பு காயங்கள் ஏற்படுத்தும் வேதனையை நரக வேதனையோடு ஒப்பிட முடியாது. நரக வேதனைக்கு ஒப்பாக எந்த வேதனையும் இருக்காது.

> ஆனால் அந்நாளில் (அல்லாஹ் செய்யும்) வேதனையைப் போல், வேறு எவனும் வேதனை செய்யமாட்டான். மேலும், அவன் கட்டுவது போல் வேறு எவனும் கட்டமாட்டான். (ஸூ றா அல்-ப..ஜ்ர்: 25-26)

நரகத்தில் வாழ்கை இருக்கிறது. இருப்பினும் அந்த வாழ்கை முழுவதும் வேதனையால் நிரப்ப பட்டிருக்கும். அந்த வாழ்கையில் பல வகையான உளரீதியான, உடல்ரீதியான வேதனைகளும் மற்றும் பல வகையான வேதனைகளுடன் சேர்த்து கேவலப்படுத்துவதாக அமைந்திருக்கும். இந்த வேதனைகளை உலகிலுள்ள எந்த வேதனையுடனும் ஒப்பிட்டு பார்க்க முடியாது.

நரகத்திலுள்ள மக்கள் அவர்களது ஐந்து புலண்களாலும் வேதனையை உணர்ந்து கொள்வார்கள். அவர்களது கண்கள் பயங்கரமான காட்சிகளை பார்க்கும்இ அவர்களது காதுகள் பயங்கர அலறல்களை கேட்கும்இ அவர்களது மூக்கு துர்வாடையை சுவாசிக்கும்இ அவர்களது நாக்கு மிகவும் சகித்து கொள்ள முடியாத மோசமானவற்றை சுவைக்கும். அவர்களது செல்கள் ஆழமாக துளையிடப்பட்டுள்ளதை உணர்வார்கள். இந்த வேதனையின் தன்மையை சிந்திப்பது கடினமாக ஒன்றாகும். அவர்களது தோல் அவர்களது உடலிலுள்ள நுண்ணங்கிகள் மற்றும் அவர்களது முழு உடலும் உடைக்கப்பட்டு அவர்கள் வேதனையால் அலறுவர்கள்.

நரகத்திலுள்ளர்கள் வேதனையை தாங்கி கொள்வார்கள். அதனால் அவர்கள் மரணிக்க மாட்டார்கள். அதிலிருந்து தங்களை காப்பாற்றி கொள்ள மாட்டார்கள். அவர்களது தோல் சுடப்பட்டதன் பின்னர் மீண்டும் புதிய தோல் அணிவிக்கப்படும். இந்த வேதனை நிரந்தரமாக தொடரும். வேதனையின் அளவு குறைய மாட்டாது. இறைவன் குர்ஆனில் இதை பற்றி இவ்வாறு கூறுகிறான் 'நீங்கள் அதில் நுழையுங்கள்¢ பிறகு நீங்கள் (அதன் வேதனையைச்) சகித்துக் கொள்ளுங்கள்¢ அல்லது சகித்துக் கொள்ளாதிருங்கள்¢ (இரண்டும்) உங்களுக்குச் சமமே¢ நிச்சயமாக நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றிற்காகத்தான் நீங்கள் கூலி கொடுக்கப்படுகிறீர்கள்.' (ஸூ றா அத்-தூர்: 16).

உடல் வேதனை போன்று உளரீதியான வேதனையும் கடுமையாக இருக்கும். நரகத்திலுள்ளவர்கள் கவலைப்பட்டு நிராசையாகி செய்வதறியாது பல்லாயிரம் ஆண்டுகள் துக்கத்திலேயே கழிப்பார்கள். நரகத்தின் ஒவ்வொரு பகுதியும் உளரீதியான வேதனைகளை கொடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வேதனை நிரந்தரமானது. அவை பல பில்லியன் ஆண்டுகளுக்கு பிறகு முடிந்துவிடும் என்றிருந்தால் அந்த காலம் அதிகமாக இருந்தாலும் நம்பிக்கையூட்டுவதாகவும் மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் அமையும். இருப்பினும் நிரந்தர வேதனை ஒருவகையான நம்பிக்கையின்மை ஏற்படுத்தும். அதை உலகிலுள்ள எந்த உணர்வுகளுடனும் ஒப்பிட முடியாது..

குர்ஆனை பொருத்தவரையில் நரகம் என்பது மிக கடுமையான வேதனைகள் நிறைந்த இடமாகும். அது ஒடுக்கமான புகை இரைச்சல் இருட்டு ஆகியவை கொண்டு மனிதனின் ஆன்மாவிற்கு பாதுகாப்பின்மையை உண்டுபண்ணுகிறது. அது மோசமான துர்வாடைஇ இதயத்தை சுட்டெரிக்க கூடிய நெருப்புஇ உண்ண மற்றும் பருகுவதற்கு அருவருப்பானவைகள்இ நெருப்பாலான ஆடைகள் போன்ற தன்மைகளை கொண்ட இடமாகவுள்ளது. இதுதான் நரகத்தின் அடிப்படை தன்மைகளாகும். இந்த மோசமான சூழலில் வாழ நேரிடும். இருப்பினும் நரகத்திலுள்ளவர்களின் புலன்கள் நன்கு தொழிற்படும். அவர்கள் கேட்பார்கள்இ பேசுவார்கள்இ வாக்குவாதத்தில் ஈடுபடுவார்கள்இ அந்த வேதனைகளிலிருந்து தப்பிக்க முயல்வார்கள். அவர்கள் நரக நெருப்பில் எரிக்கப்பட்டதன் காரணமாக பசியும் தாகமும் ஏற்படும். அதற்காக வருந்துவார்கள். அவர்கள் குற்ற உணர்வை கொண்டு வேதனை செய்யப்படுவார்கள். அவர்களின் வேதனையிவிருந்து தப்ப முயற்சிப்பார்கள்.

நரகவாசிகளை பொருத்தவரையில் அவர்களது வாழ்கை இங்கு அருவருப்பான துர்வாடை வீசக்கூடிய இடத்தில் வாழும் மிருகத்தின் நிலையை விட மோசமானதாகும். அவர்களுக்கு உணவு கள்ளி செடியிலிருந்து பழங்களும் ஸக்கூம் என்ற மரத்திலிருந்தும் கொடுக்கப்படும். அவர்களுக்கு இரத்தமும் சீழும் கலந்த பானங்களாக கொடுக்கப்படும். அவர்கள் எங்கு சென்ற போதிலும் நெருப்பு தொடரும். நரக வேதனையை பற்றி இவ்வாறு கூறப்படுகிறது்

> யார் நம் வேதவசனங்களை நிராகரிக்கிறார்களோ, அவர்களை நாம் நிச்சயமாக நரகத்தில் புகுத்தி விடுவோம்¢ அவர்கள் தோல்கள் கருகிவிடும் போதெல்லாம் அவையல்லா (வேறு) தோல்களை, அவர்கள் வேதனையைப் (பூரணமாக) அனுபவிப்பதற்கென, அவர்களுக்கு நாம் மாற்றிக் கொண்டே இருப்போம் - நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும் ஞானமுள்ளவனாகவும் இருக்கின்றான்''. (ஸூ றா அன்-நிசா:56)

தோல் சுடப்பட்டு உடல் முழுவதும் இரத்தமாக இருக்கும் நிலையில் அவர்களை சங்கிலியால் பிணைக்கப்பட்டு அடிக்கப்படுவார்கள். அவர்களது கைகள் கழுத்துடன் சேர்த்து கட்டப்பட்ட நிலையில் நரகத்தின் நடுப்பகுதிக்கு வீசப்படுவார்கள். அவர்களை சுற்றி நெருப்பு காணப்படும். நிராகரிப்பாளர்கள் அத்தகைய வேதனைகளை விட்டும் காப்பாற்ற சொல்லி கதறிக்கொண்டே இருப்பார்கள். அதற்கு பதிலளிக்கு முகமாக அவர்களது வேதனை அதிகரித்து கொண்டே போகும். அவர்கள் தனிமையில் விடப்படுவார்கள்.

இந்த நிகழ்வுகள் நிச்சயம் நடைபெறும். அவைகள் உண்மையானவை.. அவை என்முடைய அன்றாட வாழ்வை விட உண்மையானவை.

மனிதர்களில் (ஓர் உறுதியும் இல்லாமல்) ஓரத்தில் நின்று கொண்டு அல்லாஹ்வை வணங்குகிறவனும் இருக்கிறான் (ஸூ றா அல்-ஹஜ்: 11) என்று சொல்பவர்களும் எண்ணப்பட்ட சில நாட்களேயன்றி சரக நெருப்பு எங்களளை நிச்சயமாக தீண்டாது (ஸூ றா ஆல-இம்றான்: 24) என்று சொல்பவர்களும், பணம், தொழில், அந்தஸ்து மற்றும் அதை போன்றவற்றை அவர்களது வாழ்வின் முக்கிய குறிக்கோள்களாக கருதி இறைவனது நற்பேறுகளை உதாசீனம் செய்துஇ அவர்களது சொந்த நலன்களுக்கு ஏற்ப இறைவனது கட்டளைகளை மாற்றி: குர்ஆனை தங்களது சொந்த விருப்பதிற்கு ஏற்றவாறு விளக்கம் கொடுத்து : நேரான வழியிலிருந்து தவறியவர்கள் - சுருக்கமாக சொல்தானால்- அனைத்து நிராகரிப்பாளர்களும் நயவஞ்சகர்களும் - இறைவன் எவர்கள் மீது அவனது கருணையும் மன்னிப்பும் அருளுகிறனோ, அவர்களை தவிர மற்றவர்கள் - நரகில் எறியப்படுவார்கள். இது இறைவனின் சத்தியமான சொல் ஆகவே அது நிச்சயம் நடைபெறும்.

> மேலும் நாம் நாடியிருந்தால், ஒவ்வோர் ஆத்மாவுக்கும் அதற்குரிய நேர்வழியை நாம் கொடுத்திருப்போம்¢ ஆனால் 'நான் நிச்சயமாக நரகத்தை - ஜின்களையும், (தீய) மனிதர்களையும் - ஆகிய யாவரையும் கொண்டு நிரப்புவேன்' என்று என்னிடமிருந்து (முன்னரே) வாக்கு வந்துள்ளது. (ஸூ றா அஸ்-ஸ.ஜதா: 13)

இவர்கள் ஏற்கனவே நரகத்திற்கென்று தீர்மானிக்கபட்வர்கள்.

> நிச்சயமாக நாம் ஜின்களிலிருந்தும், மனிதர்களிலிருந்தும் அநேகரை நரகத்திற்கென்றே படைத்துள்ளோம்¢ அவர்களுக்கு இருதயங்கள் இருக்கின்றன - ஆனால் அவற்றைக் கொண்டு அவர்கள் நல்லுணர்வு பெற மாட்டார்கள்¢ அவர்களுக்குக் கண்கள் உண்டு¢ ஆனால், அவற்றைக் கொண்டு அவர்கள் (இறைவனின் அத்தாட்சிகளைப்) பார்ப்பதில்லை¢ அவர்களுக்குக் காதுகள் உண்டு. ஆனால் அவற்றைக் கொண்டு அவர்கள் (நற்போதனையைக்) கேட்கமாட்டார்கள் - இத்தகையோர் கால்நடைகளைப் போன்றவர்கள். இல்லை! அவற்றை விடவும் வழி கேடர்கள்¢ இவர்கள் தாம் (நம்வசனங்களை) அலட்சியம் செய்தவர்களாவார்கள். (ஸூ றா அல்-ஆரப்: 179)

## நெருப்பால் வேதனை செய்யப்படல்

நெருப்பில் வாட்டப்படுவதுதான் இந்த நரக வேதனையில் மிகப்பெரியதும் மிகச்சாதாரணமான வேதனையாகும். முற்ற அனைத்து வேதனைகளை முறைகளை விடவும்இ நரகத்தின் தனித்துவமான நெருப்புஇ மனித உடலில் சீர்செய்ய முடியாத வடுக்களை ஏற்படுத்தும். இந்த வேதனை மனித உடலை செல்களின் நிலைக்கு மாற்றிவிடும். நரகவாசிகள் இந்த"கொழுந்து விட்டெரியும் நெருப்பில்" (ஸூ றா அல்-மஆரிஜ்: 15) எரியப்படுவார்கள். அவர்கள் கொழுந்து விட்டெரியும் நெருப்பில் (ஸூ றா அல்-லைல்: 14) எரிக்கப்படுவார்கள். குர்ஆன் மேலும் கூறுகையில் :

> ஆனால் எவனுடைய (நன்மையின்) நிறை இலேசாக இருக்கிறதோ-அவன் தங்குமிடம் 'ஹாவியா' தான். இன்னும் ('ஹாவியா') என்ன என்று உமக்கு அறிவித்தது எது? அது சுட்டெரிக்கும் (நரகத்தின்) தீக்கிடங்காகும். (ஸூ றா அல்-காரிஆ: 8-11)

இந்த வசனத்தை ஆராய்ந்து பார்க்கும் பொழுது நெருப்பு நரகம் முழுவதையும் வியாபித்திருக்கும் என்பதை புரிந்து கொள்ளலாம். இந்த குழியில் பாதுகாப்பான இடம் என்று ஒன்றும் இருக்காது. நெருப்பு நரகத்தின் அனைத்து பகுதிகளையும் சென்றடையும். மற்ற அனைத்து விதமான உடல் மற்றும் உளரீதியான வேதனைகளை அனுபவிக்கும்போழுதும் நிராகரிப்பாளனை நெருப்பு சிறிது நேரம் கூட விட்டுவைப்பதில்லை. நரக நெருப்பு மிக மிக பெரியதாகும். குர்ஆனில் நரகத்தின் பயங்கரத்தையும் தாக்கத்தையும் விவரிக்கும் போது இந்த நெருப்பானது அரண்மனையின் அளவு அல்லது சிகப்பு ஒட்டகங்களின் கூட்டத்துடன் ஒப்பிட்டுள்ளது.

## அன்றைய தினம் நிராகரிப்பாளர்களுக்கு கேடுதான்!!
## நீங்கள் நிராகரித்ததின் பக்கம் செல்லுங்கள்

> பொய்ப்பிப்பவர்களுக்கு அந்நாளில் கேடுதான். 'நீங்கள் எதைப் பொய்ப்படுத்திக் கொண்டிருந்தீர்களோ, அதன் பால் நடப்பீர்களாக' (என்று அவர்களுக்குக் கூறப்படும்). மூன்று கிளைகளுடைய (நரகப் புகை)

நிழலின் பால் நடப்பீர்களாக. (அது) நிழலளிப்பதுமல்லஇ (நரகின்) கடுந்தழலை விட்டுக் காப்பாற்றுவதுமல்ல. நிச்சயமாக அது பெரிய மாளிகைகளைப் போன்ற நெருப்புப் பொறிகளைக் கொண்டு வீசி எறிந்து கொண்டு இருக்கும். நிச்சயமாக அது மஞ்சள் நிறமுள்ள ஒட்டகைகள் போல் இருக்கும். (ஸூ றா அல்-முர்ஸலாத்: 28-33)

நிராகரிப்பாளர்கள் தங்களது முழு பலத்தையும் பயன்படுத்தி நெருப்பிலிருந்து தப்பிக்க முனைவார்கள், ஆனாலும் அவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அந்த நெருப்பு (நேர்வழியைப்) புறக்கணித்துப் புறங்காட்டிச் சென்றோரை அ(ந்நரகத்தீயான)து அழைக்கும். (ஸூ றா அல்-மஆரிஜ்: 17). மற்றொரு வசனம் மறுத்தவர்களின் விதியை பற்றி கூறுகிறது.

ஆனால் எவர்கள் (வரம்பு மீறிப்) பாவம் செய்தார்களோ, அவர்கள் தங்குமிடம் (நரக) நெருப்புத்தான் - அவர்கள் அதை விட்டு வெளியேற நாடும் போதெல்லாம், அதிலேயே மீண்டும் தள்ளப்பட்டு: ‘எதனை நீங்கள் பொய்ப்பித்துக் கொண்டிருந்தீர்களோ அந்த (நரக) நெருப்பின் வேதனையை அனுபவியுங்கள்’’ என்று அவர்களுக்குச் சொல்லப்படும். (ஸூ றா அஸ்-ஸஜதா: 20)

அத்தகைய வேதனையை அனுபவிப்பவர்களின் அலறல்களையும் கதறல்களையும் எல்லா இடங்களிலும். கேட்டு கொண்டேயிருக்கும். இத்தகைய அலறல்களும் கதறல்களும் நிராகரிப்பாளர்களின் விசேட வேதனையாகும்.

அதில் அவர்களுக்கு வேதனை முனக்கம் இருக்கிறது. மேலும் அவர்கள் அதிலே (எதனையும்) செவியுறமாட்டார்கள். (ஸூ றா அல்-அன்பியா: 100)

துர்பாக்கிய சாலிகள் (நரக) நெருப்பில் (எறியப்பட்டு) இருப்பார்கள். அதில் அவர்களுக்கு பெருங்கூச்சலும், முனக்கமும்(தான்) இருக்கும (ஸூ றா ஹூ த்: 106)

நெருப்பு தாங்கி கொள்ள முடியாத வலியை ஏற்படுத்தும். சாதாரண நெருப்பு குச்சி ஏற்படுத்தும் நெருப்பை கூட மனிதர்களால் தாங்கிகொள்ள முடியவில்லை. இந்த உலகில் நாம் அனுபவிக்கும் எந்த வலியும் நரக நெருப்பிற்கு மிக மிக சாதாரணமான ஒன்றாகும். அதனுடன் ஒப்பிடவே முடியாது. இந்த உலகில் மனிதனால் நீண்ட நேரம் நெருப்பில் இருக்க முடியாது. அவன் 5-10 நிமிடங்களில் இறந்து விடுவான் அல்லது குறுகிய காலத்திற்கு வலியை உணருவான். இருப்பினும் நரக நெருப்பு மிகப்பயங்கரமானது. அது மரணத்தை ஏற்படுத்தாது மாறாக வலியை ஏற்படுத்தும். நரகவாசிகள் நிரந்தரமாக இருக்கும் நெருப்பில் எறியப்படுவார்கள். இந்த வேதனைக்கு முடிவில்லை என்பதை உணர்ந்த நரகவாசிகள் நிர்கதியான நிலைக்கு தள்ளப்படுவார்கள். அவாகள் எவ்வித உதவியின்றி செய்வதறியாது திகைத்து இருப்பதை உணர்வார்கள்.

சுட்டெரிக்கப்பட்ட முகமே வேதனைகளிலே மிகவும் விரும்பபடாத ஒன்றாகும். காரணம் ஒருவனது உடலமைப்பில் அவனுக்கு பெருமை தரக்கூடியது முகமாகும். ஒருவனுக்கு தனித்துவமான அடையாளத்தை கொடுப்பதோடு நான்'' என்று சொல்லக்கூடியதாகவும் காணப்படுகின்றது. அழகானது என்றும் அழகற்றது போன்ற சொற்கள் முகத்துடன் சம்பந்தப்பட்டவையாகும். தீ காயங்களை சேதமடைந்த முகத்துடைய ஒருவரின் புகைபடத்தை பார்பது யாராக இருந்தாலும் அவர்கள் உடனே இறைவன் பக்கம் திரும்பி தங்களை அத்தகைய பயங்கர நிகழ்வுகளிலிருந்து காப்பாற்றுமாறு மன்றாடுவார்கள். யாரும் அத்தகைய துரதிஷ்டவசமான நிகழ்வுகள் தங்களுக்கு ஏற்படுவதை விரும்ப மாட்டார்கள். இருப்பினும்இ நிராகரிப்பாளர்கள் முக்கிய ஒரு உண்மையை மறந்து வாழ்கிறார்கள்இ அவர்கள் மெதுவாக அத்தகைய முடிவை நெருங்குகிறார்கள். அது மிக கடுமையான ஒன்றாகும். நரக நெருப்பின் வேதனையானது உடலின் அனைத்து பாகங்களுக்கும் ஊடுருவி செல்லும். முகம் நெருப்பினால் சுட்டெறிக்கப்படும் போது அது வர்ணிக்க முடியாத அளவிற்கு வேதனையை ஏற்படுத்தும். கண்கள்இ காதுஇ மூக்குஇ நாக்கு மற்றும் தோல்இ சுருங்க கூறினால்இ அனைத்து உணரக்கூடிய உறுப்புகளும் உடலின் முக்கியமான இந்த பகுதியில் தான் இருக்கிறது. முகத்திற்கு எத்தகைய பாதிப்பு வந்தாலும்இ அது சிறியதாக இருந்தாலும்இ அதன் எதிர் தாக்கம் மிக கடுமையாக இருக்கும். நரகத்தில்இ முகம் எரிகப்படும். இந்த வகையில் உடலின் மிக முக்கிய பாகம் மிக கடுமையாக காயப்படுத்தப்படும். வேதனையை பற்றி மேலும் குறிப்பிடுகையில்

நெருப்பில் அவர்களுடைய முகங்கள் புரட்டப்படும் அந்நாளில், ‘ஆ! கை சேதமே! அல்லாஹ்வுக்கு நாங்கள் வழிப்பட்டிருக்க வேண்டுமேஇ இத்தூதருக்கும் நாங்கள் வழிப்பட்டிருக்க வேண்டுமே!’ என்று கூறுவார்கள். (ஸூ றா அல்-அஹ்ஸாப்: 66)

அவர்களுடைய ஆடைகள் தாரால் (கீல் எண்ணையினால்) ஆகி இருக்கும்இ இன்னும் அவர்களுடைய முகங்களை நெருப்பு மூடி இருக்கும். (ஸூ றா இபுறாஹீம்: 50)

(நரக) நெருப்பு அவர்களுடைய முகங்களை கரிக்கும்¢ இன்னும் அதில் அவர்கள் உதடு சுருண்டு (முகம் விகாரமானவர்களாக) இருப்பார்கள். ( ஸூ றாஅல்-மு.:மினூான்: 104)

## நரகத்தின் விறகும் கொதிக்கும் நீரும்.

நிராகரிப்பாளர்கள் நரகத்தில் எரித்து வேதனை படுத்தப்படுத் விதத்தை பற்றி குர்ஆன் விளக்கும் போது நிராகரிப்பாளர்களை நரகத்தின் விறகு என்று அழைப்பதை காணலாம். அவர்கள் எரிக்கப்படுவதற்கும் மற்ற பொருட்கள் நெருப்பில் எரிக்கப்படுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. நிராகரிப்பாளர்கள் நரகத்தின் விறகுகளாக பாவிக்கப்படுவார்கள்.

'அக்கிரமக்காரர்களோ நரகத்திற்கு எரி விறகாய் விட்டனர்' (என்று அந்த ஜின் கூறிற்று). (ஸூ றா அல்-ஜின்: 15)

மற்ற பொருட்களை விட விறகு நெடுநேரம் எரியும். அதை போன்று அவர்கள் முன்பு மறுத்த இந்த நெருப்பிற்கு விறகுகளாக இருப்பார்கள். இந்த உண்மையை பின்வரும் வசனம் விளக்குகிறது.

மு.:மின்களே! உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் (நரக) நெருப்பை விட்டுக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் அதன் எரிபொருள் மனிதர்களும், கல்லுமேயாகும் (ஸூ றா அத்-தஹ்ரீம்: 6)

நிச்சயமாக நிராகரித்தவர்கள் அவர்களுடைய பொருட்களோ, இன்னும் அவர்களுடைய பிள்ளைகளோ அல்லாஹ்வி(ன் வேதனையி)லிருந்து எதையும் அவர்களை விட்டும் தடுக்காது. இன்னும் அவர்கள் தாம் நரகத்தின் எரிபொருள் ஆவர். (ஸூ றா ஆல-இம்றான்: 10)

நிச்சயமாக நீங்களும், அல்லாஹ்வை அன்றி நீங்கள் வணங்கியவையும் நரகத்திற்கு விறகுகளே! நீங்கள் (யாவரும்) நரகத்திற்கு வந்து சேர்பவர்களே! (என்று அவர்களுக்குச் சொல்லப்படும்.) (ஸூ றா அல்-அன்பியா: 98)

மனிதர்கள் விறகுகளாக பாவிக்கப்படும் அதேநேரம் உண்மையான விறகுகளும் நெருப்பை வளர்க்க உபயோகிக்கப்படும். இது இன்னொரு வகையான வேதனையாகும். நிராகரிப்பாளர்கள்இ இந்த உலகில் மிக நெருக்கமாக இருந்தவர்கள்- உதாரணமாக கணவன் மனைவியாக ஒருவர் மற்றவருக்காக விறகுகளை சுமப்பார்கள். உதாரணத்திற்காக அபூ லஹப் மற்றும் அவனது மனைவியையும் உதரணமாக கூறலாம்.

அபூலஹபின் இரண்டு கைகளும் நாசமடைக அவனும் நாசமாகட்டும். அவனுடைய பொருளும், அவன் சம்பாதித்தவையும் அவனுக்குப் பயன்படவில்லை. விரைவில் அவன் கொழுந்து விட்டெரியும் நெருப்பில் புகுவான். விறகு சுமப்பவளான அவனுடைய மனைவியோ,அவளுடைய கழுத்தில் முறுக்கேறிய ஈச்சங் கயிறுதான் (அதனால் அவளும் அழிவாள்). (ஸூ றா லஹப்:1-5)

இது உலகின் அனைத்து பந்தங்களையும் உடைத்துவிடும். நிராகரிப்பாளர்கள் அதிகமாக அன்பு அல்லது காதலிப்பதாக கூறி இறைவனுக்கு எதிராக செயல்பட்டவர்கள், நரகத்தில் மற்றவர்களுக்கு எதிராக நெருப்பை மூட்டுவார்கள். ஒருவரது துணை, நெருங்கிய உறவினர், மிக நெருங்கிய நண்பர்கள் அனைவரும் எதிரிகளாக மாறிவிடுவார்கள். நம்பிக்கை துரோகத்திற்கு எல்லை இருக்காது.

உயிருள்ள மற்றும் உயிரற்றவைகளால் மூட்டப்பட்ட நெருப்பில் கொதிக்க வைக்கப்பட்ட தண்ணீர் நிராகரிப்பாளர்களை காயபடுத்தும். மனித உடலை போர்தியுள்ள முக்கிய உறுப்பான தோலானது சில மில்லிமீட்டர் தடிப்பமாக இருந்த போதிலும் அதன் தொடுதல் என்ற உணர்வை கொண்டே ஒருவன் வெளி உலகத்தோடு தொடர்பு கொள்கிறான். அது உடலின் மிக முக்கிய பகுதியான முகம், கைகள், கால்கள், போன்றவைகள் தோலினால் மூடப்பட்டுள்ளது. ஒருவன் சுகத்தை உணரும் உறுப்பான தோல் வேதனையின் மறுவடிவமாக மாறிவிடும். அது நெருப்பிற்கும் கொதிக்கும் திரவங்கயையும் ஏற்று கொள்ளாது. நெருப்பு தோலை சுடும். கொதிக்கும் நீர் அதை துளையிடும். கொதிக்கும் நீர் தோலை முழுவதுமாக சிதைத்து விடும். ஒரு சிறு பகுதி கூட பாதிப்படையாமல் இருப்பதில்லை. மெல்லிய தோல் முதலில் மேல் எழுந்து பிறகு தீ பிடித்து கொள்ளும். கடுமையான நோவினை தரும். உடல் அழகோ அல்லது உலக சொத்துக்களோ அவ்வது புகழோ சுருங்க கூறினால், இந்த கொதிக்கும் நீரிலிருந்து அவனை எதுவும் காப்பாற்றாது. குர்ஆன் இதை பற்றி கூறும்

போது ⊡⊡. இவர்கள் நிராகரித்துக் கொண்டிருந்த காரணத்தால் இவர்களுக்குக் கொதிக்கும் நீரும் துன்புறுத்தும் வேதனையும் உண்டு (ஸூறா அல்-அன்ஆம்: 70). இன்னொரு வசனத்தில்.

> ஆனால் அவன் வழிகெட்டுப் பொய்யாக்குவோரில் (ஒருவனாக) இருந்தால் கொதிக்கும் நீரே, அவனுக்கு விருந்தாகும். நரக நெருப்பில் தள்ளப்படுவது (விருந்தாகும்). நிச்சயமாக இதுதான் உறுதியான உண்மையாகும். (ஸூறா அல்-வாகிஆ: 92-95)

இத்தகைய வேதனையை பற்றி மேலும் கூறுகையில்

> 'அவனைப்பிடித்துக் கொழுந்து விட்டெரியும் நரகத்தின் மையத்திற்கு இழுத்துச் செல்லுங்கள்: பின்னர், அவனது தலைக்கு மேல் வேதனை கொடுக்கும் கொதிக்கும் நீரை ஊற்றுங்கள். நீ (இதைச்) சுவைத்துப்பார்! நிச்சயமாக நீ வல்லமை சாலியாகவும், சங்கையுடையவனாகவும் இருந்தாய்! நிச்சயமாக இதுதான் நீங்கள் சந்தேகித்துக் கொண்டிருந்தீர்களே அதுவாகும்' (என்று அவர்களிடம் சொல்லப்படும்) (ஸூறா அத்-துகான்: 47-50)

இது தவிர நெருப்பினால் வேறுவகையான நோவினைகளும் ஏற்படும். நரகவாசிகள் கொதித்த சிகப்பு உலோகங்களை கொண்டு அடையாளமிடப்படுவார்கள். இந்த உலகில் நிராகரிப்பாளர்கள் இறைவனுக்கு இணையாக்கியவர்கள் சேமித்த சொத்துகளாகும்.

> இன்னும் எவர்கள் பொன்னையும், வெள்ளியையும் சேமித்து வைத்துக் கொண்டு அவற்றை அல்லாஹ்வின் பாதையில் செலவிடாதிருக்கின்றார்களோ⊡ (நபியே!) அவர்களுக்கு நோவினை செய்யும் வேதனை உண்டு என்று நன்மாராயம் கூறுவீராக!. (நபியே! அவர்களுக்கு நீர் அந்த நாளை நினைவூட்டுவீராக!) அந்த நாளில் (அவர்கள் சேமித்து வைத்த செல்வத்தை) நரக நெருப்பிலிட்டுக் காய்ச்சி, அதைக் கொண்டு அவர்களுடைய நெற்றிகளிலும் விலாப்புறங்களிலும், முதுகுகளிலும் சூடு போடப்படும் - (இன்னும்) 'இது தான் நீங்கள் உங்களுக்காகச் சேமித்து வைத்தது - ஆகவே நீங்கள் சேமித்து வைத்ததைச் சுவைத்துப் பாருங்கள்' (என்று கூறப்படும்). (ஸூறா அத்-தல்பா: 34-35)

## வேறுவகையான வேதனைகள்

நாம் நினைப்பது போன்று நரகம் மிகப்பெரிய அடுப்பல்ல. நரகவாசிகள் நெருப்பில் வீசப்படுவார்கள். இது உண்மை. இருப்பினும் நரக வேதனை நெருப்பால் சுடப்படுவதோடு நின்று விடுவதில்லை. நரகவாசிகள் மற்ற உளரீதியான மற்றும் உடல்ரீதியான வேதனைகளாலும் சூழப்படுவார்கள்.

இந்த உலகில் ஒருவனை வேதனைபடுத்த பலவகையான முறைகளும் கருவிகளும் பயன்படுத்தப்படுவதை நாம் பார்கிறோம். சில வேளைகளில் வேதனை தாங்க முடியாமல் இறந்து விடுகிறார்கள். தப்பித்தவர்கள் மனநோய்களுக்கு உட்படுகிறார்கள். இந்த உலகில் பாவிக்கப்படும் சித்திரவதைகளை நரக வேதனையோடு ஒப்பிட்டால் அது மிக சிறியதாகும். நரகவாசிகள் வித்தியாசமான மிகவும் கடுமையான சித்திரவதைக்கு உள்ளாவார்கள். மின்சாரம் செலுத்தி ஒருவன் சித்திரவதைக்கு உள்ளாகும் ஒருவனின் நிலையானது, மின்சாரமும் அதேபோன்று மனிதனும் இறைவனால் படைக்கப்பட்டவைகளகும். முற்ற அறியாத வேதனை முறைகளும் மனிதனின் பலவீனமும் இறைவனது நுணுக்கமான அறிவால் படைக்கப்பட்டதாகும். ஆகவேஇ இறைவன் மிக கொடுமையான சித்திரவதைகளை ஏற்படுத்துவான். இது தான் அல்-கஹ்ஹார் (ஆதிக்கம் செலுத்துபவனான)இறைவனின் சட்டமாகும்.

நரகத்தின் எல்லா பகுதியிலும் வேதனை காத்திருக்கும் என்று குர்ஆன் கூறுகிறது. வேதனைகளை தவிர்க்க முடியாது. அது நரகவாசிகளை எல்லா பக்கமாகவும் சூழ்ந்து கொள்ளும். அவர்களால் அதை தாங்கி கொள்ளவும் முடியாது அதேநேரம் அதிலிருந்து தப்பிக்கவும் முடியாது.

> அவ்வேதனையை அவசரப்படுத்து மாறு அவர்கள் உம்மைக் கேட்கிறார்கள் - ஆனால், நிச்சயமாக நரகம் காஃபிர்களைச் சூழ்ந்து கொள்வதாக இருக்கிறது. அந்நாளில், அவ்வேதனை அவர்களுக்கு மேலிருந்தும், அவர்களுடைய கால்களுக்குக் கீழிருந்தும் அவர்களை மூடிக் கொள்ளும். (அப்போது இறைவன்) 'நீங்கள் செய்து கொண்டிருந்த(தின் பய)னைச் சுவைத்துப் பாருங்கள்' என்று கூறுவான். (ஸூறா அல்-அன்கபூத்: 54-55)

வேறுவகையான நோவினைகள் நரகத்தில் காணப்படும். இதை பற்றி குர்ஆன் கூறும் போது

> (அதுவே நரகம்) ஜஹன்னம் -அதில் அவர்கள் நுழைவார்கள் அது தங்குமிடங்களில் மிகவும் கெட்டது. இது (தீயோர்களுக்காக) ஆகவே அவர்கள் அதனைச் சுவைத்துப் பார்க்கட்டும் - கொதிக்கும் நீரும் சீழும் ஆகும். இன்னும் (இதைத்தவிர) இது போன்ற பல (வேதனைகளும்) உண்டு. (ஸூ றா ஸாத்: 56-58)

இந்த வசனத்தையும் மற்ற வசனங்களையும் ஆராயும் போது இ நரகத்தில் பல்வேறு வகையான சித்திரவதைகள் உள்ளன என்பதை புரிந்துகொள்ளலாம். அதில் முக்கியமானவைகளான நெருப்பும் கேவலமும் குர்ஆனில் கூறப்பட்டுள்ளன. இருப்பினும் நரகவாசிகள் மற்ற வகையான வேதனைகளில் இருந்து தங்களை காப்பாற்றி கொள்ள முடியாது. உதாரணமாக நெருப்பு மற்றும் கொதிக்கும் தண்ணீர் தவிர்ந்துஇ விலங்குகள் இ பூச்சிகள்இ தேள்இ பாம்பு நிறைந்த குழியில் தள்ளப்படுதல்இ எலிகளால் தீண்டப்படுதல்இ புழுக்களால் உண்டான காயங்கள் மூலம் வேதனை செய்யப்படுதல்இ போன்ற வேதனைகள் பிழை செய்தவர்களுக்கு தொடர்நது கொடுக்கப்படும்.

## சூடு இருள் புகை நெருக்கடியான இடம்

சூடான மோசமான குறுகிய இடங்களை பொதுவாக அனைவரும் வெறுக்கிறார்கள். காற்றழுத்ததமும் வெப்பமும் மூச்சு திணறலை ஏற்படுத்துகிறது. உடலின் முக்கியமான தொழிற்பாடான சுவாசம் அதிகளவான காற்றழுத்தத்தால் கடினமாகிறது.. சுவாசிக்க முடியாமல் போனால் கடுமையான களைப்பு ஏற்படும். மார்பு இறுகும். கடும் சூடான காலநிலையிலும் காற்றழுத்தம் போன்ற சந்தர்பங்களில் நிழலால் எந்த பயனும் இல்லை. கண்ணுக்கு புலப்படாத தடிப்பமான காற்று அடுக்கு மூச்சு திணறலை ஏற்படுத்துகிறது.. குளியல் தொட்டிகளிலுள்ள வெப்பமும் காற்றழுத்த அளவுகளும் தாங்கி கொள்ள முடியாமல் இருக்கிறது. பத்து நிமிடங்களுக்கு மேல் வெப்ப குளியலை பெறமுடியாது. நீர் தடாகத்தில் சற்று நேரம் இருந்தால் மயக்கமடைகிறார். நீண்ட நேரம் இருந்தால் மரணமடைகிறார்.

தாங்கி கொள்ள முடியாத சுற்றுசூழல் நரகத்தை ஆக்கிரமித்து கொள்கிறது.. இந்த உலகின் கடும் வெப்பத்திலிருந்து தன்னை காப்பாற்ற பெரும் முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளும் மனிதன் நரகத்தில் செய்வதறியாது திகைப்பான். நரகம் மற்ற பாலைவனங்களை விட வெப்பமாகவும் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு அசுத்தமாகவும் இருக்கும். மனித உடலை தாக்கும் வெப்பத்தை உடலிலுள்ள செல்கள் உணரும். நிராகரிப்பாளர்களுக்கு அங்கு நிவாரணம் இருக்காது அது குளிரடையவும் மாட்டாது. குர்ஆன் இதை பற்றி கூறும்போது.

> இடது பாரிசத்திலுள்ளவர்களோ இடது பாரிசத்திலுள்ளவர்கள் யார்? (என்று அறிவீர்களா?) (அவர்கள்) கொடிய அனல் காற்றிலும், கொதிக்கும் நீரிலும் -அடர்ந்து இருண்ட புகையின் நிழலிலும் இருப்பார்கள். (அங்கு) குளிர்ச்சியுமில்லை நலமுமில்லை. (ஸூ றா அல்-வாகிஆ: 41-44)

> பொய்ப்பிப்பவர்களுக்கு அந்நாளில் கேடுதான். 'நீங்கள் எதைப் பொய்ப்படுத்திக் கொண்டிருந்தீர்களோ, அதன் பால் நடப்பீர்களாக' (என்று அவர்களுக்குக் கூறப்படும்). மூன்று கிளைகளுடைய (நரகப் புகை) நிழலின் பால் நடப்பீர்களாக. (அது) நிழலளிப்பதுமல்ல (நரகின்) கடுந்தழலை விட்டுக் காப்பாற்றுவதுமல்ல. (ஸூ றா அல்-முர்ஸலாத்: 28-31)

இத்தகைய மோசமான சூழ்நிலையில் நெருக்கடியான இடத்தில் அவர்கள் தள்ளப்படுவது வேறுவகையான வேதனையாக இருக்கும். இந்த தண்டனையை பற்றி குர்ஆன் கூறும்போது:

> அ(ந்நரகத்)தின் ஒரு நெருக்கமான இடத்தில் அவர்கள் (சங்கிலியால்) கட்டி எறியப்பட்டால், (அவ்வேதனையை தாங்கமாட்டாமல், அதைவிட) அழிவே மேல் என அங்கே வேண்டியழைப்பார்கள். 'இந்த நாளில் நீங்கள் ஓர் அழிவை அழைக்காதீர்கள் இன்னும் பல அழிவுகளை வேண்டியழையுங்கள்' (என்று அவர்களிடம் கூறப்படும்). (ஸூ றா அல்-புர்கான்: 13-14)

இந்த உலகில் நெருக்கடியான இடத்தில் சிக்கி கொள்வது வெறுப்பான ஒரு விடயமாகும். தனிமையான அறைகளில் பூட்டி வைப்பது கைதிகளுக்கு மிக கடுமையான தண்டணையாக கருதப்படுகிறது. விபத்திற்கு பிறகு வாகனத்தினுள் பல மணி நேரம் சிக்கி கொள்வதும் நிலநடுக்கத்தால் சிதைவடைந்த ஒரு நகரத்தில் இடிபாடுகளுக்கு மத்தியில் சிக்கி தவிப்பது போன்றவைகள் மோசமான நிகழ்வுகளான கருதப்படுகின்றன. இத்தகைய உதாரணங்களை நரகத்தின் நிகழ்வுகளோடு ஒப்பிட முடியாது. இடிபாடுகளுக்கு மத்தியில் சிக்கி

கொண்ட ஒருவர் மயக்கமுற்று மரணிப்பார் அல்லது சற்று நேரம் கழித்து காப்பாற்றப்படுவார். இரண்டு நிலையிலும் வேதனை சில காலங்கள் மட்டுமே நீடிக்கும்.

நரகம் இதற்கு முற்றிலும் மாறானது. அங்கு வேதனைகளுக்கு முடிவில்லை. ஆகவே அங்கு எந்த நம்பிக்கையும் இல்லை. மோசமான இருளான புகையால் நிரப்பப்பட்ட இடத்தில் நிராகரிப்பாளன் அவனது இரண்டு கைகளும் கட்டப்பட்ட நிலையில் சிறு அறையில் அடைக்கப்படுவதானது கடுமையான நோவினை ஏற்படுத்தும். அவன் போராடுவான் இரட்சிப்பிற்காக ஏங்குவான், ஆனால் அவனுக்கு கிடைக்காது. அவனால் அசைய கூட முடியாது. இறுதியில் குர்ஆனில் கூறப்பட்டதை போன்று அவன் மறைந்து போக மன்றாடுவான். மரணத்தை விரும்புவான். அவனது ஆசை நிறைவேறாது. அந்த குறுகிய குழிக்குள் பல மாதங்கள், வருடங்கள், அல்லது பல்லாயிரம் வருடங்கள் இருப்பான். பெருகும் சித்தரவதைகள் அவனது இதயத்தை நிரப்பி விடும். அவன் தான் மறைந்து போகவேண்டும் என்று பல்லாயிரம் முறை மன்றாடுவான். ஒரு முறை அவன் காப்பாற்றப்பட்டால், அவன் இரட்சிப்பை பெறமாட்டான். மாறாக நரகத்தின் இன்னொரு முகத்தை பார்ப்பான்.

## உணவு பானம் மற்றும் உடைகள்

இந்த உலகத்தில் எண்ணிலடங்காத சுவைமிக்க சத்துள்ள உணவுகள் காணப்படுகின்றன. ஒவ்வொன்றும் இறைவனின் அருட்கொடை.யாகும். பல்வேறு வகையான இறைச்சிகள், பழங்கள், காய்கறிகள் பல்வேறு வகையான நிறங்களில் சுவைகளில், வாசனைகளிலும், பால்பண்ணை பொருட்கள், தேன் மற்றும் மிருகங்களிலிருந்தும் வாசனை திரவியங்களிலிருந்தும் பெறப்படும் சத்துகள் ஆகிய அனைத்தும் இறைவனால் விசேடமாக படைக்கப்பட்டுள்ளதாகும். அவைகள் இந்த உலகம் படைக்கப்பட்டதிலிருந்து மனிதனின் தேவைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. மேலும்இ மனித உணர்வுகள் இத்தகைய சுவைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு படைக்கப்பட்டுள்ளன. இறைவனின் தூண்டுதலினால் மனிதன் சிறந்த உணவுகளை விரும்புகிறான். அவை மோசமான அழுகிய நிலையில் இருந்தால் அவைகளை அவன் வெளியேற்றிவிடுகிறான். இதுவும் இறைவனின் இன்னொரு தூண்டுதலாகும்.

இந்த உலகிலுள்ளவகைகளை விட சிறந்த நற்பேறுகள் சுவர்கத்தில் தயாராக உள்ளன. அதை விசுவாசிகள் நிரந்தரமாக புசிப்பார்கள். இது அருட்களையும் நற்பேறுகளையும் அளவின்றி கொடுக்கும் இறைவனின் அருட்கொடையாகும். மறுபுறத்தில், நரகவாசிகள் இந்த உலகில் அவர்கள் செய்த தீய செயல்களுக்கு பழிதீர்க்கும் முகமாக இறைவனின் நற்பேறுகளிலிருந்து அவர்கள் தூரமாக்கப்படுவார்கள். (ஸூறா அஷ்-ஷூறா: 19). அதன் காரணமாக அவர்கள் வேதனையை சுவைப்பார்கள்.

> அன்றியும் (நரக) நெருப்பின் முன் நிராகரிப்பவர்கள் கொண்டுவரப்படும் நாளில், 'உங்கள் உலக வாழ்க்கையின் போது உங்களுக்குக் கிடைத்திருந்த மணமான பொருட்களையெல்லாம், வீண் செலவு செய்து, (உலக) இன்பம் தேடினீர்கள், 'ஆகவே நீங்கள் பூமியில் அநியாயமாகப் பெருமையடித்துக் கொண்டும், வரம்பு மீறி (வாழ்ந்து) கொண்டும் இருந்த காரணத்தால், இழிவு தரும் வேதனையை இன்று நீங்கள் கூலியாகக் கொடுக்கப்படுகிறீர்கள்' (என்று அவர்களுக்குக் கூறப்படும்). (ஸூறா அல்-அஹ்காப்:20)

அவர்கள் எந்த நற்பேறுகளும் கிடைக்காது. அவர்களது அத்தியவசிய தேவைகளும் வேதனைகளாக மாறும்: சித்தரவதை படுத்துவதற்காக விசேட உணவு வகைகளை இறைவன் படைத்துள்ளான். அங்கு உண்ணக்கூடியதாக இருப்பது கசப்பான முட்செடிகளிலிருந்தும் ஸக்கூம் செடிகளிலிருந்தும் உள்ள பழங்களாகும். அவை அவர்களின் பசியை தணிக்காது அவர்களின் உடலை கொழுக்கவும் வைக்காது. அவனது வாயையும் தொண்டையையும் குடலையும் கிழித்து அருவருப்பான வாடையையும் ருசியையும் கொடுப்பதன் மூலம் வேதனை அதிகமாகும். குர்ஆனில் சுவர்கத்திற்கு மட்டுமே சொந்தமான பேரழகையும் அதன் ருசிகரமான உணவு வகைகளையும் அதே போன்று நரகவாசிகளுக்கு கொடுக்கப்படும் மோசமான உணவு வகைகளையும் பற்றி கூறப்பட்டுள்ளது.

> அது சிறப்பான விருந்தா? அல்லது (நரகத்திலிருக்கும் கள்ளி) 'ஜக்கூம்' என்ற மரமா? நிச்சயமாக நாம் அதை அநியாயக்காரர்களுக்கு ஒரு சோதனையாகவே செய்திருக்கிறோம். மெய்யாகவே அது நரகத்தின் அடித்தளத்திலிருந்து வளரும் மரமாகும். அதன் பாளைகள் ஷைத்தான்களின் தலைகளைப் போலிருக்கும். நிச்சயமாக, அவர்கள் அதிலிருந்தே புசிப்பார்கள் அதைக்கொண்டு தங்களுடைய வயிறுகளை நிரப்பிக் கொள்வார்கள ( ஸூறா அஸ்-ஸாபாத்: 62-66)

அவர்களுக்கு விஷச் செடிகளைத் தவிர, வேறு உணவில்லை. அது அவர்களைக் கொழு(த்துச் செழி)க்கவும் வைக்காது அன்றியும் பசியையும் தணிக்காது (ஸூறா அல்-காஷியா: 6-7)

நரகவாசிகள் இறைவனுக்கு எதிராக செயல்பட்டதன் காரணமாக இத்தகைய மகத்தான வேதனை பெறுவார்கள். அதற்கேற்றவாறு அவர்களது தண்டனை அமையும். இதை பற்றி ஸூறா அல்-வாகிஆ கூறப்படுவதாவது:

நிச்சயமாக அவர்கள் இதற்கு முன்னர் (உலகத்தில்) சுகபோகிகளாக இருந்தனர் ஆனால், அவர்கள் பெரும் பாவத்தின் மீது நிலைத்தும் இருந்தனர் மேலும், அவர்கள்: 'நாம் மரித்து மண்ணாகவும், எலும்புகளாகவும் ஆகி விட்டாலும், நாம் மீண்டும் நிச்சயமாக எழுப்பப்படுவோமா?' என்று கேட்டுக் கொண்டு இருந்தனர். 'அல்லது, முன்னோர்களான நம் தந்தையருமா? (எழுப்பப்படுவர்?' என்றும் கூறினர்.) (நபியே!) நீர் கூறும்: '(நிச்சயமாக உங்களில்) முன்னோர்களும், பின்னோர்களும். 'குறிப்பிட்ட நாளின் ஒரு நேரத்தில் (நீங்கள் யாவரும்) ஒன்று கூட்டப்படுவீர்கள். அதற்குப் பின்னர்: 'பொய்யர்களாகிய வழி கேடர்களே! நிச்சயமாக நீங்கள், ஜக்கூம் (என்னும் கள்ளி) மரத்திலிருந்தே நீங்கள் புசிப்பவர்கள். ஆகவே, 'அதைக் கொண்டே வயிறுகளை நிறப்புவீர்கள். அப்புறம் அதன்மேல் கொதிக்கும் நீரையே குடிப்பீர்கள். 'பின்னும் ஹீம் - தாகமுள்ள ஒட்டகை குடிப்பதைப் போல் குடிப்பீர்கள்.' இதுதான் நியாயத் தீர்ப்பு நாளில் அவர்களுக்கு விருந்தாகும். (ஸூறா அல்-வாகிஆ: 45-56)

உலகத்தில் ஒருவன் எப்போதாவது ஒருமுறை கடுமையான தொண்டை வலி அல்லது வயிற்று வலி ஏற்படும். ஆனால் நரகத்தில், ஒரு நிமிடம் கூட கடுமையான சித்திரவதை காரணமாக வேதனை படாமல் செல்வதில்லை. நிராகரிப்பாளர்களுக்கு கொடுக்கப்படும் உணவு அவர்களை கசக்கி பிழிந்து விடும். அவர்களால் அதை முழுங்க முடியுமானால், அது அவர்களது வயிற்றில் உருக்கப்பட்ட ஈயத்தை போன்று கொதிக்கும். (ஸூறா அத்-துகான்: 44). அது ஒரு போதும் திருப்தி அடையாது. இவ்வாறு நரகவாசிகள் நிரந்தரமான பயங்கரமான பசியை கொண்டு வேதனை செய்யப்படுவார்கள்.

குற்றவாளிகளை (அவர்கள்) தாகம் தீர்த்துக் கொள்வதற்காக நரகை நோக்கி நாம் விரட்டுவோம். (ஸூறா மர்யம்: 86)

கொதிக்கும் நீரை போன்று சலமும் நரகவாசிகளுக்கு கொடுக்கப்படும். மனித உடலின் கழிவுகளில் ஒன்றான இந்த மோசமான வாசனையுடைய திரவம் இரண்டாவது பானமாக கொடுக்கப்படும். சலம் இரத்தத்துடன் சேர்த்து நரகவாசிகளுக்கு கொடுக்கப்படும். இன்னொரு வசனத்தில், சலம் கொதிக்கும் நீருடன் சேர்த்து கொடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் அவன் சலத்தின் அருவருப்பான ருசியை கொதிக்கும் நீருடன் கொடுப்பதுன் மூலம் அவனது அனைத்து புலன்களின் மூலமுன் வேதனையை உணர்ந்து கொள்வான்.

அவை அருவருப்பாகவும் தாங்கி கொள்ளமுடியாததாகவும் இருந்த போதிலும் நிராகரிப்பாளர்கள் புசிப்பார்கள். இது அவர்களின் பசியை உணர்த்துகிறது. இந்த வேதனையை ஒரு முறை சுவைத்தவர்கள்இ இன்னொன்றை தேடி ஓடுவார்கள். இது நிரந்தரமாக நடைபெறும். என்றுமே தணியாத தாகத்தின் காரணமாக நரகவாசிகள் வேதனை செய்யப்படுவார்கள்.

அவர்கள் அதில் குளிர்ச்சியையோ, குடிப்பையோ சுவைக்கமாட்டார்கள். கொதிக்கும் நீரையும் சீழையும் தவிர. (அதுதான் அவர்களுக்குத்) தக்க கூலியாகும். (ஸூறா அன்-நபா: 24-26)

'எனவே, அவனுக்கு இன்றைய தினம் இங்கே (அனுதாபப்படும்) எந்த நண்பனும் இல்லை.' 'சீழ் நீரைத் தவிர, அவனுக்கு வேறு எந்த உணவுமில்லை.' 'குற்றவாளிகளைத் தவிர, வேறு எவரும் அதைப் புசியார்.' (ஸூறா அல்-ஹாக்கா: 35-37)

நிராகரிப்பாளர்கள் இந்த பானத்தை முழுங்குவதற்கு கஷ்டப்படுவார்கள். அவர்களால் முடியாது. இரத்தமும் சலமும் அவர்களை வாட்டி எடுத்த போதிலும் அவர்களால் மரணிக்க முடியாது.

அவனுக்கு முன்னால் நரகம் தான் இருக்கிறது, இன்னும் அவனுக்கு (துர் நாற்றமுள்ள) சீழ் நீரே குடிக்கக் கொடுக்கப்படும். அதை அவன் (சிரமத்தோடு) சிறிது சிறிதாக விழுங்குவான் எனினும் அது அவன் தொண்டையில் எளிதில் இறங்காது ஒவ்வொரு திசையிலிருந்தும் அவனுக்கு மரணம் வந்து கொண்டிருக்கும் எனினும் அவன் இறந்து விடுபவனும் அல்லன் அன்றியும் அவன் முன்னே (மிகக்) கொடிய வேதனையும் உண்டு. ( ஸூறா இப்றாஹீம்: 16-17)

இத்தகைய மோசமான சூழ்நிலையில்இ விசேடமான முறை மூலம் நரகவாசிகள் சுவர்கத்தில் இருப்பவர்களை காண்பார்கள். அவர்கள் சுவர்க்கவாசிகள் மகிழ்ச்சியை காண்பார்கள். இது அவர்களுக்கு வேதனையை மேலும் அதிகமாக்கும். நரகவாசிகள் நற்பேறுகளுக்காக கெஞ்சுவார்கள். அவர்களுக்கு பதிலளிக்கப்பட மாட்டாது.

> நரகவாசிகள், சுவர்க்கவாசிகளை அழைத்து, 'தண்ணீரில் கொஞ்சமேனும் அல்லது அல்லாஹ் உங்களுக்கு அளித்துள்ள உணவில் சிறிதேனும் எங்களுக்குக் கொடுங்கள்' எனக் கேட்பார்கள் அதற்கு அவர்கள்: 'நிச்சயமாக அல்லாஹ் இவ்விரண்டையும் காஃபிர்கள் மீது தடுத்து (ஹராம் ஆக்கி) விட்டான்' என்று கூறுவார்கள். (ஸூறா அல்-ஆரஃப்: 50)

மேலும் நரகவாசிகளின் ஆடைகளும் அவர்களுக்காகவே விசேடமாக தயார்படுத்தப்பட்டதாகும். மனித தோல் மிகவும் மென்மையான திசுக்களால் ஆனது . சூடான அடுப்பையோ அல்லது சட்டியையோ ஒரு சில நொடிகள் தொட்டாலும் தாங்கி கொள்ள முடியாதளவு வேதனை ஏற்படுகிறது. அவ்வாறு பாதிக்கப்பட்டவன் பல நாட்கள் அதன் வேதனையை உணருவான். அவனது காயம் சிவந்து பழுக்கிறது. நரகம்இ சூடாக்கப்பட்ட இரும்பை விட தோலை போர்தியுள்ள சூடான உடைகளால் தோல் எரியும்.

> .ஆனால் எவர் (இறைவனை) நிராகரிக்கிறார்களோ அவர்களுக்கு நெருப்பிலிருந்து ஆடைகள் தாயாரிக்கப்படும்( ஸூறா அல்-ஹஜ்: 19)
>
> அவர்களுடைய ஆடைகள் தாரால் (கீல் எண்ணையினால்) ஆகி இருக்கும் இன்னும் அவர்களுடைய முகங்களை நெருப்பு மூடி இருக்கும (ஸூறா இபுறாஹீம்: 50)
>
> அவர்களுக்கு நரகத்தில் (நெருப்பு) விரிப்புகளும், (போர்த்திக் கொள்வதற்கு) அவர்களுக்கு மேலே நெருப்புப் போர்வைகளும் உண்டு - இன்னும் இவ்வாறே அநியாயம் செய்பவர்களுக்கு நாம் கூலி கொடுப்போம். ( ஸூறா அல்-ஆரப்: 41)

# துன்புறுத்தும் வானவர்கள்

அவர்கள் இவ்வாறு பலவகையான சித்திரவதைகளுக்கு உள்ளான போதிலும் நரகவாசிகளுக்கு உதவ எந்த ஒரு ஆன்மாவும் இருக்காது. அதிலிருந்து எந்த ஆன்மாவிற்கும் தன்னை காப்பாற்றி கொள்ள முடியாது.. நிர்கதியான நிலை அவர்களுக்கு ஒருவிதமான தனிமையை ஏற்படுத்தும். பிழை செய்தவர்களை பற்றி இறைவன் குர்ஆனில் எனவே, அவனுக்கு இன்றைய தினம் இங்கே (அனுதாபப்படும்) எந்த நண்பனும் இல்லை. (ஸூறா அல்-ஹாக்கா: 35) என்று கூறுகிறான். அவர்களுக்கு மத்தியில் சித்திரவதை செய்யும் வானவர்கள் இருப்பார்கள். அவர்கள் கடுமையான தாங்கி கொள்ள முடியாத வேதனைகளை கொடுப்பார்கள். அவர்கள் இரக்கமற்ற பயங்கரமான கடுமையான காவல்காரர்கள்இ அவர்கள் நரகவாசிகளுக்கு கடுமையான வேதனைகளை ஏற்படுத்துவதே அவர்களின் வேலையாகும். அவர்கள் படைக்கப்பட்டதன் நோக்கம் இறைவனுக்கு எதிராக செயல்பட்டவர்களை பழிவாங்குவதாகும். அவர்கள் அவர்களுடைய வேலையை கவனமாக செய்து முடிப்பார்கள்.

> விசுவாசிகளே! உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் (நரக) நெருப்பை விட்டுக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் அதன் எரிபொருள் மனிதர்களும், கல்லுமேயாகும் அதில் கடுமையான பலசாலிகளான மலக்குகள் (காவல்) இருக்கின்றனர் அல்லாஹ் அவர்களை ஏவிய எதிலும் அவர்கள் மாறு செய்ய மாட்டார்கள் தாங்கள் ஏவப்பட்டபடியே அவர்கள் செய்து வருவார்கள். (ஸூறா அத்-தஹ்ரீம்: 6)
>
> அப்படியல்ல: அவன் விலகிக் கொள்ளவில்லையானால், நிச்சயமாக நாம் (அவனுடைய) முன்னெற்றி ரோமத்தைப் பிடித்து அவனை இழுப்போம். தவறிழைத்து பொய்யுரைக்கும் முன்னெற்றி ரோமத்தை, ஆகவே, அவன் தன் சபையோரை அழைக்கட்டும். நாமும் நரகக் காவலாளிகளை அழைப்போம். (ஸூறா அல்-அலக்:15-18)

வானவர்களின் சித்திரவதை அவர்களின் மீது இறைவன் கொண்டுள்ள சாபத்தையும், கோபத்தையும் நரகவாசிகளுக்கு உணரசெய்யும். அவர்கள் நரகவாசிகளை வேதனையின் விவரிக்க முடியாத அளவிற்கு கொண்டு செல்வார்கள்..

ஒரு விடயத்தை முக்கியமாக இங்கு குறிப்பிட வேண்டும். அதாவது சித்திரவதை செய்யும் வானவர்கள் சிறிதளவேனும் அநீதி செய்ய மாட்டார்கள். அவர்கள் நிராகரிப்பாளர்கள் விரும்பும் வகையில் வேதனை செய்வார்கள். இறைவனின் நீதியின் காரணமாக, இந்த வானவர்கள், இறைவனுக்கு கட்டுப்பட்டவர்களாக இந்த கடமையை சந்தோஷத்துடன் செய்வார்கள்.

## நரகத்தில் உளரீதியான வேதனை

இதுவரை நரகத்தின் உடல் ரீதியான வேதனையை பற்றி பார்தோம். இத்தகைய உடல் ரீதியான சித்திரவதையை போன்று உளரீதியான வேதனையும் நரகத்தில் காணப்படும். கவலைஇ கேவலம்இ நம்பிக்கையின்மைஇ வருத்தம்இ மோசமாக நடத்தப்படுவதை பற்றிய சிந்தனைஇ போன்ற வேதனைகளின் காரணமாக இந்த உணர்வுகள் ஏற்படும்.

## நெருப்பு இதயத்தை தொடும்

ஏதோ ஒருவகையில் ஒவ்வொருவரும் உளரீதியான வேதனைனகளை அனுபவிக்கிறோம். உதாரணமாக நெருங்கிய நண்பர்இ வாழ்கை துணைஇ குழந்தைகள் இழப்பது அல்லது மிகவும் நம்பிக்கைக்குரிய ஒருவரால் ஏமாற்றப்படுவது போன்ற காரணங்களின் மூலம் தாங்க முடியாத கவலையடைகிறோம். உண்மையில் இந்த கவலையானது ஒருவர் இறந்து விட்டால் அல்லது நம்பிக்கை துரோகம் செய்யும் போது அதற்கு பகரமாக இறைவன் இத்தகைய விசேட துன்பங்களை ஒருவரது மனதில் ஏற்படுத்துகிறான். ஒவ்வொருவரதும் சுய தேவைகள் அன்புஇ பாராட்டுஇ பயம்இ நம்பிக்கைஇ நட்பு போன்ற உணர்வுகளை கொண்டு இறைவனுக்கு வெளிப்படுத்த வேண்டும். இதை செய்ய தவறுவதோடு இந்த உணர்வுகளை மற்றவர்கள்இ அதாவது அவர்களும் இறைவனால் படைக்கப்பட்டு இறைவனது அன்பை நாடுகிறவர்களாக இருப்பதால்இ வேறுவகையில் கூறுவதானால்இ இறைவனுக்கு இணை கற்பிப்பதுஇ அதனால் இந்த வேதனை ஏற்படுகிறது. சிலை வணக்கம் புரிந்தவர்கள் இத்தகைய வேதனையை சுவைப்பார்கள். ஆகவே அவர்கள் இதிலிருந்து படிப்பினை பெற்று அவர்கள் மரணிப்பதற்கு முன்னால் இறைவனிடம் மன்னிப்பு கேட்டு இறைவன் பால் திரும்ப வேண்டும். இறைவனது இணையாக சிலைகளை மட்டும் கருத கூடாது. மாறாக மக்களால் நேசிக்க படக்கூடிய சொத்துகள், பணம்இ புகழ், புதையல் போன்றவைகள், சுருங்க கூறினால இறைவனை தவிர்நது இறைவனை விட அதிகமாக நேசிக்கப்பட கூடிய அனைத்தும் இறைவனுக்கு எதிரான சிலைகளாகவே கருதப்படும்.

இந்த உலகில் இத்தகைய சிலைகளில் ஒன்றை இழப்பதால் ஒருவரது உள்ளத்தில் ஏற்படும் வேதனையானது ஒருவன் நரகத்தில் அனுபவிக்க போகும் வேதனையின் சிறு வெள்ளோட்டமாகும். உண்மையில் அது ஒரு எச்சரிக்கையாகும். நரகத்தில், சிலை வணயங்கியவருக்கு உண்மையான முடிவில்லாத வேதனை காத்திருக்கிறது. சிலவேளை இந்த உளரீதியான வேதனை மிக கடுமையாகி, உடல் ரீதியான வேதனையே பரவாயில்லை என்று நினைப்பான். தற்கொலை மூலம் தப்பிக்க எண்ணுவான். இந்த உளரீதியான வேதனையை பற்றி குர்ஆன் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. அதை குர்ஆன் இதயத்தை தொடும் நெருப்பு என்று வர்ணிக்கிறது

> குறை சொல்லிப் புறம் பேசித் திரியும் ஒவ்வொருவனுக்கும் கேடுதான். (அத்தகையவன் செல்வமே சாசுவதமென எண்ணிப்) பொருளைச் சேகரித்து எண்ணிக் கொண்டே இருக்கின்றான். நிச்சயமாகத், தன் பொருள் தன்னை (உலகில் நித்தியனாக) என்றும் நிலைத்திருக்கச் செய்யுமென்று அவன் எண்ணுகிறான். அப்படியல்ல, நிச்சயமாக அவன் ஹுதமாவில் எறியப்படுவான். ஹுதமா என்ன என்பதை உமக்கு அறிவித்தது எது? அது எரிந்து கொண்டிருக்கும் அல்லாஹ்வின் நெருப்பாகும். அது (உடலில் பட்டதும்) இருதயங்களில் பாயும். நிச்சயமாக அது அவர்களைச் சூழ்ந்து மூட்டப்படும். நீண்ட கம்பங்களில் (அவர்கள் கட்டப்பட்டவர்களாக). (ஸூறா அல்-ஹுமஸா:1-9)

உலகிலுள்ள மிக பயங்கரமான வேதனை சிலகாலங்களில் மறைந்து போகும். அதன் வடுக்கள் சிலவேளை எஞ்சியிருந்த போதிலும் மிக பயங்கரமான வடுக்கள் மறைந்து விடும். நரகத்தில், இதை விட கொடிய வேதனை நிராகரிப்பாளனின் இதயத்தை துளையிட்டு உள்ளே சென்று அங்கு நிரந்தரமாக தங்கி விடும்.

இது தவிர உளரீதியான வேதனை நம்பிக்கையின்மைஇ கேவலம்இ வெறுப்பு போன்ற உணர்வுகளுக்கு மத்தியில் ஒருவகையான மன உளைச்சளை ஏற்படுத்தும். உடல் ரீதியான வேதனைகளுக்கு எந்தவகையிலும் குறைவின்றி நிராகரிப்பாளர்கள் கொடுமையான உளரீதியான வேதனைக்கு தள்ளப்படுவார்கள்.

# கேவலம்

பல வசனங்கள் நரகவாசிகளுக்கு இழிவான கேவலமான வேதனைகள் நரகத்தில் காத்துக்கொண்டிருக்கின்றன என்று சொல்கின்றன. அது அவர்களின் மடமை மற்றும் பெருமை காரணமாக அவர்களுக்கு கிடைத்த பரிசாகும்.

இந்த உலகில் மற்றவர்கள் தன்னை பார்த்து பொறாமை பட்டு தனது சமூக அந்தஸ்து மற்றும் தன்மைகளை பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் நிராகரிப்பாளனின் முக்கியமான இலக்குகளில் ஒன்றாகும். சிறந்த தொழில், குழந்தைகள், அழகான வீடு, வாகனங்கள் மற்றும் அதை போன்ற உலக விடயங்கள் ஒருவனுக்கு தன்னை முன்னிலை படுத்துவதில் முக்கியத்துவம் அடைவதை பார்க்கிறோம். உண்மையில் குர்ஆனில் ஒருவனது சொத்து சுகங்களை கொண்டு பெருமை அடிப்பதை இந்த உலகின் வீணான செயல்களில் ஒன்று என்று கூறப்பட்டுள்ளது.

பெருமை பாராட்டுவதானது மறுமையில் உடல்ரீதியான மற்றும் கேவலமான வேதனையாக மாறும். அதற்கு காரணம்இ நிராகரிப்பாளன், புகழுக்கெல்லாம் உரியவனுமாகவும் இருக்கின்றான் (ஸூ றா அல்-பகறா:267) என்பதை மறந்து விட்டான். மேலும் தன் (இழிவான) இச்சையையே தன் தெய்வமாக எடுத்துக் கொண்டவனை. (ஸூ றா அல்-புர்கான்:43). இதன் காரணமாக அவன் இறைவனை துதிப்பதிலும் புகழ்வதிலிருந்தும் தவிர்ந்து தனக்கு நன்மதிப்பை பெறுவதிலேயே தனது நேரங்களை செலவிட்டான். இறைவனது அங்கீகாரத்தை பெறுவதை விட்டும் விலகி மற்ற மக்களின் நன்மதிப்பை பெறுவதிலேயே தனது வாழ்வை செலவிட்டான். இதனால் தான் மற்றவர்களுக்கு முன்னால் கேவலப்படுத்தப்படும் போது உடைந்து போகிறான்.

மற்றவர்களுக்கு முன்னால் கேவலப்படுத்தப்படுவது தான் நிராகரிப்பாளனை பொறுத்தவரையில் பயங்கரமான செயலாகும். சில மக்கள் இழிவுபடுவதை விட நல்ல நிலையிலேயே மரணிப்பதை விரும்புகிறார்கள். இந்த நரகவாசிகளின் இந்த நிலைக்கு முக்கிய காரணம் அவர்களின் தற்பெருமையாகும். இதற்கு முன்னால் இந்தளவிற்கு கேவலப்படுத்தப்பட்டிருக்க மாட்டார்கள். இதை பற்றி பல வசனங்கள் கூறுவதாவது:

> அன்றியும் (நரக) நெருப்பின் முன் நிராகரிப்பவர்கள் கொண்டுவரப்படும் நாளில், 'உங்கள் உலக வாழ்க்கையின் போது உங்களுக்குக் கிடைத்திருந்த மணமான பொருட்களையெல்லாம், வீண் செலவு செய்து, (உலக) இன்பம் தேடினீர்கள், 'ஆகவே நீங்கள் பூமியில் அநியாயமாகப் பெருமையடித்துக் கொண்டும், வரம்பு மீறி (வாழ்ந்து) கொண்டும் இருந்த காரணத்தால், இழிவு தரும் வேதனையை இன்று நீங்கள் கூலியாகக் கொடுக்கப்படுகிறீர்கள்' (என்று அவர்களுக்குக் கூறப்படும்). (ஸூ றா அல்-அஹ்காப்:20)
>
> இன்னும், அவர்களை (உடனுக்குடன் தண்டிக்காமல்) நாம் தாமதிப்பது (அந்த) காஃபிர்களுக்கு - நிராகரிப்பவர்களுக்கு - நல்லது என்று அவர்கள் கருத வேண்டாம் (தண்டனையை) நாம் அவர்களுக்குத் தாமதப் படுத்துவதெல்லாம் அவர்கள் பாவத்தை அதிகமாக்குவதற்கே தான் - அவர்களுக்கு இழிவு தரும் வேதனையும் உண்டு. (ஸூ றா ஆல-இம்றான்: 178)

நிராகிப்பாளாகள் பல்லாயிரக்கணக்காண அவமானங்களுக்கு உள்ளாவார்கள் இவ்வுலகிலுள்ள விலங்குகள் இதை விட குறைவாகவே பெற்றுக்கொள்கின்றன. இரும்பு சாட்டைகள், சங்கிலிகள் போன்றவைகள் அவமானப்படுத்துவதற்காகவே படைக்கப்பட்டுள்ளன. நம்பிக்கையற்றவர்கள் தூண்களில் சங்கிலிகளால் கட்டப்படுவார்கள்.

உண்மையில் எல்லா வேதனைகளினதும் முக்கிய கருப்பொருள் அவமானப்படுத்துவதாகும். உதாரணமாகஇ அவர்கள் நெருப்பில் வீசப்படுவதன் மூலம் அவன் அவமானப்படுத்தப்படுகிறான். நிராகரிப்பாளன் உயிர்தெழுந்து நரகத்திற்கு செல்வான் என்று தீர்ப்பளிக்கப்பட்ட அந்த கனம் முதல் இந்த கொடுமையான வேதனைகள் ஆரம்பித்துவிடும். மேலும் இந்த தண்டனை ஒருபோதும் குறைவதில்லை.

> எனவே, அந்நாளில் மனிதர்களிடமோ, ஜின்களிடமோ, அவர்களுடைய பாவத்தைப் பற்றி, (வாய் மொழியாகக்) கேட்கப்படமாட்டாது. . குற்றவாளிகள், அவர்களுடைய (முகக்குறி) அடையாளங்களை கொண்டே அறியப்படுவார்கள் - அப்போது (அவர்களுடைய) முன் நெற்றி உரோமங்களும், கால்களும் கொண்டு பிடிக்கப்படுவார்கள் (ஸூ றா அர்-ரஹ்மான்: 39-41)

நரகத்தில் விலங்குகளை விட மோசமானவைகளாகவே நடத்தப்படுவார்கள். அவர்களது முடியை பிடித்து, தரையில் இழுத்து செல்லப்பட்டு நரகத்தில் வீசப்படுவார்கள். அதை தடுக்க முடியாமல் உதவியை நாடுவான். ஆனாலும் அவன் அதை பெற்று கொள்ள மாட்டான். நிர்கதியான உணர்வு வேதனையை கூட்டும்.

அப்படியல்ல: அவன் விலகிக் கொள்ளவில்லையானால், நிச்சயமாக நாம் (அவனுடைய) முன்னெற்றி ரோமத்தைப் பிடித்து அவனை இழுப்போம். தவறிழைத்து பொய்யுரைக்கும் முன்னெற்றி ரோமத்தை, ஆகவே, அவன் தன் சபையோரை அழைக்கட்டும். நாமும் நரகக் காவலாளிகளை அழைப்போம். (ஸூ றா அல்-அலக்:15-18)

எவர்கள் நரகத்திற்குத் தங்கள் முகம் குப்புற (இழுத்துச் செல்லப் பெற்று) ஒன்று சேர்க்கப் படுவார்களோ, அவர்கள் தங்குமிடத்தால் மிகவும் கெட்டவர்கள் பாதையால் பெரிதும் வழி கெட்டவர்கள். (ஸூ றா அல்-புர்கான்: 34)

## ஒற்றுமை

இன்னும்: எவர் தீமையைக் கொண்டு வருகிறாரோ அவர்களுடைய முகங்கள் குப்புற (நரக) நெருப்பில் தள்ளப்படும் 'நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றுக்கு அன்றி (வேறு) நீங்கள் கூலி கொடுக்கப்படுவீர்களா?' (என்று கூறப்படும்.) (ஸூ றா அன்-நம்ல்: 90)

அவர்களுடைய முகங்களின் மீது அவர்கள் நரகத்திற்கு இழுத்துச் செல்லப்படும் நாளில், 'நரக நெருப்புத் தீண்டுவதைச் சுவைத்துப் பாருங்கள்' (என்று அவர்களுக்கு கூறப்படும்). (ஸூ றா அல்-கமர்: 48)

கேவலமாக நடத்தப்படுவது ஒரு கட்டத்தில் அதிகாக்கும். உடல்ரீரியான வலிகளை தவிர்ந்து, அவமான உணர்வுகள் நரகவாசிகளை மேலும் சோர்வடைய செய்யும்.

அவனை பிடியுங்கள். நரகத்தின் மைய பகுதிக்கு அவனை இழுத்து செல்லுங்கள். பின்னர் வேதனை தரும் கொதித்த நீரை அவன் தலைக்கு மேல் ஊற்றுங்கள் (என்று நரக காவலாளிகளுக்கு கூறப்படும். அத்துடன் நரகிலுள்ள பாவிகளிடம்). சுவைத்து பார். நிச்சயமாக நீ தான் கண்ணியத்திற்குரியவன். சுங்கைக்குரியவன் (என்று ஏளனமாக கூறப்படும்). நிச்சயமாக இது எதனை கொண்டு நீங்கள் சந்தேகம் கொண்டிருந்தீர்களோ அதுவாகும். (என்று கூறப்படும்.) (ஸூ றா அத்-துகான்: 47-50)

நிராகரிப்பாளர்களை அவமானப்படுத்துவதற்காக விசேடமாக சாட்டைகளும் சங்கிலிகளும் பயன்படுத்தப்படும்..

'(அப்போது) அவனைப் பிடித்து, பிறகு அவனுக்கு அரிகண்டமும் (விலங்கும்) மாட்டுங்கள்.' 'பின், அவனை நரகத்தில் தள்ளுங்கள். 'பின்னர், எழுபது முழ நீளமுள்ள சங்கிலியால் அவனைக் கட்டுங்கள்' (என்று உத்தரவிடப்படும்). 'நிச்சயமாக அவன் மகத்துவமிக்க அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்ளாதிருந்தான்.' 'அன்றியும், அவன் ஏழைகளுக்கு(த் தானும் உணவளிக்கவில்லை, பிறரையும்) உணவளிக்கத் தூண்டவில்லை.' (ஸூ றா அல்-ஹாக்கா:30-34)

இந்த உலகத்தில், பயங்கர விலங்குகளுக்கு மட்டுமே விலங்கிடப்படும். அதை போன்று மனிதர்களில் குணப்படுத்த முடியாத மற்றும் மோசமாக புத்தி பேதலித்தவர்கள் மட்டுமே விலங்கிடப்படுவார்கள். நரகத்தில் வீசப்படுவர்கள் தான் படைப்புகளிலேயே மோசமான படைப்பாகும். அதானால் தான் அவர்கள் மேலுள்ள வசனத்தில் கூறப்பட்டுள்ளதை போன்று எழுபது முழம் சங்கிலியால் கட்டப்படுவார்கள். மற்ற வசனங்களும் அவர்களை வந்தடையும் மோசமான வேதனைகளை பற்றி கூறுகிறது.

அவர்களுடைய கழுத்துகளில் மோவாய்க்கட்டைகள் வரை அரிகண்டங்களுடன் விலங்குகளுடனும் இழுத்துக் கொண்டு வரப்பட்டு கொதிக்கும் நீரிலும், பிறகு (நரக)த் தீயிலும் கரிக்கப்படுவார்கள். பிறகு அவர்களுக்குச் சொல்லப்படும்: '(அல்லாஹ்வையன்றி,) நீங்கள் (அவனுக்கு) இணைவைத்துக் கொண்டிருந்தவை எங்கே?' என்று. (ஸூ றா அல்-முஃமின்: 71-73)

(நபியே! இந்நிராகரிப்போர் மறுமையயை பொய்யாக்குவது பற்றி) நீர் ஆச்சரியப்படுவீராயின் நிச்சயமாக நாங்கள் (இறந்து) மண்ணாக ஆகிவிட்டாலுமா நாம் (மீண்டும்) புதிதாக படைக்கப்படுவோம் என்று

அவர்கள் கூறவது தான் ஆச்சரியமானதாகும். அவர்கள் தாம் தங்களது இறைவனை நிராகரித்தவர்கள். மேலும் அவர்களுடைய கழுத்துக்களில் அரிகண்டங்கள் இருக்கும். இன்னும் அவர்கள் நரகவாசிளே! அவர்கள் அதில் நிரந்தரமாக தங்கியிருப்பார்கள். (ஸூறா அர்-ரா∴த்:5)

இன்னும் அந்நாளில் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டவர்களாகக் குற்றவாளிகளை நீர் காண்பீர். அவர்களுடைய ஆடைகள் தாரால் (கீல் எண்ணையினால்) ஆகி இருக்கும் இன்னும் அவர்களுடைய முகங்களை நெருப்பு மூடி இருக்கும். அல்லாஹ் ஒவ்வோர் ஆத்மாவுக்கும் அது சம்பாதித்ததற்கான கூலி கொடுப்பதற்காகவே (அவர்களை அல்லாஹ் இவ்வாறு செய்வான்.) நிச்சயமாக அல்லாஹ் கேள்வி கணக்குக் கேட்பதில் மிகவும் தீவிரமானவன். (ஸூறா இபுறாஹீம்:49-51)

(மு∴மின்களும், மு∴மின்களல்லாதவருமான) இரு தரப்பாரும் தம் இறைவனைப் பற்றித் தர்க்கிக்கின்றனர் ஆனால் எவர் (இறைவனை) நிராகரிக்கிறார்களோ அவர்களுக்கு நெருப்பிலிருந்து ஆடைகள் தாயாரிக்கப்படும் கொதிக்கும் நீர் அவர்கள் தலைகளின் மேல் ஊற்றப்படும். அதைக் கொண்டு அவர்களுடைய வயிறுகளிலுள்ளவையும், தோல்களும் உருக்கப்படுமஇன்னும் அவர்களுக்காக இரும்பினாலான தண்டங்களும் உண்டு. (ஸூறா அல்-ஹஜ்:19-21)

அவமானப்படுத்தப்பட்டதன் விளைவு நரகவாசிகளின் முகங்களில் தெரியும். மோசமான வியாதியுள்ளவர்கள் அவமானப்படுத்தப்பட்டு மோசமாக நடத்தப்படுவதை இந்த உலகத்தில் பாரக்க கூடியதாக இருசு்கிறது. நரகத்தில் அவமானப்படுத்தப்பட்டதன் விளைவை நரகவாசிகளின் தோற்றத்தை மாற்றும் என்று கீழ் வரும் வசனம் கூறுகிறது.

அந்நாளில் சில முகங்கள் இழிவுபட்டிருக்கும். (ஸூறா அல்-காஷியா:2)

இதுவரை நாம் கூறிய அவமானங்களை மட்டுமல்லாது வேறுவகையான அவமானங்களும் நரகத்தில் கட்டவிழ்தப்படும் என்பதை நினைவில் வைத்து கொள்ளவேண்டும். குர்ஆனில், அவமானம் என்ற சொல் கூறப்பட்ட போதிலும் சில உதாரணங்களே தரப்பட்டுள்ளன. இருப்பினும், இந்த சொல்லுக்கு பரந்த கருத்துகள் காணப்படுகின்ற போதிலும் அதை நாம் சில உதாரணங்களை கொண்டு மட்டுப்படுத்த முடியாது. இந்த உலகத்தில் மனிதனது ஆன்மாவோடு தொடர்புடைய அனைத்து உணர்வுகள், நடவடிக்கைகள் அல்லது நிகழ்வுகள் அனைத்தும் நரகத்திலும் கிடைக்கும்.

## திரும்ப பெற முடியாத கவலை

அவன் உயிர்தெழுந்த அந்த நேரத்தில் நிராகரிப்பாளன் அவன் செய்த தவறை உணர்ந்து கொள்வான். அவனது மோசமான தவறால் ஏற்பட்ட கவலை அவனை மோசமாக வாட்டி எடுக்கும். அவனது மோசமான நிலையானது அவனது ஆழமான கவலையால் அதிகரிக்கும்.

நிராகரிப்பாளன் அவன் உலகத்தில் செய்த செயல்களை பார்க்கும் போது, இந்த வாழ்கையில் எவ்வித மரியாதையையும் ஏற்படுத்த எந்த சந்தர்பமும் கிடையாது என்பதை உணர்ந்து கொள்வான். இருப்பினும் அவன் இன்னொரு சந்தர்பம் தருமாறு கேட்பான். இந்த ஆன்மாவோடு அவனது பழைய வாழ்கைக்கு திரும்பி அவனது பாவத்திற்கு மன்னிப்பை பெற்று கொள்ள விரும்புவான். அவன் முன்பு எல்லையில்லா இன்பமான வாழ்கையை அனுபவித்த அவனது நண்பர்களையோ அல்லது அன்புக்குரியவர்களையோ சந்திக்க விரும்ப மாட்டான். அனைத்து நட்புகளும், பந்தங்களும், அறுந்து விடும். மக்கள் வாழ்வில் பின்பற்றும் வாழ்கை முறைகள் மற்றும் கலாச்சாரங்கள், அவர்கள் வியர்வை சிந்தி கட்டிய வீடுகள், வாகனங்கள், இல்லற துணைகள், குழந்தைகள், அலுவலகங்கள், அவர்கள் ஆதரிக்கும் கொள்கை கோட்பாடுகள் அனைத்தும் அதன் மதிப்பையும் செல்வாக்கையும் இழந்துவிடும். அவைகள் வேதனைகளால் மாற்றீடு செய்யப்படும். அன்றைய தினம் ஏற்படும் பயத்தை பற்றி இவ்வாறு கூறப்படுகிறது.

நரக நெருப்பின்முன் அவர்கள் நிறுத்தப்படும்போது (நபியே!) நீர் அவர்களைப் பார்ப்பீராயின், ‘எங்கள் கேடே! நாங்கள் திரும்ப (உலகத்திற்கு) அனுப்பட்டால் (நலமாக இருக்குமே) அப்பொழுது நாங்கள் எங்களின் இறைவனின் அத்தாட்சிகளைப் பொய்ப்பிக்க மாட்டோம் நாங்கள் மு∴மின்களாக இருப்போம்’ எனக் கூறுவதைக் காண்பீர். எனினும், எதை இவர்கள் முன்பு மறைத்திருந்தார்களோ அது இவர்களுக்கு வெளிப்பட்டு விட்டது இவர்கள் (உலகத்திற்குத்) திருப்பி அனுப்பப்பட்டாலும் எதை விட்டு அவர்கள் தடுக்கப்பட்டார்களோ அதற்கே மீளுவார்கள் நிச்சயமாக அவர்கள் பொய்யர்களே. அன்றியும், ‘இவ்வுலகத்தில் நாம் வாழ்ந்திருப்பதைத் தவிர (அப்பால் மறுமை வாழ்வு என்று) ஒன்றும் இல்லை நாம் (மரணத்திற்குப் பின் மறுபடியும்) எழுப்பப் பட மாட்டோம்’ என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இவர்கள் (உயிர்ப்பிக்கப்பட்டு) இவர்களுடைய இறைவனின் முன் நிறுத்தப்படும்போது இவர்களை நீர் காண்பீராயின் (அது சமயம் இறைவன் கேட்பான்) இது உண்மையல்லவா? என்று ’ஆம்! எங்களுடைய ரப்பின் மீது ஆணையாக (மெய்தான்)’ என்று இவர்கள் கூறுவார்கள் அப்போது, ‘நீங்கள் நிராகரித்துக் கொண்டிருந்த காரணத்தால் வேதனையை அனுபவியுங்கள்’ என்று அல்லாஹ் கூறுவான். (ஸூறா அல்-அன்ஆம்: 27-30)

## நரகவாசிகளுக்கிடையே ஏற்படும் வாக்குவாதம்

இந்த உலகில் மிக முக்கியமானவைகளாக கருதப்படுகின்ற சமூக அந்தஸ்துகளும் பாரம்பரிய வழக்கங்களும் நரகத்தில் அதன் செல்வாக்கை இழந்துவிடும். அங்கு மக்களும் அவர்களது தலைவர்களும் ஒருவருக்கொருவர் சாபமிட்டு கொள்வார்கள்.

(இத்தவறான வழியில்) யாரைப் பின்பற்றினார்களோ அ(த்தலை)வர்கள் தம்மைப் பின்பற்றியோரைக் கைவிட்டு விடுவார்கள், இன்னும் அவர்கள் வேதனையைக் காண்பார்கள் அவர்களிடையேயிருந்த தொடர்புகள் யாவும் அறுபட்டுவிடும். (அத்தலைவர்களைப்) பின்பற்றியவர்கள் கூறுவார்கள்: ‘நமக்கு (உலகில் வாழ) இன்னொரு வாய்ப்புக் கிடைக்குமானால், அ(த்தலை)வர்கள் நம்மைக் கைவிட்டு விட்டதைப் போல் நாமும் அவர்களைக் கைவிட்டு விடுவோம்.’ இவ்வாறே அல்லாஹ் அவர்கள் செய்த செயல்களை அவர்களுக்குப் பெருந்துக்கம் அளிப்பதாக எடுத்துக் காட்டுவான் அன்றியும், அவர்கள் நரக நெருப்பினின்றும் வெளியேறுகிறவர்களும் அல்லர். (ஸூறா அல்-பகறா: 166-167)

நெருப்பில் அவர்களுடைய முகங்கள் புரட்டப்படும் அந்நாளில், ‘ஆ! கை சேதமே! அல்லாஹ்வுக்கு நாங்கள் வழிப்பட்டிருக்க வேண்டுமே இத்தூதருக்கும் நாங்கள் வழிப்பட்டிருக்க வேண்டுமே!’ என்று கூறுவார்கள். ‘எங்கள் இறைவா! நிச்சயமாக நாங்கள் எங்கள் தலைவர்களுக்கும், எங்கள் பெரியவர்களுக்கும் வழிப்பட்டோம் அவர்கள் எங்களை வழி கெடுத்துவிட்டார்கள்’ என்றும் அவர்கள் கூறுவார்கள். ‘எங்கள் இறைவா! அவர்களுக்கு இரு மடங்கு வேதனையைத் தருவாயாக அவர்களைப் பெருஞ் சாபத்தைக் கொண்டு சபிப்பாயாக’ (என்பர்). (ஸூறா அல்-அஹ்ஸாப்: 66-68)

ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்து கொள்ளும் போது அவர்கள் கூறுவார்கள் இறைவன் மீத சத்தியமாகநி நாங்கள் உங்களை அனைத்து உலகங்களினதும் இறைவனோடு இணையாக்குவதன் மூலம் வழிதவறி விட்டோம். தீமை செய்பவர்கள் எங்களை வழிதவற செய்து விட்டார்கள். இப்போது எங்களை காப்பாற்றுபவர்கள் யாரும் இல்லை. எங்களுக்கு ஒரு உண்மையான நண்பனும் இல்லை. எங்களுக்கு இன்னொரு சந்தர்பம் வழங்கப்பட்டால் நாங்கள் நம்பிக்கையாளர்களுடன் இருப்போம்!

அதில் நிச்சயமாக ஓர்அத்தாட்சி இருக்கிறது. இருப்பினும் அவர்களில் பலர் விசுவாசம் கொள்வதில்லை (ஸூறா அஷ்-ஷுஅறா: 96-103)

நரகவாசிகள் நிரந்தர வேதனையை அனுபவிக்கும் பொழுது அங்கு வாக்குவாதம் ஏற்படும். ஒருவர் மற்றவர் மீது குற்றம் சுமத்துவாகள். நெருங்கிய நண்பர்கள் ஒருவரை ஒருவர் வெறுப்பார்கள். இத்தகைய வெறுப்பு ஏற்பட காரணம் அவர்கள் இந்த உலகத்தில் ஏற்படுத்திய நட்பாகும். ஒருவர் மற்றவறை பாவம் செய்ய தூண்டியதும் நிராகரிப்பில் உதவியதுமாகும். நரக நெருப்பில் நட்பு சம்பநதமான அனைத்து விளக்கங்களும் மறைந்து இந்த வாழ்கையிலுள்ள அனைத்து பந்தங்களும் உடைந்துவிடும். இந்த கூட்டத்திற்கு மத்தியில்இ எல்லோரும் தனிமையை உணர்வார்கள், அவர்கள் மற்றவர்களை தூற்றுவார்கள்.

(அல்லாஹ்) கூறுவான்: ‘ஜின்கள், மனிதர்கள் கூட்டத்தார்களிலிருந்து உங்களுக்கு முன் சென்றவர்களுடன் நீங்களும் (நரக) நெருப்பில் நுழையுங்கள்.’ ஒவ்வொரு கூட்டத்தாரும், நரகத்தில் நுழையும்போதெல்லாம், (தங்களுக்கு முன், அங்கு வந்துள்ள) தம் இனத்தாரைச் சபிப்பார்கள் அவர்கள் யாவரும் நரகத்தையடைந்து விட்ட பின்னர், பின் வந்தவர்கள் முன் வந்தவர்களைப்பற்றி, ‘எங்கள் இறைவனே! இவர்கள் தான் எங்களை வழி கெடுத்தார்கள் ஆதலால் இவர்களுக்கு நரகத்தில் இரு மடங்கு வேதனையைக் கொடு’ என்று சொல்வார்கள். அவன் கூறுவான்: ‘உங்களில் ஒவ்வொருவருக்கும் இரட்டிப்பு (வேதனை) உண்டு - ஆனால் நீங்கள் அதை அறியமாட்டீர்கள்.’ (ஸூறா அல்-ஆரப்: 38)

எங்கள் இறைவனே! ஜின்கள், மனிதர்களிலிருந்து எங்களை வழிகெடுத்துவிட்ட இருசாராரையும் எங்களுக்கு நீ காண்பிப்பாயாக. அவ்விருவரும் தாழ்ந்தோர்களில் ஆகிவிடுவதற்காகஇ அவ்விருவரையும்

நாங்கள் எங்கள் பாதங்களுக்கு கீழ் ஆக்குவோம் என்று நிராகரிப்பாளர்கள் கூறுவார்கள். (ஸூ றா புஸ்ஸிலத்: 29)

அவர்கள் நரக நெருப்பில் தர்க்கம் செய்து கொண்டு, பலஹீனர்கள் பெருமை அடித்துக் கொண்டிருந்தோரை நோக்கி: 'நிச்சயமாக நாங்கள் உங்களைப் பின்பற்றுபவர்களாக இருந்தோம் - எனவே, எங்களை விட்டும் இந்நெருப்பிலிருந்து ஒரு பகுதியையாவது விலக்கி வைப்பீர்களாக?' என்று அவர்கள் சொல்லும் வேளையை (நினைவுட்டுவீராக!). (அப்போது:) 'நிச்சயமாக நாம் எல்லோருமே இதிலிருக்கிறோம் நிச்சயமாக அல்லாஹ் (தன்) அடியார்களுக்கிடையில் தீர்ப்புச் செய்து விட்டான்' என்று பெருமை அடித்துக் கொண்டிருந்தவர்கள் கூறுவார்கள். (ஸூ றா அல்-மு:மின்: 47-48)

(நரகவாதிகளின் தலைவர்களிடம்:) 'இது உங்களுடன் நெருங்கிக் கொண்டு (நரகம்) புகும் சேனையாகும் இவர்களுக்கு அங்கு சங்கை இருக்காது நிச்சயமாக இவர்கள் நரகில் சேர்பவர்கள்' (என்று கூறப்படும்). அதற்கு அவர்கள்: 'அப்படியல்ல, நீங்களும் தான்! உங்களுக்கும் சங்கை கிடையாது! நீங்கள் தாம் எங்களுக்கு இதை (இந் நிலையை) முற்படுத்தி வைத்தீர்கள் (ஆதலால் நம் இரு கூட்டத்தாருக்கும்) தங்குமிடம் மிகவும் கெட்டது!' என்று கூறுவர். 'எங்கள் இறைவா! எவர் எங்களுக்கு இதை (இந்நிலையை) முற்படுத்தி வைத்தாரோ அவருக்கு நரகத்தின் வேதனையை இரு மடங்காக அதிகப்படுத்துவாயாக!' என்று அவர்கள் கூறுவர். இன்னும், அவர்கள்: 'நமக்கு என்ன நேர்ந்தது? மிகக் கெட்ட மனிதர்களிலுள்ளவர்கள் என்று நாம் எண்ணிக் கொண்டிருந்தோமே, அவர்களை (நரகத்தில்) ஏன் காணவில்லை? 'நாம் அவர்களைப் பரிகாசம் செய்து கொண்டிருந்தோமா? அல்லது (அவர்களைக் காணமுடியாதவாறு) அவர்களை விட்டும் நம் பார்வைகள் சருகி விட்டனவா?' என்று கூறுவர். நிச்சயமாக இது தான் உண்மை. நரகவாசிகள் (இவ்வாறு தான்) ஒருவரோடு ஒருவர் தர்க்கம் செய்து கொள்வார்கள். (ஸூ றா ஸாத்: 59-64)

# நிர்கதியான நிலையில் மன்றாட்டம்

நரகவாசிகள் நம்பிக்கையற்று இருப்பார்கள். அவர்கள் அனுபவிக்கும் சித்திரவதைகள் மோசமானவைகளாகவும் முடிவற்றதாகவும் இருக்கும். அவர்களுக்கு அழுது இரட்சிப்பை தேடுவது மட்டுமே தெரிந்த ஓரே வழியாக இருக்கும். அவர்கள் சுவர்கத்திலுள்ளவர்களை பார்த்து அவர்களிடம் உணவு மற்றும் தண்ணீர் கேட்பார்கள். அவர்கள் வருந்தி இறைவனிடம் மன்னிப்பு கேட்பார்கள். ஆனால் இவை அனைத்தும் வீணான செயல்களாக இருக்கும்.

அவர்கள் நரகத்தின் பொருப்பாளர்களிடம் மன்றாடுவார்கள். தங்களுக்கும் இறைவனுக்கும் இடையில் மத்தியஸ்தராக இருந்து இறைவனது அருளை பெற்றுகொள்ள உதவுமாறு மன்றாடுவார்கள். அதன் வேதனை தாங்கி கொள்ள முடியாதளவிற்கு இருப்பதால் குறைந்தது அதிலிருந்து ஒரேஒரு நாள் காத்து கொள்ள வேண்டுவார்கள்.

'இவ்வேதனையை ஒரு நாளைக்கு (மட்டுமாவது) எங்களுக்கு இலேசாக்கும்படி உங்கள் இறைவனிடத்தில் பிரார்த்தனை செய்யுங்கள்' என்று (நரக) நெருப்பில் இருப்பவர்கள் நரகத்தின் காவலாளிகளை நோக்கி கூறுவார்கள். 'உங்கள் ரஸூ ல்கள் (தூதர்கள்) உங்களிடம் தெளிவான அத்தாட்சிகளுடன் வரவில்லையா?' என (அக்காவலாளிகள்) கேட்பார்கள். 'ஆம்! நிச்சயமாக' என அவர்கள் பதில் கூறுவார்கள். 'அவ்வாறாயின் நீங்களே பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்' என்று அவர்கள் கூறுவர். ஆனால் கா:பிர்களின் பிரார்த்தனை வழி கேட்டிலில்லாமல் இல்லை. (ஸூ றா அல்-மு:மின்: 49-50)

நிராகரிப்பாளர்கள் மன்னிப்பை பெற துடிப்பார்கள்இ ஆனால் அவர்கள் கண்டிப்பான முறையில் தட்டி கழிக்கப்படுவார்கள்.

'எங்கள் இறைவனே! எங்களை எங்களுடைய துர்பாக்கியம் மிகைத்துவிட்டது நாங்கள் வழிதவறிய கூட்டத்தினர் ஆகிவிட்டோம்' என்று அவர்கள் கூறுவார்கள். 'எங்கள் இறைவனே! நீ எங்களை இ(ந் நரகத்)தை விட்டு வெளியேற்றுவாயாக! திரும்பவும் (நாங்கள் பாவம் செய்ய) முற்பட்டால் நிச்சயமாக நாங்கள் அநியாயக்காரர்கள்!' (என்றும் கூறுவர்.) (அதற்கவன்) 'அதிலேயே இழிந்து கிடங்கள் என்னுடன் பேசாதீர்கள்!' என்று கூறுவான். நிச்சயமாக என்னுடைய அடியார்களில் ஒரு பிரிவினர் 'எங்கள் இறைவா! நாங்கள் உன் மீது ஈமான் கொள்கிறோம் நீ எங்கள் குற்றங்களை மன்னித்து, எங்கள் மீது கிருபை செய்வாயாக! கிருபையாளர்களிலெல்லாம் நீ மிகவும் மேலானவன்' என்று பிரார்த்திப்பவர்களாக இருந்தனர். அப்போது நீங்கள் அவர்களைப் பரிகாசத்திற்கு உரியவர்களாக ஆக்கிக் கொண்டீர்கள், எது வரையெனின் என் நினைவே உங்களுக்கு மறக்கலாயிற்று இன்னும் அவர்களைப் பற்றி நீங்கள் ஏளனமாக நகைத்துக் கொண்டும் இருந்தீர்கள். நிச்சயமாக, அவர்கள்

பொறுமையாய் இருந்ததற்காக அவர்களுக்கு நான் (அதற்குரிய) நற்கூலியைக் கொடுத்திருக்கின்றேன் நிச்சயமாக அவர்களே வெற்றியாளர்கள்!' (ஸூ றா அல்-மு..மினூன்: 106-111)

இது தான் இறைவன் நரகவாசிகளுக்கு சொல்லும் கடைசி வார்த்தைகளாகும். அவனது வார்த்தைகளான இழிவானவர்களாக இங்கு இருங்கள். என்னிடம் எதையும் கேட்காதீர்கள் என்பது இறுதியானவை. அன்று முதல் இறைவன் நரகவாசிகளை பார்க்கவும் மாட்டான். இந்த மோசமான நிகழ்வை ஒருவன் சிந்தித்து கூட பார்க்கக் கூடாது.

குற்றவாளிகள் நரகத்தில் எரிந்து கொண்டிருக்கும் வேளையில், இன்பத்தையும் இரட்சிப்பையும் அடைந்தவர்கள் எல்லயற்ற நற்பேறுகளை அனுபவித்து கொண்டிருக்கிப்பார்கள். சுவர்க்கவாசிகளை காண்பதன் காரணமாக நரகத்திலுள்ள மக்களின் வேதனை இன்னும் அதிகரிக்கும். உண்மையில் அவர்களுக்கு தாங்கி கொள்ள முடியாத சித்திரவதைகள் கொடுக்கப்பட்ட போதிலும், சுவர்க்கத்தின் மகத்துவமிக்க அருள்களை அவர்களால் பார்க்க முடியும்.

இந்த உலகத்தில் நிராகரிப்பாளர்கள் எதிர்த்த நம்பிக்கையாளர்கள்இ மகத்துவமிக்க இடங்களில்இ மகத்துவமிக்க வீடுகளில், அழகான கன்னிப்பெண்கள், சுவையான உணவையும் பானங்களையும் பரிமாற்க்கூடிய முழுமையான இன்பகரமான வாழ்கையை அனுபவிப்பார்கள். அமைதியான நிறைவான வாழ்கையை வாழக்கூடிய நம்பிக்கையானர்களின் காட்சி நரகத்தின் கேவலத்தை மேலும் அதிகரிக்கும். இத்தகைய காட்சிகள் அவர்களின் வேதனையை மேலும் அதிகரிக்கும்.

கவலை மென்மேலும் அதிகரிக்கும். உலகத்தில் வாழும் பொழுது இறைவனின் கட்டளைகளை பின்பற்றாததன் சிந்தனை அவர்களை வாட்டி எடுக்கும். அவர்கள் சுவர்க்கவாசிகளின் பக்கம் திரும்பி அவர்களுடன் பேச முற்படுவார்கள். அவர்கள் உதவி மற்றும் இரக்கம் காட்டுமாறு கேட்பார்கள். இருப்பினும் அவை வீணான செயல்களாகும். சுவர்க்கவாசிகளும் அவர்களை பார்பார்கள். அவர்கள் பின்வருமாறு பேசி கொள்வார்கள்.

(அவர்கள்) சுவர்க்கச் சோலைகளில் (இருப்பார்கள் எனினும்) விசாரித்தும் கொள்வார்கள்- குற்றவாளிகளைக் குறித்து- 'உங்களை ஸகர் (நரகத்தில்) நுழைய வைத்தது எது?' (என்று கேட்பார்கள்.) அவர்கள் (பதில்) கூறுவார்கள்: 'தொழுபவர்களில் நின்றும் நாங்கள் இருக்கவில்லை. 'அன்றியும், ஏழைகளுக்கு நாங்கள் உணவும் அளிக்கவில்லை. '(வீணானவற்றில்) மூழ்கிக்கிடந்தோருடன், நாங்களும் மூழ்கிக்கிடந்தோம். 'இந்த நியாயத் தீர்ப்பு நாளை நாங்கள் பொய்யாக்கிக் கொண்டும் இருந்தோம். 'உறுதியான (மரணம்) எங்களிடம் வரும்வரையில் (இவ்வாறாக இருந்தோம்' எனக் கூறுவர்). ஆகவே, சிபாரிசு செய்வோரின் எந்த சிபாரிசும் அவர்களுக்குப் பயனளிக்காது.. (ஸூ றா அல்-முத்ததிர்: 40-48)

அதைபோன்று நம்பிக்கையாளர்களும் நயவஞ்சகர்களும் ஒருவருக்கொருவர் விவாதித்து கொள்வார்கள். நயவஞ்சகர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் சிலகாலங்கள் நம்பிக்கையாளர்களுடன் இருந்தார்கள். அவர்களின் இதயத்தில் நம்பிக்கை இல்லாமலும் அவர்களது சொந்த நலன்களுக்காக நம்பிக்கையாளர்களை போன்று வணக்க வழிபாடுகளை செய்தார்கள். அதனால் அவர்கள் நயவஞ்சகர்கள் என்ற பதத்தை பெற்றார்கள். நரகத்தில் அவர்களுக்கு உதவுமாறு நம்பிக்கையாளர்களை கேட்பார்கள். இந்த இரண்டு சாரார்களினதும் உரையாடலை எவ்வாறு இருக்கும் என்று குர்ஆன் கூறுகிறது.

முனா..பிக்கான ஆண்களும், முனா..பிக்கான பெண்களும் ஈமான் கொண்டவர்களை நோக்கி: 'எங்களை கவனியுங்கள் உங்கள் ஒளியிலிருந்து நாங்களும் பற்ற வைத்துக் கொள்கிறோம்' என்று கூறும் தினத்தை (நினைவூட்டுவீராக) அவர்களுக்குக் கூறப்படும்: 'உங்களுக்குப் பின்னால், திரும்பிச் சென்று பின்னர் ஒளியைத் தேடிக் கொள்ளுங்கள்.' பிறகு, அவர்களுக்கிடையே ஒரு சுவர் எழுப்பப்படும்! அதற்கு ஒரு வாயில் இருக்கும் அதன் உட்புறம் (இறை) ரஹ்மத் இருக்கும் ஆனால் அதன் வெளிப்புறத்தில் - (எல்லாத்) திசையிலும் வேதனையிருக்கும். இவர்கள் (மு..மின்களைப் பார்த்து) நாங்கள் உங்களுடன் இருக்கவில்லையா?' என்று (அந்த முனா..பிக்குகள்) சப்தமிட்டுக் கூறுவார்கள் 'மெய்தான் எனினும் நீங்களே உங்களைச் சோதனையிலாழ்த்தி விட்டீர்கள் (எங்கள் அழிவை) நீங்கள் எதிர் பார்த்தீர்கள் (இந்நாளைப் பற்றியும்) சந்தேகமும் கொண்டிருந்தீர்கள் அல்லாஹ்வின் கட்டளை வரும் வரையில் (உங்களுடைய வீண் ஆசைகள் உங்களை மயக்கி விட்டன அன்றியும் மயக்குபவ(னான ஷைத்தா)ன், அல்லாஹ்வைப் பற்றி உங்களை மயக்கியும் விட்டான்' என்றும் (மு..மின்கள்) கூறுவார்கள். 'ஆகவே, இன்று உங்களிடமிருந்தோ நிராகரித்தவர்களிடமிருந்தோ (உங்களுக்குரிய வேதனைக்குப் பதிலாக) எந்த வகையான நஷ்ட ஈடும் வாங்கப்பட மாட்டாது உங்களுடைய தங்குமிடம் நரகம் தான் அதுதான் உங்களுக்குத் துணை - அதுவோ சென்றடையும் இடங்களிலெல்லாம் மிகக் கெட்டதாகும்' (என்றுங் கூறப்படும்). (ஸூ றா அல்-ஹதீத்: 13-15)

## எவ்வித இரட்சிப்புமின்றி நிரந்தர வேதனை

நாம் மேலே குறிப்பிட்ட நரகத்தின் தன்மைகளை தவிர்ந்து அதன் வேதனையில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது, அது நிரந்தரமானது என்பதாகும். இந்த உலகில், மிகக் கடுமையான வலியும் சிறிது காலம் கடந்த பிறகு மனிதனுக்கு அமைதியை தரும். ஒவ்வொரு நோவிற்கு பின்னாலும் சுகம் இருக்கிறது. மேலும் இந்த சுகத்திற்காக காத்திருப்பதும் நம்பிக்கையை தரும்.

நரகத்தில் எந்த நம்பிக்கையும் கிடையாது. இது தான் நரகவாசிகளை அதிமாக பாதிக்கும். அவர்கள் நெருப்பில் வீசி எறியப்படும் போதும், விலங்கிடப்பட்டு சாட்டையால் அடிக்கப்பட்ட போதும், குறுக்கலான இடத்தில் அடைக்கப்பட்ட போதும், அவர்களது கைகள் கழுத்தில் கட்டப்பட்ட போதும் அவர்கள் இவை அனைத்தும் நிரந்தரமானவை என்பதை புரிந்து கொள்வார்கள். அவர்கள் தப்பிக்க எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் பலனளிக்காது. இது அவர்களது வேதனை நிரந்தரமானது என்பதை சுட்டிக்காட்டும். அவர்களது களக்கத்தை பின்வருமாறு விவரிக்கப்படுகிறது.

> துக்கத்தினால் அவர்கள் அ(ந் நரகத்)தை விட்டு வெளியேற விரும்பும் போதெல்லாம், அதனுள்ளே திருப்பப்பட்டு, 'எரிக்கும் வேதனையைச் சுவையுங்கள்' (என்று சொல்லப்படும்). (ஸூ றா அல்-ஹஜ்:22)

நரகம் தனிமையான ஓர் இடமாகும். அதில் நுழையும் நிராகரிப்பாளர்கள் நிரும்ப மாட்டார்கள். அடைக்கப்பட்டது போன்ற உணர்வு நிராகரிப்பாளர்களை சூழ்ந்து கொள்ளும். அவர்களை சுவர்களும் பூட்டப்பட்ட கதவுகளும் சூழ்ந்து கொள்ளும். இந்த இக்கட்டான சந்தர்பத்தை குர்ஆன் இவ்வாறு விவரிக்கிறது.

> ஆனால், எவர்கள் நம் வசனங்களை நிராகரிக்கிறார்களோ, அவர்கள் தாம் இடப்பக்கத்தையுடையோர். அவர்கள் மீது (எப்பக்கமும்) மூடப்பட்ட நெருப்பு இருக்கிறது. (ஸூ றா அல்-பலத்: 19-20)

> சத்திய (வேதம்) உங்களுடைய இறைவனிடமிருந்து (வந்து)ள்ளதாகும். எனவே எவர் நாடுகிறாரோ அவர் நம்பிக்கை கொள்ளட்டும். இன்னும் எவர் நாடுகிறாரோ அவர் நிராகரிக்கட்டும் என்று (நபியே) நீர் கூறுவீராக. ஆநியாயக்காரர்களுக்கு நிச்சயமாக நாம் நரகத்தை தயார் படுத்தியுள்ளோம். அதனுடைய சுவர்கள் அசர்களை சூழ்ந்து கொள்ளும். இன்னும் அவர்கள் முறையிடுவார்களாயின் முகங்களை சுட்டு பொசுக்கும் எண்ணையின் அடி மண்டியை போன்ற தண்ணீரை கொண்டு அவர்களின் முறையீடு நிறைவேற்றப்படும். அது மிக கெட்ட பானமாகும். இன்னும் இளைபாற இறங்குமிடத்தில் அது மிகக் கெட்டது. (ஸூ றா அல்-கஹ்பு: 29)

> இத்தகையோருக்கு நரகமே ஒதுங்குமிடமாகும் அதைவிட்டுத் தப்பிச் செல்ல அவர்கள், ஒருவழியையும் காண மாட்டார்கள். (ஸூ றா அன்-நிசா: 121)

நிராகரிப்பாளர்கள் நரக நெருப்பை காணும் நேரத்தில் அவர்கள் அதற்கு சொந்தமானவர்கள் என்பதை புரிந்து கொள்வார்கள். அவர்கள் அந்த நெருப்பிலிருந்து ஒருபோதும் எந்த வகையிலும் தப்பிக்க முடியாது என்பதை நன்றாக புரிந்து கொள்வார்கள். இந்த சந்தர்பத்தில் நேரம் அதன் தாட்பரியத்தை இழப்பதோடு ஒரு நிரந்தர வேதனை தொடங்கிவிடும். முடிவில்லா வேதனைகள் மிக மோசமானதாகும். பல நூறு ஆண்டுகளோ அல்லது ஆயிரம் ஆண்டுகளோ அல்லது பில்லியன் கணக்கான ஆண்டுகள் கடந்த போதும் அதற்கு முடிவி என்பதே கிடையாது. பல மில்லியன் ஆண்டுகள் அதற்கு ஒப்பாக ஒன்றுமில்லை. நரகவாசியான நிராகரிப்பாளன் முடிவை எதிர்பார்த்து காத்திருப்பான். ஆனாலும் அதற்கு பலன் கிடைக்காது. அதனால் தான் நரகத்தின் நிரந்தர தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

> நயவஞ்சகர்களான ஆடவருக்கும், நயவஞ்சகர்களான பெண்டிருக்கும், காஃபிர்களுக்கும் அல்லாஹ் நரக நெருப்பையே வாக்களித்துள்ளான் அதில் அவர்கள் நிலையாகத் தங்கி விடுவார்கள் அதுவே அவர்களுக்குப் போதுமானதாகும் இன்னும் அல்லாஹ் அவர்களைச் சபித்துள்ளான் - அவர்களுக்கு நிரந்தரமான வேதனையுமுண்டு. (ஸூ றா அத்-தவ்பா: 68)

> இவை தெய்வங்களாக இருந்திருந்தால், (அந் நரகத்திற்கு) வந்து சேர்ந்திருக்க மாட்டா இன்னும் அனைவரும் அதில் நிரந்தரமாயிருப்பர். (ஸூ றா அல்-அன்பியா: 99)

> எவர்கள் நிராகரித்தார்களோ, அவர்களுக்கு நரக நெருப்புத்தானிருக்கிறது அவர்கள் மரித்துப் போகும்படியாக அவர்களுடைய காரியம் முடிவு செய்யப்பட மாட்டாது அன்றியும் அந்(நரகத்)திலுள்ள வேதனை அவர்களுக்கு இலேசாக்கப்படவும் மாட்டாது இவ்வாறே காஃபிர் ஒவ்வொருவருக்கும் நாம் கூலிகொடுப்போம். (ஸூ றா பாதிர்: 36)

இந்த உலகிலுள்ள அனைத்து வேதனைகளுக்கும் ஒரு முடிவு இருக்கிறது. வேதனையின் காரணமாக ஒருவன் மரணிப்பான் அல்லது குணமடைவான். இருப்பினும், நரகத்தின் வேதனைகள் தொடர்ச்சியானதும் முடிவில்லாததுமாகும். ஒரு கனம் கூட ஒரு சிறு ஆறுதலையோ அல்லது ஒரு சிறு சுகத்தையோ தராது.

சித்திரவதையை விட்டும் தப்பிக்க முக்கியமான எச்சரிக்கை

இந்த உலகத்தில் இறைவனது கட்டளைகளை மறுத்து இறைவனை மறுப்பவர்களுக்கு மறுமையில் எவ்வித இரட்சிப்பும் கிடையாது. அவர்கள் நரகத்தின் மோசமான வேதனைகளை சுவைக்க நேரிடும் என்பதை இந்த புத்தகத்தை படிப்பதன் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதனால் நேரத்தை வீணாக்காமல் இறைவனது சன்னிதானத்தில் ஒவ்வொருவரும் நிற்க வேண்டியுள்ளதை பற்றி சிந்தித்து அவனிடத்தில் சரணடைய வேண்டும். இல்லையென்றால்இ மிக பயங்கரமான முடிவை சந்திக்க நேரிடும்.

> தாங்களும் முஸ்லிம்களாக இருந்திருக்க வேண்டுமே, என்று காஃபிர்கள் (மறுமையில் பெரிதும்) ஆசைப்படுவார்கள(இம்மையில் தம் விருப்பம் போல்) புசித்துக் கொண்டும், சுகம் அனுபவித்துக் கொண்டும் இருக்க அவர்களை விட்டு விடுவீராக அவர்களுடைய வீணான ஆசைகள் (மறுமையிலிருந்தும்) அவர்களைப் பராக்காக்கி விட்டன (இதன் பலனைப் பின்னர்) அவர்கள் நன்கறிந்து கொள்வார்கள (ஸூ றா அல்-ஹிஜ்ர்: 2-3)

நிரந்தர வேதனையிலிருந்து தப்பித்து நிரந்தர நற்பேறுகளை அடைந்து இறைவனது திருப்தியை பெறவேண்டும்.

காலம் வீணாக செலவழிக்காமல்இ இறைவன் மீது உண்மையான நம்பிக்கை வைத்து அவனது திருப்தியை பெறும் பொருட்டு நல்ல காரியங்களை செய்ய வேண்டும்

> (இறைவா!) நீயே தூயவன். நீ எங்களுக்குக் கற்றுக்கொடுத்தவை தவிர எதைப்பற்றியும் எங்களுக்கு அறிவு இல்லை. நிச்சயமாக நீயே பேரறிவாளன் விவேகமிக்கோன்.
> (ஸூ றா அல்-பகறா: 32)